வேண்டுகையாலும் துஷ்கப்ராயமாயிருக்குமே; ஸாதகாந்தர நிஷ்டனுக்கும் கர்தவ்ய புத்தி யாலே ரஸமில்லை. இக்குறைகளொன்று மின்றிக்கே, ப்ராப்த விஷயத்திலே தன்னைப்பே ணுகிற பரஸம்பந்தியை ஆசாஸிக்க; ஸர்வநிரபேக்ஷனான ஈச்வரன் இத்தைக்கண்டு 'இதொரு ப்ரமாணவபாவ மிருந்தபடியென்!' என்று ப்ரீதனாக; இவனுக்கு அந்த ப்ரீதியே புருஷார்த்தமாயிறே யிருப்பது. பட்டு என்பது- 'உவரிக்கடலில் முத்துப்பட்டது' என்னு மாப்போலே. 'நான், தனக்கு' என்றிருக்கிற ஸம்ஸாரத்திலே பகவத் ஸம்பந்தியை ஆசாஸிக்கும்படி கைபொழிந் திருப்பார் சிலரைப் பெறுகையாவது அலப்யலாபமென்னு மிடக்தோற்ற வருளிச்செய்கிறார். நின்றீர். வாயுபரவசமாய்த் திரிகிற தர்ணம்போலே கர்ம பரதந்த்ரனுய்த் திரிகிற ஸம்ஸாரி சேதநனுக்கு பகவஜ்ஜ்ஞாநபூர்வகமாக தத்ஸம்பந்தியை ஆசாஸிக்கப் பெற்றுலிறே ஸ்திதியுண்டாவது. உள்ளீரேல். "வஸிஷ்டா வஸுஷு" என்று அநந்யப்ரயோஜநரைக் கிடையாதென்று ஸர்வேச்வரன் கைவிட்ட ஸம்ஸாரமாகை யாலே மங்களாசாஸநத்துக்கு ஆள் தேடட்டமாயிறே யிருப்பது. நாகபாசத்தினன்று அடைய மோஹித்துக் கிடக்க, திருவடியும் ஸ்ரீவிபீஷணழ்வானும் 'ப்ராணனுடையாருண்டோ' என்று தேடினாற்போலே, ஸம்ஸாரத்தில் ஸ்வரூபஜ்ஞாநமுடையார் தேட்டமாயிறே யிருப்பது. இந்த (க)யதிசப்தத்தாலே ஸம்ஸாரத்தில் வைஷ்ணவத்வம் துர்லபமென்றதாய்த்து.

அநந்யப்ரயோஜநரான வைஷ்ணவர்களும் 'நம்மை விரும்புமவர் சிலருண்டாவதே!' என்று ஸந்தோஷிதராக; வந்து. அவர்களுடைய ஸ்வரூபஸ்வபாவம் ஆராய்வதற்குமுன்பே அவர் களோடே கலந்துகொடு நிற்கவேண்டும்படியான த்வரை சொல்லுகிறது. மண்ணும் மண முங்கொண்மின் என்கிறார். மண்ணுக்கும் மணத்துக்கும் உரியார் அந்தரங்கரான அடியா ரிறே. அடிமை விலேயாலே யெழுதும்போதும் 'மண்ணுக்கும் மணத்துக்கும் உரியரை வேணும்' என்றிறே யெழுதுவது. மண்ணாவது - ஸ்வாமிக்கு ஒரு மங்களமுண்டானால் அங் குரார்பணத்துக்குப் புழுதிமண் சுமக்கை; அந்த ந்யாயத்தாலேயிறே நம் ஆழ்வார்களுக்கு இது க்ருத்யமாகிறது. மணமாவது - அந்த கல்யாணத்துக்குத் தான் அபிமாநியாயிருக்கை. இவ்விரண்டும் - ஸர்வ கைங்கர்யத்துக்கு முபலக்ஷணம். "கொண்மின்" என்றதால் — அடிமை செப்புமிடத்தில் கிடந்தாளை கண்டேடாதகையன்றிக்கே சிலர் தரக்கொள்ளவேணும் என்கையும், தருமவர்களும் 'உங்களதான அடிமையை நீங்கள் ஸ்வீகரியுங்கோள்' என்று சீரிதாகக் கொடுக்கக்கடவர்களென்கையுமாகிற சாஸ்த்ரார்த்தத்தை வெளியிடுகிறது.

கூழாளிக்யாதி.*இவர் அழைத்தவாசி யறியாதே ப்ரயோஜநாந்தரபரரடையப் புகுரத் தொடங்கிற்று; அவர்களை நிஷேதிக்கிறார். "கூழாள்" என்றது சோற்றுக்காக ஆரேனுக் கும் தன்னை யெழுதிக்கொடுக்கை; இது ப்ரயோஜநாந்தரங்களுக்கு முபலக்ஷணம். தன்னை 'பகவத்தாஸ்யைகபோகன்' என்னுமிட மறியாதே, ப்ரயோஜநாந்தரங்களைக் குறித்து அவன்றன்னையே ஆச்ரயிக்கிறார்களிறே. "கூழாள்" என்று - அநந்யப்ரயோஜநராயிரு ந்து, ப்ரயோஜநாந்தரங்களை வேண்டிக்கொள்ளும் இருகரையரைச் சொல்லுகிற தென்றுமாம். "பட்டு" என்கிறது - அகப்பட்டென்றபடி. பந்தகமாகையாலே ஸ்வரூப விரோ தியாய் அநர்த்தத்தைப் பண்ணுமென்னுமத்தாலே சொல்லுகிறது. நின்றீர்களா. பரஸ

ந்தரங்களிலே அங்யபரரா யிருப்பாராகிற திரள்களெல்லாவற்றிலும் வயாளர்க்கமாயன்மிறு எங்கள் திரளிருப்பதென்கிறார். புகுதலோட்டோம். "ஆசை புகுவார்" என்று ப்ரார்த்திக்கிற விவர், நிர்தயரைப்போலே "புகுரவிவாட்டோடம்" என்பானென்னென்னில்; வலிஷ்டன் பரமதயாளுவாலுலும் சண்டாளனை அங்கிகார்யத்திலே கூட்டிக்கொள்ளானிறே. இத்தால் - அநங்யப்ரயோஜநர்க்கு ப்ரயோஜநாந்தரபரிவாட்டை ஸஹவாஸம் அஸஹ்யமாயிருக்கு மென்றதாய்த்து.

எங்கள் திரளிற்காட்டிலும் உங்கள் திரளுக்கு வாசியென்னென்ன; ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள் என்கிறார். "ஏழாள்" என்று-தமக்குக்கீழ் ஒருமூன்றும், மேலே ஒருமூன்றும், தாமுமாக ஏழுபடியைச் சொல்லுகிறது. இஸ்ஸுதாயத்தைப்பற்றி சாஸ்த்ரங்கள் "ஸ்தை ஸவ்ய ஸவ்ய" என்று - இந்த ஏழையும், இதுக்குக்கீழ் யோகேழையும், இதுக்கு மேலே யோகேழையும், ஆக, இருபத்தொருபடிகாலைச் சொல்லுகிறது. "ஸ்ரவணமவ்ருந்து ஸ்ரவாவரா நாத்ரா நமெதுகுவிஸ்ரதிம் வஹ்நித்து வாநாதி" என்று முகமேதாக சாஸ்த்ராந்தரஞ் சொல்லிற்று. "ஏழாட்காலும்" என்கிற சப்தம் இவ்வளவையுணர்க்கிறது. இத்தால் ஒரு ஸந்தாநத்திலே ஒருவன் அநங்யப்ரயோஜநனாகில், அவனைப்பற்ற, பகவத்ப்ரபாவம், ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் செல்லக் கீழ்மேலும் வெள்ளமிடுமென்கிறது. பழிப்பிலோம். விஷயாந்தரப்ராவண்யமென்ன, தேவதாந்தரபஜநமென்ன, இவை தாரமேதா நிரஸ்தமாகையாலே, பதர்கூட்டித் தூற்றவேண்டா; இனி அநங்யப்ரயோஜநராய் அநங்யஸாதநரா யிருப்பார்க்குப் பழிப்பாவது – ப்ரயோஜநாந்தர பரதையும் ஸாதநாந்தர பரதையுமிறே; அவற்றை யுடையோமல்லோ மென்கிறார். நாங்கள். "எங்கள் குழு" என்றபோதைச் செருக்குப்போலே, பகவத்விஷயீகாரத்தால் வந்த செருக்குத்தோற்றச் சொல்லுகிறார்.

'உங்கள் ஸ்வரூபம் நீங்கள் சொன்னவளவிலே விச்வஸித்திருக்குமத்தனை யளவைடையோமல்லோம், உங்கள் வ்ருத்தி விசேஷத்தைக்கொண்டு உங்களை யறியவேணும்' என்ன; அது நீங்களறியும் புடையல்ல, எங்களேணியென்னில்; ஒருகார்யப்பாடாக உள்ள அமங்களங்கள்போக மங்களாசாஸநம் பண்ணுமிடத்தில், இல்லாத மங்களங்களுண்டாகவேணுமென்று மங்களாசாஸநம் பண்ணுதல் செய்யுமளவிறே நீங்களறிவது; முன்பு வ்யவஸ்தமாய்க் கழிந்த செயலுக்கு இன்றிருந்து வயிறுபிடிக்கும் திரள்காணைங்களது. இராக்கதர் வாழிலங்கை. துர்வ்ருத்தம் களித்து வர்த்திக்கும் தேசம். புறம்போபோய் பாஹ்யஸ்பர்சமண்ணி, குளவிக்கூடுபோலே திரண்டு கடலையும் மதிளையும் அரணாக்கி, அமணக்கூத்தடிக்கும் தேசமென்னை. இலங்கை பாழாளாக. லங்கையில் ஆள் பாழாம்படியாக. இலங்கைதான் விபீஷண விதேயமிறே. இனி, "நநசெயழி" என்ற ராவணனையும் அவனுடைய அதிக்ரமத்துக்குத் துணையான ராக்ஷஸரையு மழியச்செய்து "ஸ்ரஸா நவ ஸ்ரஸி ஹவை" என்று பிராட்டி யருளிச்செய்தபடியே அவ்வூரை மூலையடியே போம்படி பண்ணினன். படைபொருதானுக்கு. இப்படி செய்தது ஈச்வரத்வப் பிடாரான ஸங்கல்பத்தாலன்றிக்கே, எதிரிகளம்பு மார்பிலே தைக்கும்படி பொருதவனுக்கு. பல்லாண்டு கூறுதுமே. அப்போது கையும் வில்லுமாய்ச் சீறிச் சிவந்து எதிரிகள்மேலே வ்யாபரிக்கும்போலே, வாத்ஸல்யமான

லத்தில் முதலிகளுக்கு அம்புக்கு இரும்புக்கப் பணிமாறுகையாலே அக்காலத்திலே மங்களாசாஸநம் பண்ணுவாரைப் பெற்றதில்லை; 'பிராட்டி பிரிந்தமாதிரம் நம் குடியிருப்புப் பெற்றோம்' என்கிற ப்ரீதியாலே ப்ரஹ்மாதிகள் அர்யபராதீனர்கள்; அக்காலத்தில் மங்களாசாஸநம் பண்ணப்பெறுத குறைதீர இன்று இருந்து மங்களாசாஸநம் பண்ணுமீவாம் சிலர்காண் நாங்களென்கிறார். ... ... ங.

அ.—நான்காம்பாட்டு. ஏடித்யாதி. கீழே— அநந்யப்ரயோஜநரை யழைத்தார்; அவர்கள் மங்களாசாஸநத்துக்கு ப்ரத்யாஸந்நராகையாலே, நீரிலேநீர் சேர்ந்தாப்போலே சேர்ந்திருக்குமிறே; அவ்வளவிலும் பர்யாப்தி பிறவாமையாலே, 'ஈச்வரன்கை பார்த்திருக்குமவர்கள்' என்று மிவ்வளவைக்கொண்டு, ஆத்மப்ராப்திகாமரையும் ஐச்வர்ய காமரையும் அழைக்கக் கோலி, அதில் முந்துற ஆத்மப்ராப்திகாமரை யழைக்கிறார். ஐச்வர்யத்திற் காட்டில் ஆத்மப்ராப்தி உத்க்ருஷ்டமென்னும் நினைவாலே யழைக்கிறாரல்லர், அந்த மோக்ஷந்தை இவர் அர்த்தமென்றிருக்கையாலே; இனி எத்தாலே முற்பட அழைக்கிறதென்னில்; பகவத்ஸம்பந்தத்துக்கு உபகரணமான சரீரமோக்ஷம் அனித்தாகையாலும், அம்மோக்ஷத்தை ப்ராபித்தால் மீளவொண்ணுமையாலும், ஐச்வர்ய காமருக்காலாந்ரத்திலேயாகிலும் பகவத்ஸம்பந்தம் பண்ண மோக்யதை புண்டாகையாலும்; இவருக்கு அந்த மோக்யதையு மழிகையாலே துர்கதியைக்கண்டு முற்பட வழைக்கிறார். ப்ரமோ ஜநாந்தரபரர், 'மங்களாசாஸநம்பண்ண வாருங்கோள்' என்றால் வருவர்கோளா வென்னில்; பகவத்ப்ராப்தியின் உத்கர்ஷத்தையும், அத்தைப்பற்ற கைவல்யத்தினுடைய நிகர்ஷத்தையு மறிவித்தால், 'விட்டுப்பற்றவேணும்' என்னும் ஆத்மருமீணமோதரையிறே இவ ரழைக்கிறது.

மூ.—ஏடுநிலத்தி லிடுவதன்முன்னம் வந்தெங்கள் குழாம் புகுந்து
கூடுமெனமுடையீர்கள் வரம்பொழிவந்தொல்லைக் கூடுமினே
நாடுநகரமு நன்கறிய நமோநாராயணைய வென்று
பாடுமெனமுடைப் பத்தருள்ளீர் வந்து பல்லாண்டு கூறுமினே. சு.

பதவுரை.

ஏடு— பொல்லாதான ஸூக்ஷ்மசரீரம்
நிலத்தில்— ஸ்வகாரண பூமியான மூலப்ரக்ருத்தியில்
இடுவதன்முன்னம்— லயிப்பதற்கு முன்னே
வந்து — வந்து
எங்கள்குழாம்— எங்கள் திரளிலே
புகுந்து— புக்கு
கூடும்— ஏகீபவிக்கையில்
மனமுடையீர்கள்— மனமுடையவர்களே யாலல்
வரம்பொழிவந்து— வரம்பை யொழித்துக்
ஒல்லைக்கூடுமினே— விரைவாகக்கூடுங்கோள்
நாடும்— க்ராமத்திலுள்ள அவிசேஷஜ்ஞருமும்
நகரமும்— நகரத்திலுள்ள விசேஷஜ்ஞருமும்
நன்கு அறிய— நன்றுகவறிய
நமோநாராயணையவென்று— 'நமோநாராயணைய' என்று
பாடுமெனமுடைப் பத்தருள்ளீர்— பாடவே ணுமென்று நெஞ்சுண்டாம்படியான ப்ரீதியுடையீராகில்
வந்து பல்லாண்டு வந்து திருப்பல்லாண்டு
கூறுமின்— பாடுங்கோள்.

வ்யா.—ஏடுநிலத்திலிடுவதன்முன்னம். ஏடு என்பது-போல்லாங்கு. 'உங்களைப்போல்லா நிலத்திலே பிடிவற்கு முன்னம்' என்று பிள்ளை யமுதனார். 'ஏடு' என்கிறது- ஸூக்ஷ்ம சரீரத்தை. ஸ்தூல சரீரத்திற் காட்டில் ப்ரதாநமாய் அதினுடைய ப்ரயோஜந ரூபமாய் நிற்கையாலே, 'போலில் ஏடு' என்னுமாப்போலே சொல்லுகிறது. நிலத்திலிடுவதன்முன்னம். ஸ்வகாரணமான மூலப்ரக்ருதியிலே லயிப்பதற்கு முன்னே. இது நிர்வஹித்துப்போருமபடி;— 'ஏடு' என்று - உடம்புக்குப் போராய், ஸ்தூலஸூக்ஷ்மரூபமான சரீரம், ஸ்வகாரணமான மூலப்ரக்ருதியிலே லயிப்பதற்கு முன் என்னவுமாம். இவ்வாக்யந்தான் அவர்களுடைய அநர்த்தத்தைக் கண்டழைக்கிறரென்னுமிடந் தோற்றவிருக்கிறதிறே. வந்து. ஸ்வதந்த்ரரா யிருப்பார்க்குத் தம்மனவில் வருமிடத்திலுண்டான தூரத்தைச் சொல்லுகிறது. எங்கள் குழாம்புகுந்து. கேவலரும் ஒரு ஸமஷ்டியாயிறே யிருப்பது; அது ஸ்வதந்த்ரமாகையாலே அந்யோந்யம் சேராச் சேர்த்தியாயிருக்கும். ஒருத்தருடைய ஸம்ச்தி ஒருத்தராயிறே யித்திரளிருப்பது. "வாஸுர தீஹஸ விவ்ருத" என்னக்கடவதிறே. இத்திரளில் புகுவார்க்கு எவ்வளவதிகாரம் வேணுமென்னில், கூடுமனமுடையீர்கள். 'புகுருவோம்' என்னும் நினைவே வேண்டுவது. அவிலக்ஷணங்களான புருஷார்த்தங்களுக்கு புரச்சரணங்கள் கனக்கவேண்டியிருக்க, அதில் விலக்ஷணமான இத்திரளிலே புகுருகைக்கு புரச்சரணம் வேண்டாதிருப்ப தென்னென்னில்; அவை அப்ராப்த புருஷார்த்தங்களாகையாலே புரச்சரணாதிகள் அபேக்ஷிதங்களா யிருக்கிறன; இது ஸ்வரூபப்ராப்தமாகையாலே வேண்டா. மாதாபிதாக்களை யநுவர்த்திக்கைக்கு இச்சையேயிறே வேண்டுவது. உடையீர்கள். இந்த இச்சையால்வந்த ப்ரயோஜநாதிசயத்தாலே 'வைச்ரவணன்' என்னுமாப்போலே யருளிச்செய்கிறார். கூடநினைப்பார்க்குச் செய்யவேண்டுவது, முன்பு நின்ற சிறுமையைக் குலைத்து வரவேணும். வரம்பொழிவந்து. "வரம்பொழிய" என்கிறவிது, "வரம்பொழி" என்று கிடக்கிறது. ஸர்வேச்வரனுக்கு ப்ரகாரபூதரை, அவனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளை அநுபவிக்க இட்டுப்பிறந்தவன், "ஜராதிரணஹோகூடாய" என்று ஸ்வாநுபவத்தளவிலே ஒரு வரம்பை யிட்டுக்கொண்டானிறே; அத்தையொழிந்து வாருங்கோ வென்கிறார். ஒல்லைக்கூடுமிறே. பற்றுகிற புருஷார்த்தத்தினுடைய வைலக்ஷண்யத்தை யநுஸந்தித்தால் பதறிக்கொண்டுவந்து விழவேண்டாவோ? "ஏடுநிலத்திலிடுவதன்முன்னம்" என்றது—சரீரத்தில் அஸ்த்தைர்யத்தைப்பற்ற; இங்கு "ஒல்லை" என்கிறது-பற்றுகிறவிஷயத்தினுடைய வைலக்ஷண்யத்தைப்பற்ற. "கூடுமனமுடையீர்கள்" என்றும், "கூடுமிறே" என்றும் அருளிச்செய்கிறதிறே யோக்யதையைப்பற்ற. அத்திரளில்நின்றும் பிரிகதிர்ப்பட்டார் சில ரிவர்களென்று தோற்றுமிறே ஸ்வரூபம் வெளிச்செறித்தக்கால்.

நாடு நகரமும் நன்கறிய. இத்திரளிலே புகுருகைக்கு வேண்டுவன வருளிச்செய்தார்; இதுக்குமேல் மங்களாசாஸநத்துக்கு வேண்டுவன வருளிச்செய்கிறார். "நாடு" என்று - அவிசேஷஜ்ஞரைச் சொல்லுகிறது; "நகரம்" என்று - விசேஷஜ்ஞரைச் சொல்லுகிறது. ராஜாவுக்கு ப்ரத்யாஸந்நரிறே நகரஸ்தர்; நாட்டார் தூரஸ்தரிறே; ஆகையாலே யருளிச்செய்கிறார். நன்கறிய. நன்றாகவறிய. பகவத்ப்ரத்யாஸத்தியாலே அவிசேஷஜ்ஞர் விடும்படியாகவும், அதுதானே ஹேதுவாக விசேஷஜ்ஞர் பரிக்ரஹிக்கும்படியாகவும். நன்கறிய.

போராது, ப்ரீதிக்குப்போக்குவிட்டுப் பாடுவோமென்னும் நெஞ்சுண்டாம்படியான ப்ரேமத்தை யுடையீராகில். வந்து பல்லாண்டு கூறுமினே. வந்து, பல்லாண்டு பாடுங்கோள். இத்திரளிலே புகுரவேணுமென்றிருப்பீர்! அத்தைச்செய்யுங்கோள்; அவ்வளவுபோராது, உங்களுடைய வ்ருத்திரிசைகளும் பெறவேணுமென்றிருப்பீர்! திருப்பல்லாண்டு பாடுங்கோளென்று க்ரியையை இரண்டாக்கி நிர்வஹிக்கவுமாம். ... ... * ச

அ.—ஐந்தாம்பாட்டு. அண்டமித்பாதி. முற்பட அநந்யப்ரயோஜநரை யழைத்தார்; கேவலரும் ஐச்வர்யார்த்திகளும் ப்ரயோஜநாந்தரபரராயிருக்கச்செய்தேயும், கேவலருடைய துர்கதியைக் கண்டு முந்துற வழைத்தார்; இப்பாட்டிலே-ஐச்வர்யார்த்திகளை யழைக்கிறார்.

மூ.—அண்டக்குலத்துக் கதிபதியாகி யசுர ரிராக்கதரை
யிண்டக்குலத்தை யெடுத்துக் கஞ்ஞ்ந்த விருடீகேசன் றனக்குத்
தொண்டக்குலத்தி லுள்ளீர் வந்தடிதொழு தாயிரநாமஞ் சொல்லிப்
பண்டைக்குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண் டென்மினே. மூ.

பதவுரை.

அண்டக்குலத்துக்கு— அண்டங்களின் கூட்டத்துக்கு

அதிபதியாகி— ஸ்வாமியாய்

அசுரரிராக்கதரை— அசுரர்களையு மிராக்கதர்களையும்

இண்டக்குலத்தை— இன்னும், நிஹீநர்களின்கூட்டத்தையும்

எடுத்துக்கலைந்த— தனிப்படவெடுத்து நிரஸித்த

இருடீகேசன் தனக்கு— ஸர்வேந்த்ரிய நியந்தாவான வெம்பெருமானுக்கு

தொண்டக்குலத்தில்— தொண்டுபூண்டவர்களின் திரளில்

உள்ளீர்— உளரான நீங்கள்

வந்து— அநந்யப்ரயோஜநராய் வந்து

அடி— திருவடிகளை

தொழுது— ஸேவித்து

ஆயிரநாமஞ்சொல்லி— அவனுடைய குணசேஷ்டிதங்களுக்கு வாசகங்களான வாயிரந் திருநாமங்களையும் ப்ரேமமாந்தராய்ச் சொல்லி

பண்டைக்குலத்தை — பகவத்விமுகமாய்ப் போந்த பழைபஜாதியை

தவிர்ந்து— விட்டு

பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு— பலவர்ஷங்கள் பலவாயிரவர்ஷங்கள் நித்யமாய்ச் செல்லவேணும்

என்மின்— என்றுமங்களாசாஸநம் பண்ணுங்கோள்.

(ஏ—அசை.)

வ்யா.—அண்டக்குலத்துக் கதிபதியாகி. தேவதைகளுடைய ஐச்வர்யத்துக்கெல்லாம் மேலான அண்டாதிபத்யமிறே ஐச்வர்யத்துக்கு மேலெல்லை; அந்த ப்ரஹ்மாதிகள் ஈச்வரனே ஆச்ரயிக்கும் ப்ரகாரஞ் சொல்லுகிறது. “ கஞ்ஞாயிவதையெநஂ ” என்றிறே இப்படி ப்ராப்திக்கு ஸாதநமந்த்ரம்; அந்த மண்டைச்வர்ய விசிஷ்டனைகவிறே ஸர்வேச்வரனை யநு

அண்டக்குலத்துக்கு அதிபதியான பிரகாரமின்றி இச்சபத்திலுள்ளது, ஆச்சரிய
ப்ரகாரம் தோற்றவிருந்ததில்லையே என்னில்; உதாரணமிருப்பானொருவன் கையிலே எது
மிச்சம்பழமிருந்தால் 'இது இருந்தவழகென்!' என்று சொன்னவளவிலே, பாவஜ்ஞனு
மிருக்குமவன் 'கொள்ளலாகாதோ' என்று கருத்தறிந்து கொடுக்குமிறே; அப்படியே,
அண்டாதிபத்யத்திலே அபேக்ஷையுண்டென்று தங்களபேக்ஷையை ஆவிஷ்கரிக்கிறார்கள்.
இந்தால் - ப்ரயோஜகாந்தரபரைக்குறித்து "உஉஊஃ" என்றுமவனுடைய ஔதார்யம்
ப்ரகாசிக்கிறது. அண்டக்குலத்துக்கு. "கூஜா நாஞ ஸஹஸ்ராணாழ்" என்று தொடங்கி
"கொழிகொழி ஸதாநிவ" என்று அஸங்க்யாதமான அண்டங்களுக்கு நிர்வாஹகனாகை
யாலே அபேக்ஷித்தாரபேக்ஷித்த அண்டங்களைக் கொடுக்கைக்கு உடைமை சொல்லுகிறது.
அதிபதி. உபயவிபூதிக்கும் நிர்வாஹகனாகை. ஆகி. ஆச்ரிதர் தன்னை யநுஸந்தித்தவள
விலேயாயிருக்கை. ஐச்வர்யார்த்தி, ஐச்வர்யவிசிஷ்டனை அநுஸந்தித்தால் அவ்வளவா
யிருக்கும்; கைவல்யார்த்தி, அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தனை அநுஸந்தித்தால் அவ்வளவா
யிருக்கும்.

அசுரரிராக்கதரை. இப்படத்துக்கு அஸுரர்களாலே வேதாபஹாராத்யாபத்துங்
களில் கனியறுத்துக்கொடுக்கையும் ரக்ஷகனுக்கு பரமிறே. 'ஆர்த்தன்' என்றும், 'அர்த்
தரர்த்தி' என்றும் ஐச்வர்ய புருஷார்த்தம் இரண்டு முகமாயிறே யிருப்பது. அதில் அர்த்
தார்த்தியைக் கீழே சொல்லி, இவ்வம்சத்தாலே ஆர்த்தனைச் சொல்லுகிறது. ஜ்ஞாநப்ரதிப
பாதநார்த்தமே பண்ணிப் போருவது இரண்டு வர்கமிறே. ஸம்பந்த மொத்திருக்க நிரஸ
நத்திலே யிழிகிறது, ஆச்ரித விரோதிகளென்றிறே. இண்டக்குலத்தை. மிகவும் நெருங்
கின திரளை. "இண்டர்" என்று- சண்டாளர். இவர்களை சண்டாளரென்று சொல்லுகி
றது- நிஹீநரென்னும் நினைவாலே. உத்கர்ஷத்துக்கெல்லை- பரஸம்பத்தியேகப்ரயோஜ
யிருக்கை; நிகர்ஷத்துக்கெல்லை பராநர்த்தமே யாத்தையாயிருக்கை. இவ்வாபத்துக்களிலே
"கூஊஊஃ துவெ நஃ" என்றிறே இவர்களுடைய ஆச்ரயண ப்ரகாரமிருப்பது.
எடுத்துக்களைந்த. "பொல்லா வரக்கனைக் கிள்ளிக் களைந்தானை" என்னுமாப்போலே, ஆர்
ரிதர்பக்கல் அழல் தட்டாதபடி நிரஸிக்கை. "இலங்கை பாழாளாக" என்றதும் விபீ
ஷண பரிக்ரஹத்துக்கு ஒரு கோவு வாராதபடியிறே; விபீஷணைக்ரஹத்துக்கு அழல் தட்
டாதபடியிறே லங்காதஹநம் பண்ணிற்றுத் திருவடியும். இருடீகேசன். ப்ரயோஜநாந்த
பரர்க்கு ஐச்வர்யாதிகளிலே கர்மாநுகூலமாக ருசியைப் பிறப்பிக்கும்; தன் பக்கலிலே ஸ்வ
ஸ்தபரராயிருப்பார்க்கு ஸ்வரூபாநுரூபமாக ருசியைப் பிறப்பிக்கும். ஐச்வர்யார்த்தமாக
வவன் பக்கலிலே கண்வைக்கும்போதே அவன் வடிவழகிலே உறைக்க வையுங்கோள்; அவன்
"மமேதம்" என்கிற அபிஸந்தியைக் குலைத்துத் தன்பக்கலிலே ருசியைப் பிறப்பிக்கும்;
அத்தாலே, அபேக்ஷித்த ஐச்வர்யத்தை விஸ்மரித்து அவன்றன்னையே பற்றலாம்.

தனக்குத் தொண்டக்குலத்திலுள்ளீர். இப்படி ஐச்வர்யத்தில் ப்ரேமம் போய் பகவத்
ப்ரேமயுக்தருடைய திரளிலேயுளரான நீங்கள். "தொண்டக்குலம்" என்று தனியே ஒரு
ஸந்தாநம்போலே காணும். 'தேஹமே ஸ்வரூபம்' என்றிருப்பார்க்கும், 'சேஷத்வமே
ஸ்வரூபம்' என்றிருப்பார்க்கும் இத்தனை வாசியுண்டிறே. இனி அநந்யப்ரயோஜநராயிருப்

பார்க்கு க்ர்த்பம் இன்னிதன்கிறுர் மேல். வந்துடிதோழுது. திருவடிகளை ப்ரயோஜநமாக வந்து, அநுகூலவ்ர்த்திகளைப்பண்ணி. ஐச்வர்யமே ப்ரயோஜநமாய் விஷயாநுபவமே யாத் ரையாயிருக்கை தவிர்ந்து, திருவடிகளை ப்ரயோஜநமாய் அநுகூலவ்ர்த்தியே பாத்ரையா யிருக்குட்படி பாருங்கோள். ஆயிரநாமஞ் சொல்லி. இரண்டு திருநாமத்தையே நிர்பந்திக்க வேண்டுவது "மமேமதம்" என்றிருக்குமன்றிறே; "தவேதம்" என்கிற புத்தி பிறந்தால், பகவத்குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான திருநாமங்களெல்லாம் போக்யமாயிறேயிருப்பது; அவற்றை வாபாரச்சொல்லி. பண்டைக்குலத்தைத்தவிர்ந்து. தொண்டக்குலத்திலே வந் தவ்யித்தவாறே 'மமேமதம்' என்றிருந்தகாலம் ஜ்ஞாந்தரமாய்த் தோற்றுமிறே. ஒரு ஜ்ஞத்திலே த்விஜ்ஞமனுகிறுளிறே; ராஜர்ஷியான விச்வாமித்ரன், அந்த ஜ்ஞத்திலே ப்ர ஹ்மர்ஷியாளிறே. அங்கு தபஸ்ஸாலே வ்ருத்தியுண்டாயிற்று; இங்கு பகவத்ப்ரஸாதந் தாலே ஸ்வரூபலாபமுண்டாயிற்று. 'உனக்கு நான்' என்ற வநந்தரம், முன்பு 'நான்எனக்கு' என்றிருந்தவிது வ்யதிரேகமாய்த் தோற்றுமிறே.

பல்லாண்டு. இப்படி அநந்யப்ரயோஜநரான நீங்கள் மங்களாசாஸநம் பண்ணுங் கோள். 'ப்ரயோஜநாந்தரபரனுய்ப் போந்தவன் நமக்கு ஸம்ர்த்தியை ஆசாஸிக்குமந்தரம் பரிவுகெப் பெற்றோமே!' என்று அவன் குளிரநோக்கும்; பல்லாயிரத்தாண்டென்மின். பின்னை, பல்லாயிரத்தாண்டு என்னுங்கோள். அந்நோக்கழகு நித்யஸூரீயாய்ச் செல்லவேணு மென்று மங்களாசாஸநம் பண்ணுங்கோள். உங்களுக்கு இம்மாத்ரத்திலே ஸ்வரூபமும், அத்தாலே ஈச்வரனுக்கு ஸம்ர்த்தியுமுண்டாகப்பெற்றால் ஆறியிருக்கிறதென்? சடக்கென மங்களாசாஸநம் பண்ணுங்கோளென்கிறுர். ... * ... * ... * ஈ

அ.—ஆரும்பாட்டு. எந்தையித்யாதி. அநந்யப்ரயோஜநர்க்கும் ப்ரயோஜநாந்தர பரர்க்கு முண்டான நெடுவாசி யறிந்திருக்கச்செய்தேயும், அநந்யப்ரயோஜநரையழைத்த ஸமநந்தரம் இவர்களையழைக்கைக்கடி "உஷாராஸ்வ-ஸ்வ-ஸ்வ" என்னுமவன் சீலத்தாலும், அவனோடு இவர்களுக்குண்டான அவர்ஜநீய ஸம்பந்தத்தாலும், இவர்களுக்கும் அவற்றையே நினைத்துத் தோங்காதே புகுரலாம்படியாயிறே யிருப்பது. ஆகையாலே, அநந்ய ப்ரயோஜநரை யழைத்தமேவாபாதி; இவர்களையும் அழைத்தாராய் நின்றுர் கீழ்; இதில், *வா ழாளிலழைத்த அநந்யப்ரயோஜநர், தங்கள் ஸ்வரூபத்தையும் ஸ்வரூபாநுரூபமான வ்ர்த் தியையும் சொல்லிக்கொண்டு வந்து புகுர, அவர்களைக் கூட்டிக்கொள்ளுகிறுர். "ஏழாட் சாலும் பழிப்பிலோம்" என்று ப்ரயோஜநாந்தரபரரைக் குறித்துத் தாமருளிச்செய்த நம் மூடைய திரளுக்குண்டானவேற்றத்தை, புகுருகிறவர்கள், தங்களுக்குண்டாகச்சொல்லிக் கொண்டு வந்து புகுருகிறுர்கள். தந்தாமேமற்றஞ் சொல்லிக்கொண்டுவந்து புகுருகை ஸாத் த்விகர்க்கு யுக்தமோவென்னில்; ஆழ்வாருடைய திருவுள்ளம் பயங் கெடுகைக்காகச் சொல்லுகிறுர்களாகையாலே யுக்தம். "வளமாஸநரோகாமஸ வதஜ்ஞவசநிவஸவிதி. விவநமெதயஸஹம்ஸஜூஷ் வரிமதந-ம லஹஸ்ரஸஃ" என்று திருவடி, ஸ்வசக்திவையைச் சொன்னதிறே முதலிகளுடைய பயம் சமிக்கைக்காக.

மு.—எந்தை தந்தை தந்தை தம்முத்தப்ப னேம்பலிகாள் தொடர்ந்தீர்

தந்தை— அவனுக்கப்பனும்
தந்தை— அவன் தகப்பனும்
தந்தை— அவனப்பனும்
தம்முத்தப்பன்— அவன் தமப்பனும் பாட்டனும் ஆகிய
எழுபதாம்கால் தொடங்கி— எழு தலைமுறைகள் தொடங்கி
வந்து— போக்கமான தசைகளின்மேல் வந்து
வழிவழி— முறைமுறையாக
ஆள்செய்கின்றோம்— அடிமைசெய்கின்றோம்,
அந்திபட்டபோதில்— அஸ்தமயமேவேளையில்
அரிஉருவாகி—நரன்கலந்தசிங்கவுருவெடுத்து
அரியை— சத்ருவான ஹிரண்யனை
அழித்தவனே— ஸம்ஹரித்தவனே
பந்தணை தீர— அனுக்கம் தீர
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டிடன்று—இவ்விதமாக
பாடுதும்— பாடுவோம்.

(வ - அரை.)

வ்யா.—எந்தை. தானும் தமப்பனுமாக இருவர். தந்தை தந்தை தந்தை என்று மூவர். தம்முத்தப்பன். "தம்" என்று- முடிந்தவனை அறுதியாகிக்கிறது. முத்தப்பன். "அப்பன்" என்று- தமப்பனார்; "முத்தப்பன்" என்று-பாட்டனார்; ஆகையாலே மூன்று பிரிவர்; ஆக, எழுவரையுஞ் சொல்லுகிறது. ஆழ்வார் "எழாட்காலும் படிப்பிலோம்" என்று தெளிவுருவிச்செய்தார்; இவர்களும், எழ்படிகால் என்று தெளிச்சொல்லாநின்றார்கள். பிரித்துச்சொல்லுகிற விதுக்கு பலமென்னென்னில்; ஸ்வஸம்தாநத்தில் மங்களாசாஸநம் பண்ணிப்போந்தவர்கள் பக்கலுண்டான ப்ரீத்யதிசயத்தாலே சொல்லுகிறார்கள். "ஸஹிவிஜ்ரம்ஜநபதி கலெஜ்ஜந்ஜ" "டரீயாரு ஜ்ரூஜ்ஜுவிகா" என்று விந்த்யாஸம்தாநத்தைக் கொண்டாடுமாப்போலே "வித்தம் சாகயம் ஜாயாரு" என்று த்யாஜ்யமான மோக்ஷஸம்தாநத்தைக் கொண்டாடுகையுக்தமோ வென்னில்; யுக்தம்; கொண்டாடுகைக்கு ப்ரயோஜநம் பகவத்ஸம்பந்தமாகையாலே. விந்த்யாஸம்தாநத்திலும் பகவத்ஸம்பந்தமுண்டு த்யாஜ்யமல்லாமை. ஏழ்படிகால் தொடங்கி. அர்த்தக்ரமத்தாலே எழுபதாம் தலைமுறை சொல்லவேண்டி தெளிச்சொல்லுகிறது - ஸ்வஸம்தாநத்திலுண்டான ஆதராதிசயத்தாலே. வந்து-மங்களாசாஸநம் பண்ணுகைக்கு போக்யமான தசைகளின்மேல் வந்து. வழிவழியாட் செய்கின்றோம். முறைமுறையாகத்தப்பாமே அடிமை செய்கிறோம். இத்தால் இவ்ஸம்தாநத்துக்கு மங்களாசாஸந விச்சேதம் பிறந்ததில்லை யென்கை. யாஜ்ஞிக ஸம்தாநத்துக்கு த்ரிபுருஷ விச்சேதம்போலே அப்ராஹ்மண்யஞ் சொல்லுமாப்போலே, மங்களாசாஸந விச்சேதம்பண்ணவேண்டுமென்று சொல்லுங்குறை எங்கள் ஸம்தாநத்தில் இல்லை என்கிறார்கள். "பஹ்வ்யோ ஹ்யஸ்ய விஜ்ஞாதய இதி ஹ்யுபதிஸ்யதே। ஸ யஸ்யைஷ ஸ்ருதேர்வாதஸ்தம் ஹந்தும் கோ நாம நீஷ்டே" என்னக்கடவதிறே. "வழிவழி" என்று ஸாம்ப்ரமார்த்தத்தாலும் சிஷ்டாசாரத்தாலும் மென்றுமாம். "ஸாதிஸ்ஸாதி ஸ்ஸாதிஃ" என்றும், "வெஸ்ஸுகி ஸாஜ ஸ்ஸுகிம்" என்றும், "ஸவ்ஸாஸு நெஸாஸு நஸிஸ்ஸுகி" என்றும், "ஜ்ஞாஜோதி வ்யவஸ்தாநாத்" என்றும் சொல்லக்கடவதிறே. ஆள்செய்கின்றோம். ஆள்செய்கையாலது தெரிப்பல்லாண்டி பாடுகையிறே; மேல் "பந்தணை தீரப்பல்லாண்டு" என்றதற்கு வ்யாக்யாநமாகச் சொல்லுகையாலே.

மோலலாத விடதுகமகலலாம இதுமவ திருகஷதரமாகக கடவது. " திருமவானம் " என்கிறது ஜமஹகஷத்ர மென்னில், உகவாதாரறிந்து அபிசரிப்பர்களென்று அஞ்சி, திரு மவானமென்கிற திருநாளிலே யென்று மறைத்துச் சொல்லுகிறார். அந்தியம் போதில். தேவர் களுக்கு பலம் கூணமாய் அஸுரர்க்கு பலம் (க) வர்த்திக்கும் ஸமயத்திலே. அரியுருவாகி. ஒரு காலவிசேஷம் வேண்டாதே ஸர்வகாலமும் மங்களாசாஸநம் பண்ணும்படியான வடிவை யுடையவனுய், " நாரஸிம்ஹவபுஷே " என்றும், " அழகியான்றனே யரியுருவன் றனே " என்றும் " நரங்கலந்த சிங்கமாய் " என்றும் சொல்லக்கடவதிறே. அரியையழித்தவனே. 'அரி' என்று சத்ரு. ஸஹஜசத்ருவான ஹிரண்யனைக்குற்றமிராக்கிவிடாதே உருவழித்தவனே. " சுகிர்ந்தெங்கும் சிந்தப்பிளந்த " என்னக்கடவதிறே. அவனை யழிபச்செய்தது பயஸ்தாந மாகிறது- பின்புள்ளார் பகை கொண்டாடுவ ரென்னுமத்தாலே. பந்தனதீர. துஷ்ப்ரக்ருதி யான ஹிரண்யனுடலைக் கிண்டு பொகடிகையால் வந்த அனுக்கம்தீர. திருவவதரித்த திவ ஸத்திலண்டான அபதாந மாகையாலே " அனுக்கம் " என்கிறதிறே. பல்லாண்டு. அதுகூ லர் வாயாலே ஒருக்கால் மங்களாசாஸநம் பண்ண, அவ்வஸ்துவினுடைய அனுக்கம்போய், நித்யமாய்ச் செல்லுமென்றிறே இவர்கள் நினைவு. பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே. ஒருக் கால் ' பல்லாண்டு ' என்றதனால் பர்யாப்தி பிறவாமையாலே காலதத்வ முள்ளதனையும் நித்யமாய்ச் செல்லவேணுமென்று மங்களாசாஸநம் பண்ணுகையே எங்களுக்கு வர்த்தி யென்கிறார்கள். ... ... சு

அ.—ஏழாம்பாட்டு. தீயிற்பொலிகின்ற. *ஏடுநிலத்திலே இவராலே ஆஹ்ரியதான கைவல்யார்த்திகள், தங்கள் ஸ்வபாவத்தைச் சொல்லிக்கொண்டுவர, அவர்களோடே ஸங்கத ராகிறார். இவர்களை யழைத்தபோது, " வரம்பொழிவந்தால்லைக் கூடுமிறே " என்று நீங் கள் பற்றின புருஷார்த்தத்தைவிட்டு வாருங்கோளென்றும், " நமோநாராயணாய " என்று அநந்யப்ரயோஜநராய் வாருங்கோளென்றும், " நாடுநகரமும் நன்கறிய " என்று விசேஷஜ்ஞர் பரிக்ரஹிக்கும்படியாகவும் அவிசேஷஜ்ஞர் உபேக்ஷிக்கும்படியாகவும் வாருங்கோளென்று மிறே அவர்களை யழைத்தது. அதில் கூறுத்தபுருஷார்த்தத்தை விடுகையும் அநந்யப்ரயோ ஜநராகையும் நம்முடைய க்ருத்யம். அதுகூலர் பரிக்ரஹிக்கைக்கும் ப்ரதிகூலர் கைவிடு கைக்கும் செய்யவடுப்பதென் என்று பார்த்து, வைஷ்ணவ சிஹ்நமான திருவிலச்சினையை தரிக்கவேவ த்யாகோபாதாநங்களிரண்டும் ஸித்திக்குமென்று பார்த்து, அத்தை தரித்துக் கொண்டு வந்தோமென்கிறார்கள்.

மூ.—தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருச்சக்கரத்தின்
கோயிற் பொறியாலே யொற்றுண்டு நின்று குடிகுடியாட் செய்கின்றேரும்
மாயப்பொருபடை வாணனை யாயிரந்தோளும் பொழிகுருதி
பாயச் சுழற்றிய வாழிவல்லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே. எ.

(க) வஹிக்கும்.

ஐஶ்வர்யாதிகளிற்காட்டிலும்
பொலிகின்ற— (மேலாக) விளங்குகின்ற
செம் சுடர்— சிவந்த தேஜோமண்டலத்தையுடையவனே
ஆழி— மண்டலாகாரமாய்
திகழ்— ஜ்வலியாநின்ற
திருச்சக்கரத்தின் கோயில்— திருவாழியாழ்வான் எழுந்தருளியிருக்கு மிடத்தின்
பொறியாலே— சிஹ்நத்தாலே
ஒற்றுண்டு நின்று— சிஹ்நிதாராய் நின்று
குடி குடி— வம்ச பாரம்பர்யமாக
ஆள் செய்கின்றோம்— அடிமை செய்து
வாராநின்றோமும்,

படை— ஸைந்யத்தையுடைய
வானை— பாஞ்சஜந்யத்தை
ஆயிரந்தோளுடை— ஆயிரமடியோர்களினின்ற
பொழி— சொரியாநின்ற
குருதி— இரத்தமானது
பாய— வழிந்து ஓடும்படியாக
சுழற்றிய— சுழற்றின
ஆழிவல்லானுக்கு— திருவாழியாழ்வானையுடைய வடிவழகையுடைய
பல்லாண்டு கூறுதும்— திருப்பல்லாண்டு பாடாநின்றோம்,

(ஏ - ம்)

வ்யா.—தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி என்று வைஷ்ணவ கோஷ்டியிலே பழுமை பண்ணின உபகாரஸ்ம்ருதியாலே ஆழ்வானைக் கொண்டாடுகிறார்கள். தீயிற்பொலிகின்ற. "தி என்கிறசப்தம் சந்த்ராதித்யாதி தேஜோபதார்த்தங்களெல்லாவற்றுக்கும் உபலக்ஷணம். அந்த காட்டில் தேஜஸ்ஸை (க) வர்த்திக்கையாகிறது- "சுதர்சநாழ்வாந்தம் ஸ்ரீமத்" என்கிற பரமபதத்தில்தேஜஸ்ஸை மிக்கிருக்கக்கடவது ஆதித்யாதிதேஜஸ்ஸுக்களிற்காட்டில்; அந்த காட்டில் அவனுடைய திவ்யமங்களவிக்ரஹ தேஜஸ்ஸை மிக்கிருக்கக்கடவது; அதற்குமேல் காசகடமாயிறே திருவாழி யாழ்வானுடைய தேஜஸ்ஸிருப்பது. "வடிவார்சோதி வலத்துறையுறை சுடராழி" என்னக்கடவதிறே. "தவ ஹாஸா ஸ்வபூதிஶ்ச விஜயாத்" என்கிறபடியே அவனுடைய தேஜஸ்ஸாலே ஸர்வமும் விளங்காநின்ற தென்றுநிற்க, திவ்யமங்கள விக்ரஹத்துக்கு இவன் ப்ரகாசகனம்படி யென்னென்னில்; சேஷ்டா. காலமேகம்போலே ஸர்வாநுபவத்துக்கு இருட்டறையில் விளக்கேற்றினாப்போலே பரமாகாஶத்திலேவந்து ப்ரகாசத்வத்தைச் செய்கிறது. ஆழி திகழ் திருச்சக்கரம். இடைவெளியில்லாமல் பொன்மயமான புறம்பு போக்கற்று, தன்னிலே மண்டலாகாரமாய்க்கொண்டு விளங்காநின்றுள்ள திருவாழி யாழ்வானென்கை. சக்கரத்தின் கோயில். ஆழ்வானெழுந்தருளியிருக்கிற மண்டலாகாரமான வாஸஸ்தாநம். பொறிபோலே ஒற்றுண்டுநின்று. அதாவது- சிஹ்நத்தாலே சிஹ்நிதாராய் நின்று. திருவிலச்சினையை தரித்த பின்பிறே, இவன் ஐஶ்வர்யாதிகளிற்போகாதே மோக்ஷைகரஸத்திற் போகாதே ஸ்ருஷ்டிக்கப்பெற்றது. பகவதங்கீகாரமுடை இதுண்டானபின்பிறே அதிசயிப்பது. ஸ்ரீமதத்வாரகையில்நின்றும் ஆச்ரிதவிரோதி நிரஸநார்த்தமாக எழுந்தருளுகிறபோது திருவாசல்காக்கின்ற முதலிகள், "மீண்டெழுந்தருளுநமவும் இங்குப் புகுரக்கடவாராரா? அல்லாதாராரா?" என்று விண்ணப்பஞ்செய்ய, "ஸகுரா ஸ்ரிதாஂ ப்ரவெஷ்டவ்யாஂ யாவதாகதஸமயஂ। நாகு ஸ்ரிதாஂ ப்ரவெஷ்டவ்யாஂ யாவதாகதஸமயஂ" என்று இந்த லக்ஷணமுடையார் யாவர்சிலர், அவர்கள் நிச்சங்கமாகப்

(க) வர்த்திக்கை.

புகுரக்கடவர்கள் ; அல்லாதாரை பாவபரீக்ஷைபண்ணிப் புகுரவிடக்கடவது என்றுனிறே க்ருஷ்ணன். இதுதான்ஈச்வராங்கீகாரத்துக்குமூடலாய்,இதுதானும் 'நாமவலுடைமை' என்று நிர்பரனுயிருக்கைக்கு மூடலாய், இவன்பண்ணின பாபத்தை யநுஸந்தித்து க்ரூரமாகப்பார்க்கக்கடவ யமாதிகளு மஞ்சும்படியா யிருப்பதான்றிறே. "ய கூராஜியாணம் வோஹயம வாஸுதே நுவஹந்தி । வதிவ்ரதா நிதிதம்ஹி வதுயாதி விஹ்வடணே" என்று பகவத்ஸம்பந்தத்துக்கு ஜ்ஞாபகமாயிறே யிருப்பது. குடிகுடியாட்செய்கின்றேரும். "ஸவோ்ரவள தூ ஸுமணஸ்" என்கிறபடியே ஸந்தாநமாக அடிமை செய்யக்கடவோமாய் வந்தோம். இப்படி அநந்யார்ஹராயிருப்பார் செய்யுமடிமையாவது - திருப்பல்லாண்டு பாடுகையிறே.

எந்த அபதாநத்துக்கு நீங்கள் மங்களாசாஸநம் பண்ணுகிறதென்னில்; மாயப்போரு படை யித்யாதி. எங்களைப் புகுரநிறுத்தின ஆழ்வாணுடைய வீரப்ரகாசகமான துறையிலே திருப்பல்லாண்டு பாடக்கடவோ மென்கிறார்கள். மாயப் பொருபடை வாணனை. ஆச்சர்யமாகப் பொரும்ஸைந்யை யுடைய வாணனென்னுதல்; ஆச்சர்யமாகப் பொரும் ஆயுதத்தை யுடைய வாணனென்னுதல். "மாயம்" என்று - க்ர்த்ரிமமாய், க்ர்த்ரிமமான யுத்தத்தை யுடையவ னென்னவுமாம். ஆயிரந்தோளும் பொழிகுருதிபாய. ஆயிரந் தோள்களாலும் மதகு திறந்தாப்போலே ரக்தவெள்ளம் குதிகொண்டு பூமிப்பரப்படையப் பரம்பும்படி. பொழிதல்-சொரிதல். இதுக்கு இவன் பண்ணின வ்யாபாரத்தளவேதென்னில்; சுழற்றிய. திருவாழியை விடவேண்டிற்றில்லை, சுழற்றினவித்தனை. அவன் ஒருக்கால் திருவாழியைச்சுழற்ற, வாணனுடைய தோள்களாயிரமும் ஒருக்காலே மலைக் கொடுமுடிகள்போலே முறிந்துவிழுந்தன. வாணனுடைய தலையை அறுதொழிந்தது குற்றம் போராமையன்று, உஷை பிர்ஹீநை யாகாமைக்காகவும், தேவதாந்தரபஜநம் பண்ணுவார்க்கு பலமிது என்னுமிடத்துக்கு மச்சமாகவும். அதாவது- "பரிவின்றி வாணனைக்காத்தும்" என்று ப்ரதிஜ்ஞை பண்ணி, யுத்தத்திலே இவனைக்காட்டிக்கொடுத்து, ஸபரிகரனுய்க்கொண்டு முதுகுகாட்டிப்போனன் ரக்ஷகன், ரக்ஷ்யபூதன் தோள் துணியுண்டான். 'உன்னை ரக்ஷிக்கப் புக்கு நான்பட்டதோ!' என்றும் 'உன்னை ஆச்ரயித்து நான்பட்டதோ!' என்றும் இருவருங்கூடக் கட்டிக்கொண்டு கதறுகையிறே பலமாய்விட்டது. ஆழிவல்லானுக்கு: 'வில்வல்லான்' 'வாள்வல்லான்' 'தோள் வல்லான்' என்னுமாப்போலே. "பவ்ருவா ஜநகா தூஜா" என்கிறபடியே பிராட்டியை எனக்கென்ன இட்டுப்பிறத்தல், திருவடி தோளிலே நல்தரிக்கவிருத்தல், கைபோராமல் திருவாழியைப்பிடித்தல் செய்யுமதாய்த்து ஸ்வாதிகத்வத்துக்கு லக்ஷணம். பல்லாண்டு கூறுதுமே. அத்தனையிலே அடிமைசெய்த ஆழ்வாணுடைய வீரஶ்ரீக்கும், அடிமைகொண்ட க்ருஷ்ணனுடைய வீரஶ்ரீக்கும் மங்களாசாஸநம் பண்ணுவாரைப்பெற்றதில்லை; அவ்விழவு நீர இன்றிருந்து திருப்பல்லாண்டு பாடுகிறேரு மென்கிறார்கள். ... ...எ.

அ.—எட்டாம்பாட்டு. நேய்யிடை யித்யாதி. * அண்டக்குலத்திலே யழைத்த ஈச்வர் யார்த்திகள் இசைந்துவர, அவர்களைக் கூட்டிக்கொள்ளுகிறார். * வாழாளிலழைத்த அநந்ய ப்ரயோஜநர் தங்களேற்றத்தைச் சொல்லிக்கொண்டு புகுந்தார்கள் * எந்தை தந்தை தந்தை யிலே; * ஏடுநிலத்திலழைத்த கைவல்யார்த்திகள் தாங்கள் திருந்திப் புகுந்தமை சொன்னார்

அவன் தந்தானைப் பேசிற்று; இதுக்கு நிபந்தனம்- இன்று ஸ்வரூபஜ்ஞானம் பிறந்து புகுருகிறவர்களாகையாலே அதினுடைய கூடாத்ரதை தோற்றப் பேசுகிறார்கள். அண்டாத்யகஷனை ப்ரஹ்மாவுக்கும் தாரகபோஷக போக்யங்களெயிறே ப்ரயோஜநம்; அதற்கு மேற்பட்டு பகவத்விஷயத்தை 'எனக்கு' என்கிற அபிமாநத்தால் வந்த ஸ்வரூபஹாநியே யிறே பலம்.

மூ.—நெய்யிடை நல்லதோர் சோறு நியதமு மத்தாணிச் சேவகமும்
கையடைக்காயுங் கழுத்துக்குப் பூணெடு காதுக்குக் குண்டலமும்
மெய்யிட நல்லதோர் சாந்தமுந் தந்தென்னை வெள்ளுயிராக்கவல்ல
பையுடைநாகப் பகைக்கொடியானுக்குப் பல்லாண்டு கூறுவனே. 4.

பதவுரை.

நெய் இடை— நெய்யோடு ஒத்த
நல்லது— மிக்க சுவையையுடைய
ஓர்— விலக்ஷணமான
சோறும்— சோறும்
நியதமும்— எப்பொழுதும்
அத்தாணி— பிரிவில்லாத
சேவகமும்— ஸேவையும்
கை அடைக்காயும்— கையா லிட்ட வெற்றிலைப்பாக்கும்
கழுத்துக்கு— கழுத்தி லிடுதற்குரிய
பூணெடு— (கண்டி கைமுதலிய) ஆபரணங்களும்
காதுக்கு— காதி லிடுதற்குரிய
குண்டலமும்— குண்டலமும்
மெய் இட— உடம்பிலே பூச
நல்லது— மிக்க மணத்தையுடைய
ஓர்— ஒப்பில்லாத
சாந்தமும்— சந்தனமும்
தந்து— கொடுத்து
என்னை— அடியேனை
வெள் உயிர்— சுத்த ஸ்வபாவமுடையனாய்
ஆக்கவல்ல— ஆக்கத்தக்கவல்லமையையுடைய
பை உடை— பணங்களையுடைய
நாகம்— திருவனந்தாழ்வானுக்கு
பகை— விரோதியான பெரிய திருவடியை
கொடியானுக்கு— த்வஜமாகவுடையவனுக்கு
பல்லாண்டு கூறுவன்— திருப்பல்லாண்டு பாடா நின்றேன்.

(ஏ - அசை.)

வ்யா.—நெய்யிடை. "இடை" என்று- நிறையாய், நெய்யோடொத்த சோறென்னுதல். "இடை" என்று- நடுவாய், நெய்யினிடையிலே சில சோறு முண்டென்னுதல். இத்தால்- போஷகப்ரசுரமான தாரகத்ரவ்யத்தைத் தருமென்கை. நல்லதோர் சோறும். சோற்றுக்கு நன்மையாவது- இட்டவன் 'இட்டோம்' என்றிருத்தல், உண்டவன் 'இதுக்கென் செய்வோம்!' என்றிருத்தல் செய்யாத சோறு. அதாவது- தாய் இட, புத்ரனுண்ணும் சோற்றுக்கு இவ்விரண்டு மில்லையிறே. ஓர்சோறு. இப்பாவசுத்தியே யன்றிக்கே, விலக்ஷண ரஸோபேதமா யிருக்கை; அங்ஙனன்றிக்கே, சேஷபூதன் சேஷிக்கு இடும் சோறுபோலே யிருக்கை. அதாகிறது - அஹங்காரோபேத மன்றிக்கே பக்தியுபஹ்ருதமா யிருக்கை. ஈச்வரனும் "ஹ்ருதா நாழி" என்கிற நிஜவாலேயும் வத்ஸலனையுமிறே யிடுவது. அநந்யப்ரயோஜநன் ஸ்வாமி விஷயத்திலிடும் சோறு எங்ஙனே யிருக்கு மென்னில்;

துர்யோதனன், தன் ஐச்வர்யத்தைப்பற்ற அபிமானித்தான்; பீஷ்மன், ஜ்ஞானாதிகனென்று அபிமானித்தான்; த்ரோணன், வர்ணத்காலதிகனென்று அபிமானித்தான்; இவையொன்றுமின்றிக்கே பக்த்யுபஜ்ஞர்தமா யிருக்கை.

நியதமும். அதாகிறது— ஐச்வர்யம் ஈச்வரனே கொடுக்கிறபடியால் அஸ்திரமாயிருக்கக் கடவது; அது அழிந்தவன்றும் அவ்வைச்வர்யத்தை ஸமாதானம் பண்ணிக்கொடுக்குமவனுகையாலே "நியதமும்" என்கிறது. இத்தாலேயிறே "அச்சுதன்" என்றும், "ஆர்த்தன்" என்றும் ஐச்வர்யத்துக்கு இரண்டு வகை சொல்லிற்று. அநந்யப்ரயோஜநர்க்கே தேவதாந்தரங்களைப்பற்றி ஈச்வரனே யில்லையென்பது மன்றும் தர்மீகர் சோறிடுமவனல்லன். ஸர்வேச்வரனிட்ட சோற்றைத் தின்று அவனை யில்லையென்பதும் க்ருதக்நரிறே ஸம்ஸாரிகள்; நன்னை யில்லையென்பது மன்றும் ரக்ஷிக்கும் உதாரனிறே ஸர்வேச்வரன். அத்தாணிச் சேவகமும். "அத்தாணி" என்று- பிரியாணை; "சேவகம்" என்று சேஷை. ஐச்வர்யார்த்திக்கும் அநவரதபாவனையும், அர்த்தி ஸம்ர்த்தியும் அநந்ய ப்ரயோஜநரிடைதாறி கர்தவ்யமிறே. ஆனால் ஐச்வர்ய ஸாதநத்தையும் "தந்து" என்று ப்ரயோஜநத்தோடொக்கச் சொல்லுவா னென்னென்னில்; வெள்ளுயிரானபின்பு சொல்லுகிறார்களாகையாலே அந்த ஸாதநமும் ஸ்வயம் ப்ரயோஜநமாயிறே யிருப்பது. அநந்ய ப்ரயோஜநருக்கு ஸ்வயம் ப்ரயோஜநமான சேஷை ஸாதநமாகக் கிடார் கூடாத்தமான ஐச்வர்யத்தைத் தந்தருளுகை.

கையடைக்காயும். தாரக போஷகங்கள் கீழே சொல்லிற்றுப், மேல்— போக்ய பதார்த்தங்களைத் தந்தபடி சொல்லுகிறது. திருக்கையாலே யிட்ட வெற்றிலைப்பாக்கென்று இவர்கள் பக்கல் கௌரவத்தாலே யிட்ட சீர்மையைச் சொல்லுகிறது. சேஷபூதனன் சேஷியை க்குறித்து இடும் ப்ரகாரத்தாலே யிறே சேஷியானவன் சேஷபூதனுக்கு இடுவது. கழுத்துப் பூணெடு காதுக்குக் குண்டலமும். தேஜோத்தர 'உத்தேச்யம்' என்றிருக்குமளவையாலே தன்னுடம்பை யலங்கரித்து, அத்தை பரபவித்திருக்கு மவனிறே ஐச்வர்யார்த்தி; பகவத்பரனும் ஈச்வரனை யலங்கரித்து, ஸதா தர்சநம் பண்ணி யிருக்கிறவனல்லனே; ஸ்வரூபத்தை யுணர்ந்து ஜ்ஞாந வைராக்ய பக்திகளை ஸ்வரூபத்துக்கு ஆபரணமாக நினைத்திருக்கிறவனல்லனே. "கழுத்துக்குப் பூணெடு காதுக்குக் குண்டலமும்" என்று விதேயவிபாகமானென்னென்னில்; தன் கண்ணுக்கு அவிஷயமாய், காட்டார் கொண்டாகிலுந்தன கண்ணுக்கு ப்ரயோஜநமா யிருக்கையாலே. அவயவாந்தரங்களில் அங்குலீயகாத்யாபரணங்கள் தன் கண்ணுக்கு விஷயமா யிருக்குமிறே. பெருமாள் மீண்டெழுந்தருளின வளவிலே இந்த்ரன் வரக்காட்டின ஹாரத்தைப் பிராட்டியும் தாமுமிருந்து திருவடிக்குப் பூட்டி முப்போலே, ஈச்வரன் பரிந்து 'இது கழுத்துக்காம், இது காதுக்காம்' என்று திருக்கையாலே பூட்டின ஆபரணமும். "வ்ருஷ்ஹி ஸ்ரேஷ்ட! ஹாரம் யஸ்ய தேவஸ்ய ஸாதிபி!" என்கிறபடியே இந்த்ரன் கொடுத்துவரக்காட்டின ஹாரத்தைப் பெருமாள் வாங்கிப் பார்த்தருளி, பிராட்டிக்குக் கொடுக்கிறபோது, அத்தை வாங்குகிறவள், பெருமாளை ஒரு திருக்கண்ணாலும் திருவடியை ஒரு திருக்கண்ணாலும் பார்த்து வாங்கினாள். "வ்ருகூ தஜ்ஞாலம் கோலலுா?" என்று பார்வையில் கருத்தறியுமவ ராகையாலே, அவனுக்குக் கொடுக்கலாகாதோ! என்றருளினார். [ஸ்ரேஷ்ட] அடியாரேற்ற மறிந்துகொண்டாடுமவரைக் கிடாவினை யெடுப்பிக்கு

ன்ப ப்ரபோஜநத்துக்கு ஆதரித்துப் பூட்டினப்போலே யாய்த்து கூஷ்மாண்டரூபனை வென்னை ஆதரித்துப் பூட்டிற்றும்.

மேய்யிட. திருவடிகளில் ருசி பிறந்த பின்பாகையாலே 'உடம்பு த்யாஜ்யம்' என்கிற நினைவு தோன்ற குத்ஸித்துச் சொல்லுகிறபடி. நல்லதோர் சாந்தமும். சாந்தரான் இதுக்குத் காரகமாகப் பெற்றதோ! "ஸவ-ஹ-ஸ்ரீ" என்கிற வடிவுக்கு ஸதர்சமாக, குப்ஜை ஆதரித்துச் சாத்தின சாந்துபோலே யிருக்கும் சாந்தை யன்றோ எனக் கிட்டற்று. [ஸ-ஹ-ஸ்ர ஜெகஜ] குப்ஜை, கம்ஸனுக்குப் பரணீயாடே சாந்து கொண்டுபோகா நிற்க, 'வாரீர் பெண்பிள்ளாய், நமக்கும் நம்மண்ணற்கும் சாந்திடவல்லீரோ?' என்ன; அவ்வடிவையும் விருப்பையும் கண்டு, ஸ்த்ரீத்வ ப்ரயுக்தமான சாபல்யத்தாலே மறுக்கமாட்டிற்றிலள்; 'இவர்கள் இடைப்பிள்ளைகள், சாந்தின் வாசி யறியமாட்டார்கள்' என்று ஆக்கை யிருப்பதான்றை யிட்டாள்; அத்தைப் பார்த்து, 'நாற்றம் கொளுத்தினபடி அழகியது, நளமழகியதன்று' என்ன; அதுக்குமேலே யொரு சாந்தையிட [ராஜாஹ-ழி] இது கம்ஸனைக் குச் செருக்கிலே பூசலாமித்தனை, வாசியறிந்து பூசுவார்க்கு ஸதர்சமல்ல. அன்றியே, வழங்கலனை சாந்தென்னவுமாம். [ர-ஹிர-ழி] ஸௌகந்த்யம் கிடக்க, நிறமழகியதா யிருந்ததென்ன; 'இவர்கள் இடைப்பிளைகள் என்றிருந்தோம், சாந்தின்வாசி யறிந்தபடியென்!' என்று ஆதரித்துப்பார்க்க, [ர-ஹி,ர-ஹ-ஹ] உன்முகத்திலாதரத்துக்கு ஸதர்சமாயிருக்க வேண்டாதேவா நீ யிடும் சாந்தும் என்ன; அவளும் தலையான சாந்தையிட [ஸ்ரீவியோ ம-ர-தீ ஸஜ்ஜ-ழி] எங்களுடம்புக்கு ஸதர்சமான மேதக வஸ்துவை யிட்டு மர்ந்தித்தா என்றன். அதாவது- "பூசுஞ் சாந்தும்" என்கிறபடியே உன்னுடைய ஆதரத்தாலே ஸம்ஸ்க்ருதமாக்கித்தா வென்றபடி. இப்படி இவள் ஆதரித்துச்சாத்தின மாளிகைச் சாந்தைக் கிழர் தம் திருக்கையாலே யெண்ணுடம்பிலே பூசிற்று.

தந்து. தந்தபோதைத் திருமுகத்தில் கௌரவத்திலும் ஔதார்யத்திலும் தோற்று ஐச்வர்யத்தை விட்டு, அவன்றனை யமையுமென்னும்படி பாய்த்துத் தந்தது. என்னை வெள்ளுயிராக்கவல்ல. "வொ-ரெணா-த்ரவஹ-ரிணா" என்கிறபடியே ஆத்மாபஹாரம் பண்ணி, அதிலுமேல கூஷ்மாண்ட ப்ரயோஜநகாமனுப் ஸம்ஸாரியாய்ப்போந்த வென்னை. வெள்ளுயிராக்கவல்ல. முன்பு கூஷ்மாண்டனுய்ப் போந்தாணுருவன் சுத்தஸ்வபாவனனென்று தெரியாதபடி 'அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரிலே யொருவன்' என்னலாம்படியாய்த்து விஷயீகரித்தது. வல்ல. தன்னதாரு ஸ்வபாவ விசேஷத்தாலே வஸ்துவை வஸ்த்வந்தரமாக்க சக்தனென்னை.

பையுடையித்யாதி. மங்களாசாஸநத்துக்கு விஷய மேதென்ன; அவ்விஷயத்தையும் சொல்லுகிறார். தன்னுடை ஸ்பர்ச ஸுகத்தாலே விகஸிதபணமான நாகத்தினுடைய படையுண்டு பெரியதிருவடி, அவனைக் கொடியாக வுடையவனுக்கு. அநந்தசாயியாய் கருடத்வஜனவனுக்கு மங்களாசாஸநம் பண்ணுகிறேனென்னை. தகட்டி லழுத்தின மாணிக்கம் போலே திருவநந்தாழ்வானுட்டைச் சேர்த்தியால் வரும் அழகு நித்யஸூரீ யாகவேயுள

ண்டு பாடுகிறேனென்கிறார். அநந்யப்ரயோஜநரும் கைவல்யார்த்திகளும் ஸங்கதராகிற விட த்தில் ஸமூஹமாகப் பேசினார், இதில் ஐச்வர்யார்த்தியை ஏகவசநத்தாலே பேசுவா னென் னென்னில்; அவர்கள் திரள் பரிச்சிந்நமாய் ஐச்வர்யார்த்திகள் திரள் அபரிச்சிந்ந மாகை யாலே ஒருருக்கு ஒருத்தன் வார்த்தை சொல்லுமாப்போலே சொல்லுகிறார். ... ... அ

அ.—ஒன்பதாம்பாட்டு. உடுத்திதியாதி. * வாழாளிலே யழைத்து * எந்தை தந்தை யிலே வந்து கூடின அநந்யப்ரயோஜநர் பாசுரத்தாலே அவர்களோடேகூடித் திருப்பல்லா ண்டு பாடுகிறாரிதில்.

மூ.—உடுத்துக் களைந்த நின்பீதகவாடை யுடுத்துக் கலத்ததுண்டு
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன சூடுமித்தொண்டர்களோம்
விடுத்த திசைக்கருமந் திருத்தித் திருவோணத் திருவிழவில்
படுத்த பைங்காகனைப் பள்ளிகொண்டானுக்குப் பல்லாண்டு கூறுதுமே. கூ.

பதவுரை.

உடுத்து— திருவரையிலே சாத்தி
களைந்த— கழித்துப் பொகட்ட
நின் பீதக ஆடை— உன்னுடைய திருப் பீதாம்பரத்தை
உடுத்து— தரித்து
கலத்தது— நீ அமுதுசெய்த கலத்தில் மிகுந்த ப்ரஸாதத்தை
உண்டு— ஸ்வீகரித்து
தொடுத்த— தொடுத்த
துழாய் மலர்— திருத்துழாய் மலர்களை
சூடிக் களைந்தன— நீ திருமுடியில் சாத்திக் களைந்தனவாக
சூடும்— முடித்துக்கொள்ளுகிற
இத்தொண்டர்களோம்— இப்படிப்பட்ட அடி- யராயிராநின்றோம்;

விடுத்த— நியமித்த
திசைக் கருமம்— திக்கிலுள்ள கார்யத்தை
திருத்தி— குறையறச் செய்து
திருவோணத் திருவிழவில்— திருவோணமென்கிற திருநாளிலே
படுத்த— படுக்கப்பட்டு

(அதனால்)

பை— விகஸித்த பணங்களையுடைய
நாகு அணை— திருவனந்தாழ்வான்மேலே
பள்ளி கொண்டானுக்கு— திருக்கண்வளர்ந் தருளுமவனுக்கு
பல்லாண்டு கூறுதும்— மங்களாசாஸநம் பண்ணுகிறோம்.

(வ - அரை.)

வ்யா.—உடுத்து. திருவரையிலே ஸுஸங்கதமாகச் சாத்துகையாலும் திருவரையிலே முசிகையாலும் தத்ஸம்பந்தம் தோற்றும்படி. ஒற்றுமஞ்சளாலும் மாலிகைச் சாத்தாலும் சிஹ்நிதமாம்படி யுடுத்து. இவை யித்தனையும் ப்ரார்த்தநீயமாம்படி யிருப்பார்சிலர் நாங்கள். சேஷிக்கு மங்களாவஹமாகையும் தத்ஸம்பந்தங்கள் தோன்றின சிஹ்நங்களை யுடைத்தா கையும் சேஷபூதனுக்கு ஸ்வம் நிவிஷயமாய்க்கொண்டு ஸர்வகாலமும் ப்ரியகரமாயிறே யிருப்ப தது. களைந்த. ஆஸந்நபேதத்திலே கழித்தால் பொகடும் ஸ்தலம் தங்கள் தலையாம்படி யிருக்கை. இதுவும் சேஷபூதனுக்கு ப்ரார்த்தநீயமிறே.

இங்ஙன் ப்ரார்த்தநீயமாக வேண்டுகிறதுக்கு மேறது சொல்லுகிறது மேல்; நின் பீதக வாடை. வருந்த சேஷியதாகையாலே சாந்தும் திருப்பரியட்ட மடையத் திருப்பீதாம் பரத்நிணுடைய ஆவேசாவதாரமாகை. நின் பீதகவாடை. (க) “ஸ்வஸ்வாஹாரம்மெனாவுக்கும் வாநாரமெவெ ரநமுவெனெஃ । நிநயெ ஸ்வஸ்வுகாமெஸுஸ்வ கமெநு। நு ரஹிரஜ்ஜி ரெதெ” என்று சேதந கோடியிலே யிறே திருப்பீதாம்பரத்தைச் சொல்லுகிறது. உடுத்து. இதிறே அநந்யப்ரயோஜநர்க்கு ஆபரணம். அங்ஙனன்றியே(உ) “ஸ்தூ ாழி” என்றிருக்கு மவனுகையாலே இதுதான் சேஷியளவிலே வந்தவாறே ப்ரதிபத்தி வேறுபட்டிருக்கும். ராஜாக்களுக்கு இரட்டைப்பிடித்துக் கொடுக்கு மவர்கள் வாக்காகப் பிடித்துத் தங்களை யிலே யுடுத்திருந்து போக்யமாம்படி பண்ணிக் கொடுப்பர்கள்; அதுவாப்தது இவனுக்கு நினைவு.

கலத்தணுண்டு. அமுதுசெய்து கைவாங்கின தளிகை மாற்றிலுல் ப்ரஸாதம் போஜ் யம். (ங)“கூடியலு ெகாஜ்ஜி ஸெஷலொஜ்ஜி நா” என்னக்கடவதிறே. ப்ரஸாதமே காரகமா யிருப்பார் சிலர் நாங்கள். (ச)“ மு ெரா ரு ஹ்ஷ ஹ ஜ்ஜீக ” என்று விதிப்போரி தராய்க்கொண்டு ப்ரதிபத்தி பண்ணுவர்கள் ஸ்வரூபஜ்ஞாநமில்லாதார்; ஸ்வரூபஜ்ஞாந முடையார், தந்ஸித்யர்த்தமாக ப்ரதிபத்திபண்ணுவர்கள்; பகவத்ப்ரஸாதபுக்தர், ஸ்வயம் ப்ரயோஜந மென்றிருப்பர்கள். இச்சேஷத்வ காஷ்டையான தசையருடைய ப்ரஸாதம் “தருவ ரேல்” என்கிறபடியே (ரு) அதிக்ர்தாதிகாரமாயிருக்கும். ஸர்வஸாதாரணனாகையாலே ப்ரயோஜநாந்தரபரனுக்கும் போக்யமாயிறே பகவத்ப்ரஸாதமிருப்பது.

தொடுத்தவித்யாதி. திருத்துழாய் பறிக்கும்போதும் தொடுக்கும்போதும் ‘அவன் சாத்தியருளப் புகுகிறான்’ என்னும் ஆதரத்நாலே ஸம்ஸ்க்ர்தமாய்ச் சாத்திக்கழித்தால் கூடுமது எங்களுக்கு உத்தேசியம். சுவடர் பூச்சூடும்போது புழுகிலே தோய்த்துச் சூடு மாப்போலே, தத்ஸம்பர்சத்தாலே விலக்ஷணமா யிருக்குமென்னை. அவன்றனும், சிலர் * சூடிக்கொடுத்த மாலையின் சுவடறியுமவனுகையாலே சூடிக்கொடுக்கிறானிறே. இத்தொண் டர்களோம். இப்படிப்பட்ட அடியார்களிறே நாங்கள். எமக்கென்று உடுத்தல் ஸூவித்தல் சூடுதல் செய்யுமவர்க ளன்றிக்கே, அவன் கழித்தவைகொண்டு தேஹயாத்ரையாம்படி யிருக்குமவர்களிறே நாங்கள்.

ஸ்வரூபஸித்யர்த்தமாக அத்தலையில் உச்சிஷ்டங்களை ஆராய்கூடாது, ‘புகையிலை யண்பன்’ என்றிருக்குமத்தனேயோ வென்னில்; விடுத்தவித்யாதி. ஸ்வாமிஸம்பந்தசகாரி களாய்க்கொண்டு, இப்படி தேஹயாத்ரை நடத்துமவர்களிறே நாங்கள். விடுத்ததிசைக்கருமம் திருத்தி. (ஈ)“கியகாழ்” என்கிற ஸம்தேசமே (எ)தாரகமாக ஏவின கார்யத்தைச்செய்து தலைக்கட்டுகை. திசைக்கருமம் திருத்துகையாவது – அத்திக்குக்கு மேலிறுவரை ஏவ வேண்டாதபடிசெய்து தலைக்கட்டுகை. ஸ்வாமி ஏவின கார்யத்தைக் குறையச்செய்பு மவன் அதமன்; அத்தைக்குறையாமல் தலைக்கட்டுமவன் மத்யமன்; அதுக்குமேலே, அதுக்கு அனிருத்தமான கார்யங்களையும் விசாரித்துச்செய்து தலைக்கட்டுமவன் உத்தமன்.

(க) “ஸ்ரக்வஸ்த்ராபரணார்யுக்தம் ஸ்வாதுரூபைரநாபமை । சிந்மயைஸ்ஸ்வப்ரகாசைச்ச அங்கீயாங்ய முபசரஞ்ஜிதை॥” (உ) “பக்தாநாம்” (ங) “த்வதீயபக்தேஷு

(க) "கார்மருகுகூடுணிநிடுவெடு யொவைஹஅ நருவி ஸாயயெசுவஅகுகாயடுவிரோ யெ நஸகாருஂ கூதிடுஅஹடுதி" என்கிற திருவடியிலே அவனுகிறான். 'பிராட்டி யிருந்த விடமறிந்துவா' என்றுவிட, இருந்தவிடமுமறிந்து, 'அவன்(உ)பல மிருந்தபடியென்?' என்று பெருமாள் கேட்டருளினால், 'அறிந்திலேன் என்ன வொண்ணாது' என்று அத்தலையில் (உ)பலபரீக்ஷையும் பண்ணி, ஊரிலரணையும் தலையழித்து, மூலையடியே போம்படிபண்ணி வந்தானிறே. திருவோணத்திருவிழவில். எனின காரியத்தைக் குறையறச்செய்தவளவிலும் பர்யாப்தி பிறவாமையாலே, திருவவதரித்தருளின திருவோணமாகிற மங்கள திவஸத்திலே என்ன தீங்கு வருகிறதோவென்று மங்களாசாஸநம்பண்ணி வர்த்திக்குமவர்கள்.

படுத்தவித்யாதி. அத்தாலும் பர்யாப்தி பிறவாமையாலே திருவநந்தாழ்வான்மேலே சாய்ந்தபோதை அழகுக்குக் கண்ணெச்சில் வாராமைக்கு மங்களாசாஸநம் பண்ணுகிறார்கள். படுக்கப்பட்டு ஸ்வஸம்ச்லேஷத்தாலே விகஸிதமாக நின்றுள்ள பணத்தை யுடையனும், மென்மை குளிர்த்தி நாற்றம் என்கிறவற்றைப் ப்ரக்ருதியாகவுடைய திருவநந்தாழ்வானுகிற படுக்கையிலே கண்வளர்ந்தருளுகிற வழகுக்கு மங்களாசாஸநம் பண்ணுகிறார்கள். ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனாயும் மயங்கப்பண்ணும் படுக்கை. அவன் ஸ்வஸ்பர்சத்தாலே விக்ருதிகப் பண்ணும்; இவனுடைய வடிவும் அவனுடைய வடிவும், "கிடந்தபோதார் கிடக்கை" என்கிறபடியே பரிச்சேதிக்கவொண்ணாத வழகிறே கண்வளர்ந்தருளுகிறபோதை யழகு. ஒரு வெள்ளி மலையிலே காளமேகம் சாய்ந்தாப்போலே கண்வளர்ந்தருளுகிறபோதை பரபாகரஸத்தை அநுஸந்தித்தால் மங்களாசாஸநமொழியச் செல்லுமோ வென்கிறார்கள். ... * கூ.

அ.—பத்தாம்பாட்டு. எங்ஙளித்யாதி. கீழிற் பாட்டில் புகுந்த அநந்யப்ரயோஜநர் தேஹயாத்ரையிலும் தங்கள் பாரதந்த்ர்யமே ஸ்வரூபமாயிருக்கிற வேற்றத்தைச் சொல்லிக்கொண்டு புகுந்தார்கள்; இதில், ப்ரயோஜநாந்தரபரர் புகுகிறார்களாகையாலே, தங்கள்பக்கல் அங்ஙனிருப்பதோரேற்றம் காண விரகில்லாமையாலே பகவத் ப்ரபாவத்தால் தங்களுக்குப்பிறந்த ஏற்றத்தைச் சொல்லிக்கொண்டுவந்து புகுருகிறார்கள். ஐச்வர்யார்த்தியும் லங்கதனுகிறபோது "சாந்தமும் தந்தென்னை வெள்ளுயிர் சாக்கவல்ல" என்று பகவத் ப்ரபாவத்தைச் சொல்லிக்கொண்டு வந்திறே புகுந்தது. அவன்முன் நானபேக்ஷித்த (ங)கூடத்ர புருஷார்த்தத்தைத் தந்துவைத்து என்னை சுத்தஸ்வபாவனாக்கினனென்று ஆச்சர்யப்பட்டான்; கைவல்யார்த்திகள், தங்கள்(ங)கூடத்ர புருஷார்த்த ஸம்பந்தம் (ச)யாவதாத்மபாவி விநாசகரமாகையாலே ஆச்ரயண வேளையிலே மீட்ட ஆச்சர்யத்தைக் கொண்டாடுகிறார்கள்.

மூ.—எங்நா ளெம்பெருமா னுன்றனக்கடியோமென் றெழுதுதுப்பட்ட
வங்நாளே யடியோங்க ளடிக்குடில் வீடுபேற் றுய்ந்ததுகாண்
செங்நாள் தோற்றித் திருமதுரைபுட் சிலைகுனித் தைந்தலைய
பைங்நாகத் தலைப் பாய்ந்தவனே யுன்னைப் பல்லாண்டு கூறுதுமே. ய.

பதவுரை.

எம் பெருமான்!—எமக்குஸ்வாமியானவனே! | அடியோமென்று— அடிமைப் பட்டவர்களென்று
உன்றனக்கு— உனக்கு

எங்நாள்— எந்தநாளோ,

அந்நாளை— அந்தநாளை

அடியோங்கள்— சேஷ பூதர்களான எங்க ளுடைய

குடில்— வீட்டிலுள்ள புத்ர பௌத்ராதி ஸந்தானமும்

அடி— அடிமைப்பட்டதாய்

வீடு பெற்று— மோக்ஷத்தைப்பெற்று(அல் லது) அஹங்காராதிகளை வி டப்பெற்று

உய்ந்ததுகாண்— உஜ்ஜீவித்ததுகாண்;

திருமதுரையுள்— திருவட மதுரையில்

சிலை குனித்து (கட்டளையுடைய ஆயுதச்சாலையி லுள்ள) வில்லை முறித்து

ஐந்தலைய— ஐந்து தலைகளை யுடைய

பை— பரந்த பணங்களையுடைய

நாகத்தலை— காளிய நாகத்தின் தலைமேலை

பாய்ந்தவனே!— பாய்ந்தவனே!

உன்னை—(இப்படிப்பட்டசெயல்களையுடைய) உன்னை

பல்லாண்டு கூறுதும்— மங்களாசாஸநம் பண்ணுகின்றோம்.

(ஏ - அசை.)

வ்யா.—எந்நாள். "அந்நாள்" என்னவமைந்திருக்க, "எந்நாள்" என்கிறது—வகுத்த சேஷி பக்கலிலே கூடாத புருஷார்த்தத்தை அபேக்ஷித்தகாலமா யிருக்கச் செய்தேயும், (க) "ஸுப்ரபாதாய மே நிசா" என்கிறபடியே மங்களாசாஸநம் பண்ணுகைக்கு யோக்யமாம்படி புகுரநிறுத்தின திவஸமென்று அந்நாளைக்கொண்டாடுகிறார்கள். பகவத்ப்ரபாவந்தான், விஷயீகரித்த திவஸத்தையும் கொண்டாடும்படியா யிருக்குமிறே. அவதாரத்தி லேற்றஞ் சொல்லுகிறவளவில் தஞ்ஜந்மதிவஸமென்று அந்நாளும் கொண்டா டப்பட்டதிறே.

ப்ரயோஜநாந்தரத்தை அபேக்ஷித்து வந்தவன், அநுபவாழிந்து அநந்யப்ரயோஜந ணைகைக்கு அடியென்னென்னில்; எம்பெருமான். கூடாத ப்ரயோஜநத்தை அபேக்ஷித்து நிருபாதிக சேஷியான உன் பக்கலிலே வருகையாலே ஸ்வரூப ப்ராப்தமாய் வந்த சேஷத்வ மே (உ)பலித்துவிட்டது. வகுத்த சேஷியாணலும் அபேக்ஷிதங்களை யொழிய புருஷார்த்தா ந்தரங்களைக் கொடுக்கும்போது, அர்த்திபக்கலிலே ஒரு கைம்முதல் வேண்டாதிறே வென் னில்; உன்றனக்கடியோமென்று நெழுத்துப்பட்ட. அடியோமென்கிற அர்த்தத்துக்கு வாசகமான சப்தத்திலே எங்களுக்கு அன்வயமுண்டு; நெஞ்சினின்றிக்கே யிருக்கிலும் வாயிலுண்டான மாத்ரங்கொண்டு தரவல்ல சக்தி யுண்டிறே யுனக்கு. அடிமைக்கு வாசகமான சப்தம் கைவல்யார்த்தியுடைய உபாஸநத்திலே யுண்டிறே. (ங)"ஒதி ஒருவனை உணரின்" என்னக்கடவதிறே. (ச) அகவா, ஆரேனுமொருவர் பக்கலிலேயே தணிமென்றவேண்டிச் சொல்லிலும் நமச்சப்த ப்ரதியோகம் பண்ணக்கடவதாயிறே யிருப்பது; அதுவும் (ஞ)ஆத்மயாதாத்ம்ய வாசகமிறே. அதுவே எங்கள்பக்கல் கைம்முதலென்கிறார்கள். "எம்பெருமான்" என்கிற ப்ராப்தியாலும், "உன்றனக்கு" என்கிற சக்தியாலும், "எழுத்துப்பட்ட" என்கிற சப்தமாத்ரத்தாலும் (உ)பலிக்கக் கண்டோமென்கிறார்கள். "பட்ட" என்கிறது — 'முத்துப்பட்ட' என்கிறாப்போலே. "வாழாட்பட்டு" என்கிறவிடத்திலே

(க) "ஸுப்ரபாதாய மே நிசா" (உ) மறை. "ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரந்மாமநுஸ்மரந்" (ச) கூடுவா. (ஞ) ஞாதுயாதி).

அர்த்தத்திலுடைய துர்லபத்வம் சொல்லிற்று; வாசக சப்தத்திலுடைய துர்லபத்வம் சொல்லுகிறது இங்கு. அஹங்கார க்ரஸ்தமான ஸம்ஸாரத்துக்குள்ளே தாஸ்ய ப்ரகாசம் அலப்யலாப மாஞப்போலே, பஹுகாலம் பண்ணிப் போருகிறவாயிலே நமச்சப்தமுண்டாகை அலப்ய லாபமிறே. அந்நாள். "எம்பெருமான் உன்றனக் கடிமையாமென்று எழுதப்பட்ட நாள், எந்நாள் - அந்நாள்" என்றன்வயம். "அந்நாளே" என்கிற அவதாரணத்தாலே- அதிதாழிய எங்கள்பக்கல் ஆநுகூல்ய லேசமுமில்லை யென்று கருத்து.

அத்தால் பெற்ற தென்னென்ன; தாங்கள்பெற்ற ப்ரயோஜந பரம்பரைகளைச் சொல்லுகிறார்கள். அடியோங்க ளித்யாதி. அடியோங்களாகப் பெற்றோம்; குடிலும் அடிக்குடிலாகப்பெற்றது; வீட்டை லபிக்கப் பெற்றோம்; உஜ்ஜீவிக்கப் பெற்றோம். அடியோங்கள் என்கிறார்கள்—அஹங்காரக்ரஸ்தராய்த் ததநுகூலமான கூடஸ்த்ரபுருஷார்த்தத்தை அபேக்ஷித்து உன் திருவடிகளிலே வந்து ஒதுங்கின நாங்கள், அதுபோய் தாஸ்யைகரஸராகப்பெற்றோம். அடிக்குடில். "குடில்" என்று - க்ருஹம். அத்தாலே க்ருஹஸ்தரான புத்ர பௌத்ராதிகளும் அடியாராகப் பெற்றோம். "நல்லபதத்தால் மனைவாழ்வர்" என்னக்கடவதிறே. எழுத்துப்பட்டது தங்களளவிலேயாகில் புத்ர பௌத்ராதிகளளவில் ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தபடி யென்னென்னில்; முத்துப்பட்டதுறையைக் காவலிடுமவன் அசல் துறையையும் காவலிடுமாப்போலே, ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் அஹங்கார மமகாரங்கள் புகுராதபடி விஷயீகரித்தாளென்கை. இவர்கள் ஸங்கதராகிற பாட்டிலும், "குடிகுடி யாட்செய்கின்றோம்" என்றார்களிறே. சேஷிஸந்நிதியிலே சேஷபூதர் க்ருஹத்தை "குடில் வளைக்க" என்று சொல்லக்கடவதிறே. வீடுபேற்று. வீட்டை லபித்து. அதாகிறது அஹங்கார மமகார கார்யமான ஐச்வர்ய கைவல்யங்களாகிற த்யாஜ்யங்களை விடப்பெற்று. ப்ராப்ய ஸித்தியோபாதி த்யாகஸித்தியும் ப்ராப்யாந்தர்கதமிறே. உய்ந்ததுகாண். 'தாஸ்யம்' என்றும் 'உஜ்ஜீவநம்' என்றும் பர்யாயம்போலேகாணும். "உய்ந்ததுகாண்" என்று அறியாதாரை அறிவிப்பாரைப்போலே சொல்லுகிற விதுக்குக் கருத்தென்னென்னில்; உபகரித்து விஸ்மரித்துப்போவது நீ; நீ பண்ணின உபகாரம் நாங்களுபதேசிக்கக் கேளாயென்கிறார்கள்.

சேந்நாளித்யாதி. ப்ரயோஜநாந்தரங்களைக் கைவிட்டு அநந்யப்ரயோஜநரானிகோளாகில் இனி க்ருத்யமென்னென்னில்; உனக்கு மங்களாசாஸநம் பண்ணுகையே க்ருத்யமென்கிறார்கள்; விஷயமேதென்ன; சேந்நாள். அவதாரத்துக்கு ஏகாந்தமான நாளாகையாலே, அழகிய நாளென்கிறார்கள். தோற்றி. அதீந்த்ரியமான விக்ரஹத்தை (க)"ஸகலஜநாஜநய நவிஷய தாஜூதஃ" என்கிறபடியே உகவாதார் கண்ணுக்கும் விஷயமாம்படி தோற்றுவித்து. திருமதுரையுள். அதுதானும் நிர்பயமான அயோத்யையிலன்றிக்கே, சத்ருவான கம்ஸன் வர்த்திக்கிறவூரிலே. சிலை குனித்து. அவ்வூரில் தங்கவொண்ணுமையாலே திருவாய்ப்பாடியிலேபோய் மறையவளருகிற நீ, மறித்தும் அவ்வூரிலே புகுந்து கம்ஸனுடைய ஆயுதசாலையிலே புக்கு வில்லைமுறித்துப்பூசலை விளைத்தாய். அதுகூலரடைய 'என்வருகிறதே!' என்று வயிறுபிடிக்க வேண்டும்படியான தசையிலே கம்ஸனுக்கு மறம்பிறக்கும்படி சிலுகுபடுத்துவதே!.

வ்யாஹ்ருதவ நப்யயள " என்று தமையன் ஒருநாள் பேரநிற்கப் பாம்பின்வாயிலே புகுட யிறே தீம்பு.

" க்ர்ஷ்ணவதாரமென்றால் ஆழ்வார்களெல்லாரும் ஒக்கப்பரிவராயிருப்பார்க இதுக்கடியேன்? " என்று ஜீயர் பட்டரைக்கேட்க; " ராமாவதாரத்தில் பிள்ளைகள் தாய் மிடுக்கராய், குணதிகருமாய், பிதா சம்பராந்தகனுமாய், மந்த்ரிகள் வஸிஷ்டாதிகளுமா ஊர் அயோத்தையுமாய், காலம் நல்ல காலமுமாயிருக்கையாலே அங்குத்தைக்கு ஒரு மில்லை; இங்கு, வந்து பிறந்தவிடம் சத்ருக்ர்ஹமாய், கம்ஸன் இடம்பார்த்துநலியும் ப்ரக்ருதிகளே வரக்காட்டும் க்ரூரனுமாய், தமப்பன் இடையனுமாய், ஊர் இடைச்சேரியுமா பிள்ளைகள்தாங்கள் தீம்பருமாய், காலம் கலிகாலத்தோடு தோள்தீண்டியா யிருக்கையா "என்வருகிறதோ!" என்று பரிகைக்கு ஆழ்வார்களல்லதில்லைகாணும்" என்றருள செய்தார். உன்னைப் பல்லாண்டுகூறுதுமே. இப்படிப்பட்ட வுன்னை அநுஸந்தித்தால் மங்க சாஸநமொழிய தரிக்க விரகுண்டோ வென்கிறார்கள். ... ...

அ.—பதினேராம்பாட்டு. அல்வழக் கித்பாதி. * அண்டக்குலத்திலே ஆஹ ராய், " நெய்யிடை " என்கிற பாட்டிலே ஸங்கதரான ஐச்வர்யார்த்திகள் பாசுரத்தா திருப்பல்லாண்டு பாடுகிறார்.

மூ.—அல்வழக் கொன்றுமில்லா வணிகோட்டியர்கோ ணபிமானதுங்கன்
செல்வனைப்போலத் திருமாலே நானுமுனக்குப் பழவடியேன்
நல்வகையால் நமோநாராயண வென்று நாமம் பல பரவிப்
பல்வகையாலும் பவித்திரனே யுன்னைப் பல்லாண்டு கூறுவனே. க

பதவுரை.

பல்வகையாலும்— ஸர்வப்ரகாரங்களாலும்
பவித்திரனே!— பரிசுத்தனவனே!
திருமாலே!— ஸ்ரீயபதியானவனே!
அல் வழக்கு— விபரீதவ்யவஹாரங்கள்
ஒன்றும் இல்லா— ஒன்றுமில்லாத
அணி— ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான
கோட்டியர்— திருக்கோட்டி யூரி லுள்ள
ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு
கோன்— நிர்வாஹகனுய்
அபிமான துங்கன்— "தாஸோஹம்" என்
கிற வைஷ்ணவாபிமா
நத்தால் சிறந்த
செல்வனைப்போல- செல்வநம்பியைப்போலே
நானும்— அடியேனும்
உனக்கு— உனக்கு
பழ அடியேன்— அநாதிஸித்தமான தா
யத்தை யுடையனா நி
நின்றேன்
நல்வகையால்— விலக்ஷணப்ரகாரமாக (
த்தாறு ஸந்தாநத்தோ
நமோ நாராயண என்று—(" நான் எனது
உரியனல்லேன், எம்பெருமா
கே உரியன்" என்னுமர்த்தங
ச்சொல்லுகிற) திருவஷ்டாக்ஷ
தை அநுஸந்தித்து
நாமம் பல— அநேகமான திருநாமங்க
பரவி— வாயாரச் சொல்லி
உன்னை— உன்னை
பல்லாண்டு கூறுவன்—மங்களாசாஸநம் ப
ணுகின்றே

(ஏ - அசை.)

(க) ஏகதாது விநாராமம் க்ர்ஷ்ணே ப்ர்ந்தாவநம் யயௌ ।"

வ்யா.—அல்வழக் கொன்றுமில்லா. வழக்கல்லாதனை அநேகமிறே; தேஹத்தில் ஆத்மபுத்திபண்ணுகை வழக்கல்ல; * ப்ரக்ர்தி பரமான ஆத்ம வஸ்துவை ஸ்வதந்த்ரமென்று அநுஸந்திக்கை வழக்கல்ல; தேவதாந்தரங்களில் பரத்வபுத்தி பண்ணுகை வழக்கல்ல; பகவத்பஜநத்துக்கு (க)பலம் ப்ரயோஜநாந்தரமென்றிருக்கை வழக்கல்ல; பகவதநுபவத்தை "மமேதம்" என்றிருக்கை வழக்கல்ல; இனி, 'வழக்காவது - சேஷிக்கு மங்களாசாஸநம்பண்ணுகை' என்றிறே யிவரிருப்பது. அணிகோட்டியர்கோன். இவையொன்றுமின்றிக்கே, 'அத்தலைக்கு மங்களாசாஸநம் பண்ணுமதான்றுமே வழக்கு' என்றருளிச்செய்து அவ்வூரிலுள்ளாரிருப்பது. இதுக்கடி 'இவர்' என்று தங்களுக்கு நிர்வாஹகராகவாய்த்து நினைத்திருப்பது. "அணி" என்று ஆபரணமாய், ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான ஹரிநாமத்தை.

அபிமானதுங்கன். அபிமாநம் சேஷத்வ விரோதியாயிருக்க, அதால் மிக்கிருப்பதென்பா னென்னென்னில்; கர்மத்தால்வந்த துர்மாநமாய்த்து த்யாஜ்யம்; "காலோஹம்" என்கிற வைஷ்ணவாபிமாநம் உபாதேயமாகையாலே அதால் பூர்ணராயிருப்பரென்கிறது. அதாகிறது - உகந்தருளின நிலங்களிலுண்டான குறைவு நிறைவுகளுடம், பூர்ணவைஷ்ணவர்களுடைய தேஹயாத்ரையில் குறைவு நிறைவுகளும் தம்மதாயிருக்கை. "செல்வன்" என்று ஸ்வரூப ப்ராப்தமான ஐச்வர்யத்தால் குறைவற்றவரென்னை. அதாகிறது ஜ்ஞாந பக்தி வைராக்யங்களால் குறைவற்றிருப்பரென்கையும், (உ) "ஜ்ஞாநைஸ்வர்யஸக்திபலாதி" என்கிறபடியே(ங) "ஸகலகல்யாணகுணாத்மகன்" என்றிருக்கையும். போல. (ச) "உபரிநஸ்ஸௌஷாணாம்ஸாயஸ்நாழி" என்கிறபடியே ஸாத்விகர்க்கு உபமாநபூமியாயிருக்குமவர். இவரை தர்ஷ்டாந்த மாக்கிக்கொண்டு, "பழவடியேன்" என்று முன்பு ஐச்வர்யார்த்தியாய் இன்று ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தவன் சொல்லுகை அநுபபந்நமன்றே வென்னில்; கர்மத்தால் வந்த அஹங்காரம்போலல் தாஸ்யம் ஸர்வாத்மாக்களுக்கும் ஸ்வாபாவிகமாகையாலே சொல்லுகிறார்கள். அதவா, கைஸர்கிகமான ஜ்ஞாநமுடையார்க்கும் இன்று ஆசார்யர்க்கு மவனுக்கும் வாசிவையாதே விஷயீகரிக்கும் ஈச்வராபிப்ராயத்தாலே சொல்லுவதாம்.

திருமாலே. 'இவ்வாத்மவஸ்து ஒரு மிதுநசேஷம்' என்று சேஷத்வ ப்ரதிஸம்பந்தியைச் சொல்லுகிறார்கள். இத்தால் மாதாபித்ர்சேஷத்வமும் தேவதாந்தர சேஷத்வமும் கர்மோபாதிகமென்கை. அதவா, தேவரீருக்குப் பிராட்டி நிரூபகத்வமையாயிருக்கிறாப் போலே, எங்களுக்கும் தாஸ்யம் நிரூபக மென்கிறார்கள் என்றுமாம்.

நானும். ப்ரயோஜநாந்தர பரதையாலே அநாதிகாலம் அப்பாய்றைஞ்ஞ நானும். சேஷிபக்கலிலே ப்ரயோஜநாந்தரத்தை யபேக்ஷிக்கையாவது— பிதாவைத் பார்யாவின் பக்கலிலே வ்யபிசாரத்தை அபேக்ஷிக்கிறாபோலாயிறே. உனக்குப் பழவடியேன். உனக்கு சேஷித்வம் அநாதியான போலாதி எனக்கும் சேஷத்வம் அநாதி யென்கை. உனக்கு. ப்ரயோஜநாந்தரத்தை அபேக்ஷித்துத் திருவடிகளிலே நிட்டையழிவே நேராக அநந்யப்ரயோஜநனுக்கவல்ல வனைக்கு.

இந்த ஸ்வரூபஜ்ஞாநம் எவ்வழியாலே பிறந்தானென்னில்; ஸகல வேதாந்த தாத்பர்ய

கிறார்கள்; இதுதான் ஸ்வார்த்த ஸாதகமிறே. (க) " நமோ நாராயணாயேதி ஸ்வ-ஹஸ்த-த்வயாயகஂ " என்னக்கடவதிறே. நாமம் பலபரவி. இவர் இவர்களை யழைக்கிறபோது, " அடி தொழு தாயிர நாமம் சொல்லி " என்றருளிறே; அத்தையிறே யிவர்களும் சொல்லுகிறது. பரவி. அக்ரமமாகச்சொல்லி. ஸாதநமானபோதிறே க்ரமாபேக்ஷையுள்ளது. முன்பு " மமேதம் " என்றிருந்தவர்களுக்கு மங்களாசாஸந யோக்யராம்படி புகுரநிற்கைக்கு இசைவே வேண்டுவது.

பல்வகையாலும் பவித்திரனே. ப்ரயோஜநாந்தர பரஜன அசுத்தியைப் போக்கி, அதுக்கடியான அஹங்கார மமகாரங்களாகிற அசுத்தியைப்போக்கி, சேஷத்வந் தன்னிலும் மாதாபித்ர் சேஷத்வமென்ன, தேவதாந்தரசேஷத்வமென்ன இவ்வோ அசுத்தியைப் போக்கிப் புகுரநிறுத்தினவனே. ஸ்வரூபரூப குணவிபூதிகளைப்பார்த்தாலும் பாபஹர னென்னவுமாம். உன்னைப் பல்லாண்டு கூறுவனே. ஸௌந்தர்யாதி குணயுக்தனை வுன்னை மங்களாசாஸநம்பண்ணுகிறேன். ஏகவசநத்தாலே கீழ்ச்சொன்னபுருஷார்த்திகள் மூவர்முகத்தாலும் தாமே திருப்பல்லாண்டுபாடுகிற தென்னுமிடந் தோற்றுகிறது. ஐச்வர்யார்த்தி ஸங்கதனுகிற வளவிலும் ஏகவசநமாகையாலே இங்கும் அதுவேயாகிற தென்னவுமாம்.... ... ... கக

அ.—நிகமம். பல்லாண்டென்றி த்யாதி. இப்ப்ரபந்தத்தை அதிகரித்தார்க்கு (உ)பலஞ் சொல்லுகிறதாய், ப்ரேமபரவசராய்க்கொண்டு மங்களாசாஸநம் பண்ணுகிறார். அநந்ய ப்ரயோஜநர்க்கும் தம்மோபாதி பகவத் ப்ரத்யாஸத்தி யுண்டாகையாலே அவர்களை யழைத்தார்; ஐச்வர்ய கைவல்யங்களைப் பற்றி ஆச்ரயித்தவர்களும் பகவத் ப்ரபாவத்தாலே மங்களாசாஸநத்துக் காளாவரென்று அவர்களை யழைத்தார்; அவ்வளவு மில்லாத ஸம்ஸாரிகளும் தம்முடைய பாசுரத்திலே யிழியவே யாவதாத்மபாவி மங்களாசாஸநார்ஹ ராவர்களென்று இப்ப்ரபந்தத்தின் வைபவத்தை யருளிச்செய்கிறார்.

மூ.—பல்லாண்டென்று பவித்திரனைப் பரமேட்டியைச் சார்ங்க மென்னும்
வில்லாண்டான்றன்னை வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பியசொல்
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் நமோநாராயணைய வென்று
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே. கஉ.

திருப்பல்லாண்டு முற்றிற்று.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

———(*)———

பதவுரை.

பவித்திரனை— ஸ்வதஃபரிசுத்தனுய்
பரமேட்டியை— பரமபதத்தி லெழுந்தருளி யிருக்குமவனுய்
சார்ங்கம் என்னும்— சார்ங்கம் என்கிற
வில் ஆண்டான்றன்னை— தநுஸ்ஸை யுடைய வனுன எம்பெருமான் விஷயமாக
வில்லிபுத்தூர்— ஸ்ரீ வில்லிபுத்தூரில் அவதரித்த
விட்டுசித்தன்— பெரியாழ்வார்
பல்லாண்டு என்று— மங்களமுண்டாகவேணு மென்று
விரும்பிய— ப்ரேமத்தாலே சொன்ன
சொல்— இப்பாசுரங்களை
நல் ஆண்டு என்று— ' இப்பாசுரம் சொல்லுகைக்கு ஏகாந்தமான காலம் இது ' என்று

(க) " நமோநாராயணையேதிமந்த்ரஸ்ஸுபவர்த்தநஸ்ஸதா " (உ) மறை

நவின்று— இடைவிடாமல்
உரைப்பார்— அநுஸந்திக் குமவர்கள்
நமோ நாராயணாய என்று—" நமோ நாராய
ணாய" என்று சொல்லி
பல் ஆண்டு— காலமுள்ளதனையும்

பரமாத்மனை—தன்னையொழிந்தசேதநாசேதந
நங்களைசரீரமாகவுடையபரமபுருஷனை
சூழ்ந்து இருந்து— சுற்றிநின்று
பல்லாண்டு எத்துவர்—மங்களாசாஸநம் பண்
ணப் பெறுவர்கள்.
(எ - அனை.)

வ்யா.—பவித்ரனை. ஒருபாதியா லன்றிக்கே ஸ்வதச்சுத்தனைவனை. (க) "ஸாஸு தம் ஸிவழி" என்னக்கடவதிறே. இத்தால் அசுசிபதார்த்த ஸம்யோகத்தால் தத்தத் தோஷஸாஸம்ஸ்ப்ருஷ்டனுகையும், ஸ்வஸம்பந்தத்தாலே அசுத்தன் சுத்தனுகையுமாகிற பரம பாவநத்வம் சொல்லுகிறது. அநாதிநித்ய சேதநாசேதநங்களில் வ்யாபித்தாலும் தத்தத் தோஷம் ஸ்பர்சியா தொழிகையும், நிர்தோஷதயாகத்தை நித்யஸம்ஸாரியை நித்ய ஸூரிகளோடே ஒரு கோவை யாக்குகையும். பரமேட்டியை. பரமஸ்தாநஸ்திதனைவனை.

சார்ங்கமென்னு மிந்தாநி. இது மதுவிஷ்டூஷணையுக பரிஜநங்களுக்கு முடலசுகனம். அங்குள்ளாரையிட்டுத் தன்னை நிரூபிக்கவேண்டிப்படியிறே அவர்களுக்குத் தன்னேரிலியான ப்ரத்யாளுத்தி. சார்ங்க மென்னும் வில்லாண்டான்றன்னை. சார்ங்கமென்னுய் வில் லென்றே யாய்த்து அதுக்கு ப்ரஸித்தி; மந்தரஜத்தை யாருடமை னென்னுமாப்போலே, அத்தை யாருடமை னென்றாய்த்து இவனுக்கேற்றம். (உ) "ஸுவிவஜ தீவாகாஸ ஶவஷ்டஜ ஶஹஜ நஃ" என்னக்கடவதிறே. இத்தால் "மல்லாண்ட திண்தோடாள் மணிவண்ணு" என்கிற விடத்திலே பரிச்சதையை நிஷேதித்து, "பரமேட்டியை" இத்யாதியாலே—இரண்டாம் பாட்டிற் சொன்ன நித்யவிபூதியோகத்தை நிஷேதிக்கிறது.

வில்லிபுத்தூர் விட்டுசித்தன் - பல்லாண்டென்று - விரும்பியசொல். இப்போது, பகவத் ப்ராப்திகாமர், ப்ராப்யாஜுகாந்தரபரர் என்று அடையவடைவே வந்து நின்றாரில்லையிறே; அவ்வவருடைய பாசுரங்களாலே தாமே பருளிச்செய்தாரென்னுமிடம் தோற்றுகிறதிறே- தம்முடைய வார்த்தையாகத் தாம் கலக்கட்டுகையாலே. அவர்கள் பாசுரமாக அங்குச் சொல்லிற்று— ப்ரதியாஜுகாந்தரபரர்க்கும் பகவத் ப்ரபாவத்தாலே மங்களாசாஸநம் பண்ணுகைக்கு யோக்யதையுண்டென்னு மிவ்வர்த்தத்திலுடைய ஸ்நேஹத்துக்காகவும், மங்களாசாஸநத்தில் நமக்குண்டான ஆதராதிசயம் தோற்றுகைக்காகவும். வில்லிபுத்தூர் விட்டுசித்தன். அவ்வூரிற் பிறப்பாலே யாய்த்து பகவத் ப்ரத்யாஸத்தி; பகவத் ப்ரத்யாஸத்தியாலே யாய்த்து மங்களாசாஸந யோக்யமான ப்ரேமாதிசயம். "விட்டுசித்தன்" என்கிற திருநாமம் மூண்டாய்த்து—ஆழ்வார் விடாமாட்டாமே தன்பேரழகு விவர் திருவுள்ளத்தே நித்யவாஸம் பண்ணினபடியாலே. "விட்டுசித்தன் மனத்தே கோயில்கொண்ட கோவலன்" என்னக்கடவதிறே.

நல்லாண்டென்று. இப்பாசுரந் சொல்லுகைக்கு ஸகாந்தமான காலமென்று காலத்

றுரைப்பார். நவிலுகை - பயிலுகை; இடைவிடாதே புரைக்கை.

நமோ நாராயணைய வென்று. அநாதிகாலம் "மந்திரம்" என்றத்தைத் "தேவதம்" என்கையும். இத்தால் மங்களாசாஸந யோக்யதை சொல்லுண்டு. காலமெல்லாம். யாவதாத்மபாவி பென்கிறது. காலக்ர்தபரிணாமமிதில் ஆண்டையிட்டுச் சொல்லுகிறது – அந்த பரிணாமமுள்ள தேசத்தில் சாகையாலே. பரமாத்மனை. தனக்குமேலின்றிக்கே, தன்னை யொழிந்தாமாம்படி யிருக்கிறவனை. இத்தால் அமங்களங்களுக்கு அவகாசமின்றிக்கே ஸ்ரீ ஓருவனுடைய மங்களாசாஸநத்தால் ஓரேற்றமுண்டாக வேண்டாதே யிருக்

சூழ்ந்திருந்தேத்துவர். (க) "நீவாஸ்ய ஓய வ்ரஷதம்ஸ நி" என்கிறபடியே முன்பே நில்லா முறுவலே பதுபவித்து அதிலே யீடுபடும்; பின்பும் பிறகுவாளியுமான வழகை யதுபவித்து அதிலே யீடுபடும்; இப்படாநிற்கச்செய்தே, கால்வாங்கவொண்ணாத வடிவழகு அதிசங்கையை விளாசாஸநத்திலே மூட்டு மென்கை.

" பவித்திரனைப் பரமேட்டியைச் சார்ங்கமென்னும் வில்லாண்டான்ற தூர் விட்டுசித்தன் - பல்லாண்டென்று–விரும்பியசொல் நல்லாண்டென்று நமோ நாராயணைய வென்று – பரமாத்மனைச் சூழ்ந்திருந்து– பல்லாண்டுப் வத்துவர்" என்றந்வயம். ... ...

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே ச

ஜீயர் திருவடிகளே சரணம்.

———(*)———

அடிவரவு.—பல் அடி வாழ் ஏடு அண்டம் எந்தை தீ நெய்
உடுத்து எங்நாள் அல்வழக்குப் பல்லாண்டு வண்ணம்.

ஆதிகூறுதும், அநந்தரம்கூறுமின், அண்டம் என்மின், எந்தை தீ உடுத்து எங்நாள் கூறுதும், நெய்யும் அல்லும் ப

திருப்பல்லாண்டு வ்யாக்யா

முற்றிற்று.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

பெரியஜீயர் அருளிச்செய்த

பெரியாழ்வார் திருமொழி வ்யாக்யானம்.

அவதாரிகை.

ஸ்ரீயஃபதிபாய் ஸகலாத்மஸுஹ்ருதாகிணே ஸகிலஜகதுத்பத்தி ஸ்திதி ப்ரளயஹேதவே ராகஷகனென ஸகலவேதாந்தங்களிலும் ப்ரஸித்தனான, தமக்கு ஸந்நிஹிதனான வளவிலே, ப்ரணவத்தில் சொல்லுகிறபடியே அவனைத் தமக்கு ரக்ஷகனாகவும் தம்மை அவனுக்கு ரக்ஷ்யபூதனாகவும் அநுஸந்தித்து, ஸ்வரூபாநுரூபமான வ்ருத்திவிசேஷங்களை அவன் திருவடிகளிலே செய்யவமைந்திருக்க, அவனுடைய ஸ்வரக்ஷகத்வாதிகளை அநுஸந்திப்பதற்குமுன்னே, முகப்பிலுண்டான ஸௌந்தர்யாதிகளிலே ஆழங்காற்பட்டு அவனைக் குழைச்சரக்காக நினைக்கையாலும், 'காலாதீதமானவஸ்து காலம் ஸாம்ராஜ்யம்பண்ணும் தேசத்திலே வந்து ஸந்நிஹிதமாவதே! இவ்வஸ்துவுக்கு என்னநிங்கு வருகிறதோ!' என்னும் பயத்தாலும், அவனை ரக்ஷ்யபூதனாக நினைத்து, தாம் ரக்ஷகராய் நின்று மங்களாசாஸநம் பண்ணுகிறவளவில், உபயவிபூதியுக்தனான நிலையிலே மங்களாசாஸநம் பண்ணினவளவன்றிக்கே, அவன் ஸம்ஸாரிஸம்ரக்ஷணார்த்தமாக ப்ரதிகூலபூயிஷ்டமான இத்தேசத்திலே வந்து அவதரித்துச் செய்தருளின சேஷ்டிதங்களை அநுஸந்தித்து, அதீதகாலங்களில் அபதாநங்களுக்கு உத்தரகாலத்திலே வயிறெரியும் ப்ரேமஸ்வரூபராகையாலே திருவவதார விசேஷங்களுக்கு மங்களாசாஸநம் பண்ணியருளினார் திருப்பல்லாண்டிலே. அதுதன்னிலும் "அந்தியம்போதிலரியுருவாகி யரியையழித்தவனைப் பந்தனைதீரப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதும்" என்றும், "இராக்கதர்வாழிலங்கைபாழாளாகப் படைபொருதானுக்குப் பல்லாண்டு கூறுதும்" என்றும், ஸ்ரீநரஸிம்ஹ ப்ராதுர்ப்பாவத்துக்கும் ராமாவதாரத்துக்கும் மங்களாசாஸநம் பண்ணினவளவன்றிக்கே; "மாயப்பொருபடைவாணனை ஆயிரந்தோளும் பொழிகுருதிபாயச்சுழற்றிய வாழிவல்லானுக்குப் பல்லாண்டு கூறுதும்" என்றும், "ஐந்தலையபைந்நாகத்தலைப்பாய்ந்தவனை யுன்னைப் பல்லாண்டு கூறுதும்" என்றும், இவர் ப்ராசுர்யேண மங்களாசாஸநம் பண்ணிற்று க்ருஷ்ணாவதாரத்துக்கேயிறே. ஆழ்வார்களெல்லாரும் 'க்ருஷ்ணாவதாரம்' என்றவாறே போர மண்டியிருப்பார்கள். அதுக்கடியல்லாத அவதாரங்கள் போலன்றிக்கே, ஸமகாலமாகையாலே "ஒரு செவ்வாய்க்கிழமை முற்படப்பெற்றிலோம்! பாவியேன்! பல்லிலே பட்டுத் தெறிப்பதே!" என்னும் இழவும், பரிவார்தேட்டமான அவதாரமாகையாலே, அத்தை அநுஸந்திக்கையால் வந்த வயிற்றெரிச்சலும். ராமாவதாரத்திலே தம்பெருமாள் சம்பாவநாதகனாய் ஸஹவீரனுமிருப்பாரொருவன், பிள்ளைகள் தாங்களும் ஆண்புலிகள், குடிதானே வன்னிய மறுத்திருப்பதொரு குடி; இவையெல்லாம் மிகையாம்படி, குணத்தாலே நாட்டையெல்லாம் ஒருமார்வெழுத்தாக்கிக்கொண்டு இருப்பதொருத்தர், அதையழிய வந்தவர்களை ஒருவரையொருவர் காணாதபடி பண்ணினவர்; இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் ஸர்வாதிகராயிருக்கிற ராமாவதாரத்துக்கு மங்களாசாஸநம் பண்ணினவளவன்றிக்கே, ஸர்வாதிகரான தாமும் தம்மை ரக்ஷ்யபூதனாக நினைத்து, ரக்ஷகனான அவனுக்கு ஸர்வாதிகனாகவும் தம்மை ரக்ஷ்யபூதனாகவும் அநுஸந்தித்து, ஸ்வரூபாநுரூபமான வ்ருத்திவிசேஷங்களை அவன் திருவடிகளிலே செய்யவமைந்திருக்க, அவனுடைய ஸ்வரக்ஷகத்வாதிகளை அநுஸந்திப்பதற்குமுன்னே, முகப்பிலுண்டான ஸௌந்தர்யாதிகளிலே ஆழங்காற்பட்டு அவனைக் குழைச்சரக்காக நினைக்கையாலும், 'காலாதீதமானவஸ்து காலம் ஸாம்ராஜ்யம்பண்ணும் தேசத்திலே வந்து ஸந்நிஹிதமாவதே! இவ்வஸ்துவுக்கு என்னநிங்கு வருகிறதோ!' என்னும் பயத்தாலும், அவனை ரக்ஷ்யபூதனாக நினைத்து, தாம் ரக்ஷகராய் நின்று மங்களாசாஸநம் பண்ணுகிறவளவில், உபயவிபூதியுக்தனான நிலையிலே மங்களாசாஸநம் பண்ணினவளவன்றிக்கே, அவன் ஸம்ஸாரிஸம்ரக்ஷணார்த்தமாக ப்ரதிகூலபூயிஷ்டமான இத்தேசத்திலே வந்து அவதரித்துச் செய்தருளின சேஷ்டிதங்களை அநுஸந்தித்து, அதீதகாலங்களில் அபதாநங்களுக்கு உத்தரகாலத்திலே வயிறெரியும் ப்ரேமஸ்வரூபராகையாலே திருவவதார விசேஷங்களுக்கு மங்களாசாஸநம் பண்ணியருளினார் திருப்பல்லாண்டிலே. அதுதன்னிலும் "அந்தியம்போதிலரியுருவாகி யரியையழித்தவனைப் பந்தனைதீரப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதும்" என்றும், "இராக்கதர்வாழிலங்கைபாழாளாகப் படைபொருதானுக்குப் பல்லாண்டு கூறுதும்" என்றும், ஸ்ரீநரஸிம்ஹ ப்ராதுர்ப்பாவத்துக்கும் ராமாவதாரத்துக்கும் மங்களாசாஸநம் பண்ணினவளவன்றிக்கே; "மாயப்பொருபடைவாணனை ஆயிரந்தோளும் பொழிகுருதிபாயச்சுழற்றிய வாழிவல்லானுக்குப் பல்லாண்டு கூறுதும்" என்றும், "ஐந்தலையபைந்நாகத்தலைப்பாய்ந்தவனை யுன்னைப் பல்லாண்டு கூறுதும்" என்றும், இவர் ப்ராசுர்யேண மங்களாசாஸநம் பண்ணிற்று க்ருஷ்ணாவதாரத்துக்கேயிறே. ஆழ்வார்களெல்லாரும் 'க்ருஷ்ணாவதாரம்' என்றவாறே போர மண்டியிருப்பார்கள். அதுக்கடியல்லாத அவதாரங்கள் போலன்றிக்கே, ஸமகாலமாகையாலே "ஒரு செவ்வாய்க்கிழமை முற்படப்பெற்றிலோம்! பாவியேன்! பல்லிலே பட்டுத் தெறிப்பதே!" என்னும் இழவும், பரிவார்தேட்டமான அவதாரமாகையாலே, அத்தை அநுஸந்திக்கையால் வந்த வயிற்றெரிச்சலும். ராமாவதாரத்திலே தம்பெருமாள் சம்பாவநாதகனாய் ஸஹவீரனுமிருப்பாரொருவன், பிள்ளைகள் தாங்களும் ஆண்புலிகள், குடிதானே வன்னிய மறுத்திருப்பதொரு குடி; இவையெல்லாம் மிகையாம்படி, குணத்தாலே நாட்டையெல்லாம் ஒருமார்வெழுத்தாக்கிக்

தடப்பமனுரு ஸாதுவ்த்தன், பிறந்ததும் கம்ஸன் சிறைக்கூடத்திலே, வளர்ந்ததும் அவன் அகத்தருமே; ஸ்ரீப்ருந்தாவநத்திலே எழுந்தூண்டுகை எகப்பட அஸுரமயமாயிருக்கும். ரக்ஷகரானவர்கள் ஓரடி தாழுநிற்கில் பாம்பின்வாயிலே விழும்படியாயாத்து அவன் படியிருப்பது. இப்படியாலல் வயிறெரியாதிரார்களோ இவர்கள். அவர்களெல்லாரையும் போலல்லவிறே க்ருஷ்ணவதாரத்தில் இவர்க்குண்டான ப்ராவண்யம். அதாவது— "விட்டுசித்தன்மனத்தே கோயில்கொண்ட கோவலன்" என்கிறபடியே தான் பிறந்தபடியும் வளர்ந்தபடியும் இவரைக்கொண்டு கொள்ளைக்காக, அவன், இவர் திருவுள்ளத்திலே குடிகொண்டிருக்க, "போகத்தில்வழுவாத புதுவையர்கோன்" என்னும்படி அவதாராநுபவமாகிற போகத்திலொன்றும் நழுவாதபடி "கண்ணன்கேசவன் நம்பிபிறந்தினில்" என்று அவதார ஸமயமே தொடங்கி அதிலுண்டான ரஸமெல்லாம் தாமே முற்றூட்டாக அநுபவித்தாரிறே. இனி, இவ்விஷயத்தில் பரிவிலும் வந்தால், அவர்களுக்கு அது காதாசித்கமாய் இவர்க்கு நித்யமாயிறே யிருப்பது. ஆக, இப்படி க்ருஷ்ணவதாராநுபவாதிகளிலே ப்ரவ்த்தரான இவர், இவ்வவதாரத்துக் கடிசொல்லுகிற விடத்தில், திருக்கோட்டியூரினின்றும் வந்து பிறந்தானென்பானென்? (க) "வடதடாரார்யணஸ்ரீதாநு கூபாணதல நிலகதநி। நாமவயதுஜிதஜ்ஞாமதா ஸயாராவைலீ" என்று கூறாப்திராதன், இவர்கள் கோஷ்டியிலே யெழுந்தருளி இவர்களுடைய ரக்ஷணசிந்தை பண்ணினமை தோற்றும்படி. *உரகமெல்லணையளுப்பள்ளிகொண்டருளின ஸ்தலமாகையாலே அந்த ஐக்யத்தைப் பற்றவும், "அல்வழக்கொன்றுமில்லாவணிக்கோட்டியர்கோன்" என்றும் தமக்கு மங்களாசாஸநத்துக்கு ஸஹகாரியான செல்வநம்பியோடே திருக்கோட்டியூர் ப்ரஸ்துதமாகையாலே அவ்வுகப்பைப் பற்றவும், திருக்கோட்டியூரைத் திருவவதார(உ)நக்கமாக வருளிச்செய்த விதில் விரோதமில்லை. இப்படி க்ருஷ்ணவதார ரஸத்தை அநுபவிக்கிறவளவிலே ருஷிகளைப்போலே கரையிலே நின்று அவதார குணசேஷ்டிதங்களைச் சொல்லிப்போகையன்றிக்கே, (ங)பாவநா ப்ரகர்ஷத்தாலே (ச)கோபஜந்மத்தை ஆஸ்தாநம்பண்ணி, யசோதாதிகள் சொல்லும் பாசுரத்தை, தாம் அவர்களாகப்பேசி அநுபவித்துச் சொல்லுகிறார்.

அ.—திருவவதரித்தருளினவளவில் திருவாய்ப்பாடியிலுள்ளார் பண்ணின உபலாளநாதிகளை அநுஸந்தித்து இனியராகிறார் இத்திருமொழியில்.

மூ.—வண்ண மாடங்கள்சூழ் திருக்கோட்டியூர்
கண்ணன் கேசவனம்பி பிறந்தினில்
எண்ணெய்சுண்ண மெதிரெதிர் தூவிடக்
கண்ணன் முற்றம் கலந்தள ருயிற்றே. க.

பதவுரை.

வண்ண மாடங்கள்— அழகிய மாடங்களாலே சூழ்— சூழப்பட்ட | திருக்கோட்டியூர்— திருக்கோட்டியூரில் கேசவன்— ப்ரஸஸ்த கேசயுக்தனாய்

இன் இல்— (பூரீகந்தமோகபருடைய) இனிய
மாளிகையிலே
பிறந்து— திருவவதரித்து
(அதனால்,)
எண்ணெய்— எண்ணெயையும்
சுண்ணம்— மஞ்சள் பொடியையும்
கலந்து— (எண்ணெயும் மஞ்சள் பொடியும்)
துணைபுணர்ந்து தன்னிலேசேர்ந்து
அளவு ஆயிற்று— சேரும்படியாயிற்று.
முற்றமான து
(ஏ - அசை.)

வ்யா.—முதற்பாட்டு. வண்ணமாடங்கள்சூழ் திருக்கோட்டியூர். "வண்ணமணிமாடமணியும் மரகதமு மழுத்தி நிழலெழும் தின்மணிசூழ் திருக்கோட்டியூர்" என்கிறபடியே நானாவிதமான ரத்நங்களை யழுத்திச் சமைக்கப்பட்ட அழகை யுடைத்தான மாடங்களாலே சூழப்பட்ட திருக்கோட்டியூரில். கண்ணன் கேசவன் நம்பி. பரசன்தமோசமூப் பரிபூர்ண குணனென க்ருஷ்ணன். பிறந்தினில். இன் - இல் - பிறந்து; பூரீமதுரையில் சிறைக்கூடம் போலே பிறந்தவிடம் தோன்றுமல் போகவேண்டாதே, எல்லா வுடலாளர்த்துக்கும் போக்யமான பூரீகந்தமோகபர் திருமாளிகையாகிற இனிய இல்லிலே பிறந்து. அதவா, ப்ரஹ்ம ருத்ராதிகளுக்குக் காரணபூதனாய் பரிபூர்ணகுணனவன் க்ருஷ்ணனாய் வந்தவதரித்த வளவிலென்னவுமாம். எண்ணெய் சுண்ணம் எதிரேதிர்தூவிட. எண்ணையையும் மஞ்சள் பொடியையும் ஹர்ஷத்தாலே களித்து ஒருவர்க்கொருவர் எதிர்த்துத் தூவ. கண்ணன் முற்றம். க்ருஷ்ணவதரித்தபோதே க்ருஹ நிர்வாஹகன் பிள்ளையாக பூரீகந்தமோகபர் நினைத்திருக்கையாலே கண்ணனுடைய முற்றமென்னுதல்; கண்ணல் முற்றம். இடமுடைத்தாய் தர்சநீயமான முற்ற மென்னுதல். கலந்தளறுயிற்றே. இவை இரண்டும் துகையுண்டு நன்னிலே சேர்ந்து சேரும்படியாயிற்று. ... ... * க.

மூ.—ஓடுவார் விழுவா ருகந்தாலிப்பார்
நாடுவார் நம்பிரா னெங்குற்ற னென்பார்
பாடுவார்களும் பல்பறை கொட்டின்
றாடுவார்களு மாயிற் றாய்ப்பாடியே. உ.
பதவுரை.

ஆய்ப்பாடி— திருவாய்ப்பாடி
ஓடுவார்— ஸம்ப்ரமித்து ஓடுவாரும்
விழுவார்— சேற்றிலே வழுக்கி விழுவாரும்
உகந்து ஆலிப்பார்—ப்ரேமத்தாலே கோஷிப்பாரும்
நாடுவார்— பிள்ளையைத் தேடுவாரும்
நம்பிரான்—நமக்கு உபகாரகனான கண்ணன்
எங்கு உற்றான் என்பார்—எங்கேஉளன்?என்
பாரும்
பாடுவார்களுட்— பாடுவார்களும்
பல் பறை— பல வாத்யங்களும்
கொட்ட— முழங்க
நின்று— அதற்குப் பொருந்தநின்று
ஆடுவார்களுட்— நர்த்தம் பண்ணுவாருமாக
ஆயிற்று— ஆயிற்று.
(ஏ - அசை.)

வ்யா.—இரண்டாம்பாட்டு. ஓடுவார். பிள்ளை பிறந்த ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே ஸம்ப்ரமித்து ஓடுவார். விழுவார். ஓடச்செய்தே அளற்றிலே வழுக்கி விழுவார். உகந்து ஆலிப்பார்.

அதுக்குப் பொருந்த நின்று ஆடுவார்களும். அங்ஙனன்றிக்கே, சிலர் தங்களுக்குத்தோன்றினபடியே கொட்ட, நிரம்பவுமாகக் கூத்தாடுவார்களும் என்னுதல். "பாடுவார்களும்" இத்பாதிக்கு ஒக்க கீழ்ச்சொன்னவை யெல்லாவற்றையும், ஓடுவாரும் விழுவாரும் என்று இங்ஙனே ஸமுச்சயித்துக்கொள்வது. ஆயிற்றுப்பாடியே. இப்படி திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடியிலுள்ளாரில் ஒருத்தரும் விக்தராகாமலிருந்தாரில்லை யென்றபடி. ...*உ.

மூ.—பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தினில்
காணத் தாம்புகுவார் புக்குப் போதுவார்
ஆணைப்பா ரிவனேரில்லைகாண் திரு
ஓணத்தா னுலகாளு மென்பார்களே. கூ.

பதவுரை.

சீர் உடை— குணங்களையுடைய
பிள்ளை— பிள்ளையான க்ருஷ்ணன்
பேணி— கம்ஸாதிகள் கண்படாதபடி தன்னைக்காத்துவந்து
பிறந்தினில்—பிறந்தவளவில்
தாம்— ஆய்ப்பாடி ஆயர்கள்
காண— (பிள்ளையைக்) காணஆசைப்பட்டு
புகுவார்— உள்ளே நுழைவாரும்
புக்கு— உள்ளேபோய் கண்டு
போதுவார்— புறப்படுவாரும்
ஆண்ஒப்பார்—பும்ஸ்த்வஸாம்யமுடையபாரில்
இவன் சேர் இல்லைகாண்!—இவனோடு ஒத்தவர் இல்லைகாண்!
(இவன்,)
திரு ஓணத்தான்— ஸ்ரீவைகுண்டநாதனுடைய
உலகு ஆளும்—லோகங்களையெல்லாம் ஆளக்கடவன்
என்பார்கள்— என்று சொல்லுவாருமாக
ஆனார்கள்.
(ஏ - ஆசை.)

வ்யா.—மூன்றும்பாட்டு. பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தினில். சீருடைய பிள்ளை பேணிப் பிறந்தினில். அவதரித்தபோதே மாதாபிதாக்கள் சொல்லிற்றுச் செய்கையாலே சீருடைய பிள்ளை யென்கிறது. சீர் - குணம். அதாவது - சிறைக்கூடத்தில் திருவவதரித்த போதை திவ்ய வேஷத்தைக் கண்டு கம்ஸன் நிமித்தமாக பயப்பட்ட மாதாபிதாக்கள் (உ) "உவஸம்ஹர" என்று அபேக்ஷிக்க, அப்போதே அந்த திவ்யவேஷத்தை மறைத்தானிறே. இப்படி உகவாதார் கண்படாதபடி தன்னைப் பேணிக்கொடுவந்து திருவாய்ப்பாடியிலே புகுந்தபின்புகாணும் இவர் பிறந்தாளுக நினைத்திருக்கிறது. காணத்தாம்புகுவார்: பிள்ளையைக்காண வாசைப்பட்டுத் தாங்கள் புகுவார். புக்குப்போதுவார். புக்குக்கண்டு புறப்படுவார். ஆணைப்பாரித்யாதி. ஸாமுத்ரிக லக்ஷணம் போவார் இவனைப் பார்த்து, பும்ஸ்த்வஸாம்யமுடையவர்களில் இவனுக்கு ஸத்ருசரில்லைகாண் என்பாருமாய், இவனுடைய லக்ஷண

(உ) "உபஸம்ஹர."

மிருந்தபடியால் திருவோணத்தானை ஸர்வேச்வரனுடைய லோகமெல்லாம் இவன் ஆளும் என்பாருமாய், இப்படி ப்ரீதிவ்யவஹாரம் பண்ணினார்களென்கை. அன்றிக்கே, " ஆமிணைப் பான் இவன் நேரில்லை " என்று பாடமானபோது, ஆமிணைப்பென்றது- ஆண்பசு; அதாவது- பும்ஸ்த்வலக்ஷணம். ஒப்பானென்றது- ஒப்பாமென்றபடியாய், பும்ஸ்த்வலக்ஷணத்தால் இவனுக்கு எதிரில்லையென்று பொருளாகக்கடவது. புகுவாரும், போதுவாரும், உலகாளும் என்பார்களுமானார்கள். ... ... *ங.

மூ.—உறியை முற்றத் துருட்டிநின் றுடுவார்
நறுநெய் பால்தயிர் நன்றுகத் தூவுவார்
செறிமென் கூந்த லவிழத் திளைத்தெங்கும்
அறிவழிந்தன ராய்ப்பாடி யாயரே. சு.

பதவுரை.

ஆய்ப்பாடி ஆயர் — திருவாய்ப்பாடியில் உள்ள கோபர்கள்
உறியை— (பாலும்தயிருமிருக்கிற) உறிகளை
முற்றத்து உருட்டிநின்று— முற்றத்திலே உருட்டிநின்று
ஆடுவார்— ஆடுவாரும்
நறும் நெய் பால் தயிர்— மணம்மிக்க நெய் முதலியவற்றை
நன்றுக— நிச்சேஷமாக
தூவுவார்— தாரம்பண்ணுவாருமாய்
செறி மென்— நெருங்கி மெத்தென்ற
கூந்தல்— மயிர்முடியானது
அவிழ— அவிழ்ந்து கலையும்படியாக
திளைத்து— கர்த்தரம்பண்ணி
எங்கும்— சேரி அடங்கலும்
அறிவு அழிந்தனர்— க்ர்த்யாக்ர்த்ய விவேக சூந்ய ராணார்கள்.
(வ - அசை.)

வ்யா.—நான்காம்பாட்டு. உறியை முற்றத்துருட்டி நின்றுடுவார். நறுவிதான நெய்யும் பாலும் தயிரும் இருக்கிற உறிகளை, த்ரவ்ய கௌரவம் பாராமல் அறுத்துக்கொடுவந்து ப்ரீதி பாரவச்யத்தாலே முற்றத்திலே யுருட்டி நின்றுடுவார். நறு நெய் பால் தயிர் நன்றுகத் தூவுவார். (க) க்ர்த க்ஷீர தத்யாதிகளை ' பிள்ளைக்கு நன்மை உண்டாகவேணும் ' என்று தாரம் செய்வார். செறிமென் கூந்தலவிழத்திளைத்து. செறிந்து மெத்தென்ற மயிர்முடி யவிழும்படி ஸஸம்ப்ரம ந்ர்த்தம்பண்ணி. எங்கு மறிவழிந்தனர் ஆய்ப்பாடியாயரே. திருவாய்ப்பாடியிலுள்ள கோபரானவர்கள் எங்குமொக்க உகவை தலைமண்டை யிட்டு க்ர்த்யாக்ர்த்ய விவேக சூந்யராணர்கள். சிலர் உறியை முற்றத்துருட்டிநின்றுட, சிலர் நறு நெய் பால் தயிர் நன்றுகத்தூவ, சிலர்செறிமென் கூந்தலவிழத்திளைத்து, இப்படி ஆய்ப்பாடியாயர் — எங்கும் அறிவழிந்தனரென்று க்ரியை. ... ... * சு.

மூ.—கொண்ட தாளுறி கோலக் கொடுமழுத்
தண்டினர் பறியோலைச் சயனத்தர்
விண்ட முல்லை யரும்பன்ன பல்லினர்
அண்டர் மிண்டிடப் புகுந்து நெய்யாடினர். ரு.

கொண்ட தாள்— நெருக்கிப்பின்னப்பட்ட
உறி— உறிகளையும்
கோலப்— அழகியதாய்
கொடு— கூர்மையுடைத்தான
மழு தண்டினர்— மழுக்களையும் தடிகளையும் உடையராய்
பறி ஓலை— தாழைமடலினின்றும் பறிக்கப்பட்ட ஓலையால் சமைக்கப்பட்ட
சயனத்தர்— சயநத்தையுடையராய்
விண்ட— விகசித்த
முல்லை அரும்பு அன்ன— முல்லையரும்பு போன்ற
பல்லினர்— பல்லை யுடையரான
அண்டர்— கோபர்கள்
மிண்டி புகுந்து— நெருங்கிப் புகுந்து
நெய் ஆடினர்— நெய்யாடல் ஆடினர்கள்.

வ்யா.—ஐந்தாம்பாட்டு. கொண்டதாளித்யாதி. கால்நெருக்கத்தையுடைத்தான உறிகளையும், பரிசுஉண்டாய்க் கூரியதான மழுக்களையும் ஜாத்யுசிதமான தடிகளையு முடையராய், மடலில் நின்றும் பறிக்கப்பட்ட ஓலையாலே கோத்துச் சமைத்த (க) சய்யையு முடையராய்க்கொண்டு; ஹர்ஷம்தோற்ற ஸ்மிதம் பண்ணுகையாலே முல்லையரும்பு விண்டாப் போலே யிருக்கிற பல்லையுடையரான கோபரானவர்கள், நெருங்கிப் புகுந்து நெய்யாடலாடினர்க ளென்கை. "விண்டன்முல்லை" என்று பாடமானபோது, விண்டென்று- குன்றும், குன்றின் முல்லை நெருங்கிப்பூத்தாற்போலே யிருக்கிற பல்லென்னவுமாம். இடைக் கூத்தாடுவார் தோற்றுப்பல்லராயாயிற் றிருப்பது. அண்டர் - தேவரும், இடையரும்; இவ்விடத்தில்- இடையரைச் சொல்லுகிறது. ... ... ※ ரு.

மூ.—கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பைய வாட்டிப் பசும்சிறு மஞ்சளால்
ஐய நா வழித்தாளுக்கங்காந்திட
வைய மேழும் கண்டாள் பிள்ளை வாயுளே. சு.

கையும் காலும்—திருக்கைகளையும் திருவடிகளையும்
நிமிர்த்து— நிமிர்த்து
கடார நீர்—கடாரத்தில் திருமஞ்சனத்தாலே
பசும்சிறுமஞ்சளால்—சிறியபசுமஞ்சள்சாத்தி
பைய— திருமேனிக்குப் பாங்காக
ஆட்டி.— நீர்ஆட்டி.
ஐய நா வழித்தாளுக்கு — மெல்லியதான நாக்கை வழித்த தாய்க்கு
அங்காந்திட— (பிள்ளையானவன்) வாயைத் திறக்க
பிள்ளை வாய் உள்— பிள்ளையாள க்ருஷ்ணனுடைய வாயினுள்ளே
வையம் ஏழும்— ஸப்தலோகங்களையும்
கண்டாள்— பார்த்தாள்.

(ஏ - அசை.)

வ்யா—ஆறும்பாட்டு. கையும் காலும் நிமிர்த்து, திருமஞ்சனம் செய்கைக்குடலாகத்

னை பசுமஞ்சளைச்சாத்திபாய்த்து ரோட்டிற்றும். ஐயாவித்யாதி. அப்படி யிருந்துள்ள மஞ்சளாலே மெல்லிதான திருமாலை வழித்தவளுக்கு— அதுக்கு உடலாக அங்காந்திட, பிள்ளையுடைய வாயுள்ளே ஸகலலோகங்களையும் கண்டாளென்கை. அதுக்கடி - அர்ஜுனனுக்கு திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்து வைச்சருப்பயம் காட்டினாற்போலே, இவளுக்கும் திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்து தன் வைபவத்தைக் காட்டுகையிறே. ... ... * கூ.

மூ.—வாயுள் வையகம் கண்ட மடநல்லார்
ஆயர் புத்திர னல்ல னருந்தெய்வம்
பாய சீருடைப் பண்புடைப் பாலகன்
மாய னென்று மகிழ்ந்தனர் மாதரே. எ.

பதவுரை.

வாய் உள்— பிள்ளையுடைய வாயின்உள்ளே
வையகம்— உலகங்களை
கண்ட— பார்த்த
மட நல்லார்—மடப்பத்தையும் நன்மையையு முடைய
மாதர்— (கோப) ஸ்த்ரீகள்
(“இவன்,)
ஆயர்புத்திரன் அல்லன்—கோபகுமாரனல்லன்
அருந்தெய்வம்—பெறுதற்கு அரியதெய்வம்
பாய சீர் உடை—பரம்பினகுணங்களை யுடைய
ஞ்ய்
பண்பு உடை— நீர்மையையுடையனை
பாலகன்— (இந்த) சிறுப்பிள்ளை
மாயன்— ஆச்சர்யசக்தியுக்தன் ”
என்று— என்று சொல்லிக்கொண்டு
மகிழ்ந்தனர்— மிகவும் ஆநந்தித்தார்கள்.

(ஏ - அனை.)

வ்யா.—ஏழாம்பாட்டு. வாயுள் வையகம் கண்ட மடநல்லார். இப்படி திருப்பவளத்தினுள்ளே லோகங்களைக்கண்ட—பல்பதையையும் ஸ்ரீநஹத்தையு முடையவர்கள். “ வையமேழும் கண்டாள் பிள்ளைவாயுள் ” என்று கீழ் ஒருத்தியாகச் சொல்லிற்றேயாகிலும், அது பாஷணத்திலே பலராகச் சொல்லுகையாலே, பின்னையும் கூடக் கண்டவர்களுண்டென்று கொள்ளவேணும். அதாவது- இவள் கண்ட வநந்தரம், அருகு நின்றவர்களுக்கும் காட்ட, அவனும், தன் வைபவம் எல்லாரும் அறிகைக்காக அவர்களுக்கும் திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்துக் காட்டக் கூடுமிறே. ஆயர்புத்திரனல்ல னருந்தெய்வம். ஸ்ரீநந்தகோபர் மகனல்லன், பெறுதற்கரிய ஸர்வேச்வரன். பாயசீருடைப் பண்புடைப் பாலகன். பரம்பின கல்யாணகுணங்களை யுடையனும் நீர்மையுடையனை சிறுப்பிள்ளை. மாயன். ஆச்சர்ய சக்தியுக்தன். என்று மகிழ்ந்தனர் மாதரே. இப்படி சொல்லி மிகவும் ப்ரீதைகளானார்கள் ஸ்த்ரீகளென்கை. “ வாயுள் வையகம் கண்ட மடநல்லாரான - மாதர் - பாயசீருடைப் பண்புடைப் பாலகன்-ஆயர்புத்திரனல்லன் அருந்தெய்வம்-மாயனென்று மகிழ்ந்தனர்” என்றந்வயம்.*எ.

மூ.—பத்து நாளும் கடந்த விரண்டாநாள்
எத்திசையும் சயமரம் கோடித்து
மத்த மாமலை தாங்கிய மைந்தனை

பதினாலும் கடந்த— பத்துநாளுமேகழிந்த
இரண்டாம் நாள்— இரண்டாநாளான நாம
கரணதினத்திலே
எத்திசையும்— எல்லாதிக்குக்களிலும்
சய மரம்— ஜயஸூசகமான தோரணங்களை
கோடித்து— நாட்டி அலங்கரித்து
மத்த மா மலை—மதித்தயானைகளையுடைய(மகா
வர்த்தனமென்னும்) மலையை
வ்யா.—எட்டாம்பாட்டு. பத்துநாளும் கடந்த விரண்டாநாள். பத்துநாளுடன்கூடின ரண்டாம்நாளான நாமகரண திவஸத்திலே. எத்திசையும் சயமரம் கோடித்து. எல்லாத்திக்குக் களிலும் ஜயஸூசகமான தோரணம் நாட்டி அலங்கரித்து. மத்தமாமலை தாங்கியனைர்த்தினை. வர்ஷாபத்ரகூஷ்ணர்த்தமாக, மதத்தகஜங்களை யுடைத்தான பெரியமலையை நிர்ந்துக்கொண்டி நின்ற மிடுக்கினை. பிற்பாடானகையாலே, தற்காலத்திலன்றிக்கே, பிற்காலத்திலுள்ள தோஷ் டிதங்களையும் அவ்வஸ்துவுக்கு நிரூபகமாக்கி அருளிச்செய்யலாமிறே ஆழ்வார்க்கு. உத்தா னம்செய்து உகந்தனர் ஆயரே. இடையரெல்லாரும் ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தாலே தனித் தனியே தந்தாம் கைகளிலே யெடுத்துக்கொண்டு ப்ரதானர்களென்னை. ... ...* அ.

அ.—ஒன்பதாம்பாட்டு. திருவவதரித்தவளவில் ஊடங்களும் செய்த உபலாக விதிசஷங்களை அநுஸந்தித்து இனியரானர் - கீழ்; இப்பாட்டில் — பருவத்துக்குத் தகுதி யல்லாத தோஷடிதங்களை யநுஸந்தித்து, திருத்தாயார், ஸ்நிக்தஜநாவனவர்களுக்குச்சொன்ன பாசுரத்தை, அவளானபாவனையாலே தாம் அநுபவித்து இனியராகிறார்.

மு.—கிடக்கிற் றொட்டில் கிழிய வுதைத்திடும்
எடுத்துக்கொள்ளின் மருங்கை யிறுத்திடும்
ஒடுக்கிப் புல்கி வுதரத்தே பாய்ந்திடும்
மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன் ஙங்காய். கூ.

பதவுரை.

ஙங்காய்!—பூர்ணைகளான ஸ்த்ரீகளே!
கிடக்கில்— (இப்பிள்ளை தொட்டிலில்) கிடந்
தாளுகில்
தொட்டில்— தொட்டிலானது
கிழிய— சிதிலமாம்படி
உதைத்திடும்— உதையாநிற்கும்;
எடுத்துக்கொள்ளில்— (இப்பிள்ளையைஇடுப்
பில்) எடுத்துக்கொண்டால்
மருங்கை— இடுப்பை
இறுத்திடும்— முறியாநிற்கும்;
ஒடுக்கி— ஸ்பாபாதகபரிஷ்வங்களாதிப்படி. செய்து
புல்கின்— மார்பில் அணைத்துக்கொண்டால்
உதரத்தை— வயிற்றிலே
பாய்ந்திடும்— பாயாநிற்கும்;
மிடுக்கு— இந்த தோஷடைகளைப் பொறுக்க
வல்ல சக்தி
இலாமையால்— (பிள்ளைக்கு)இல்லாமையால்
நான்— (தாயான) நான்
மெலிந்தேன்— மிகவும் இளைத்தேன்.

களின் மார்தவத்துக்கு இது பொறுது' என்று அஞ்சி ஓக்கலையிலே எடுத்துக் கொள்ளில், புடைபெயர்ந்து ஓக்கலையை முறியாகிற்கும். ஒடுக்கிப்புல்கில் உதரத்தே பாய்ந்திடும். 'இது அத்திருமேனியின் மார்தவத்துக்குப் பொறுது' என்று வ்யாபாரக்ஷமனல்லாத படி ஓங்கி மார்பிலே இட்டுக்கொள்ளில், திருவடிகளாலே வயிற்றிலே பாயாகிற்கும். மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன் நங்காய். 'இந்த செஷ்டிதங்களை யெல்லாம் பொறுக்கவல்ல சக்தி பிள்ளைக்குப் போராது' என்று நான் போர இளைத்தேன். நங்காயென்று ஜாத்யேக வசநமாய், நங்கைகாள் என்றபடி.. நீங்களெல்லாரும் பருவத்துக்குத்தக்க சேஷ்டிதங்களை டைய பிள்ளையைப்பெற்று வளர்க்கையாலே பூர்ணைகளாயிருக்கிறீர்களித்தனை. ... * க.

அ.—நிகமத்தில், இத்திருமொழி கற்றார்க்கு பலம் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மூ.—சேந்நெலார் வயல்சூழ் திருக்கோட்டியூர்
மன்னு நாரணனம்பி பிறந்தமை
மின்னுநூல் விட்டுசித்தன் விரித்தவிப்
பன்னு பாடல்வல்லார்க்கில்லை பாவமே. ய.

பதவுரை.

சேந்நெல்— செந்நெல் தான்யமானது
ஆர்— நிறைந்திருக்கிற
வயல்— கழனிகளாலே
சூழ்— சூழப்பட்ட
திருக்கோட்டியூர்— திருக்கோட்டியூரிலே
மன்னு — நித்யவாஸம் பண்ணுகிற
நாரணன் — நாராயணசப்தவாச்யனும்
நம்பி — குணபூர்ணனான கண்ணன்
பிறந்தமை— அவதரித்த ப்ரகாரத்தை,
மின்னு நூல்—விளங்காநின்ற யஜ்ஞோபவீத
த்தை யுடைய
விட்டுசித்தன் — பெரியாழ்வார்
விரித்த— பரப்பி அருளிச்செய்ததாய்
இப்பன்னுபாடல்— ஜ்ஞாநிகள் அநவரதம்
அநுஸந்திக்கும்படியான இப்பாசுரங்களை
வல்லார்க்கு — கற்குமவர்களுக்கு
பாவம் இல்லை — பாபமில்லை.
(ஏ - அ)ஸை.)

வ்யா.—சேந்நெலித்பாதி. செந்நெலாலே நிறைந்திருக்கிற வயல்களாலே சூழப்பட்ட திருக்கோட்டியூரிலே, அஸாதாரண விக்ரஹ விசிஷ்டனுப்கொண்டு நித்யவாஸம் பண்ணுகிற, நாராயணசப்தவாச்யனும் கல்யாணகுணபூர்ணனவன் திருவவதரித்த ப்ரகாரத்தை. மின்னுநூல் விட்டுசித்தன் விரித்த. பட்டர்பிராணைகையாலே விளங்காநின்றுள்ள திருயஜ்ஞோபவீதத்தை யுடையராய், ஸர்வஜ்ஞபரமன ஸர்வேச்வரனைத் தம் திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டிருக்கையாலே விஷ்ணுசித்தரென்னும் திருநாமத்தையுடையரான பெரியாழ்வார், திருவவதரித்தகாலத்தில் உபலாளநாதிகளாலேடகூட விஸ்தரணை அருளிச்செய்த. இப்பன்னிரு பாடல் வல்லார்க்கில்லை பாவமே, ரஸ்யதையாலே விசேஷஜ்ஞரானவர்கள் எப்போ

அடிவரவு. வண்ண மோடு பேணி புறி கொண்ட கை
வாய் பத்துக் கிடக்கில் சேர்ந்தேல் சீதம்.

—(*)—

ஆக- திருமொழி, க- க்கு பாட்டு - பத்து ம.

அ.—கீழிற்றிருமொழியிலே, "திருக்கோட்டி-யூர் கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்" என்று தொடங்கி, "திருக்கோட்டியூர் மன்னு நாரணன் நம்பி பிறந்தனை" என்று தலைக்கட்டினையாலே திருவவதரித்தருளின ப்ரகாரத்தை தத்தாலாபலாளநங்களோடே அநுபவித்து ஹர்ஷடரா யருளிச்செய்தார்; இனிமேல், இப்படி திருவவதரித்தருளினவனுடைய திவ்யவிக்ரஹ வைலக்ஷண்யத்தை தத்தத்காலத்தில் யசோதைப்பிராட்டி அநுபவித்தாற்போலே, தத்பாவபுக்தராய்க்கொண்டு திருவடிகளில் நின்றும் திருமுடி பலவாக அநுபவித்த ப்ரகாரத்தை, அப்போது அவள் பேசின பாசுரத்தாலே ஆதரம் தோற்ற அருளிச்செய்கிறார்.

மூ.—சீதக் கடலுள் ளமுதன்ன தேவகி
கோதைக் குழலா ளசோதைக்குப் போத்தந்த
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்
பாதக்கமலங்கள் காணீரே பவளவாயீர் வந்து காணீரே. க.

பதவுரை.

சீதக்கடல் உள் — குளிர்ந்தகடலில் உள்ளமுது அன்ன — தாகப்பிறந்த பிராட்டியோடு ஒத்த
தேவகி — தேவகிப்பிராட்டி
கோதை — பூமாலையால் அலங்கரிக்கப்பட்ட
குழல் ஆள் — கேசபாசத்தையுடைய
அசோதைக்கு — யசோதைப்பிராட்டிக்கு
போத்தந்த — போகவிட்ட
பேதை குழவி — பேதைமையையுடைய சிசு
பிடித்து — (திருக்கைகளால்) பிடித்து
சுவைத்து — ஆஸ்வாதித்து
உண்ணும் — (திருப்பவளத்தில்வைத்து) புஜியா நின்றுள்ள
பாதக்கமலங்கள் — திருவடித்தாமரைகளை
வந்து காணீர்! — வந்துகாணுங்கோள்!
பவளவாயீர்! — பவளம்போல் சிவந்த அதரத்தையுடைய பெண்டிர்காள்!
வந்து காணீர்!!— (சடுக) வந்து பாருங்கோள்.
["காணீரே" என்றதை இரட்டித்துச் சொன்னதால் ஆதரத்தின்மிகுதி தோற்றுகிறது.]

வ்யா.—முதற்பாட்டு. சீதக்கடல் உள்ளமுதன்ன தேவகி. அகாதமாகையாலே குளிர்த்திமாறாத ஸமுத்ரத்திலே தேவபோக்யமாகப் பிறந்த அம்ருதம் போலேயிருக்கை. "அமுது அன்ன" என்கிறது, அமுதம் போலே ஸர்வாதிகமாயிருக்கை. "தேவகி" என்கிறது, தேவகிப்பிராட்டி. "கோதை குழலாள்" என்கிறது, பூமாலையால் அலங்கரிக்கப்பட்ட குழல் ஆள். "அசோதைக்கு போத்தந்த" என்கிறது, யசோதைப்பிராட்டிக்கு போகவிட்ட. "பேதை குழவி" என்கிறது, பேதைமையையுடைய சிசு வானது

சீலையென்றபடி. கோதைக் குழலா ளசோதைக்குப் போத்தந்த. பூமாலையாலே அலங்க்ர
மான குழலையுடைய பசோதைப் பிராட்டிக்கு, போகவிட்ட - வரவிட்ட வென்றபடி.
போத்தந்த வென்று - ஒரு முதற் சொல்லு. பேதைக் குழவி. (க) "கூ ஸ்ரீ ஈ" என்னுமாப்போலே. பேதை பருவத்துக்குத் தக்கவறி வில்லாமை. குழவி - பருவம்.
பிடித்துச் சுவைத்துண்ணும். திருக்கையாலே பிடித்துத் திருப்பவளத்திலே வைத்து
ஆஸ்வாதித்து புஜிக்கும். (உ) "வ ஒ ஸ்யிஸ பா ஸாஸ்யாத்ரு ஸயி ஜ ஹவாண வ ஸ ணஸ்ஸ
வோஜ்ஜவே ! கயிச்வர் ஒ ஸவ ஜஸ்ஸிர் தா ந்ரூயிய ரெவணி ய ஸ்ஸ மு, ஹுவ. வா"
இத்தலை. (ங) "விணவிவெ வாம்ச் சுயஉ ஹ்" "தேசமெலரும் திருப்பாதம்"
என்றும் சொல்லக்கேட்டிருக்கையாலே திருவடிகள்தன்னின் போக்யதைதன்னை பரீக்ஷிக்
கைக்காக, பருவத்துக்கு அநுகுணமான வ்யாபாரம் செய்வாரைப்போலே செய்தானதல்;
"வையமேழும் கண்டாள்" என்னுமிடத்தில்கிடக்கிற லோகங்களுக்கு, சிறைச்
சோறுக்கினை னதல். பாதக்கமலங்கள் காணீரே. இப்படி யிருந்துள்ள திருவடித்தாமரை
களை வந்து காணுங்கோள். கடலமென்கையாலே - திருவடிகளிலுண்டான நிறத்தையும்,
சைத்ய மார்தவ லாவண்யாதிகளையும் சொல்லுகிறது. பவளவாயீர் வந்துகாணீர். பவ
ளம்போலே சிவந்த அதரத்தையுடையீர் வந்துகாணுங்கோளென்று, பசோதைப்பிராட்டி,
தான் அநுபவித்த அம்சத்தை ஸஹாதியைகளாய் அநுபூஷாக்களா யிருப்பாரையும் ச்லா
கித்துக்கொண்டு அழைத்துக்காட்டின பாசுரத்தாலே அருளிச்செய்தாராய்த்து. ... * க.

அ.—இரண்டாம்பாட்டு. திருவடிகளின் அகவாயை அநுபவித்தாராய் நின்றார் கீழ்;
இப்பாட்டில்- திருவடிகளின் திருவுகிருடனை திருவிரற்களை யநுபவிக்கிறார்.

மூ.—முத்து மணியும் வயிரமு நன்பொன்னும்
தத்திப் பதித்துத் தலைப்பெய்தாற் போலெங்கும்
பத்து விரலு மணிவண்ணன் பாதங்கள்
ஒத்திட்டிருந்தவா காணீரே யொண்ணுதலீர்வந்து காணீரே. உ.

பதவுரை.

முத்தும் மணியும்—முத்துக்களையும் ரத்நங்களை
யும்
வயிரமும் — வயிரத்தையும்
நன் பொன்னும் — நல்ல பொன்னையும்
தத்திப்பதித்து — மாறிமாறிப் பதித்து
தலைப்பெய்தாப்போல் — சேர்த்தாப்போல்
எங்கும் — எங்கும்
மணிவண்ணன் — மணிபோன்ற வர்ணத்தை
யுடைய கண்ணனுடைய
பாதங்கள் — திருவடி களிலுள்ள
பத்து விரலும் — விரல்கள் பத்தும்
ஒத்திட்டு — தன்னிலேசேர்ந்து
இருந்த ஆ — இருந்தபடி.யை
காணீர்! — காணுங்கோள்!
ஒண் நுதலீர்!!— அழகிய நெற்றியை யுடைய
பெண்டிர்காள்!!
வந்து காணீர்!!— வந்துபாருங்கோள்!!.
(ஏ - அசை.)

(க) "முக்தச்சிஈ" (உ) "வடதளமதிசய்யரங்கதாமந்! சயித இவார்ணவதர்
ணகஈபதாப்ஜும்- அதிமுகமுதரே ஜகந்தி மாதும் நிதநித வைஷ்ணவ போக்ய லிப்ஸயாவா",
(ங) "விஷ்ணோஈபோக்ய பாவே முக்தைஸ்ச"

தோற்று மாறிமாறிச் சாத்துகையாலே கீலரத்தம்பீறன்று வடிவை புடைபவனுடைய திரு
வடிகளில் பற்றி விடாமும், முத்துமாணிக்கம் வயிரம் முதலான நவரத்தினங்களையும் கல்லிபோன்
சோயும் மாறிமாறிப்படுத்திச் சீசர்த்தாற்பீபாலேபாய், திருவிரல்களிலுடைய லக்ஷணத்தில்
ஒன்றும் குறைவின்றிக்கே காங்கும் கன்னில் சேர்த்திருந்தபடியைக் காணுங்கோள்; ஒள்ளிய
நுதலையுடைய நீங்கள் வந்து காணுங்கோளென்னை. முத்தும் மணியும் வயிரமுமென்றவி தை-
அல்லாத ரத்தினங்களுக்கும் உபலக்ஷணம். நுதல்-நெற்றி. ... ... உ.

அ.—முன்னுரைப்பாட்டு. திருவடிகளை அநுபவித்த வரலாறு, திருக்கண்காவினை
முகை டதுபவிக்கிறார்.

மு.—பணைத்தோ ளிளவாய்ச்சி பால்பாய்ந்த கொங்கை
அணைத்தாரவுண்டு கிடந்த விப்பிள்ளை
இணைக்காலில் வெள்ளித்தளைநின் றிலங்குந்
கணைக்காலிருந்தவா காணீரே காரிகையீர் வந்துகாணீரே. க.

பதவுரை.

பணை — முன்கில் பெரிய

தோள்— தோள்களை யுடையவளாய்

இள ஆய்ச்சி — இளமைப் பருவத்தையுடைய
வான ஆய்ச்சியின்

பால் பாய்ந்த கொங்கை — பால் சொரிகிற
முலையை

அணைத்து— திருக்கைகளால் அணைத்து

ஆர— திருவயிறு பூர்ணமாம்படி

உண்டு— அமுதுசெய்து

கிடந்த— (களித்துச்) கிடந்த

இப் பிள்ளை — இந்த க்ருஷ்ணனுடைய

இணை — சேர்ந்திபழகையுடைய

கால்கள் — திருவடிகளில்

வெள்ளித் தளைநின்று — வெள்ளித் தண்டை
நின்று

இலங்குஞ்— விளங்காநிற்கிற

கணைக் கால் இருந்தவா— கணைக்காலிருந்த
படியை

காணீர்!— பாருங்கோள்!

காரிகையீர்!— அழகியபெண்களே!

வந்து காணீர்;-

(ஏ - அகை.)

வ்யா.—பணைத்தோளிளவாய்ச்சி. பசுமைக்கும் சுற்றுடைமைக்கும் செவ்விக்கும்
மேம்போலேயிருந்துள்ள தோளையுடையளாய், பருவத்தால் இளைபருமான ஆய்ச்சியுடைய.
இப்போது இவளை வர்ணிக்கிறது, அழகுக்கும் பருவத்துக்குமீடாக போகபரவசையா
யிருக்கையன்றிக்கே, பிள்ளையை ஸ்நேஹித்து நோக்கிக்கொண்டு போருமவளென்னுமிடம்
தோற்றுகைக்காக. பால்பாய்ந்த கொங்கை. ஸ்நேஹத்தாலே நெறித்துப் பால் சொரிகிற
முலையை. அணைத்தாரவுண்டு கிடந்த விப்பிள்ளை. திருக்கைகளாலே அணைத்து வயிறார வுண்டு,
அத்தாலே ஹர்ஷடனுப்க்கிடந்த விப்பிள்ளையுடைய. இணைக்காலி லித்யாதி. ஆர்யோக்
யம் சேர்த்தி யழகையுடைய திருவடிகளில் வெள்ளித்தண்டைநின்று விளங்காநிற்கிற கணைக்
காலின் அழகிருந்தபடியை, அநுபவ யோக்யரானவர்கள் வந்து காணுங்கோள். காரிகையீர்
வந்துகாணீரே. அழகுடையவர்களாகையாலே அழகின் வாசியறியும் நீங்கள் வந்து காணு
ங்கோள். ... ... ந.

அ.—காலாம்பாட்டு. திருக்கலிங்காலி யழகை பதுபவித்து வாக்காம், திருமுழுங் தாளினழகை பதுபவிக்கிறார்.

மு.—உழந்தா ணறுநெய் யோரோதடாவுண்ணை
இழந்தாளோரிவினை லீத்தெழிப்மத்தின்
பழந்தம்பாலோச்சப் படித்தாற் றவழ்ந்தான்
முழந்தா ளிருந்தவா காணீர முகிழ்முலையீர்வந்து காணீரே. சு.

பதவுரை.

உழந்தாள்— சிரமப்பட்டு தடாவில்மீசர்த்தல
நறுநெய்— மணமிக்க நெய்யை
ஓரோ தடா— ஒவ்வொரு தடாவாக
உண்ணை— அழுதுமிசைத்த வளவில்
இழந்தாள்— (பிள்ளையை) இழந்தாளாக
நிலைத்த தாய்
எரிவினல்— வயிற்றெரிச்சலாலே
ஈர்த்து— (கையைப்பிடித்து) இழுத்து
எழில் மத்தின்— அழகிய மத்தில
பழந் தாம்பால்— (சுற்றிக்கடைந்து) பழகின
தாம்பாலை
ஓச்ச— அடிப்படுதாக ஓங்க
படித்தால்— அச்சத்தாலே
தவழ்ந்தான்— (அந்தைத் தப்பிப்போவ
தாகத்) தவழ்ந்தவனுடைய
முழந் தாள்— முழங்காலின்
இருந்த அ— இருந்தபடியை
காணீர்— காணுங்கோள்
முகிழ் முலையீர்!— முகிழ்த்த முலையையுடைய
பெண்களே!

வ.துகாணீர்;—

வ்யா—உழந்தாள். ஆயாலித்தவள். கறந்து காய்ந்நுத் தீதாய்த்துக் கடைந்து வெண்ணையாக்கி யுருக்கித் தடாக்களிலே சேர்த்துவைத்த வருத்தத்தையெல்லாம் சொல்லுகிறது. நறுநெய் ஓரோதடாவுண்ண. நறுவிதான நெய்யை ஒவ்வொருதடாவாக ஒன்றும் சேஷிபாதபடியுண்ண. இழந்தாள் எரிவினல் ஈர்த்து. 'உண்டநெய் பிள்ளைக்கு ஸாத்மியாது' என்று பிள்ளையை இழந்தாளாக நிஜைத்து, பயப்பிணைபால் வந்த வயிற்றெரிச்சலாலே கையைப்பிடித்திழுத்து. எழில்மத்தின் பழம் தாம்பாலோச்ச. அழகிய மத்திலே சுற்றிக் கடைந்து பழகின தாம்பாலே அடிப்படுதாக ஓங்க. பயத்தால் தவழ்ந்தான். பயத்தாலே அந்தைத்தப்புவதாகத் தவழ்ந்தவனுடைய. முழந்தாளிருந்தவா காணீர. முழந்தாளின் அழகிருந்தபடியைக்காணுங்கோள். முகிழ்முலையீர் வந்துகாணீரே. முகிழ்த்த முலையையுடையீர் வந்து காணுங்கோள். ... ... * சு

அ—ஐந்தாம்பாட்டு. முழந்தாளினழகை பதுபவித்த வாக்காம், திருத்துடையி னழகை பதுபவிக்கிறார்.

மு—பிறங்கிய பேய்ச்சி முலைசுவைத் துண்டிட்
டிறங்குவான் போலே கிடந்தவிப் பிள்ளா
மறங்கோ ளிரணியன் மார்வைமுன் கீண்டான்
குறங்குகளை வந்து காணீரே குவிமுலையீர் வந்து காணீரே. டு.

காசத்தையுடைய

பேய்ச்சி— பூதனையின்

முலை— முலையை

சுவைத்து— (பாலை அமுதப்படி) ஆஸ்வாதித்து

உண்டிட்டு— புஜித்து

கிடந்த— கிடந்த

இப்பிள்ளை— இந்தப்பிள்ளையின்

குறங்குகளை— திருத்துடைகளை

வந்துகாணீர்!— வந்து காணுங்கோள்!;

குவி முலையீர்!— குவியாநின்ற முலைகளை

யுடைய பெண்காள்!

வந்துகாணீர்-; (வ - அசை.)

வ்யா.—பிறங்கியபேய்ச்சி முலைசுவைத்துண்டிட்டு. க்ராஸ்யத்தால் வந்த ப்ரகாசத்தை யுடையளான பூதனையுடைய முலையைப் பாலைபறச் சுவைத்து புஜித்து. உண்டிட்டு என்று— ஒரு முழுச் சொல்லு. உறங்குவான்போலே கிடந்தவிப்பிள்ளை. செய்த மாக்ரமம் ஒன்றும் தெரியாதபடி உறங்குமவன்போலேக்கிடந்த இப்பிள்ளை. மறங்கொளித்யாதி. ப்ரஹ்லாத விஷயமான சிற்றத்தையுடையனை ஹிரண்யனுடைய மார்வை முற்காலத்திலே பிளந்து போ கட்டவனுடைய அச்சுவடு தாற்றும்படியிருக்கிற திருத்துடைகளை வந்துகாணுங்கோள். குவி முலையீர் வந்து காணீரே. குவிகிற முலையையுடைய நீங்கள் வந்து காணுங்கோள். ... நி

அ.—ஆறும்பாட்டு. திருத்துடையினழகை யநுபவித்த வநந்தரம், திருக்கடிப்பை தினழகை யநுபவிக்கிறார்.

மு.—மத்தக்களிற்று வசுதேவர் தம்முடை
சித்தம் பிரியாத தேவகி தன் வயிற்றி
லத்தத்தின் பத்தாநாட் டோன்றிய வச்சுதன்
முத்த மிருந்தவா காணீரே முகிழ்நகையீர் வந்து காணீரே. சு

பதவுரை.

மத்த களிறு— மத்த கஜங்களையுடையரான

வசு தேவர் தம்முடை— ஸ்ரீ வஸு தேவருடைய

சித்தம் பிரியாத— ஹ்ருதயத்தைப் பிரியாத

தேவகிதன்— தேவகிப் பிராட்டியின்

வயிற்றில்— வயிற்றிலே

அத்தத்தின் பத்தாம்நாள்— ஹஸ்த நக்ஷத்ரத்துக்குப் பத்தாவதான திருநாளிலே

தோன்றிய— ஆவிர்ப்பவித்த

அச்சுதன்— அடித்தாரை நழுவவிடாதகண்ணனுடைய

முத்தம் இருந்த ஆ— ‡ சண்ணம் இருந்த பாலை

காணீர்!— காணுங்கோள்!;

முகிழ் நகையீர்!—மந்தஸ்மிதமுடையபெண்காள்!

வந்துகாணீர்-; (வ அசை.)

‡ ‘சண்ணம்’ என்றும், ‘முத்தம்’ என்றும், ‘மொட்டு’ என்றும் இவை (பாலிசர்களின்) குஹ்யா வயவத்துக்குப் பர்யாய நாமங்களாக வழங்குதல் மரபு.

வ்யா.—மத்தவித்யாதி. மத்தகஜங்களை யுடையரான ஸ்ரீவஸுதேவர் தம்முடைய ஹ்ருதயத்துக்குத் தகுதியாகப் பரிமாறுகிற தேவகிப்பிராட்டிதன் வயிற்றிலே. அத்தத்தினி த்யாதி. அத்தத்துக்குப் பத்தாநாளிலே. மங்களாசாஸந பராணைபோலே விரோதிகள் அறி

விடாதவனுடைய முத்தமிருந்தபடியைக்காணுங்கோள். முகிழ் நகையீர் வந்து காணீரே. முகிழா நின்றுள்ள நகையையுடைய நீங்கள் வந்து காணுங்கோள். முத்தம்- சண்ணம். முகிழ்நகை- மந்தஸ்மிதம். ... ... சு

அ.—எழாம்பாட்டு. திருக்கடிப்பிரசத்தினழகையநுபவித்த வரந்தரம், திருமருங்கினழகை யநுபவிக்கிறார்.

மூ.—இருங்கை மதகளி றீர்க்கின்ற வினைப்
பருங்கிப் பறித்துக் கொண்டோடும் பரமன்றன்
நெருங்கு பவளமு நேர்நாணு முத்தும்
மருங்கு மிருந்தவா காணீரே வாணுதலீர் வந்து காணீரே. எ.

பதவுரை.

இருங்கை— பெரிய துதிக்கையையுடைய
மத களிறு— மதத்த கஜமான குவலயா
பீடத்தை
ஈர்க்கின்றவனை— தன்வசமாக நடத்தா நின்
றுள்ள பாகனை
பருங்கி— கொன்று
பறித்துக் கொண்டு— (அந்த கஜத்தின்
கொம்புகளை) முறித்துக் கொண்டு
ஓடும்— ஓடாநின்ற
பரமன் தன்— பரமனென கண்ணனுடைய

நெருங்கு பவளமும்— செறியக் கோத்த
பவள வடமென்ன
நேர் நாணும்— நேரியதான அரைநாணென்ன
முத்தும்—முத்துவட மென்ன (இவற்றிற்கு மேடே
சேர்ந்த)
மருங்கும்— திருமருங்கும்
இருந்த ஆ— இருந்தபடியை
காணீர்!— காணுங்கோள்!;
வாள்நுதலீர்— ஒள்ளிய நெற்றியையுடைய
பெண்காள்!
வந்துகாணீர்!-; (ஏ - அசை.)

வ்யா.—இருங்கைமத்தகளி. பெரிய துதிக்கையை யுடைய மத்தகஜமான குவலயாபீ
டத்தைத் கன்வசமாக நடத்தா நின்றுள்ள பாகனைக்கொன்று. பருங்குதல்- கொல்லுதல. பறித்தித்யாதி. அதின் கொம்புகளைப் பறித்துக்கொண்டு கம்ஸனிருந்த வுயர்ந்த நிலத்திலே ஓடிச்சென்று முறித்த பரமனுடைய. அன்றிக்கே, ஊரில் இடைப்பிள்ளைகள் விளையாடுகிற வர்களிலே லீலோபகரணங்களிலே ஆசையாகப்பண்ணி, பெரிய கையையுடைய மத்தகஜ மென்று இழுத்துக்கொண்டு திரிகிறவனை, அடர்த்துப்பறித்துக்கொண்டோடாநிற்கும் பரம னென்னுதல். நெருங்கித்யாதி. செறியக்கோத்த பவளவடமும், நேரியதான பொன்னாணும், முத்துவடமும், இவற்றிற்கேசேர்ந்த திருமருங்கு மிருந்தபடியைக்காணுங்கோள். வாணுதலீர் வந்து காணீரே. ஒளிவிடாநின்ற நெற்றியையுடைய நீங்கள் வந்து காணுங்கோள். ... எ

அ. எட்டாம்பாட்டு. திருமருங்கினழகை யநுபவித்த வரந்தரம், திருவந்தியினழகை யநுபவிக்கிறார்.

(க) " அச்யுதபாதாரா- தேவகீபூர்வஸந்த்யாயாமாவிர்ப்பூதம் "

பதவுரை.

நந்தன் மதலைக்கு— நந்த கோபர்குமரனை
கண்ணனுக்கு
நன்றும் அழகிய— மிகவும் அழகியதான
உந்தி— திருநாபி
இருந்த ஆ— இருக்கிற படியை
காணீர்!— காணுங்கள்!
ஒளி இழையீர்!— காந்தி மிக்க ஆபரணங்
களையுடைய பெண்காள்!
வந்துகாணீர்-; (வ அசை.)

வந்த— தன்மேலே விளையாடவந்த
மதலை குழாத்தை— சிறு பிள்ளைகளின்
கூட்டத்தை
வலி செய்து— பலாத்காரித்து
தந்த களிறுபோல்— (குவிந்த) கொம்பை
யுடைய ஆனைக்குட்டிபோலே
தானை— தானை (முக்யரைப்)
விளையாடும்— விளையாடா நிற்கிற

வ்யா.—வந்தவித்யாதி. தன்மேலே விளையாடவந்த*தன்னைராயிரம் பிள்ளைகளான மதலைக்குழாத்தை, தானும் மதலையாயிருக்கச் செய்தே, அத்தனைபேரும் ஒருதலை, காலொருதலையாகநின்று பலாத்காரித்து, கொம்புமுகிழ்த்த இளவானை போலே தானைப்ரதானரைப் விளையாடும். நந்தனித்யாதி. இப்படி திரியா நிற்கச்செய்தே, ஸ்ரீநந்தகோபர் ஸந்நிதியில் ஸவிநயமாக வர்த்திக்கும் பிள்ளைத்தனத்தை யுடையவனுக்கு. நன்றுமித்யாதி. மிகவும் அழகியதான திருவுந்தி யிருக்கிறபடியைக் காணுங்கோகாள். இழை— ஆபரணம். ... ... அ.

அ.—ஒன்பதாம்பாட்டு. திருவுந்தியினழகை யநுபவித்த வநந்தரம், திருவுதரத் தினழகை யநுபவிக்கிறார்.

மூ.—அதிருங் கடல்நிற வண்ணனை யார்ச்சி
மதுர முலையூட்டி வஞ்சித்து வைத்துப்
பதரப் படாமே பழந்தாம்பா லார்த்த
உதர மிருந்தவா காணீரே யொளிவளையீர்! வந்து காணீரே. கூ

பதவுரை.

அதிருங் கடல்நிற வண்ணனை } கோவலிக்கிற கடலின் கிறம்போன்ற நிறத்தை யுடையவனை
ஆய்ச்சி— திருத்தாயாரான யசோதை
மதுர முலையூட்டி—இனிய முலைப்பாலையூட்டி
வஞ்சித்துவைத்து — வஞ்சனைசெய்துவைத்து
பதரப்படாமே— தன் நினைவு தப்பாதபடி
பழம் தாம்பால்— பழைய கயிற்றாலே

ஆர்த்த— கட்டின
உதரம்— திருவயிறு
இருந்த ஆ— இருந்தபடியை
காணீர்!— காண்மின்!;
ஒளி வளையீர்!— ஒளிமிக்க வளையையுடைய
பெண்காள்!
வந்துகாணீர்!-; (வ - அசை.)

"அதிரும் கடல்" என்று விசேஷிக்கையாலே- இவனுடைய அடங்காமை தோற்றுகிறது. ஆச்சி மதுரமுலையூட்டி வளர்த்து வைத்து. பெற்ற தாயானவள் மதுரமான முலைப்பாலையூட்டி., மேல், தான் இவர்னைக் கட்டத் தேடுகிற தறியாதபடி வளர்த்துவைத்து. பதரவித்யாதி. தன்னினவு தப்பாதபடி, கன்றுகளும் பசுக்களும் கட்டிப்பழகி¶ ஒழிஞ்சானமுட்டாய்க்கிட ந்தமிதாரு தாம்பாலே கட்டின கயிற்றில் தழும்பு காணலாப்படி. யிருக்கிற வயிற்றினழகிருக் கிறபடியைக் காணுங்கோள். ஒளிவளையீர் வந்து காணீரே. ஒளியையுடைத்தான வளையையு டைய நீங்கள் வந்து காணுங்கோள். ... ... கூ

அ.—பத்தாம்பாட்டு. திருவுதரத்தினழகை யநுபவித்த வந்தரம், திருமார்வினழ கை யநுபவிக்கிறார்.

மூ.—பெருமா வுரலில் பிணிப்புண் டிருந்தங்
கிருமா மருத மிறுத்த விப்பிள்ளை
குருமா மணிப்பூண் குலாவித் திகழும்
திருமார் விருந்தவாகாணீரே சேயிழையீர் வந்து காணீரே. ங.

பதவுரை.

பெரு மா உரலில் — மிகவும் பெரிதான உரலோடு

பிணிப்புண்டு இருந்து — கட்டுண்டிருந்து

அங்கு — அத்தையபிலே

இரு மா மருதம் — இரண்டு பெரிய மருதமரங்களை

இறுத்த — முறித்த

இப்பிள்ளை — இந்தப்பிள்ளையுடைய

குரு மா மணிப்பூண் — மிகச் சிறந்ததான கௌஸ்துபாபரணம்

குலாவி திகழும் — அசைந்து விளங்காநின்றுள்ள

திருமார்வு இருந்தவா — திருமார்பிருந்தபடியை

காணீர்! — பாருங்கள்!

சே இழையீர்! — செவ்விய ஆபரணங்களையுடைய பெண்காள்!

வந்து காணீர்! — (வ - அசை.)

வ்யா.—பெருமானித்யாதி. மிகவும் பெரியவுரலோடு கட்டுண்டிருந்து அத்தையபிலே அத்தைப்பு மிழுத்துக்கொண்டு தவழ்ந்துபோய், தன்னை நலிவதாகச் சேர்ந்துநின்ற இரண்டு பெரியமருதுகளின் நடுவேசென்றுபுக்கு அவற்றைமுறித்த(க)முகத்தழனவிவனுடைய. குருமா வித்யாதி. சிரேஷ்டமாய் சிலாக்யமான ஸ்ரீகௌஸ்துபமாகிற ஆபரணம் அசைந்து விளங்கா நின்றுள்ள திருமார்வினழகிருந்தபடியைக் காணுங்கோள். சேயிழையீர் வந்துகாணீரே. சிவ ந்த ஆபரணங்களையுடைய நீங்கள் வந்து காணுங்கோள். ... ... ங.

அ. பதினோராம்பாட்டு. திருமார்வினழகை யநுபவித்தவந்தரம், திருத்தோள் களினழகை யநுபவிக்கிறார்.

¶ ஒழிஞ்சானமுட்டு-என்றுக்கு முதலான கயிறு. (க) உ-ம்.

வாள்கொள் வளையேயிற் றுருயிர் வவ்வினன்
தோள்களிருந்தவா காணீரே சுரிகுழலீர் வந்து காணீரே. கக

பதவுரை.

நாள்கள்— (திருவவதரித்தபின்புசென்ற) நாள்கள்

ஓர் நாலு ஐந்து திங்கள் அளவிலே — ஒரு நாலைந்து மாதத்தளவிலே

சகடத்தை— சகடாஸுரனை

தாளை நிமிர்த்து— காலைத்தூக்கி

சாடிப்போய்— உதைத்துவிட்டு,

வாள் கொள்— ஒளிகொண்டதாய்

வளை— வளைந்திருக்கிற

எயிறு— பற்களையுடைய பூதனையின்

ஆர் உயிர்— அரிய உயிரை

வவ்வினன்— அபஹரித்தவனுடைய

தோள்கள் இருந்தவா— தோள்களிருந்தபடியை

காணீர்!— காணுங்கோள்!;

சுரி குழலீர்!— சுருண்ட குழலையுடையபெண் காள்!

வந்துகாணீர்!—; (ஏ - அசை.)

வ்யா. நாள்களோரித்யாதி. திருவவதரித்தபின்பு சென்ற நாள்கள் ஒருநாலைந்து மாஸத்தளவிலே. மாஸம் நாலென்றும், அஞ்சு என்றும் ஒன்பதிதன்றும் இருபதிதன்றும் தெரியாதபடி, இப்படி மயக்கி யருளிச்செய்தது மங்களாசாஸந பரராகையாலே; தர்ஷ்டிதோஷ பரிஹாரார்த்தமாக. தாளையித்யாதி. தனித்துக் கண்வளர்ந்தருளுகிற விடத்திலே அஸுராவேசத்தாலே நலிவதாக வந்து கிட்டுகிற சகடத்தை மூலவரவுதாழ்த்துச் சீறி நிமிர்த்து, திருவடிகளாலே கட்டழியவுதைத்து. இவன் அங்ஙார்த்தமாகத் திருவடிகளை நிமிர்த்தாலும் ப்ரதிகூலித்து வந்து கிட்டுகையாலே சகடம் பக்நமாகத் தட்டில்லையிறே. சாடிப்போயென்றது- சாடிவிட்டென்றபடி. வாள்கொளித்யாதி. ஒளியையுடைத்தாய் வளைந்திருக்கிற எயிறுகளையுடையளான பூதனையுடைய முடித்தற்கரியவுயிரை அபஹரித்தவனுடைய. " பேய்ச்சி பெருமுலையூடுயிரை வற்றவாங்கியுண்டவாயான் " என்னக்கடவதிறே. சகடாஸுர நிரஸனத்துக்கு முன்னே பூதநாதி நிரஸநமாயிருக்க, மாறி யருளிச்செய்தது க்ரம விவக்ஷையாவன்று; ஹர்ஷாதிசயத்தாலே இன்னபடி சொல்லவேணுமென்றறியாமை. எயிற்றை யுடையவளை எயிறு என்கிறது, " ஒல்லைடாடி " என்னுமாபோலே. தோள்களித்யாதி. அவள் முலைப்பாலோடே *உயிரை வற்றவாங்குகிறபோது நெறித்த தோள்களினுடைய அழகிருக்கிறபடியைக் காணுங்கோள்; சுருண்ட குழலையுடையான நீங்கள் வந்து காணுங்கோள். ... ... கக

அ. பன்னிரண்டாம்பாட்டு. திருத்தோளினழகை யநுபவித்த வநந்தரம், திருக்கைத்தலத்தினழகை யநுபவிக்கிறார்.

மூ.—மைத்தடங்கண்ணி யசோதைதவளர்க்கின்ற
செய்த்தலை நீலநிறத்துச் சிறுப்பிள்ளை
நெய்த்தலை நேமியுள் சங்குநிலாவிய
கைத்தலங்கள் வந்து காணீரே கஞ்சுழையீர் வந்து காணீரே. கஉ

பதவுரை.

மை தடம் கண்ணி — கறுத்து விசாலமான கண்களையுடைய

அசோதை — யசோதைப்பிராட்டி:

வளர்க்கின்ற—வளர்க்கிற

தலை செய்— உயர்ந்த வயலிலே

நீலம் நிறத்து—கருநெய்தல்பூவின் நிறம் போன்ற நிறத்தையுடையனான

சிறு பிள்ளை—சிறிய பிள்ளையுடைய

செய்— கூரியதான

தலை— நுதியையுடைய

நேமியும்— திருவாழியும்

சங்கும்— திருச்சங்கும்

நிலாவிய— அமைந்திராநின்றுள்ள

கைத்தலங்கள்— திருக்கைத்தலங்களை

வந்துகாணீர்!— வந்துகாணுங்கள்;

கனம் குழையீர்! —பொன்னால்செய்த சோதி போலாநின்ற குண்டலங்களையுடைய பெண்காள்!

வந்துகாணீர்!-; (எ-து.)

வ்யா. மைத்தடங்கண்ணி. கறுத்துப் பெருத்திருந்துள்ள கண்மலரையுடையவளென்றதல்; அஞ்சநாலங்கற்தமாய் விஸ்தர்தமாயிருந்துள்ள கண்மலரையுடையவளென்றதல். அசோதைவளர்க்கின்ற. இப்படியிருந்துள்ள கண்ணழகையுண்டாயசோதைப்பிராட்டி வைத்தகண் வாங்காமல் நோக்கிவளர்க்கிறபடி. வளர்ப்பார் பலருண்டாயிருக்கச்செய்தேயும், அவர்கள்கையிற் காட்டிக்கொடாதே தானேயிறே வளர்ப்பார்கள். செய்த்தலையிற்பாலும் பூஸாரமுள்ள மேகூத்தத்திலே அப்போதலர்ந்த குவளைப்பூவின் நிறம்போலிருக்கிற நிறத்தையுடையனான சிறுப்பிள்ளையினுடைய. அவள் சீராட்டி வளர்த்த சீமுசுமுசுப்பெல்லாம் திருநிறத்திலே தோன்றும்படியிருக்குமாயிற்று.

நெய்த்தலைநேமியும் சங்கும் நிலாவிய. கூரியநுதியையுடைத்தான திருவாழியென்றதல்; ஆயுதஸாமாந்யத்தாலே நெய்பணிந்திருக்கும் திருவாழியென்றதல்; "கையெல்லாம் நெய்" என்கிற திருக்கையின் ஸ்பர்சத்தாலே நெய்ச்சுவடுமாறாத திருவாழியென்றதல். இப்படியிருக்கிற திருவாழியும், இதுபோலே *கருதுமிடம் பொருதுவந்து கையில் நிற்கவும் வேண்டாதே, கைவிடாதேயிருந்து தன்னேரனையாலே எதிரிகளை அழிக்கவல்ல ஸ்ரீபாஞ்சஜந்யமும் நிரந்தரமாக வர்த்தியாநின்றுள்ள கையும் ஆழ்வார்களுமான சேர்த்தியை ஓரோதசைகளிலே இவன்றன் இவளுக்கும் காட்டக்கூடுமிறே. கைத்தலமித்யாதி. திருக்கைத்தலத்தினழகை வந்து காணுங்கோள்; கனவிதாந காதில் நீங்கள் வந்து காணுங்கோள். கநமென்று - பொன்னுகவுமாம். ... ... கஉ

அ. பதின்மூன்றும்பாட்டு. திருக்கைத்தலத்தினழகை யநுபவித்த வநந்தரம், திருக்கழுத்தினழகை யநுபவிக்கிறார்.

மூ.—வண்டமர் பூங்குழ லாய்ச்சிமகளைக்க
கொண்டுவளர்க்கின்ற கோவலர்குட்டற்கு
அண்டமு நாடு மடங்க விழுங்கிய
கண்டமிருந்தவா காணீரே காரிகையீர் வந்து காணீரே. கக

பதவுரை.

கொண்டு— ஸ்வீகரித்து
வளர்க்கின்ற— வளர்க்கிற
தேவகீ குட்டற்கு— தேவகீ குமாரனுக்கு
அண்டமும்— அண்டங்களையும்
நாதம்— (அவற்றினுள்ளேகிடக்கிற) சேதநா சேதநங்களையும்.

அடங்க— முழுதும்
விழுங்கிய— விழுங்கின (கபளீகரித்த)
கண்டம் — திருக்கழுத்து
இருந்த ஆ— இருந்தபடியை
காணீர்!— காணுங்கள்;
காரிகையீர்!— அழகியபெண்காள்!
வந்துகாணீர்!-; (ஏ - அசை.)

வ்யா. வண்டமரித்பாதி. பிள்ளைகள் அணுங்காமைக்காகத் தாய்மார் தங்களை யலங்கரித்துக்கொண்டிருப்பர்களாய்த்து; அப்படியே இவளும் காலபுஷ்பங்களைப்பலகாலும் முடிக்கைபாலே மதுபாகம்பண்ணும் வண்டுகளுக்கு வல்தவ்படாமே இவள் குழலிலே. அகை யாலே வண்டுகள் படிந்துகிடக்கிறபூவோடேகூடினை குழலையுடையளான யசோதைப்பிராட்டி தன்மகனைக் ஸ்நேஹித்துக்கொண்டு வளர்க்கிற பூர்ணசந்தசோபமகனுக்கு. இவர் அடியறிந் தவாகையாலே "மகனைக்கொண்டு" என்கிறார்; அவள், "தன்மகன்" என்றிறே நினைத்திருப்பது.

அண்டமித்யாதி. அண்டத்தையும் அண்டாந்தர்வர்த்திகளான சேதநாசேதநங்களை யும் திருவயிற்றில் ஒருபுடையிலே அடங்குட்படி விழுங்கின வென்னுதல்; என்றும் பிறி தறிப்படாதபடி எல்லாவற்றையும் சேரவிழுங்கின வென்னுதல். கண்டமித்யாதி. இப்படி யிருந்துள்ள திருக்கழுத்தி னழகிருந்தபடியைக் காணுங்கோள்; அபிரூபைகளான நீங் கள் வந்து காணுங்கோள். காரிகையார் - அழகுடையஸ்த்ரீகள். ... ... *கக

அ. பதினொன்பாட்டு. திருக்கழுத்தினழகை யநுபவித்து வந்தரம் திருப்பவளத் தினழகை யநுபவிக்கிறார்.

மூ.—என் தொண்டைவாய்ச் சிங்கம் வாவென்றெடுத்துக்கொண்டு
அந்தொண்டைவா யமுதா தரித்தாய்ச்சியர்
தந்தொண்டை வாயாற் றருக்கிப் பருகுமிச்
செந்தொண்டைவாய் வந்துகாணீரே சேயிழையீர் வந்துகாணீரே. கஅ

பதவுரை.

தொண்டை வாய்— "கொவ்வைக்கனிபோன்ற அதரத்தையுடைய
என் சிங்கம்!— என்னுடைய சிங்கக்குட்டி-போன்ற குமாரனே!
வா என்று— வருக" என்று
எடுத்துக்கொண்டு— ஒக்கலையி லெடுத்துக் கொண்டு

ஆதரித்து— விரும்பி
தம்— தங்களுடைய
தொண்டை வாயால் — கோவை வாயாலே
தருக்கி— செருக்கி
பருகும்— பாகம் பண்ணுகிற
இச்செம் தொண்டைவாய்—இந்த சிவந்த கோ வைவாயை

வ்யா. என் தோண்டையிந்யாதி. ஆ தொன்டைபோலெ யிருக்கிற திருப்பவளத் தையும் ஸிஷ்டமக் கன்றுபோலெ செருக்கையுமுடையது யிருக்கிறவிவனெ யென்னுடையவ னென்று அபிமானித்து வாவிவன்று அழைத்து எதிர்துக்கொன்டி இடைப்பெண்களெல்லா ரும் அழகிய தொன்டைபோலெ யிருக்கிற திருவதரத்திலுறுகிற அம்ருதத்தை ஆதரித் துத் தங்கள் கோவைவாயாலெ செருக்கிப் பானம்பன்னுகிறது. தருக்கிப் பருருமென்றது - செருக்கிப்பருகு மென்னவுமாம். இச்செந்தொண்டை யிந்யாதி. இப்படி அவர்கள் பருகப் பருகப்பின்னையும் சிவப்புமாறாதெயிருக்கிற திருப்பவளத்தை வந்து காணுங்கோள்; சிவந்த ஆபரணங்களெ யுடைய நீங்கள் வந்து காணுங்கோள். ... ... * கச.

அ. பதினைந்தாம்பாட்டி. திருப்பவளத்தி னழகை யநுபவித்த வநந்தரம் திருமுக மண்டலத்தின் ஸௌந்தர்ய சோபையை யநுபவிக்கிறார்.

மு.—நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால்
நாக்குவழித்து நீராட்டு மிங்கம்பிக்கு
வாக்கு நயநமும் வாயு முறுவலும்
மூக்கு மிருந்தவா காணீரே மொய்குழலீர் வந்துகாணீரே. கரு.

பதவுரை.

அசோதை— யசோதைப்பிராட்டி
நோக்கி — (திருமேனியின் மென்மைக்குத் தகுதியாம்படி.) பார்த்து
நுணுக்கிய— அரைத்த
மஞ்சளால்— மஞ்சள்காப்பாலெ
நாக்கு வழித்து— நாக்கை வழித்து
நீராட்டிம்— திருமஞ்சனம் பண்ணுகிற
இங்கம்பிக்கு— இந்த பூர்ணகுணனுக்கு
வாக்கும்— வாக்கும்
நயநமும்— திருக்கண்களும்
வாயும்— திருவதரமும் (அல்லது) வாய்ந் திருக்கிற
முறுவலும்— மந்தஸ்மிதமும்
மூக்கும்— மூக்கும்
இருந்த ஆ— இருந்தபடியை
காணீர்!— பாருங்கள்;
மொய்குழலீர்!— செறிந்த குழலையுடைய பெண்காள்!
வந்துகாணீர்!-; (ஏ - அசை.)

வ்யா. நோக்கியித்பாதி. திருமேனியின் ஸௌகுமார்ய மறியும் யசோதைப்பிராட்டி அதுக்குத் தகுதியாம்படி பார்த்து நேராகவரைத்த மஞ்சள் காப்பாலெ திருநாகைவழித்து திருமஞ்சனம் செய்யும்படி விதிதபதபா பூர்ணனை விவஹிக்கு. வாக்குமித்யாதி. மாதா முதலானுரை நாமக்ரஹணம் பண்ணுகிற வாக்கும், 'என்னைப்படாதீர் என்னைப்பாரீ' என்ன அவர்களைக் கடாக்ஷிக்கிற திருநயநங்களும் மந்தஸ்மிதம்செய்ய உபக்ரமிக்கிற திரு அதரஸ்பு ரணமும் அந்த ஸ்புரணத்தோடே கூடின மந்தஸ்மிதமும், " மாட்டுயர் கற்பகத்தின் வல்லி யோ கொழுந்தோ வறியேன் " என்று நித்ய ஸம்ச்லேஷஜநகமான திருமூக்குமாகிற விச் சேர்த்தி யழகிருந்தபடி காணுங்கோள்; செறிந்த குழலையுடைய நீங்கள் வந்து காணுங் கோள். ... ... * கரு.

கண்களிருந்தவா காணீரே கனவளையீர் வந்துகாணீரே.

மூ.—விண்கொ ளமரர்கள் வேதனைதீர முன்
மண்கொள் வசுதேவர் தம் மகனுய் வந்து
தின்கொளசுரரைத் தேயவளர்கின்றான்
கண்களிருந்தவா காணீரே கனவளையீர் வந்துகாணீரே. யசு.

பதவுரை.

விண் கொள்— ஸ்வர்காதிலோகங்களை யிருப்பிட மாகவுடைய
அமரர்கள்— இந்த்ராதி தேவதைகளின்
வேதனை— துன்பமானது
தீர— தீரும்படியாக
முன்— முன்னே
மண் கொள்— பூமியை இருப்பிடமாகவுடைய
வசுதேவர்தம்— வஸுதேவருக்கு
மகனுய்வந்து— புத்ரனுய்வந்து அவதரித்து
தின் கொள்— வலிமை கொண்ட
அசுரர்— அஸுரர்கள்
தேய— கூகியிக்கும்படி
வளர்கின்றான்— வளராநிற்கிற கண்ணை யுடைய
கண்கள் இருந்த ஆ— திருக்கண்களிருந்த படியை
காணீர்!— காணுங்கள்!;
கனம் வளையீர்!— பொன் வளையையுடைய பெண்காள்!
வந்துகாணீர்!-; (ஏ- அசை.)

வ்யா. விண்கொளித்யாதி. அவதாரப்ரயோஜநம் ஸாது பரித்ராணாதிகளாகையாலே ஸ்வர்காதி லோகங்களை யிருப்பிடமாக வுடைய இந்த்ராதி தேவர்களுக்கு அஸுரப்ரக்ருதிகளால் வரும் துக்கம் போம்படியாக முன்னே பூமியை யிருப்பிடமாகவுடைய ஸ்ரீவஸுதேவருக்கு புத்ரனுப் வந்தவதரித்து, தன்னைப்பற்றச் சிறைப்பட்டிருக்கிற ஸ்ரீவஸுதேவர் துக்கத்தைத்தீர்த்து, பின்னே தேவர்கள் துக்கம் நீக்கைக்காக முன்னே யிங்கேவந்தவரித் தாணுய்த்து. "தந்தைதகாலில் விலங்கறவந்து தோன்றிய தோன்றல்" என்னக்கடவதிறே. தின்கொளித்யாதி. காயபலமும் மநோபலமுமுடையரான அஸுரர்களானவர்கள் கூகியித் துச் செல்லுமட்படியாகத் தான் வளராநிற்கிறவனுடைய. இவன் கால் நெடுக நெடுக அஸுரவர்கம் க்ஷீணமாய்விட்டதிறே. கண்களித்யாதி. இப்படி அநுகூலாக்ஷணமும் ப்ரதிகூல நிரஸநமும் பண்ணுமிடத்தில் இவர்கள் தளர்க்கவும் அவர்கள் கூகியிக்கவும் கடாக்ஷிக்கும் திருக்கண்களினழகிருக்கிறபடியைக் காணுங்கோகாள்; பொன்னுலே செய்தவளையையுடைய நீங்கள் வந்து காணுங்கோகாள். ... ... *கசு.

அ. பதினேழாம்பாட்டு. திருக்கண்களினழகை யநுபவித்த வநந்தரம் திருப்புருவத்தினழகை யநுபவிக்கிறார்.

மூ.—பருவம் நிரம்பாமே பாரெல்லாமுய்ய
திருவின்வடிவோக்குந் தேவகிபெற்ற
உருவுகரிய வோளி மணிவண்ணன்
புருவமிருந்தவா காணீரே பூண்முலையீர் வந்து காணீரே. கள.

நிரம்பாமே— முதிராவதற்குமுன்னமே
பார் எல்லாம்— உலகமெல்லாம்
உய்ய— உஜ்ஜீவிக்கும்படியாக
திருவின் வடிவு ஒக்கும்— பெரியபிராட்டி
யோடொத்த ஸ்வபாவத்தையுடையளான
தேவகி— தேவகிப்பிராட்டி
பெற்ற— (நோற்றுப்) பெற்ற
உருவு கரிய— ரூபத்தால் கறுத்தாய்
மணி— மணிபோன்ற
வண்ணன்— வடிவையுடையவனுடைய
புருவம்— திருப்புருவங்கள்
இருந்த ஆ— இருந்தபடியை
காணீர்!— காணுங்கோள்! ;
பூண் முலையீர்!— ஆபரணம் பூண்ட முலையை
உடைய பெண்காள்!
வந்துகாணீர்!-; (ஏ-அசை.)

வ்யா. பருவமித்யாதி. சக்ரவர்த்திதிருமகனைப்போலே பருவம் நிரம்பினபின்பு விரோதிகளை நிரஸித்து லோகத்தை உஜ்ஜீவிப்பிக்கையன்றிக்கே, பருவம் நிரம்புவதுக்குமுன்னே *திண்மைகாள் அசுரரைத் தேடிவளருகைபோலே லோகமெல்லா முஜ்ஜீவிக்கும்படியாக, பூதநாசகடபமனார்ஜுநாதிகளைத் தொட்டில் பருவமே பிடித்துமேற நிரஸித்துச் சென்றது. திருவின்வடிவொக்கும் தேவகிபேற்ற. லக்ஷ்மீஸ்வபாவையான தேவகிப்பிராட்டி இப்படிக்கிடாக நோற்றுப் பெற்ற. திருவின்வடிவொக்கு மென்கையாலே- கீழ் "உள்ளமுதன்ன தேவகி" என்றது இங்கே ஸ்பஷ்டமாயிற்றாமேற.

உருவித்யாதி. ரூபத்தால் கரியதாய் உஜ்ஜ்வலமாயிருந்துள்ள மணிபோன்ற வடிவையுடையவனுடைய. புருவமித்யாதி. மதநன் கருப்புச்சிலைபோலே யிருக்கிற திருப்புருவங்களினழகைக் காணுங்கோள்; ஆபரணலங்கர்தமான முலையையுடைய நீங்கள் வந்து காணுங்கோள். ... ... *கள.

அ. பதினெட்டாம்பாட்டு. திருப்புருவத்தினழகை யநுபவித்த வநந்தரம், திருமகரக்குழையினழகை யநுபவிக்கிறார்.

மூ.—மண்ணு மலையுங் கடலு முலகேழும்
உண்ணுந்திறத்து மகிழ்ந்துண்ணும் பிள்ளைக்கு
வண்ணமெழில்கொண் மகரக்குழையிவை
திண்ணமிருந்தவா காணீரே சேயிழையீர் வந்து காணீரே. கஅ

மண்ணும்— பூமியையும்
மலையும்— பர்வதங்களையும்
கடலும்— ஸமுத்ரங்களையும்
உலகு ஏழும்— ஸப்தலோகங்களையும்
உண்ணும் திறத்து— திருவயிற்றில் வைக்கிற வளவில்
மகிழ்ந்து— உகந்து
உண்ணும்— திருவயிற்றிலே வைத்த
பிள்ளைக்கு— பாலனுக்கு
எழில் வண்ணம் கொள்— அழகிய திரு நிறங் கொண்ட
மகரக்குழை— திருமகரக்குழைகளான
இவை— இவற்றின்
திண்ணம்— திண்மை
இருந்த ஆ— இருந்தபடியை
காணீர்!— காணுங்கோள்! ;
சே இழையீர்! — அழகிய ஆபரணங்களையுடைய பெண்காள்!
வந்துகாணீர்!-; (ஏ-அசை.)

வ்யா. மண்ணுமித்யாதி. ஸ்வாதாரமான பூமியும், பூமிக்காதாரமான பர்வ தங்களும், பூமிக்கு ரக்ஷகமான ஸமுத்ரங்களும், மற்றுமுண்டான ஸகல லோகங்களும் ப்ரளயங்காலாதபடி திருவயிற்றிலே வைக்கிறவளில், 'இவற்றை ரக்ஷிக்கப்பிறந்தோமே!' என்னும் உகப்பாலே இதுவே தாரகமாகத் திருவயிற்றிலேவைத்த பாலனுக்கு. வண்ணமித்யாதி. திருமேனிக்கு பரபாகமான திருநிறத்தையும் ஸ்வஸம்ச்லேஷார்த்தமாக வைத்திரியால் வந்த அழகையுமுடைய திருமகாக்குழைகளான விவற்றினுடைய, கண்டவர்கள் கண்ணையும் நெஞ்சையும் கவரும்படியான திண்மையிருக்கிறபடியைக் காணுங்கோள்; முழுய ஆபரணங்களாலே அலங்கரிக்கைகளான நீங்கள் வந்து காணுங்கோள். ... ... கஅ

அ. பத்தொன்பதாம்பாட்டு. திருமகரக் குழையினழகை யநுபவித்த வந்தரம், திருநெற்றியினழகை யநுபவிக்கிறார்.

மூ.—முற்றிலுந் தூதையு முன்கைமேற் பூவையும்
சிற்றிலிழைத்துத் திரிதருவோர்களைப்
பற்றிப் பறித்துக் கொண்டோடும் பரமன்றன்
நெற்றியிருந்தவா காணீரே நேரிழையீர் வந்து காணீரே. ககூ

பதவுரை.

சிறு இல்— சிறிய வீடுகளை
இழைத்து— கட்டி
திரிதருவோர்களை— திரிகிறபெண்களுடைய
முற்றிலும்— (மணல்கொழிக்கிற) சிறு சுளகு களையும் [சிறு முறம்]
தூதையும்—(மணற்சோறுக்குகிற)சிறியபாளை களையும்
முன்கைமேல்—முன் கைமேல் நின்று விளையா டுகிற
பூவையும்— நாகணவாய்ப் புள்ளையும்
பற்றி— கையைப்பிடித்து
பறித்துக்கொண்டு — அபஹரித்துக்கொண்டு
ஓடும் — ஓடுகிற
பரமன்தன்— (தம்பிக்கு) தலைவனானவனுடைய
நெற்றி — திருநெற்றி
இருந்த ஆ— இருந்தபடியை
காணீர்! — காணுங்கோள்;
நேர் இழையீர்! — நேரிதான ஆபரணங்களை உடைய பெண்காள்!
வந்துகாணீர்!-; (ஈ - அனை.)

வ்யா. முற்றிலுமித்யாதி. கோட்டகமிட்டு விளையாடித்திரிகிற பெண்களை, மணல் கொழிக்கிற சிறு சுளகையும் மணற் சோறுக்குகிற சிறுபாளையையும், முன்கைமேல்வைத்துப் பேச்சுக்கொண்டு விளையாடும் பூவையையும். பூவை- நாகணவாய்ப்புள். பற்றிபிடித்யாதி. கையைப்பிடித்து, வன்மைபாலே பறித்துக்கொண்டு பிடிகொடாமல் ஓடும் தம்பிக்கு தலைவனானவனுடைய. நெற்றியிருந்தவாதி. அந்த ஆயாஸத்தாலே குறுவெயர்ப்பு அரும்பின திருநெற்றியினழகைக் காணுங்கோள்; நுண்ணியதான ஆபரணங்களையுடைய நீங்கள் வந்து காணுங்கோள். ஆபரணத்துக்கு நாட்டமாவது- தொழிலினுடைய ஸௌகர்யமாதல்; ஸௌகுமார்யமநுகூலமானவஸ்துவாதல்

அழகிய – அழகியதாய்
பை பொன்னின்– பசும்பொன்னால் செய்யப்பட்ட
கோல் – கோலை
அம் கை— அழகிய கையாலே
கொண்டு – பிடித்துக்கொண்டு
கழல்கள் – திருவடிகளில் சாத்தியிருக்கிற வீரக்கழல்களும்
சதங்கை – சதங்கைகளும்
கலந்து – சேர்ந்து
எங்கும் ஆர்ப்ப – எங்கும் ஒலிக்க
மழம் – இளமை பொருந்திய
வரப்பெறுமல், வெறும்புறத்திலே மேற்கொண்டு, "அந்த ஆர்த்திக்குகவலேவேறுண்டு" என்று கைகளைப்பற்ற அவனை ப்ரேரித்துவினாவை நடத்திக்கொண்டுசென்று, அந்தப் பொய்கையில் ஹம்ஸமிதுனங்களிலே யகப்பட்டு ஸ்ரீகஜேந்த்ரன்பட்ட அதிமாத்ர ஶ்ரமத்தைப்போக்கின. ஸ்ரீகஜேந்த்ரனுக்கு துக்கமானது (ச) "தாஹமங்கலைவோஹ்யாஹ்ய தீர்ணாயுஷமயா ஸமுத்ஸ்ருஜ்ய கலேவராணி நூனம் வைகுண்டமாஸ்தி நயே வாஹரியோரவிந்தஹஸ்தஸ்" என்கிறபடி யானைகளிற்சிலர், சென்விபதிபோல் திருவடிகளிற்சாத்தப் பெறுகிறிலோமென்றபடி. அதுகண்டு. பிரிக்கள். இடைபடு ஆர்ந்த ரகுநாயப்பண்ணினை சத்தினிசெஷத்தைச் சொல்லுகிறது. வர்த்திக்கிறுட்டு கின்றனன். ... ... கூ.

மூ.—வல்லாளிலங்கைமலங்கச் சரந்துரர்த்த
வில்லாளனை விட்டுசித்தன்விரித்த
சொல்லார்ந்தவப்பூச்சிப் பாடலிவைபத்தும்
வல்லார்கேடில்லைவதுந்த மன்னிய்ருப்பரே. ம.

பதவுரை.

வல்லாளி— வலிய ஆண்கையையுடைய
இலங்கை— லங்காபுரியானது
மலங்க— கலங்குமாறு
சரந்துரர்த்த— பாணத்தையே
வில்லாளனை— வீரனை
விட்டுசித்தன்— பெரியாழ்வார்
விரித்த— பரப்பி அருளிச்செய்த வைபவம்
சொல்லார்ந்த-சொற்களால்நிறைந்திருப்பதாய்
அப்பூச்சி— அற்புதமான விஷயமான
பாடல்— பாட்டுக்களாகிய
இவைபத்தும்— இப்பத்துமும்
வல்லார்— அதிகரிக்கவல்லவர்கள்
கேடில்— ப்ரதிபந்தியுண்டாவதற்கு முன்பே
வைகுந்தம்— ஸ்ரீவைகுண்டத்திலே
மன்னி இருப்பர்— பொருந்தி யிருப்பார்கள்.

வ்யா. பத்தாம்பாட்டு. வல்லாளிலங்கை. வலிய ஆள்களை யுடைத்தாகையாலே ஒருவரால் அடக்கவொண்ணாத பரிகரத்தோடுகூடின லங்கையானது. ராவணன் மதிக்கும் படியான ஆண்பிள்ளைகள் வர்த்திக்கிறவூரிறே. மலங்க. சரமும் தேரும் ஒக்கக்கட்டுப் போக்கிடங்தேடி மலங்குமாப்போலே. சரந்துரர்த்த வில்லாளனை. திருச்சங்கையே மேன்மேலும் நடத்தின வில்லையுடையவனை. இத்தால்-ஈச்வரத்வப்பிரகாரமான ஸர்வஜ்ஞத்வத்துக்கு சரமுகுணமாகநின்ற அப்பாலே அவ்வாயுதபரிக்ரஹமான ஆண்பிள்ளைத்தனத்தைச் சொல்லுகிறது. இத்திருமொழி க்ருஷ்ணாவதார விஷயமாயிருக்க, நிகமத்தில் இப்படியருளிச் செய்தது, அவ்வவதாரத்துக்கும் இவ்வவதாரத்துக்குமுண்டான ஐக்யத்தைப்பற்றவிறே. "வன்கானடையுங்கண்ணன்" என்று இந்த ஐக்யம் கீழும் சொல்லப்பட்டதிறே.

விட்டுசித்தன்விரித்த. பெரியாழ்வார் விஸ்தரிணவருளிச் செய்தவைபவமான. சொல்லார்ந்தவிதயாதி. சொல்நிரப்பத்தையுடைத்தாய் அப்பூச்சிவிஷயமான பாட்டுக்களாயிருக்கிற இப்பத்தையும் வல்லதொரு மொருபடிவல்லவர்கள். சொல்லார்ந்தவென்றது- அதிகரிப்பார்க்கு

வளாபதி தேறதலாக அர்ச்சிராதி மார்க்கத்தாலேபோய முர்ரிவைகுண்டத்திலே பிரணபதிப்பி
ச்சு மகனாசாஸனம் பண்ணிக்கொண்டு யாவத்காலமு மிருக்கப்பெறுவர். ... ம.

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

அடிவரவு.—மெச்சு மலி காயிருட்டுச் செப்புஞ்சுட செப்புத்
தத்துக் கொங்கை பதகம் வல்லா ளரவணை.

ஆக - திருமொழி. ம- க்கு, பாட்டு-களுக்கு.

அ. ஆழ்வார்களெல்லாரும் க்ருஷ்ணவதார ப்ரவணராயிருந்தார்களேயாகிலும், அவர்
களெல்லாரையும் போலன்றிக்கே, க்ருஷ்ணவதாரத்திலே அநுப்ரவணராய், அவ்வவதார ரஸா
நுபவத்துக்காக மேகாபஜந்மத்தை ஆஸ்தாநப்பண்ணி, "போகத்தில் வழுவாத புதுவை
யர்கோன்" என்கிறபடியே அவ்வவதார ரஸமுள்ளிதல்லாம் அநுபவிக்கிற வராகையாலே,
முதல் திருமொழியிலே - அவன் அவதரித்த ஸமயத்தில் அங்குள்ளார்செய்த உபலாளந
விசேஷங்களையும், அநந்தரம், யசோதைப்பிராட்டி. அவனுடைய பாதாதி கேசாந்தமான
அவயவங்களி லிண்டான வழகை ப்ரத்யேகம் ப்ரத்யேகமாகத் தானநுபவித்து, அநுபூஷ
க்களையும் தான் அழைத்துக்காட்டினபடியையும், அநந்தரம், அவள் அவனைத் தொட்டிலிலே
ற்றித் தாலாட்டினபடியையும், பிற்காலமாயிருக்க, தத்காலம்போலே பாவநாப்ரகர்ஷத்தாலே
யசோதாதிகளுடைய ப்ராப்திையயும் ஸ்ரீநந்தகோபரை முடையராய்க்கொண்டு தாமநுபவித்து
அநந்தரம், அவன் அம்புலியை யழைக்கை, செங்கீரையாடுகை, சப்பாணிகொட்டுகை, தவழ்
நடை நடக்கை, அச்சோவென்றும், புறம்புல்குவானென்றும், யசோதைப்பிராட்டி அபேக்ஷி
க்க முன்னும்பின்னும் வந்தணைக்கையாகிற பாலசேஷ்டிதங்களை, (க) தத்பாவபுத்தராய்க்
கொண்டு அடைமேல அநுபவித்துக்கொண்டிவந்து, பிழைத்திருமொழியிலே-அவன் திருவாய்ப்
பாடியிலுள்ளாரோடே அப்படிச்சிகாட்டி விளையாடின சேஷ்டிதங்களையும் தத்காலத்திலே அவள்
அநுபவித்துப் பேசிறற்போலே தாமும் அநுபவித்துப்பேசி ஹர்ஷடராஞர்; இனி, அவன்
லீலா வ்யாபாரச்சாந்தனுய் முலையுண்கையையும் மறந்து நெடும்போதாகக்கிடந்து உறங்குகை
யாலே "உண்ணப்பிள்ளையைத்தாயறியும்" என்கிறபடியே யசோதைப் பிராட்டி அத்தை
யறிந்து, "அம்ம முண்ணைத்துயிலெழாயே" என்று அவனை யெழுப்பி, நெடும்போதாக
முலையுண்ணுமே கிடந்தமையை அவனுக்கறிவித்து, நெறித்துப்பாய்கிற தன் முலைகளை
யுண்ணவேணுமென்று அபேக்ஷித்து, அவன் இருப்பத்திருந்தவளவிலும் விடாதே நிர்ப்பந்
தித்துமுலையூட்டின ப்ரகாரத்தை, தாமநுபவிக்க வாசைப்பட்டு, (க) தத்பாவயுக்தராய்க்கொண்டு
அவனை அம்ம முண்ண வெழுப்புகை முதலான ரஸத்தை யநுபவித்துப்பேசி ஹர்ஷட
ராகிறார் - இத்திருமொழியில். ... ... *

(க) தத்பாவயுக்தராய்.

வரவுங்காணேன் வயிறதைந்தாய் வனமுலைகள் சோர்ந்துபாயத்
திருவுடையவாய்மடித்துத் தினைத்துணைத்துப் பருகிடாயே. க.

பதவுரை.

அரவு— திரு அனந்தாழ்வானை
அன்னையாய்— பரிக்கைபாகவுடையவனுக்கு
ஆயர்— இடையர்களுக்கு
எழில்!— தலைவனாவனே!
அம்மம் உண்ண— முலைப்பால் உண்ண
துயில்— திருப்பள்ளியில் நின்றும்
எழாய்— எழுந்திருக்கவேணும்;
நீ— நீ
இரவும்— நேற்றுராத்திரியும்
உண்ணாது— முலையுண்ணாமல்
உறங்கி போய்—உறங்கிப்போனதுமன்றிக்கே
இன்றும்— இன்றைக்கும்
உச்சி கொண்டது— நடுப்பகலாயிற்று;
வரவும் காணேன்— (நீயாக எழுந்திருந்து
அம்மமுண்ண வேணுமென்று) வந்த
படியும் கண்டிலேன்,
வயிறு அணைத்தாய்— (அபேக்ஷாநியமமில்லை
யென்ன வொண்ணாதபடி) வயிறு
தளர்ந்திரா நின்றாய்,
வனம் முலைகள்— அழகியமுலைகள்
சோர்ந்து பாய— பால் சொரிந்து பாயும்
படியாக
திரு உடைய— அழகு பொருந்திய
வாய்— திருப்பவளத்தை
மடித்து— வைத்து
நினைத்து— கர்வித்து
உதைத்து — கால்களா லென்னுடம்பி
லுதைத்துக் கொண்டிருந்து
பருகிடாய்— பாகம் பண்ணவேணும்,
(ஆல், ஓ, ஏ, - இவை அசைச்சொற்கள்.)

வ்யா. முதற்பாட்டில். அரவணையித்யாதி. மென்மை, குளிர்த்தி, நாற்றம் தொடக்கமானவற்றை ப்ரக்ருதியாகவுடைய திருவனந்தாழ்வானைப்படுக்கையாகவுடையனாயிருந்துவைத்து (க) "நாமவாஜ்ஜீவகாஜ்ஞாமதம்" என்கிறபடியே அப்படுக்கையை விட்டுப் போந்து அவதீர்ணனாய் ஆயர்க்கு ப்ரகாசனானவனே. அப்படுக்கைவாய்ப்பாலே பள்ளிகொண்டு போந்தவாஸனையோ ஆயரோடானவிடத்திலும் படுக்கைவிட்டெழுந்திராதே பள்ளிகொள்ளுகிறது? அவன்தான் இதர ஸஜாதீயனாய் அவதரித்தால் "சென்றால் குடையாம்" என்கிறபடியே (உ) சந்தானுவர்த்தியாய் அடிமைசெய்யக்கடவ திருவனந்தாழ்வானும் அவனுடைய அவஸ்தானுகுணமாகப் பள்ளிகொள்வதாரு திருப்படுக்கையான வடிவைக் கொள்ளக்கூடுமிறே. ஆகையால் அங்குண்டானஸுகமெல்லாம் இங்குண்டாயிருக்குமிறே கண்வளர்ந்தருளுகிறவனுக்கு. அம்மமுண்ணத்துயிலெழாயே. "முலையுண்ண" என்னுதே, அம்மமுண்ண வென்றது - சைசவானுகுணமாக அவள்சொல்லும் பாசுர மதுவாகையாலே. துயில்-நித்ரை. எழுகையாவது - அது குலைந்தெழுந்திருக்கை. எழா யென்கிறது - எழுந்திருக்க வேணுமென்கிற ப்ரார்த்தனை. இரவுமித்யாதி. நீ ராத்ரியுண்ணுதே புறங்கி, அவ்வளவுமன்றிக்கே இன்றும் போது உச்சிப்பட்டது. ராத்ரி அலைத்தலாலே கிடந்துறங்கினால் விடிந்தாற்றுணுகிலுமுண்ணவேண்டாவோ; விடிந்தவள்வேயோ, போது உச்சிப் பட்டதுகாண். ஆனும் ஓவு

(க) "நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ." (உ) உபநாநுவர்த்தி.

அம்மைமுன்னை மேலுறு பெண்டிர வரவுப் கண்டு நிலன்; அதேபோலகூடி யில்லையென்ன வொண்ணுத பரு வயி றுதுயர்ந்தினாகின்றுப். வண்முலைகள்சோர்ந்துடாய. வனப்பு- அழகும், பெருமை யும். முலைகளானைவ யுன்பக்கல் ஸ்பரஹத்தாலே நெறித்து, பால் உள்ளடங்காமல் வழிந்து பரக்க. உனக்குப் பசியுண்டாயிருக்க, இப்போல் இப்படி. வடிந்துபோக உன்னைதாழிவதே! என்று கருத்து. திருவுடையவாய்மதேந்து. அழகிய திருப்பவளத்தைதமித்து. திரு- அழகு. இல்வளாழலையிலே உன்னுடைய திருவுடை பவளை அபிநிவேசம் தோற்ற மதித்து. தினைத் திப்பாதி. முலையுண்கிற குழந்தைக்கு தோற்ற கர்வித்துக் கல்களாலே யென்னுடம்பிலே யுதைத்துக் கொண்டிருந்து உண்பிடாப். பருகுதல்- பாலப்பவம்னுதல். ... ... க.

மு.—வைத்தநெய்யுங்காய்ந்தபாலும் வடிதயிரு நறுவெண்ணெயும்
இத்தினையும் பெற்றறியே னெம்பிரான்! நீபிறந்தபின்னை
எத்தினையுஞ் செய்யப்பெற்று யேதுஞ்செய்யேன் கதம்படாதே
முத்தினைய முறுவல்செய்து முக்குறிஞ்சி முலையுணையே. 2..

பதவுரை.

செய்ய பெற்றாய்— செய்யக்கடனல்,
வதும் செய்தியேன்— நானுன்னைப் பிடித்து
லடித்தல் முதலியனவையொன்றும் செய்
யக் கடமேனல்லேன்;
கதம் படாதே— நீ கோபியாதேகொள்;
முத்து அனைய— முத்துப்போன்ற
முறுவல் செய்து — ஸ்மிதம் பண்ணிக்
கொண்டு
முக்கு உறிஞ்சி— முக்காலே உறிஞ்சிக்
கொண்டு

எம் பிரான்!— எனக்கு ஸ்வாமியானவனே!
நீ பிறந்தபின்னை — நீ எனக்குப் பின்னை
யாக வந்து பிறந்ததற்குப்பின்பு
வைத்த நெய்யும்— உருக்கிவைத்த நெய்யும்
காய்ந்த பாலும்— காய்ச்சின பாலும்
வடி தயிருந்— கட்டியாகத் தோய்த்ததயிரும்
நறு வெண்ணெயும்— மநோஹரமான வெண்
ணெயும்
இத்தினையும்— (ஆகிய) இவற்றிலொன்றும்
பெற்று அறிதியேன்— பெற்றறியாவில்லை
எத்தினையும்— உனக்குத் தோன்றின படி
யெல்லாம் முலை உணாய்— முலைப்பாலுண்ணவேணும்

வ்யா. இரண்டாம்பாட்டு. வைத்தவிதியாதி. பழுதற வுருக்கிவைத்த நெய்யும், செறிவுறக்காய்ந்த பாலும், நிருள்ளது வடித்துக் கட்டியாயிருக்கிற தயிரும், செவ்வையிலே கடைந்தெடுத்த நறுவிய வெண்ணெயும். எம்பிரான் நீபிறந்தபின்னை - இத்தினையும் பெற்றறி யேன். என்னுடைய நாயனே! நீ பிறந்தபின்பு இவையொன்றும் பெற்றறியேன். அன் றிக்கே, இத்தினையுமென்றது- எதோதசமு மென்றபடியாய், இவற்றில் அல்பமும் பெற்றறியே னென்னுதல். இப்படி பென்னைக் களவேவற்றுவதே! என்னைப் பிடித்தல் அடித்தல் செய்ய வன்றோ நீ இவ்வார்த்தை சொல்லிற்றென்று குபிதனாய், எத்தினையும் செய்யப்பெற்றாய். உன க்கு வேண்டினதெல்லாம் செய்யக்கடவை. ஏதும்செய்யேன் கதம்படாதே. நான் உன்னைப் பிடித்தல் அடித்தல் ஒன்றும் செய்யக்கடவேனல்லேன், நீ கோபிக்க வேண்டா. கதம்-

மு.—தந்தட்மக்க ளழுதுசென்றுற் றுய்மாராவார் தரிக்ககில்லார்
வந்துநின்மேற் பூசல்செய்ய வாழவல்ல வாசுதேவா!
உந்தையாருன் றிறத்தரல்ல ருன்னேநாளெனென் றுரப்பமாட்டேன்
நந்தகோப னணிசிறுவா! நான்சுரந்த முலையுணையே. கூ.

பதவுரை.

தம் தம்— தங்கள் தங்களுடைய
மக்கள்— பிள்ளைகள்
அழுது சென்றுல்— அழுது கொண்டு போனால்
தாய்மார் ஆவார்— அவர்களுடைய தாயா ரானவர்கள்
தரிக்க கில்லார்— பொறுத்திருக்க மாட் டார்கள் [கில்லார்- ஸடர்த்தைகளாக மாட்டார்கள்.]
வந்து— ஊரார் தங்கள் பிள்ளைகளைப்பிடித் துக் கொண்டு வந்து
நின்மேல்— உன்மேல்
பூசல் செய்ப— சண்டையிட
வாழவல்ல—இதுவே வாழ்ச்சியாயிருக்கவல்ல
வாசுதேவா! — பூரீ வஸுதேவர் திருமக னென கண்ணனே!
உந்தையார்— உன் தமப்பனர்
உன் திறத்தர் அல்லர்— உன் சேஷ்டைகளை நோக்குந் தன்மையை யுடையரல்லர்,
நான்— நானே
உன்னை— பெருந்தீம்பனை உன்னை
ஒன்று— ஒருபடியாகவும்
உரப்ப மாட்டேன்— நியமிக்க வல்லனல்லேன்
(அவையெல்லாம் கிடக்க;)
நந்த கோபன்— நந்த கோபருடைய
அணி சிறுவா!— அழகிய பிள்ளாய்!
நான் சுரந்த—: (இப்போது) நான் சுரந்த
முலை உணாய்-முலைப்பாலை உண்ணவேணும்.

வ்யா. மூன்றும்பாட்டு. தந்தமித்யாதி. ஊரில் பிள்ளைகளோடே விளையாடப் புக் கால் எல்லாரையும் போலன்றிக்கே, நீ அவர்களை அடித்துக் குத்தி விளையாடா நின்றாய்; இப் படி செய்யலாமோ, நந்தம் பிள்ளைகள் அழுது சென்றால் அவர்கள் தாய்மாரானவர்கள் பொ றுக்கமாட்டார்கள். வந்துநின்மேல் பூசல் செய்ய. அவர்கள் தாங்கள், தங்கள் பிள்ளைகளையும் பிடித்துக்கொடுவந்து உன்மேலே $ சிலுகிட்டுப் பிணங்க. வாழவல்ல. அதில் ஒரு சற்று மிளப்பின்றிக்கே ப்ரியப்பட்டு இதுவே போகமாக இருக்கவல்ல. வாசுதேவா. வஸு தேவ புத்ரனானவனே. பசுவின் வயிற்றிலே புலியாயிருந்தாயே!. உந்தையாரித்யாதி. உன் னுடைய தமப்பனாரானவர் உன்னிடையாட்ட மிட்டெண்ணார். உன்னை சிக்ஷித்து வளர்க்கா சென்றபடி. உன்னையித்யாதி. தீம்பனை யுன்னை அபலையான நான் ஒருவழியாலும் தீர நியமிக்கமாட்டேன். நந்தகோபனணிசிறுவா. பூரீநந்தகோபர்க்கு வாய்த்த பிள்ளாய்!. அணி-அழகு. இவன் தீம்பிலே உளைந்து சொல்லுகிறவார்த்தை. நான்சுரந்தமுலையுணையே. அவை யெல்லாம் கிடக்க; இப்போது நான் சுரந்தமுலையை அமுது செய்பாய். ... ... கூ.

மு.—கஞ்சன்றன்னுற் புணர்க்கப்பட்ட கள்ளச்சகடு கலக்கழியப்
பஞ்சியன்ன மெல்லடியாற் பாய்ந்தபோது நொந்திடுமென்று

---

‡ முழுசி- முட்டி.. $ சிலுகு- சண்டை.

அஞ்சினேன்கா ணமரர்கோவே! யாயர்கூட்டத் தளவன்றுலோ
கஞ்சனையுன் வஞ்சனையால் வலிப்படுத்தாய்! முகிலுயுணையே. சு.

பதவுரை.

அமரர் கோவே!— தேவாதிராஜனே!
கஞ்சன் தன்னால்— (உன்மேடல் கறுவா
நின்று) கம்ஸனுமேல்
புனைந்தப்பட்ட— (உன்னாலிவதற்காக)
கற்பிக்கப்பட்ட
கள்ளம்— க்ருத்ரிமமான
சகடு— சகடமான து
கலக்கு அழிய— லந்திபத்தங்கள் குலைந்து
உருமாய்ந்து போம்படி
நீபஞ்சி அன்ன — பஞ்சுபோலே
மெல்— ம்ருதுவான
அடியால்— திருவடிகளாலே
பாய்ந்தபோது— உதைத்தகாலத்திலே
நொந்திடும் என்று— நோவுண்டாகுமென்று

அஞ்சினேன் கான்— பயப்பட்டேன் காண்;
ஆயர் கூட்டத்து அளவு அன்று— நான்
பயப்பட்டது இடையருடைய திரள்
பயப்பட்ட வளவல்ல;
ஆல் ஓ!— ஐயோ!
கஞ்சனை— உன் விஷயத்தில் வஞ்சனைசெய்த
உன் வஞ்சனையால்— நீ அவன் விஷயத்தில்
செய்த வஞ்சனையிறேலே
வலிப்படுத்தாய்!— தப்பாதபடி அநுப்பபடுத்தி
முடித்தவனே!
முகில் உணைய்.

---

† "பஞ்சி" என்கிறவிது "பஞ்ச" என்பதற்குப் போலி.

வ்யா. நாலாம்பாட்டு. கஞ்சனித்யாதி. உன்மேலே தமையனான கம்ஸனுமேலே உன்னை கொலைக்காகக் கற்பிக்கப்பட்ட க்ருத்ரிமமான சகடமானது. அனாயாஸமாய் வருகையாலே- கள்ளச்சகடமென்கிறது. கலக்கழிய. "தலைந்தும் முறிந்தும் உடல் வேறுகப் பிளந்தவிய" என்கிறபடியே கட்டுக்குலைந்து உருமாய்ந்து போம்படியாக. பஞ்சியித்யாதி. பஞ்சுபோலே ம்ருதுவான திருவடிகளாலே உதைத்தபோது 'திருவடிகள் நோம்' என்று பயப்பட்டேன் காண். அமரர்கோவே. தேவர்களுக்கு நிர்வாஹகனானவனே. உன் நினைவொன்றே தங்கள் விரோதியைப் போக்கி வாழுமிருக்கிற வவர்கள் பாக்யத்தாலேயிறே உனக்கொரு நோவு வாராமலிருக்குமிருப்பு. ஆயர்கூட்டத்தளவன்றுலோ. ஆயருடைய திரள் அஞ்சினவளவல்லகாண் நானஞ்சினபடி. ஆல், ஓ என்றுனை விஷாதஸூசகமான அவ்யயங்கள். கஞ்சனைவஞ்சித்யாதி. உன்நிறுத்தினால் வஞ்சனைகளைச்செய்த கட்டளை நீ அவன் திறத்திற் செய்த வஞ்சனையாலே தப்பாதபடி யநுப்பபடுத்தி முடித்தவனே. முகிலுயுணையே. இப்போது முகிலை யழுதுசெய்யவேணும். ... ... சு.

மு.—தீயடுத்திக் கஞ்சனுன்மேற் சினமுடையன் சோர்வுபார்த்து
மாயந்தன்னால் வலிப்படுக்கில் வாழகில்லேன் வாசுதேவா!
தாயர்வாய்ச்சொற் கருமங்கண்டாய் சாற்றிச்சொன்னேன் போகவேண்டா
ஆயர்பாடிக் கணிவிளக்கே யமர்ந்துவர்தென் முகிலுயுணையே. ரு.

பதவுரை.

மாயம் தன்னால்— கபடத்தாலே
வலை படுக்கில்— (நழுவாதபடி) பிடித்துக் கொண்டால்
வாழ கில்லேனென்— (நான் பின்பு) ஜீவித்திருக்கமாட்டேன்
தாயர்— தாய்மாருடைய
வாய் சொல்— வாயால் சொல்லப்படுமது

சாற்றி சொன்னேன்— எல்லாருமறியும்படி-
வெளிப்படையாகச் சொன்னேன்;
போகவேண்டா— நீ விளையாடுவதற்கும்
தனியனாய் எங்குமேபோகவேண்டா;
ஆயர் பாடிக்கு— திரு ஆய்ப்பாடிக்கு
அணி விளக்கே!— எங்கள தீபமானவனே!
அமர்ந்துவந்து— பொருந்திவந்து
என் முலை உணாய்.

வ்யா. ஐந்தாம்பாட்டி. தீய புந்திக் கஞ்சன். துர்புத்தியான கம்ஸன். பிள்ளைக் கொல்லியிறே. *மக்களுவனைக்கல்லிடமோதின பாபிஷ்டனிறே. உன்மேல்சினமுடையன். "தேவகியுடைய அஷ்டமகர்ப்பம் உனக்கு சத்ரு" என்று அசரீரிவாக்யத்தாலே கேட்டிருக்கையாலும், பின்பு தூய்கை சொல்லிப்போன வார்த்தையாலும் "நமக்கு சத்ரு வானவன் கைதப்பிப்போய் நம்மால் கிட்டவொண்ணாதபடி மலைத்தலத்திலே புகுந்தான், இவனை யொருவழியாலே நிரஸித்தாய்விடுப்படியென்" என்றிருக்கையாலும், உன்னுடையமேன்மேலே மிகவும் க்ரோதமுடையவன். சோர்வுபார்த்து. அவிழ்ச்சிபார்த்து. அதாவது - நீ அஸஹாயனாய்த்தரியும் அளவைபார்த்திருக்கை. மாயந்தன்னால் வலைப்படுக்கில். உன்னை நலிகைக்காக மாயாநூபிகளான ஆஸுரப்ரக்ருதிகளை நிர்மிக்காயும் ஸ்தாவரமாயு முள்ள வடிவுகளைக் கொண்டு நீ வ்யாபரிக்கும் ஸ்தலங்களிலே நிற்கும்படிபண்ணி, நீ அறியாமல் வஞ்சநத்தாலே நழுவாதபடி பிடித்துக்கொள்ளில். வாழகில்லேன். நான்பின்னை ஜீவித்திருக்க கூடாமையாலே னென்; முடிந்தேனென்கிறான். வாசுதேவா. உன்னுடலிலேபிறந்த ஸாதுவான வவரும் சிறைப்பட வேண்டிற்று. தாயரித்யாதி. தாய்மார்சொல்லு காரியங்காண். அதாவது - உத்தேசியத்தை யாரும் பரிவாலும் தாய்மார் வாக்கால் சொல்லுவது பிள்ளைகளுக்கு அவச்யகரணீயங்காணென்கை. சாற்றிச்சொன்னேன் போகவேண்டா. இதுதன்னைத் †குன்றுங்குருச்சியாக வன்றிக்கே எல்லாருமறியும்படி ப்ரஸித்தமாகச்சொன்னேன்; லீலார்த்தமாகவும் நீ தனித்து ஓரிடத்தில் போகவேண்டா. ஆயர்பாடிக்கணிவிளக்கே. திருவாய்ப்பாடிக்கு ஒருமங்கள தீபமானவனே. அணி - அழகு. இத்தால் எனக்கேகபன்று, உனக்கொரு தீங்கு வரில் இவ்வூராக இருள்மூடி விடுங்கிடாயென்கை. அமர்ந்திருத்தி. ஆனபின்பு, பரபரப்பைவிட்டு ப்ரதிஷ்டிதனுப்வந்து உனக்கென்று சரத்திருக்கிற முலையை யமுதுசெய்யவேணும். ... ... நி.

மூ.—மின்னனைய நுண்ணிடையார் விரிகுழன்மே னுழைந்தவண்டு
இன்னிசைக்கும் வில்லிபுத்தூ ரினிதமர்ந்தா யுன்னைக்கண்டார்
என்னநோன்பு நோற்றுள்கொலோ விவனைப்பெற்ற வயிறுடையாள்
என்னும்வார்த்தை யெய்துவித்த விருடீகேசா முலையுணையே. சு.

பதவுரை.

மின் அனைய— மின்னலையொத்ததாய்
நுண்— ஸூக்ஷ்மமாயிராநின்ற

இடையார்— இடுப்பையுடைய ஸ்த்ரீகளுடைய

விரி— பரம்பின
குழல் மேல்— கேசபாசத்தின் மேலே
நுழைந்த— மதுபாநார்த்தமாகப் படிந்த
வண்டு— வண்டுகளானவை
இன் இசைக்கும்— இனிதாக இசைகளைப் பாடா நிற்கிற
வில்லிபுத்தூர்— ஸ்ரீ வில்லிபுத்தூரிலே
இனிது— திருவுள்ளம் பொருந்தி
அமர்ந்தாய்!— வர்த்திக்கிறவனே!
உன்னை கண்டார்— உன்னைப் பார்த்தவர்கள்
இவனை— "லோகவிலக்ஷணனான இவனை
பெற்ற வயிறு உடையாள்— பெற்றவயிற்றை உடையவள்
என்னபுண்ணியம் நோற்றாள் கொல்லோ— (இதுக் குடலாக) என்னதபஸ்ஸை பண்ணினாளோ"
என்னும் வார்த்தை— என்று புகழ்ந்துசொல்லும் சொல்லை
எய்துவித்த— எனக்கு உண்டாக்கித்தந்த
இருடீகேசா!— ஹ்ருஷீகேசனே!
முதலை உணாய்.

வ்யா. அரும்பாட்டி. மின்னித்யாதி. மின்னைடொத்த நுண்ணிய இடையையுடையவர்களென்றுதல்; மின்னை ஒருவகைக்கு ஒப்பாகவுடைத்தாய், அவ்வளவன்றிக்கே, ஸூக்ஷ்மமான இடையையுடையவர்களென்றுதல். விரிகுழல்மேல் நுழைந்தவண்டு. விஸ்தர்தமான குழல் மேலே மதுபானார்த்தமாக அவகாஹித்த வண்டுகளானவை. இன்னிசைக்குமித்யாதி. மதுபானத்தாலே செருக்கியினியவிசைகளைப் பாடாநிற்கும் ஸ்ரீவில்லிபுத்தூரிலே, பரமபதத்திலுங் காட்டில் இனிதாகப்பொருந்தி வர்த்திக்கிறவனே. தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கலான தேசமாகையாலே திருவுள்ளம்பொருந்தி வர்த்திப்பது இங்கேயிறே. பரமபோக்யபாவர்க்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கு மித்தனையிறே பரமபதத்தில். இங்கு இரண்டும் விசேஷிக்குமிறே. உன்னைக்கண்டாரித்யாதி. நாட்டிற் பிள்ளைகளைப்போலன்றிக்கே, ரூபகுணசேஷ்டிதங்களால் வ்யாவர்த்தனாயிருக்கிற உன்னைக்கண்டவர்கள், நாட்டிலே பாக்யாநுகூலமான பிள்ளைகளைப் பெறுவாருமுண்டிறே. அவ்வளவன்றிக்கே, லோகத்தில் கண்டறியாத வைலக்ஷண்யத்தையுடைய விவனைப்பெற்ற வயிறுடையவள் இதுக்குடலாக என்ன தபஸ்ஸைப் பண்ணினாளோவென்று ச்லாகித்துச்சொல்லும் வார்த்தையை யெனக்குண்டாக்கித்தந்த. இருடீகேசா. கண்டவர்களுடைய ஸ்ரீவந்த்ரியங்களையும் வ்யக்த்யந்தரத்தில் போகாதபடி உன் வசமாக்கிக்கொள்ளும் வைலக்ஷண்யத்தை யுடையவனே, முதலையுணாயே. கூ.

மூ.—பெண்டிர்வாழ்வார் நின்னெப்பாரைப் பெறுதுமென்னு மாசையாலே
கண்டவர்கள் போக்கொழிந்தார் கண்ணிணையாற் கலக்கநோக்கி
வண்டலம்பூங் குழலினருன் வாயமுத முண்ணைவெண்டிக்
கொண்டுபோவான் வந்துநின்றார் கோவிந்தா! கீழுலகுண்டாயே. எ.

பதவுரை.

பெண்டிர்— தந்தாமுடைய பர்த்தாக்களுக்கு பார்யைகளாய்
வாழ்வார்— வாழாநின்றவர்களாய்
கண்டவர்கள்— உன்னைக் காணநின்றவர்கள்
போக்கு ஒழிந்தார்— கால் வாங்கிப் போகமாட்டாதே நின்றுவிட்டார்கள்;
வண்டு உலாம்— வண்டுகள்படிந்து உலாவா நின்ற
பூ— புஷ்பங்களினாலலங்கரிக்கப்பட்ட

தாய தீசாளையைப் பார்த்து
உன் வாய் அழுதப்— உனது வாகபர்த்தத்தை
உன்ன வேண்டி— உன்ன விருப்பி
கொண்டி போவான்— உன்னைக் கொண்டு
போவதாக

வ்யா. எழாம்பாட்டு. பெண்டிரின்யாதி. ஸ்வபர்த்தாக்களுக்கு பார்யைகளாய் வர்த்திப்பாராய் உன்னைக் கண்டவர்கள், உன்னைப்போலேயிருக்கும் பிள்ளைகளோப் பெறவேணுமென்று மாளைபாலே கால்வாங்கிப் போகமாட்டாதபடியாய் விட்டார்கள். வண்டுலோம் பூங்குழலினர்- கண்ணிணையால் கலக்க நோக்கி. பெருக்காற்றிலே இழியமாட்டாமல் கரையிலே நின்று ஸஞ்சரிப்பாரைப் போலே, மதுவின் ஸம்பந்தியாலே உன்னை அவகாஹிக்கமாட்டா வண்டுகளானனை மேலே நின்று ஸஞ்சரிக்குப்படி பூவாலே அலங்கரிதமான குழலையுடையவர்கள் தங்களுடைய கண்களாலே உன்னுடைய வழுதாய தீசமாதர்சனத்தை மசப்து. கலக்கமோக்குகையாவது- தாவயவத்திலே உற்று நிற்கையன்றிக்கே, திருமேனியை பெங்குமாகப் பார்க்கை. கிழ்- "பெண்டிர் வாழ்வார்" என்று - பக்கலைகளாய்ப் பர்த்பாதந்தரைகளாய் புத்ரஸாமபனைஷிகளானவர்களைச் சொல்லிற்று; இந்த, வண்டுலாம் பூங்குழலினென்று- பாரம்ய பெளவனைகளாய் போகஸாமபனைஷிகளானவர்களைச் சொல்லுகிறது. உன்னித்யாதி. உன்வாகம்தம் புஜிக்கவேண்டி புன்னை யடித்துக்கொண்டி போவதாக வந்து நின்றார்கள். கோவிந்தா. ஸர்வஸுலபனனவனே, உன் ஸௌலப்யத்துக்கு இது சோதது. நீ முலையுணையே. அது வேண்டினபடியாகிறது, நீ இப்போது முலை யுன்னவேணும். ... ... எ.

மூ.—இருமலேபோ லெதிர்ந்தமல்ல ரிருவரங்க மோரிசெய்தாயுன்
திருமலிந்து திகழ்மார்வு தேக்கவந்தென் னல்தலேறி
ஒருமுலையை வாய்மடித் தொருமுலையை நெருடிக்கொண்டு
இருமுலையு முறைமுறையா வெங்கியேங்கி யிருந்துணையே. ஆ.

பதவுரை.

‡இரண்டிடலேபோல்-இரண்டிமலைகள் போலே | வாய் மடித்து— திருப்பவளத்திலே வைத்து
எதிர்ந்த— மல் போருவதாக எதிர்த்துவந்த
மல்லர் இருவர்— சாணூர முஷ்டிகராகிற
இரண்டு மல்லர்களுடைய
அங்கம்— சரீரத்தை
எரி செய்தாய்!— பயாக்நியாலே கொளுத்தி
விழும்படி பண்ணினவனே!
உன்— உன்னுடைய
திரு மலிந்து— அழகு மிகுந்து
திகழ்— விளங்காநின்ற
மார்வு— மார்பானது
தேக்க— முலைப்பாலாலே நிறையும்படி
வந்து என் அல்குல் ஏறி— என்மடியிலே
ஒரு முலையை— மற்றொருமுலையை
நெருடிக்கொண்டு— திருக்கையாலே பற்றி
நெருடிக்கொண்டு
‡ இரண்டி முலையும்— இரண்டு முலைகளையும்
முறை முறையா— மாறி மாறி
எங்கி எங்கி இருந்து—நின்றே நின்றே இனிதாக்
இனிதாக்திருந்து
உறைய்— உன்னைவேணும்.

---

‡ "இரண்டிறைற்றுயிரோக வுவ்வருமே" என்னும் நன்னூற் சூத்திரங்கொண்டு "இரு முலையும்" என்னும் பதத்தை "இரண்டு முலையும்" என்று பிரித்துரைத்தது. இவ்

வம்மே மல்லருடையவுட் சார்மானது(க)பயாகநிபாலே(உ)தகுகடோயவ்முமேபடி. பிணைணைவிலை. உன்னித்யாதி. உன்னுடைய அழகுமிக்கு விளங்காகின்றுள்ள மார்வானது. மலிதல்-மிருதி. திருச்சி- விளக்கம். அன்றிக்கே, திருவென்று- பிராட்டியைச் சொல்லுகிறதாய், அவளை பூர்த்தாளி பிரிக்கைகாபாலே மிகவும் விளங்காகின்றுள்ள வன்னுடைய மார்விலண்ணவுமைம். தேக்க. தேங்க. முக்கப்படாலாலே நிறையப்படாமாக. வர்தென்னல்குலேறி. என்மடியிலே வர்தேறி. ஒருமுலையிற்யாதி. ஒருமுலைக்கையைத் திருப்பவளத்திலே வைத்து ஒருமுலையைத் திருக்கையாலே பற்றி மெருடிக்கொண்டு இரண்டு முலைகையும் மாறி மாறி, பால் பரவினை மிகுதி திருப்பவளத்தில் அடங்காமையாலே நடநடிலே இரண்டுதிவளத்து அடமவிருந்து அழுது செய்யவேணும். ... ... அ.

மூ.—அங்கமலப் போதகத்தி லணிகொண்முத்தஞ் சிந்திறற்போல்
செங்கமல முகம்வெயர்ப்பத் தீமைசெய்தீம் முற்றத்தூடே
அங்கமெல்லாம் புழுதியாக வவ்வேவண்டா வம்மவிம்ம
அங்கமரர்க் கமுதளித்த வமரர்கோவே முலையுணாயே. கூ.

பதவுரை.

அம்ப!— ஸ்வாமி!
அம்— அழகிய
கமலப்போது அகத்தில்—தாமரைப் பூவினிடத்தில்
அணி கொள்— அழகு கொண்ட[அழகிய]
முத்தம்— முத்துக்கள்
சிந்திறல்போல்— சிதறினாற்போலே
செம் கமலம்— செந்தாமரை மலர்போன்ற
முகம்— முகமானது
வெயர்ப்ப— குறுவெயர்ப்பு அரும்பும்படி
இம்முற்றத்தூடே—இந்த முற்றத்துள்நின்று
தீமை செய்து—தீம்புகளைச் செய்து
அங்கம் எல்லாம்— உடம்பு முழுதும்
புழுதி ஆக— புழுதியாகும்படி
விம்ம— நிரந்தரமாக
அவ்வே வண்டா— புழுதியேளாமே தருகாள்;
அங்கு— தூர்வாஸச் சாபத்தால் வருந்தின
அக்காலத்திலே
அமரர்க்கு— தேவர்களுக்கு
அமுது அளித்த— அம்ருதத்தை உண்டாக்
கொடுத்தருளின
அமரர் கோவே!— தேவராஜனே!
முலை உணாய்.

வ்யா. ஒன்பதாம்பாட்டு. அங்கமலமித்யாதி. நிறத்தாலும் மணத்தாலும் செல்வியாலும் விகாஸத்தாலும் அழகியதாயிருக்கும் தாமரைப்பூவினிடத்தில். போது - புஷ்பம். அகம்- இடம். அணியித்யாதி. நீர்மையாலும் ஒளியாலும் அழகை யுடைத்தான முத்துக்களானவை சிதறினாற்போலே. செங்கமலமித்யாதி. சிவந்து மலர்ந்த தாமரைப்பூப்போலேயிருக்கிற திருமுகமானது குறுவெயர்ப் பரும்பும்படியாக. தீமையித்யாதி. இம்முற்றத்துள்ளே நின்று தீம்புகளைச் செய்து உடம்பெல்லாம் புழுதியாகவிருந்து புழுதியளையவேண்டா. அம்ம. ஸ்வாமீ! யென்னுதல்; இவன் சேஷ்டித தர்சநத்தால் வந்த ஆச்சர்யோக்தியாதல். விம்மவித்யாதி. தூர்வாஸச் சாபோபஹதராய் அஸுரர்கள் கையிலே யீடுபட்டுச் சாவாமைக்கு

(க) ஹயாதி. (உ) உம.

அவர்களுடைய பிரிவுக்காக அழுது கொண்டிருப்பதல்ல, இடைப்பிறந்து என்னுடைய விரோதிக்காக நான் முல்லையுன்னை வேண்டுகின்றேன். ... ... கூ.

மூ.—ஓடவோடக் கிண்கிணிக ளொலிக்குமோசைப் பாணியாலே
பாடிப்பாடி வருகின்றவையைப் பற்பாக ளென்றிருந்தேன்
ஆடியாடி யசைந்தசைந்திட் டதனுக்கேற்ற கூத்தையாடி
ஓடியோடிப் போய்விடாதே யுத்தமா! நீ முல்லையுனையே. ய.

பதவுரை.

உத்தமா!— புருஷோத்தமனைவனே!
ஓட ஓட— மிகவும் பதறி ஓட
கிண்கிணிகள்— திருவடிச்சதங்கைகள்
ஒலிக்கும்— த்வனிக்கிற
ஓசை— த்வனியாகிற
பாணியாலே— சப்தத்தாலே
பாடிப்பாடி— நிரந்தரமாகப் பாடிக்கொண்டு
அதனுக்கு ஏற்ற— அந்தப்பாட்டிக்குத் தகு
தியான
கூத்தை— நர்த்தநத்தை

அசைந்தசைந்திட்டு ஆடி ஆடி ஆடி— அதி
கம்பீரமாய் அசைந்தசைந்தாடிக்கொண்டும்
வருகின்றவையை— என்னை நோக்கி வருகிற
வண்ணம்
பற்பநாபன் கண்ணா— "இவன் பத்மநாபன்
அன்றே" என்று
இருந்தேன்— ஆச்சர்யப்பட்டுக்கொண்டிரு
ந்தேன்,
(ஆனபின்பு,)
ஓடி ஓடி போய்விடாதே— ஓடியோடிப்போ
காமல்
நீ முல்லை யுனைப்.

வ்யா. பத்தாம்பாட்டில். ஓடவோடவித்யாதி. நடக்கும்போது மெத்தென நடக்கையன்றிக்கே, பால்யத்துக்கீடான செருக்காலே பதறி ஓடவோட, பாதச்சதங்கைகளான கிண்கிணிகள் த்வனிக்கும் த்வனியாகிற சப்தத்தாலே. பாடிப்பாடி- அதனுக்கேற்ற கூத்தை- அசைந்தசைந்திட்டு-ஆடியாடி. அந்த பாட்டிக்குத் தகுதியான நர்த்தநத்தை, திருமேனி யிடம் வலங்கொண்டு அசைந்தசைந்திட்டு நடக்கிற நடையாலே ஆடியாடி. *கூத்தன் சோவலனிறே. நடக்கிற நடையெல்லாம் வல்லராடி-ஞற்போலேயிறே யிருப்பது. ஆகையால் விரைந்து நடந்துவரும்போது திருவடிகளிற் சதங்கைகளிலுண்டைய மோனைசெல் தானே பாட்டாய், நடக்கிற நடையெல்லாம் ஆட்டமாயிருக்குமாப்போது. அன்றிக்கே, கிண்கிணிகளொலிக்குமோசை தானமாக, வாயாலே பாடிப்பாடி, அதனுக்கேற்ற கூத்தை அசைந்தசைந்திட்டாடியாடி யென்று பொருளாகவுமாம். வருகின்றவையைப் பற்பநாபனென்றிருந்தேன். இப்படி யென்னை நோக்கி வாராநின்றுள்ள வண்ணம் "பொய்நீழலெழுகமலப் பூவழகர்" என்கிறபடியே மேன்மை ராபரணம் மேண்டாதே திருநாபீகமலந்தானே ஆபரணமாம்படி யிருப்பானொருவனன்றே, இவனுக்கு மேலொரு பாட்டும் ஆட்டும் மேலணியோ, சதங்கையோசையும் நடையழகுந்தானே பாட்டுமாட்டுமா யிருந்தபடியென்! என்று ஆச்சர்யப்பட்டிருந்தே னென்றுதல். அழிந்து கிடந்ததை யுண்டாக்குமவனன்றே, நம்முடைய ஸத்தையைத் தருகைக்காக வருகிறனென்றிருந்தேனென்றுதல். ஓடியோடியித்யாதி. இவள் சொன்னதின் கருத்தறியாதே, "இவள் நம்முடைய நீர்மையைச் சொல்லாமல் ஸ்வாதந்த்ர்ய ப்ரகாசகமான மேன்மையைச் சொல்லுகிறதே!" என்று மீண்டு ஓடிப்போகத் தொடங்குகையாலே. இப்படியாடிக்

கொணமி என் கைக்கெட்டாதபடி ஓடியொடிப் போய்விடாதே நீ புருஷோத்தமனையாலே ஆச்சிதடாதத்தாலாபின்பு என்னைத்தேலை வந்து என்முகத்தை யுண்ணவேணு மென்கிறாள்.

அ. நிகமத்தில் இத்திருமொழி கற்றார்க்கு பலம் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மு.—வாரணிந்த கொங்கையாச்சி மாதவாவுண் ணென்றமாற்றம்
நீரணிந்த குவளாவாச நிகழ்நாறும் வில்லிபுத்தூர்ப்
பாரணிந்த தொல்புகழான் பட்டர்பிரான் பாடல்வல்லார்
சீரணிந்த செங்கண்மான்மேற் சென்றசிந்தை பெறுவர்தாமே. கக.

பதவுரை.

வார் அணிந்த—கச்சாலே அலங்கரிக்கப்பட்ட [கச்சு-கருஞ்சுகம்.]

கொங்கை— முலைகளை யுடைய

ஆச்சி— தாயான யசோதைப்பிராட்டி-

மாதவா!— "ஸ்ரியபதியானவனே!

உண்— முலை உண்" [யை

என்ற மாற்றம்— என்று சொன்ன வார்த்தை

நீர் அணிந்த— நீருக்கு அலங்காரமாக அலர்ந்த

குவளை— செங்கழுநீர்ப் பூவின்

வாசம்— வாஸனையான து

நிகழ்— ஒருபடிப்பட

நாறும்— பரிமளியா நின்றுள்ள

வில்லி புத்தூர்— ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகராய்

பார்— பூமியிலடங்கலும்

அணிந்த— பரவினதாய்

தொல்— ஸ்வபாவஸித்தமான

புகழான்— கீர்த்தியை யுடைய

பட்டர்பிரான்— ப்ரஹ்மண்யத்தமரான பெரியாழ்வார் அருளிச்செய்த

பாடல்— பாட்டுக்களை

வல்லார்தாம்— ஓதவல்லவர்கள்

சீர் அணிந்த— கல்யாணகுணபூஷிதரும்

செம் கண்— சிவந்த கண்களையுடையவரும்

மால்மேல்— ஆச்ரிதர் நிறத்தில் வ்யாமோஹமுடையவனும் எம்பெருமான் விஷயத்தில்

சென்ற சிந்தை— சென்ற மநஸ்ஸை

பெறுவர்— உடையராவர்கள்.

வ்யா. வாரணிந்த கொங்கையாச்சி. ராஜாக்களுக்கு அபிமதமான த்ரவ்யங்களை பரிசாரகரானவர்கள் கட்டி இலச்சினை யிட்டு, கொண்டு திரியுமாபோலே, க்ருஷ்ணனுக்கு போக்ய மானமுலைகள் பிறர்கண்படாதபடி கச்சாலே மேமித்துக்கொண்டு திரிகையாலே வாராலே அலங்க்ருதமான முலையையுடையவளான ஆய்ச்சியென்று ச்லாகித்துக்கொண்டு அருளிச்செய்கிறார். மாதவா வுண்ணேனென்றமாற்றம். ஸ்ரியபதியாகையாலே அவாப்த ஸமஸ்த காமனான வனை அவதாரத்தின் மெய்ப்பாட்டுக்கீடாக முலை யுண்ணென்ற சப்தத்தை. நீரித்யாதி. நீருக்கலங்காரமாக அலர்ந்த செங்கழுநீரினுடைய பரிமளமானது ஒருபடிப்பட ப்ரகாசியாநிற்கிற ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகராய். பாரித்யாதி. பூமியில் ராஜாக்களில் ப்ரதாநனான பாண்டியனும், ஜ்ஞாதாக்களில் ப்ரதாநரான செல்வநம்பி தொடக்கமானவர்களளவன்றிக்கே பூமியெங்கும் கொண்டாடும்படி வ்யாப்தமாய், வ்ருத்தி யன்றிக்கே, ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமான புகழையுடையராய் ப்ரஹ்மண்யத்தமரான பெரியாழ்வாரருளிச்செய்த பாடலை

றிக்கிக, சீரித்யாதிக்கு - ஆச்ரித பாரதந்த்ர்யமாகிற குணத்தாலே யலங்க்ருதனுய், இந்நீர்மை க்கும் மேன்மைக்கும் ப்ரகாசகமான சிவந்த திருக்கண்களை யுடையனுய் ஸர்வஸ்மாத்பர னுயிருக்கிறவன் விஷயத்திலே யென்று பொருளாகவுமாம். சென்றவித்யாதி. பாடல் வல்லார் தாம் செங்கண்மால் பக்கலிலே யொருபடிப்பட்ட மநஸ்ஸை யுடையவராவர். கக.

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

அடிவரவு.—அரவணை வைத்த தந்தம் கஞ்சன் தீய மின்
பெண்டிர் இருமலை யங்கமல மோட வாரணி போய்.

ஆக - திருமொழி, கக - க்கு, பாட்டு- கஉசு.

அ. கீழிற்திருமொழியிலே- இவனுடைய பால்யாநுகூலமாக முலை யுண்கையை மறந்துகிடந்து உறங்குகிறவனை யெழுப்பி, முலையுண்ணவேணுமென்றபேக்ஷித்து, அவன் இழுப்பத்திருந்தவளவிலும் விடாதே பலவாறுமுகமாக நிர்ப்பந்தித்து யசோதைப்பிராட்டி முலை யூட்டினப்ரகாரத்தை, அவளுடைய ப்ராப்திபையும் ஸ்நேஹத்தையு முடையராய்க்கொண்டு தத்காலம்போலே அவனைக்குறித்துப் பேசி யநுபவித்து இனியராஞர்; அவள் அவனுக்குக் காதுகுத்திக் காதுபெருக்கிக் காதுப்பணிகளுமிட்டநுபவிக்க வாசைப்பட்டு, காதுகுத்து கையாகிற உத்ஸவத்துக்கு ஊரில் பெண்களை யெல்லாம் அழைத்துவிட்டு, வந்தவர்களை ஸம் பாவிக்கைக்கீடான பதார்த்தங்களும் ஸம்பாதித்துவைத்து, "அவனைக் காதுகுத்த" என்று அழைக்க, அவன் "நோம்" என்று அஞ்சி, "மாட்டேன்" என்னச் செய்தேயும் அவன ஞ்சாதபடியான வசநங்களைச் சொல்லியும் அவனுக்கு அபிமதமான பதார்த்தங்களைக் காட்டி யும் உடன்படுத்திக்கொண்டு காதுபெருக்கின ப்ரகாரத்தை, தாமும் அவளைப்போலே அநுப விக்கவாசைப்பட்டு, ததவஸ்தாபந்நராய்க்கொண்டு தத்காலம்போலே அவனைக்குறித்து அப் பாசுரங்களைப் பேசி யநுபவித்து ப்ரீதராகிறரித்திருமொழியில். ... ... *

மூ.—போய்ப்பாடுண்டைய நின்தந்தைபுந் தாழ்த்தான் பொருதிறற் கஞ்சன்கடியன்
காப்பாருமில்லைக் கடல்வண்ணு வுன்னைத்தனியே போயேங்குந்திரிதி
பேய்ப்பால் முலையுண்ட பித்தனே கேசவநம்பீ யுன்னைக்காதுகுத்த
ஆய்ப்பாலர் பெண்டுகளெல்லாரும் வந்தாரடைக்காய் திருத்திநான்வைத்தேன். க.

பதவுரை.

போடு உடைய— ஸ்வஜநரக்ஷணத்தில் பரிவை , தாழ்த்தான்— வருவதற்குத் தாமஸித்தான்;

கடல் வண்ணை!— கடல் போலே ச்சமஹர

மான வடிவையுடைய கண்ணனே!

உன்னை— உன்னை

காப்பாரும்— ரக்ஷிக்கவல்லவரும்

இல்லை— (இங்கே) இல்லை;

(நீயோ வென்றால்,)

கனிவை— அஸஹாயனைப்

எங்கும் போய்— எல்லாவிடங்களிலும் போய்

திரிதி— யதேச்சமாகத் திரியாநின்றாய்;

பேய்— பூதனையின்

முலை பால்— முலைப்பாலை

உண்ட— உண்ட

நம்பீ!— நீட்பில் கைதேர்ந்தவனே!

உன்னைக்காதுகுத்த— உன்காதுகுத்துகைக்கு

ஆய்— ஆய்ப்பாடியிலுள்ள

பாலர்— பாலர்களும்

பெண்டிகள்— இடைப்பெண்களும்

எல்லாரும்— ஆகிய இவர்களெல்லாரும்

வந்தார்— வந்திராநின்றார்கள்;

(அவர்களை ஸம்பாவிக்கைக் கிடாக)

அடைக்காய்— அடைக்காய் முதலானவற்றை

நான் திருத்தி வைத்தேன்— நான் ஸந்தத்த

மாக்கிவைத்தேன்.

வ்யா. முதற்பாட்டு. போயித்யாதி. பாடையுடைய நின்தன்மையும்- போய்- தாழ்த்தான். புத்ரக்ஷணத்திலும் ஸ்வஜீவக்ஷணத்திலும் இடமுடைய மநஸ்ஸையுடையனை உன்னுடைய பிதாவும் "பசுக்கடையிலே சென்றுவருகிறேன், வருமளவும் நீ பிள்ளையை ரக்ஷித்துக் கொள்" என்று போய் வரவுதாழ்த்தான். அன்றிக்கே, "போய்" என்கிற விது - மிகுதிக்கு வாசகமாய், ரக்ஷ்யவர்க்கத்திலுடைய ரக்ஷணத்திலே மிகவுமளவுடையனும் "கூர்வேற் கொற்றந்தாழிலன்" என்கிறபடியேதீபிறந்தவன்றுதொடங்கி லோகப்புகழமுக்கடைந்துபிடித்து, தொட்டிற்கீழே ஓரெறும்பூரிலும் ஸிம்மத்தின்மேலே சீறுமாப்போலே சீறி, உன்னை நோய்க்கிக்கொண்டு திரியும் பிதாவானவனும் கார்யார்த்தமாகப் போனவிடத்தே விளம்பித்தானென்னவுமாம். பொருதிறல்கஞ்சன்கடியன், பொருகையிலே மிடுக்கையுடைய கம்ஸன் உன்னையில் மிகவும் க்ரூரன். உன்னை நலிகைக்கு இடம்பார்த்துத் திரிகிறவனுகையாலே ஆரைவரவிடுத், தது செய்விக்கும் என்று தெரியாது.

காப்பாருமில்லை. அதுக்கு மேலே விரகறிந்து ரக்ஷிக்கவல்லாரு மிங்கில்லை. ரக்ஷகரானவர் வந்திலர், நாமேறு அபலை, வேறொருபரிவர் கானாவில்லை, யார்தான் ரக்ஷிப்பார். கடல் வண்ணை வுன்னை. "தன்னேராயிரம் பிள்ளைகள்" என்கிறபடியே இவ்வூரில் திரிகிற வேறு பிள்ளைகளுக்குள்ளே நானுமொருவனுப்த் திரியாநின்றால் என்னை அவர்கள் அறியப்புகா நின்றார்களோவென்று நீ நினைக்கவேண்டா, கடல் போலே ச்சமஹரமாயிருக்கிற வுன்வடிவழகை உன்னைக் காட்டிக்கொடாதே; இப்படியிருக்கிற வுன்னையுணர்ந்து ரக்ஷிப்பாரு மில்லையென்னுதல்; ஒரு விரோதிகளில்லையேயாயினும் *அஸ்தாநே பயசங்கை பண்ணி மங்களாசாஸநம் பண்ணவேண்டும்படியான அழகுடைய வுன்னை விரோதி பூயிஷ்டமான விவ்விடத்தில் பரிவராய் ரக்ஷிப்பாருமில்லையென்னுதல். தனியேபோ யெங்கும்திரிதி. பிள்ளைகள் தன்னையேடை திரிகிறு யென்னவுமொண்ணுதபடி அவர்களையும் விட்டுத் தனியேபோய் எங்கும் ஸஞ்சரியா நின்றாய்.

அவர்கள் தன்னையேடைகூடப் போறற்றான் ப்ரயோஜநமென்; பேய்ப்பால் முலையுண்ட

களைப் பிள்ளைகளோபாதி தோழன்மாராக நினைப்பானொருவனிலை நீயென்கை. கேசவநம்பி. இப்படி நீயென்செய்ய பயப்படுகிறது, நான் கேசவநம்பியன்றே, என் கையிலேகிடைத்த தறியாயோவென்று தன் சௌர்யபூர்த்தியைக்காட்ட, அத்தை யவ்வளவிலே விட்டு, தான் உபக்ரமித்த காரியத்திலே புரிந்து, நானேயன்றுகாண், உன்னைக்காதுகுத்துவதாக ஆய்ப் பாலர் பெண்டுகளெல்லாரும் வந்தார்கள்; வந்தவர்களை ஸம்பாவிக்கைக்கிடான அடைக்காய் முதலானவையும் நான் திருத்திவைத்தேன்; ஆனபின்பு, நீ காதுகுத்தும்படி வரவேணு மென்கிறாள். ... ... க.

மூ.—வண்ணப்பவள மருங்கினிற் சாத்திமலர்ப்பாதக் கிண்கிணியார்ப்ப
நண்ணித்தொழுமவர் சிந்தைபிரியாத நாராயணை விங்கேவாராய்
எண்ணற்கரியபிரானே திரியையெரியாமே காதுக்கிடுவன்
கண்ணுக்குநன்று மழகுமுடைய கனகக்கடிப்பு மிவையா. உ

பதவுரை.

நண்ணி— உன்னை அணுகி
தொழுமவர்— தொழாநின்றவர் களுடைய
சிந்தை— மநஸ்ஸில் நின்றும்
பிரியாத— நீங்காத
நாராயணை!— நாராயணனே!
வண்ணம்— நல்ல நிறத்தையுடைய
பவளம்— பவழ வடத்தை
மருங்கினில்— அரையிலே
சாத்தி— தரித்து
மலர்— தாமரைப்பூப் போன்ற
பாதம்— திருவடிகளில் சாத்தியிருக்கிற
கிண்கிணி— சதங்கையான து
ஆர்ப்ப— த்வனிக்கும்படி
இங்கே— நானழைக்கு மிவ்விடத்துக்கு
வாராய்— வந்தருளாய்;
என்னற்கு— "இப்படிப்பட்டவன்" என்று
நினைக்கைக்கும் கூட
அரிய— அரியனாயிராநின்ற
பிரானே!— உபகாரகனானவனே!
காதுக்கு— உன்காதுகளுக்கு
திரியை— திரியை
எரியாமே— தீயாவாதபடி
இடுவேன்;
கண்ணுக்கு— பார்வைக்கு
நன்றும்— மிகவும்
அழகு உடைய— அழகிதாயிராநின்ற
கனகம்— ஸ்வர்ணமயமான
கடிப்பு இவை— இந்த கர்ண பூஷணங்கள்
ஆ— ஆச்சர்யகரமாயிராநின்றன.
[இவற்றைப்பாராய் என்றுகருத்து.]

வ்யா. இரண்டாம்பாட்டு. வண்ணமித்யாதி. ஆகரத்திலே பிறக்கையாலே நிறமுடைத்தாயிருந்துள்ள பவளத்தினுடைய வடத்தை அது தனக்கும் அழகு கொடுக்கவற்றான திருவரையிலே சாத்தி. மலரித்யாதி. தாமரைப்பூப்போலே யிருக்கிற திருவடிகளிற் சதங்கைகளானவை த்வனிக்க. திருவரையும் பவளவடமுமான சேர்த்தியழகு தோற்றும்படியாகவும் திருவடிகளிற்சாத்தின சதங்கைகள் த்வனிக்கும்படியாகவும் வரவேணுமென்று கருத்து. நண்ணியித்யாதி. அஹங்காராதிகளாலே உன்னையகன்று திரிகையன்றிக்கே, தத்ராஹித்யத்தாலே உன்னைக்கிட்டி ஸ்வசேஷத்வானுரூபமாகத் தொழுகையே யாத்ரையாயிருக்கு

னர்வதேசத்தா விதேபமாகக்கைக்கொண்டு கடிணகாலமும் விடாபிரியாதே வாத்திக்குமகாரா யணனே கானழைக்கிற விவ்விடந்தேதவாராய். எண்ணற்கரியபிரானே. உன்பக்கல் ஸ்நேகமில்லாதார்க்கு நிக்கைக்குங்கூடவரியனாயிருக்கும் உபகாரகனாவேனே. ஆச்சிதார்க்கு ளாலபனாயிருக்கையும், அநாச்சிதார்க்கு துர்லபனாயிருக்கையும், மங்களாசாஸநபராயிருப்பார்க்குத் கம்பேரும்பிறையிருப்பது. நீனன்னே யழைக்கிறது, திரியை என்காது எரிய நிநைக்கன்றே வென்ன; திரியையெரியாமே காதுக்கிடுவன். திரியை யுன்காதுகளுக்கு எரிச்சல் வாராதபடி அநுகூலமாக இடுவன். கண்ணுக்கித்யாதி. திரியேற்றிக் காதுமடருக்கிறல் உனக்கு மிவதாகச்சமைத்த, கண்ணுக்கு மிகவும் அழகையுடைத்தாயிருக்கிற பொற்கடப்பக்கனான வினையு மிருக்கிறபடி பாராய். அழகும் என்றவிடத்தில், (க) சசப்தம் அவ்யயம். நன்று மழகுடையவென்றும் கநகக்கடப்பென்றும் சொன்னவினை யிரண்டாலும்- பணித்திருத்தலும் உபாதாநவைலக்ஷண்யமும் சொல்லுகிறது. ... ... உ...

மூ.—வையமெல்லாம்பெறும் வார்கடல்வாழ மகரக்குழை கொண்டுவைத்தென்
வெய்யவேகாதிற் றிரியையிடுவன் நீ வேண்டியதெல்லாந் தருவன்
உய்யவிவ்வாயர் குலத்தினிற்றோன்றிய வோண்சுடராயர் கொழுந்தே
மையன்மைசெய்திள வாய்ச்சியருள்ளத்து மாதவனே யிங்கேவாராய். நக.

பதவுரை.

உய்ய— யாவரும் உஜ்ஜீவிக்கும்படி.
இவ்வாயர் குலத்தினில்— இவ்வினைடைக்குலத்திலே
தோன்றிய— அவதரித்தவனாய்
ஓண் சுடர்— மிக்க தேஜஸ்ஸையுடையனாய்
ஆயர்— இடையர்களுக்கு
கொழுந்தே!— தலைவனானவனே!
வையம் எல்லாம்— பூமியெல்லாம்
பெறும்— விலைபெறும்படி. பெருவிலையனாய்
வார் கடல்— விசாலமான கடலிலே
வாழும்— வாழாநின்ற
மகரம்— முதலைகள் போன்ற
குழை— காதுப்பணிகளை [மகரகுண்டலம்.]
கொண்டு வைத்தென்— சேமித்துக் கொண்டு
வைத்தென்;
காதில்— காதுகளில்
திரியை— திரியை
வெய்யவே— கொடுஞ்சுடனாக
இடுவன்— இடுவேன்;
நீ வேண்டியது எல்லாம்— நீ விரும்பியதெல்லாம்
தருவன்— கொடுப்பேன்;
இள ஆய்ச்சியர்— இடைப்பெண்களின்
மையன்மை செய்து— உள்ளழிவுசெய்து
உள்ளத்து— அவர்கள் மனத்தில் எப்போதும்
இருப்பவனாய்
மாதவனே!— நீ யிப்படியானவனே!
இங்கே வாராய்.

வ்யா. மூன்றும்பாட்டு. வையமித்யாதி. பொற்கடிப்பளவே யல்ல, காதுமடருக்கினால் இப்படியாக பூமியெல்லாம் பெறும்பெருவிலையனை, நீண்டகடலிலே வர்த்திக்கும் மகரம்போலே யிருக்கிற காதுப்பணிகொண்டு வைத்தேனென்ன; நீ யிது சொல்லுகிறது- இப்போது என்காதுக்குத் திரியிடுகைக்காகவன்றோ, திரியிட்டபோதே காது தினவுதின்று

யாலே, இசைகைக்காக, நீவேண்டியதெல்லாம் தருவன். நீ விருப்பியிருக்கும் அணுபவலாதி களெல்லாம் தருவேனென்ன; அவ்வளவிலும் அவன் வாராமையாலே, உய்ய விவ்வாயர் குலத் தினிற்றோன்றிய வொண்சுடராயர் கோழந்தே!. இருந்தீதகுடியாக வாழ்ந்தீவிக்கும்படி இவ்விடை க்குலத்திலவந்து பிறந்து, அதுதானே யுனக்கு மிகவும் தகுந்ஸ்வாம்படியிருப்பானுப்; வே ரிலே லெக்கைகட்டிஞல் கொழுந்துழற்படவாதிபோலே இடையருக்கு ஒருவ்வஸகம்வரில் முந்துறவன்முகம் வாடும்படி அவர்களுக்குத் தலிவனுனவனே. மெயன்மை செய்திளவாய்ச்சி யருள்ளத்து மாதவனே!. ஒருபருவத்தினிடைப்பெண்கடீன உன்னுடைய லீலைகளாலே மதிமயங்கும்படிபண்ணி, அவர்களுடைய நெஞ்சுக்கு ளிவ்வகாலமும் விஷயமாம் படியிருப்பானுப், உன்னுடைய நெஞ்சைத்தீ திணறிகாண்டும்பிராட்டிக்கு வல்லபனுனவனே! இங்கு வாராய் என்று ஸ்துதிபூர்வகமாக வழைக்கிறர்.

மூ.—வணாநன்றுடைய வைரக்கடிப்பிட்டு வார்காதுதாழப் பெருக்கிச்
குணாநன்றுடைபரிக் கோடாலபிள்ளைகள் கோவிந்தாநீ சொல்லுக்கொள்ளாய்
இணாநன்றழகிய விக்கடிப்பிட்டா வினியபலாப்பழந்தந்து
சுணாநன்றணிமுலை யுண்ணத்தருவன்நான் சோத்தம்பிரா னிங்கேவாராய்.

பதவுரை.

நன்று— நன்முன
வெ(ண்)ணம் உடைய— வெண்ணெய்யுடைய
வைரக்கடிப்பு— வஜ்ரகுண்டலத்தை
இட்டு— தரித்துக்கொண்டு
வார் காது— நீண்டகாதான து
தாழ— தோள்வரைக்கும் தாழும்படி
பெருக்கி— (காதுகளை) வளர்த்துக்கொண்டு
இக்கோபால பிள்ளைகள்— இவ்விடைப்பிள்ளை
கள்
நன்று குணம் உடையர்— (தாய்மார் முத
லானோர் சொன்னதைத்செய்து) நல்ல
குண முடையவர்களாயிராநின்றார்கள்;
கோவிந்தா!— ஸுலபனுனவனே!
நீ— அப்பிள்ளைகளோடே சேரவிருப்புகிறநீ
சொல்லு— என் வார்த்தையை
கொள்ளாய்— கைக்கொள்ளமாட்டுகிறிலை;
இணை— ஒன்றுக்கொன்றொத்தது
நன்று அழகிய— மிகவுமழகிய
இக்கடிப்பு— இக்காதுப்பணிகளை
இட்டால்— நீ இட்டுக்கொள்ளு வதாகில்
இனிய— உனக்கு ருசிகரமான
பலா பழம்— பலாப்பழத்தை
தந்து— கொடுத்து
சுண(ங்கு)ம்— தோடமிலபுடைத்தாய்
நன்று அணி— மிகவுமழகிதான
முலை— முலையை
உண்ண— நீ உண்ணும்படி
நான் தருவன்— நான் கொடுப்பேன்;
பிரான்!— உபகாரகனுனவனே!
சோத்தம்— உன்னைத்தொழுகிறேன்;
இங்கே வாராய்.

வ்யா. நான்காம்பாட்டு. வணபித்யாதி. இப்படி ஸ்துதித்துக்கொண் டனைழத்தவிட த்திலும் வாராமையாலே, இது தன்னைச் சொன்னலாகிலும் வருமோவென்று இந்த இடைப்

(க) சுணாநன்றதி— தினவு. ¶ வெச்சரப்பு— அல்பமான உஷ்ணரை.

குணமுடையரா யிருக்கிறபடி பாராய்; நீயு மிப்படி யிருக்கவேண்டாவோ. கோவிந்தா! நீ சொல்லுக்கொள்ளாய். மெளலப்பத்துக்கு "கோவிந்தன்" என்று பேரிட்டுக் கொண்டி ருக்கிற நீ என்சொல்லு கைக்கொள்ளுகிறு யில்லை யென்ன; உன்சொல்லுக்கேட்டு, நான் கடிப்பிடித்துக்கொண்டால் எனக்கென்னன்பு தருவாயென்ன; இனைநன்றழகிய விக்கடிப் பிட்டால். ஒன்றுக் கொன்றிரப்பாய் மிகவு மழகியதாயிருக்கிற விந்தக்கடிப்பை யிட்டால். இனிய பலாப்பழம்தந்து. உனக்கினிதான பலாப்பழம் தந்து. சுணைநன்றணி முலையுண்ணத் தருவன்நான். சுணைங்கையுடைத்தாய் நன்றாய் அழகியதான முலையை நீ யமுது செய்யும்படி தருவன் நானென்ன. சுணைந்த-முலைமேல் தோன்றும் நிறம். நன்றுகையாவது - ம்ர்து வாயிருக்கை. சோத்தம் பிரானிங்கே வாராய். இப்படி சொன்ன வளவிலும் வாராமையாலே, பிரானே உன்னைக்கும்பிடுகிறேன், இங்கேவாராயென்று இரந்தழைக்கிறாள். சோத்த மென்கிற விது- அஞ்சலி பண்ணுமவர்கள் அதுச்சு அநுகூலமாகத் தாழ்ச்சி தோற்றச் சொல்லுவ தொரு சப்த விசேஷம். ... ... ஈ.

மூ.—சோத்தம்பிரா னென்றிரந்தாலுங் கொள்ளாய் சுரிகுழலாரோடு நீபோய்க்
கோத்துக்குரவை பிணைந்திங்குவந்தாற் குணங்கொண்டிடுவனே நம்பீ!
போர்த்தும்பெரியன வப்பந்தருவன் பிரானேதிரியிட வோட்டில்
வேய்த்தடந்தோளார் விரும்புகருங்குழல் விட்டுவேரீ யிங்கேவாராய். ரு.

பதவுரை.

பிரான்!— "உபகாரகனெனவனே!
சோத்தம் என்று— உன்னைத் தொழுகிறேன்"
என்று
இரந்தாலும்— வேண்டிலு லும்
கொள்ளாய்— அதை நீ அங்கீகரிக்கிறிலை;
நம்பீ!— நீம்பில் கைதேர்ந்தனவனே!
நீ— நீ
சுரி குழலாரொடு போய்— சுருண்ட குழலை
யுடைய பெண்களோடே போய்
கோத்து— கைகோர்த்து
குரவை பிணைந்து— ‡ குரவைக் கூத்தாடி.
இங்கு வந்தால்— இங்கே வந்தால்
குணம் கொண்டிடுவனே — அதை நான்
குணமாகக் கொள்ளுவேனே;
பிரானே!— உபகாரனே!
திரி இடவொட்டில்— உன்காதில் திரியை
இடவொட்டிலுயாகில்
போர்த்தும்— பின்னையும்
பெரியன— பெரியவையான
அப்பம்— அப்பங்களை
தருவன்— தருவேன்;
வேய்— மூங்கில் போன்ற
தட— பெருத்திராநின்ற
தோளார்— தோள்களையுடைய பெண்கள்
விரும்பு— விரும்பும்படியான
கரு— கறுத்த
குழல்— குழலையுடைய
விட்டுவே!— விஷ்ணுவே!
நீ இங்கே வாராய்.

---

‡ குரவைக்கூத்தாவது— "கூஉ நாஉ நா உகொ ரொ சாயவம்" இத்யாதிப்படியே- ஒவ் வொரு ஆய்ச்சியின் பக்கத்தில், ஒவ்வொரு கண்ணுக இருந்தாடுவ தொரு கூத்து. இதைத்தான் "ராஸக்ரீடை" என்பர்கள்.

வ்யா. ஐந்தாம்பாட்டு. சோத்தமித்யாதி. "சோத்தம்பிராணிங்கே வாராய்" என் றவிடத்திலும் அவன் வாராமையாலே, பிரானே உன்னைத் தொழுகிறேனென்று இரந்தாலும்

தில் குணங்கொள்ளாமல் மேற்று என்னை யடித்தவளன்றே நீ என்ன; அதுவோ? சுரிகுழ லாரோடு நீ போய் கோத்துக்குரவை பிணைந்திங்குவந்தால் குணங்கொண்டிடுவேனே நம்பீ. ஆளற் றவிடத்திலே நீ போய், சுருண்டகுழலை யுடையராயிருக்கும் பெண்களோடே கைகோத்துக் குரவை பிணைந்தாடியிங்கேவந்தால் பொறியாதே குணவானென்று உன்னைக்கொள்வேனே நம் பீ என்று இவள் சொன்னவாறே, நிருத்தரைப் நிற்க, அவ்வளவிலே கையிலே திரியை எடுத்து இத்தை மிடுப்படிவாராயென்ன; அவன் "அது இடவொட்டேன்" என்ன; பிராணே திரியிடவொட்டில் - போத்தும் பெரியனவப்பம் தருவன். எனக்கெல்லாப்படியாலும் உபகாரகனைவனே திரிபித்தனைபு மிடவொட்டுதியாகில், நீ சிறிது சிறிதென்று பொகடப் பொகட, நீ விரும்பும்படி பெரியனவான அப்பங்களைத் தருவேன் என்றவிடத்திலும் அவன் வாராமையாலே; வேபித்யர்தி. பசுமைக்கும் சுற்றுடைமைக்கும் செவ்வைக்கும் மூங்கில்போலேயாய், பெருத்திருந்துள்ள தோள்களையுடையரான பெண்கள் விரும்பும் படியாய், இருண்டுநீண்டதிருக்குழலையுடையனை விஷ்ணுவே! நீ இங்கே வாராயென்று அவன் வைலக்ஷண்யத்தைச்சொல்லிப் புகழ்ந்துகொண்டழைக்கிறாள். ... ... நு.

மூ.—விண்ணெல்லாங்கேட்க வழுதிட்டாயுன் வாயில்விரும்பி யதனைநான்நோக்கி
மண்ணெல்லாங்கண்டென் மனத்துள்ளேயஞ்சி மதுசூதனை யென்றறிந்தேன்
புண்ணேதுமில்லையுன் காதுமறியும் பொறுத்திறைப்போதிருநம்பீ!
கண்ணிவென்கார்முகிலே கடல்வண்ணா காவலனே முலையுணையே. சு.

பதவுரை.

"மண்தின்றாய்" என்று அடித்தவாறே, விண் எல்லாம்— ஆகாசப்பரப் படங்களும் கேட்க— கேட்கும்படி.
அழுதிட்டாய்— அழுத
உன்— உன்னுடைய
வாயில்— வாயிலே
விரும்பி— ("மண்தின்ற சுவடுண்டாகில் பார்ப்போம்" என்று) ஆசைப்பட்டு
அதனை— அத்தை
நான் நோக்கி— நான் பார்த்தவளவிலே
மண் எல்லாம்— பூமியெல்லாம்
கண்டு — உன் திருவயிற்றிலிருக்கிற படியைக் கண்டு
என் மனத்துள்ளே— என் நெஞ்சினுள்ளே
அஞ்சி— ("நம்முடைய பிள்ளை யென்றிவனை அடித்தோமே" என்று) அஞ்சி
மதுசூதனை என்று— 'இவன் மதுவை நிரசித்தவர்வேச்வரனே' என்று
அறிந்தேன்— தெரிந்து கொண்டேன்;
புண் ஏதும் இல்லை— புண் ஒன்றுமில்லை;
உன் காது— உன்னுடைய காதானது
மறியும்— தன்மை பூரணம்;
இறைப்போது— சற்றுப்போது
பொறுத்து இரு— பொறுத்துக் கொண்டிரு;
நம்பீ!— பூர்ணனே!
கண்ணா!— கண்ணனே!
என்— எனக்கு
கார் முகிலே!— காளமேகம் போல் உதாரனவனே!
கடல் வண்ணா!— கடல்போன்ற நிறத்தையுடையவனே!
காவலனே!— எனக்கு ரக்ஷகனானவனே!

முலை உணையே.

முடைய பிள்ளையல்லன், லக்ஷ்மிவல்லப னென்றறிந்தேன்" என்றவாறே, "கஷ்டமிவளுக்கு நேரவாகாது சரி", என்னுடைய ஞாகத்தில் இவள் அங்ஙனுக்கு வார்த்தை சொன்னது ஸரியாயமல் அதிகமாயிருந்தது, "தன்பின்னை" என்று இவளுணர்த்துக் கொள்ளுமட்டிலு மிருக்கிட்டு நிற்க; அவ்வளவிலே இவன், காதுக்குக் கடிப்பிடுவதாக வத்தியாகிக்க; "என் னுடைய காது புண், எனக்கு அதுவேண்டா" என்று அவன் சொல்ல; புண்ணெனுமிக்யாதி; புண்ணென்றுமில்லை, உன்னுடையகாது கண்டிபாயநம், சற்றுப்போது பொறுத்திரு நப்பீ யென்ன; அவன் பொறுத்தபடியாலே ப்ரீதையாய்; கண்ணழு. எனக்கு ஸுலபனவனே. என்காரியிலே. ஜலஸ்தலவிபாகம் பாராமல் உபகரிக்கும் காளமேகம்போலே யெனக்கு உன்னையுபகரித்தவனே. கடல்வண்ணனே. எனக்கு அநுபாவ்யமான கடல்போன்ற நிறத்தை யுடையவனே. காவலனே. எனக்குரக்ஷகனவனே என்று ஸ்தோத்ரம்பண்ணி முலை யுண்ணவேணுமென்றபேக்ஷிக்கிறாள். ... ... கூ.

மூ.—முலையேதும்வேண்டேனென்றுரை நின்காதிற்கடிப்பைப் பறித்தெறிந்திட்டு
மலையையெடுத்து மகிழ்ந்து கன்மாரிகாத்துப் பசுநிரைமேய்த்தாய்!
சிலையொன்றிறுத்தாய்! திரிவிக்கிரமா! திருவாயர்பாடிப்பிரானே!
தலைநிலாப்போதே யுண்காதைப்பெருக்காதே விட்டிட்டேன் குற்றமேயன்றே. எ.

பதவுரை.

முலை— "நீ கொடுக்கும் முலையையும்
எதும்— மற்றுமுள்ள பக்ஷ்யபோஜ்யங்களையும்
வேண்டேன்— நான் விரும்புகிறிலேன்"
என்று சொ— என்று சொல்லி
ன்னை ஓடி— என்னை கழிய ஓடி.
நின்— உன்னுடைய
காதில்— காதில் இட்ட
கடிப்பை— பூஷணத்தை
பறித்து எறிந்திட்டு— பிடுங்கி யெறிந்து போகட்டு,
(அவ்வளவிலே இந்த்ரன் பசிக்கோடத்தாலே வர்ஷிப்பிக்க;)
மலையை— கோவர்த்தன பர்வதத்தை
எடுத்து— குடையாக எடுத்து
மகிழ்ந்து— ஆயாஸம் தோற்றுதபடி மன முகந்து
கல் மாறி— அக்கல் வர்ஷத்தினின்றும்
காத்து— இடையர்களையும் பசுக்களையும் ரக்ஷித்து
பசுநிரை— பசுக்கூட்டங்களை
மேய்த்தாய்!— இடையர் மேய்க்கும் படி பண்ணினவனே!
ஒன்று— அத்விதீயமான
சிலை— லீலாவிநோத சுலக்ஷணமான ருத்ர தநுஸ்ஸை
இறுத்தாய்!— முறித்தவனே!
திரி விக்கிரமா!— திருவடிகளை வளர்த்து உலகங்களை யளந்தருளினவனே!
திரு ஆயர்பாடி— திரு ஆய்ப்பாடியிலுள்ள ஜநங்களுக்கு
பிரானே!— ஸ்வாமியானவனே!
தலை— தலையான து
நிலா— நில்லாத
போது— இளம் பருவத்திலே
உன் காதை— உன் காதை
பெருக்காது— பெருக்காமல்
விட்டிட்டேன்— விட்டுவைத்த என்னுடைய
குற்றம் அன்றே— குற்றமன்றே.

யிட, அக்தாலே சிறி; முலே மீபெதும் வேண்மீடனேன்மீருடி. நீ தருகிற முலேயும் மற்றுமுண்
டான அடுபாதிகளும் மீவண்மீடனேன்று எனக்குப்பிடிபடாது என்னைகழியமீவாடி. கான்
பின்திருடர்க்துவக்தனளில் எனக்கு தரிப்பாக, நின்காதில் கடிப்பைப் பறித்தெறிந்திட்டே.
உன் காதிலிட்ட கடிப்புக்களே க்கோதுக்தாற்றப் பிரிக்கி என்முன்னே எறிந்து பொகட்டி.
அவ்வளவிலே இந்தன் பசிக்கோபத்தாலே வாஞ்சிப்பிக்க, அதில் சக்கிபவாக்கம் கோபப
டாதபடி மலேயையெடுத்து. முன்பு சகுந்தலையென்று கொவாக்காகுரிதன்னேயை
குடையாக வெடித்து. பகிழ்ந்து. மலேயைச் சுமந்துகொடிந்திற்கிறவளவில் சற்றுமிடைப்பின்
றிக்கோ, "சக்திபவாக்கத்தினுடைய சகுந்தலம் பண்ணப் பெற்றோம்" என்று உகந்து. கன்
மாரிகாத்து. அந்தக் கல்வாக்கத்தில் ஒருபசுவின்மீமேலியாதல், ஓரிடையன்மீபலே பாதல்
ஒருதுளிழாதபடி சகுந்து. பசுரிரைமேய்த்தாய். "இனவாகினைபாடி யங்கேகமையாடிக்க"
என்கிறபடி. மீபே-மலே, பசுமேய்க்கிறவிடத்தன்னிலேகென்று வாக்குமொக்கக் கவிகையாலே,
பசுக்களே இடையர் மீமேய்க்குப்படி பண்ணினனன்ன. சிலயோன்றிறுத்தாய். பூரீஜாகராஜன்
தருமகருக்கு சுல்காமாகவிட்டதாய் ஒருவரால் மீபர்க்க வெடிக்கவொண்ணாபடி அத்
விரிபடாயிருக்துள்ள சனத்ராமன வில்லே முறித்தனேன. திரிவிக்கிரமா. இந்தன் திழந்த
ராஜ்பத்வாகு பிட்டிக்கொடிக்வைக்காக, எல்லே காடப்பாவாப்மீபாலே திருவடிகளால் லோ
லோகத்வாகு படைத்தனேன. திருவாயர்பாடிப்பிரானே. திருவாய்ப்பாடியிலுள்ள ஜாங்க
ருக்கு ஸ்வாப்பாகாத்தாலிடம் உடகாகனவனேன. இப்படி, எல்லார்க்கு முபகாரகனன நீ
கன்னுடைய அபேக்ஷிக்முடம் செய்பவேனுங் காணென்று, முன்பு பறித்தெறிந்த கடிப்புக்
களே யிடிவதாக உத்தியாகிக்க; அதுக்கவ னிசையாகிகாழிய; தலேநிலாவித்யாதி. தலே செவ்வே
கில்லாகு இளம்பாவுவத்திலே புன்னுடைய காதுகளேப்பெருக்காதே விட்டுட்டினவத்த வென்
னுடைய குற்றமன்றே, உன்னே வெறுக்கிறதென்னென்று தன் செப்திதாழ்வைச்சொல்லி
கோவபடிகிறான். ... ... ன.

மூ.—என்குற்றமேயென்று சொல்லவும் வேண்டாகா ணேன்னை நான் மண்ணுண்டே
அன்புற்றுநோக்கி யடித்தும் பிடித்து மனைவர்க்குங் காட்டிற்றிலேயே [ணை
வன்புற்றரவின் படைக்கொடி வாமன நம்பீபுன் காதுகடிரும்
துன்புற்றனவெல்லாந் தீர்ப்பாய்! பிரானே! திரியிட்டேச்சொல்லுகேன் மெய்யே. அ.

பதவுரை.

என்னை பிடித்தும்— சுவடு கண்டானைப்
போலே என்னைப் பிடித்தும்
அடித்தும்— அடித்தும்
அனைவர்க்கும்— எல்லார்க்கும்
காட்டிற்றிலேயே— 'இவன் மண்ணுண்ணும்
படியைப் பாருங்கள்' என்று காட்ட
வில்லேயோ?
(என்று அவன் சொல்ல;)

என் குற்றம் என்று— 'என்னுடையகுற்
றம்' என்று
சொல்லவும் வேண்டா காண்— நீ சொல்ல
வேண்டியதில்லே காண்;
நான் மண் உண்டேனுக— நான் மண் தின்ற
தாக நினைத்து
அன்புற்று— அன்பையுடையனாய்க்கொண்டு
நோக்கி — என் வாயில் மண்தின்ற சுவ

கத் கடக்கற் பாடுபடு

பகை— சத்துருவான கருடனை

கொடி— த்வஜமாகவுடையனுய்

வாமன நம்பி!— * குறள் பிரமசாரியாகப்

போய் அபிமதம்பெற்று பூர்ணனவனே!

உன் காதுகள்— உன்னுடைய காதுகள்

தாரும்— தந்துவிடும்

உற்றன— அச்சிதர்கள்பட்ட

துன்பு எல்லாம்— துன்பந்தை யெல்லாம்

நிரை இட்டு— உன்காதில் திரியை இட்டு

மெய் ¶ சொல்லுகேன்— மெய்யே சொல்லைக்

கடவேன்.

¶ "செல்லுகேன்" என்று பாடமானபோது "உன்காதில் திரியை இட்டுவிட்டு மெய்யே கடக்கப்போய் விடுகிறேன்" என்று பொருளாகக்கடவது.

வ்யா. எட்டாம்பாட்டு. என்குற்றமித்யாதி. "நீ உன் குற்றம் சொல்லி வெறுக்கின்றது நான் உன்சொல்லிற்றுச் செய்திலன் என்று என் குற்றத்தை நினைத்தன்றே, என் குற்றமேயென்று சொல்லவும்வேண்டாகாண்" என்ன; "பின்னை யார்குற்றம்" என்ன; "உன்குற்றமில்லேயோ" என்ன; "உன்னை நான் என் செய்தேன்" என்ன; என்னை நான்மன்னவென்டேனுக. மன்னவுன்னைதவென்ன நான் மன்னவுன்னிடனுக நினைத்து. அன்புற்றுநோக்கி. ன்மேனறிகளைப்போலே யென்னுடைய வாயிலும் கையிலும் மண்சுவடின்டோவென்று பார்த்து. அடித்தும்பிடித்து மனைவர்க்கும் காட்டிற்றிலேயே. சுவடு கண்டானைப்போலே என்னைட்பிடித்தும், அவ்வளவன்றிக்கே அடித்தும், "பாரிமேகாள் இவன் மண்தின்னுப்படி" என்று எல்லார்க்கும் காட்டிற்றில்லேயோ வென்ன; வன்புற்றரவின் பகைக்கொடி வாமன நம்பி. வயிடபுற்றிலே (க) பாதகபீதியாலே கிடக்கும் பாம்புக்குப் பகையான கருடனை த்வஜமாகவுடையனுய், *கொடுங்கோனால் நிலங்கொண்டவாமனனை முதலியானவனே. இத்தால்-திருவனந்தாழ்வானைப் படிக்கையாகக்கொண்டு பெரியதிருவடியை த்வஜமாகக்கொண்டிருப்பானொருவனை கையாலே, லோகத்தில் ஒன்றுக்கொன்று சேராதகாயுள்ளவற்றைச் சேர்த்து நடத்தவல்லனுமாய், க்ரூரமாகச் செய்தவற்றை ந்யாயமாக்கவும் வல்லவனன்றே வென்னை. உன்காதுகள் தாரும். இப்படி நீயொன்றுசொல்ல நானொன்றுசொல்லிப் போதுபோக்கியிருந்தால் உன்னுடைய காதுகள் தாருங்காண். துன்புற்றனவெல்லாம் தீர்ப்பாய்நானே. ஆச்சிதரானவர்கள் துக்கப்படுமவையெல்லாம் போக்குமுபகாரகனுனவனேயென்ன; நீ என்னை ஸ்தோத்ரம்பண்ணவேண்டா, 'இனியுன்னை முன்போல் பிடிக்குதல், அடிக்குதல் செய்யேன்' என்றுமெய்யாக ஒரு வார்த்தை சொல்லு - நான் திரியிடுகைக்கு இசையுமட்படியேயென்ன; திரியிட்டுச் சொல்லுகேன்மெய்யே. திரியைபோயிட்டுவிட்டவாறே பின்னை மெய்யே சொல்லக்கடவேனென்கிறுள். ... ... அ.

மூ.—மெய்யென்றுசொல்லுவார் சொல்லைக்கருதித் தொடுப்புண்டாய் வெண்ணெயை
கையைப்பிடித்துக் கரையுரலோடென்னைக் காணவே கட்டிற்றிலேயே [யென்று
செய்தனசொல்லிச் சிரித்துங்கிருக்கிற் சிரீதரா வுன்காதுதாரும்
கையிற்றிரியை யிடுகிடா யிங்ஙின்ற காரிகையார் சிரியாமே. கூ.

செய்தன— இப்படி நான்செய்தவற்றை

சொல்லி— சொல்லிக்கொண்டு

சிரித்து— சிரித்துக்கொண்டு

அங்கு இருக்கில்— என்னிடம் வராமல் காலயாபநம் பண்ணிக்கொண்டு அங்கிருந் தாயாகில்

உன் காது தூருடம்— உன் காதுகள் தூங்கு விடும்;

(ஆதலால்,)

நின்ற— இங்கு நிற்கிற

இக்காரிகையார்— இப்பெண்கள்

சிரியாமே— 'கூழைக்காது' 'சுணைக் காது' என்றிப்படி சொல்லிச்சிரியாதபடி

கையில் திரியை — என்கையி லிருக்கிற திரியை

இடி கடாய் — உன்காது பெருக்கும்படி இட்டுக் கொள்கிடாய்.

சொல்லுவார்— இவன் வெண்ணைப் திருடி னனென்றுற் போலே சொல்லுகிறவர் கருடைய

சொல்லை— வார்த்தையை

மெய் என்று கருதி — உண்மையாக நினைத்து

வெண்ணையை— வெண்ணையை

தொடுப்பு உண்டாய் என்று — களவுகண்டு உண்டாய் என்று

கையை பிடித்து— என்கையைப் பிடித்து

கரை— விளிம்பையுடைய

உரலோடு— உரலோடே

கானை— எல்லாரும் பார்க்கும்படி

என்னை— வெண்ணைப் திருடாதவென்னை

கட்டிற்றிலையே— கட்டவில்லையோ?

(என்று அவன் சொல்ல;)

சிரிதரா!— ஸ்ரீபதியானவனே!

வ்யா. ஒன்பதாம்பாட்டு. மெய்யித்யாதி. "நீரியிட்டுச் சொல்லுகின் மெய்" என்றவாறே, உன் வார்த்தை விச்வஸிக்கப்போகாது, சொன்னோர் சொன்னவார்த்தை கேட்டு என்னை சிக்ஷிப்பாளொருத்தியன்றே வென்ன; நான் அப்படி செய்ததுண்டோ வென்ன; மெய்யென்று சொல்லுவார் சொல்லைக்கருதி. "இவன் வெண்ணெய் களவு கண்டான்" என்று சொல்லுவார் சொல்லும் வார்த்தையை மெய்யென்று புத்திபண்ணி. தொடுப்புண்டாய் வெண்ணெயை யென்று. வெண்ணையைக் களவிலே ஜீவித்தாயென்று. தொடுப்பு- களவு. கையைப் பிடித்தித்யாதி. என்கையைப் பிடித்துக்கொண்டு (க) பாரமான கரையுரலோடே யெல்லாரும் காணும்படி என்னைக் கட்டிற்றில்லையோ வென்று சொல்லி மந்தஸ்மிதஞ் செய்திருக்க. கரையுரலாவது- விளிம்பு சுற்றணையான வுரல். செய்தனவித்யாதி. இப்படி நான்செய்த குற்றங்களைச் சொல்லி ஸ்மிதம் பண்ணிக்கொண்டு என்பக்கல் வாராமல் போதுபோக்கி நீ அங்கேயிருக்கில், ஸ்ரீதரனே! உன்காது தூருங்காண். அவர்களுக்காகவாகிலும் வாவென்ன; அவ்வளவிலும் அவன் வாராமையாலே, கையில் திரியையித்யாதி. நீ விரும்பத்தக்க அழகையுடையார் உன் பக்கல் ப்ராவண்யத்தாலே உன்னைவிட்டுப் போகமாட்டாமல் லஜ்ஜிதைகளாய்நிற்கிற இப்பெண்களானவர்கள், "கூழைக்காது, சுணைக்காது" என்றுற்போலே சொல்லிச் சிரியாதபடி உன் காது பெருக்கும்படி யென்கையில் திரியையிடுகிடா யென்கிறாள். கூ.

மூ.—காரிகையார்க்கு முனக்கு மிடமத்தற்றென் காதுகள் வீங்கியெரியில்

எர்விடைசெற்றிளங்கன் றெறிந்திட்ட விருடீகேசா வெனறனகணேணை. ய.

பதவுரை.

செற்று— முடித்து

இளகன்று— இளங்கன்றின் வடிவாய்நின்ற அசுரனை

எறிந்திட்ட— விளாவாய்நின்ற அசுரன்மேல் எறிந்துவிடாமுட்ட—

இருடீகேசா!— ஹ்ருஷீகேசனே!

என் தன் கண்ணை!— எனக்குக் கண்ணழகனே!

சேரியில்— இவ்விடைச்சேரியிலுள்ள

பிள்ளைகள் எல்லாரும்— எல்லாப் பிள்ளைகளும்

காது பெருக்கி— நிறையக் காதுகளைப் பெருக்கிக்கொண்டு

நிறையும்— நிறைவாகிற்கு

காண்பு— காலமென்றும்.

காதுகள்— என்காதுகளானவை

வீங்கி எரியில்— துடித்து எரியுடலாகில்

காரிகையார்க்கும் — சிரிக்கிற அப்பெண்

களுக்கும்

உனக்கும்— நிறையிட வந்துநிற்கிற உனக்கும்

இழுக்குற்று என் — சேதமன்ன ?

(என்று அவன் சொல்லி;)

காரியது ஆகில்— நிறையிதுவாகில்

தாகில்

தலை நொந்திடும் என்று— தலை நோவெடுக்கும் என்று

விட்டிடேன்— இளம்பருவத்தில் விட்டு

வைத்த என்னுடைய

குற்றம் அன்றே— குற்றமன்றோ;

பரிவிடை— எதிர்த்துவந்த 'அரிஷ்டரோஷபத்தை

என்னுடைய

உண்ணைக்கனிகடருவன் கடிப்பொன்று கோவாமேகாதுக்கிடுவன்
பண்ணைனக்கிழியப் சக— முதைத்திட்ட பற்பாபா விம்கைவோரும். கக.

பதவுரை.

கடி கமழ் — பரிமளம் வீசாகின்ற
தூ குழலார்கள் — தூக்களாரிந்த கூந்தலை
யுடைய பெண்கள்
‡ கண் குளிர— தங்கள் கண் குளிரும்படி
எங்கும் கலந்து நோக்கி — உன்னுடைய
அவயவசோபையை எங்குபோக்க னும்
தாப மாகப்பார்த்து
எண்ணத்துள் — உன்னிஞரி கலக்கமிவ ணறு
மென்னும் நினைவில்
என்றும் இருந்து— என்றும் பொருந்தி
யிருந்து
தித்திக்கும்— அவர்களுக்கு போக்பனகா
கின்ற
பெருமானே!— பெருமையை யுடையவனே!

எங்கள் அழுதே! — எங்களுக்கு அப்த
டானவனே!
சகடம்— சகடாஸுரனை
பண்ணை கிழிய உதைத்திட்ட— கட்டிக்
குவைபோல உதைத்த
பற்பநாபா!— பத்மநாபனே!
உன்னை— நி அழகை நெய்ய
கணிகள் குருவன்— பழங்கள் கொடுப்பேன்;
நல்லும் கோவாதபடி— சுற்றும் கோவாதபடி.
காதுக்கு— உன்காதழகுக்கு
கடிப்பு இடுவன்— பூஷணமிடுவேன்;
இல்லை வாராய்— அதற்கிணங்கு நில்லை வா.

‡ "கண்ணை" என்கிறவிடத்தில் "ஐ" என்னுமது சாரியை.

வ்யா. பதிதிரைராம்பாட்டி. கண்ணணயித்யாதி. * இவளாய்ச்சியர் கண்ணனுள் விடாவிலக்கைச் செய்து விழிக்குமவனைகாணாமல கண்ணணக்குளிரக்கலந்து. உன்னுடைய கண்ணை அவர்களுடைய கண்களாலே குளிரக்கலந்து. இத்தால் - கண்களினாலே சொன்னபடி. எங்கும்நோக்கி. அவர்களுடைய வடிவை யழகுதானே பார்த்து. கடிகமழ் தூங்குழலார்கள். பரிமளப்பிரசாரான தூக்களாலே அலங்கரிக்கபட்டிருந்துள்ள குழலை யுடையவர்களுடைய. எண்ணத்து ளென்றுமிருந்து தித்திக்கும் பெருமானே. சொல்லுக்குள்ளே யிருந்து சமிக்கும்பெருமானை. அன்றிக்கே, கண்ணை யென்கிறபிடத்தில், ஐகாரத்தை யுன்பபடமாக்கி, கடிகமழ் தூங்குழலானவர்கள் தங்கள் கண்குளிரும்படி. உன்னுடைய அவயவசோபையைக் கலக்கநோக்கி எங்குபோக்கப்பார்த்து, உன்னுடைக்கலவியின் ப்ரகாரங்களை யவர்களுடைய அபிமதானுபடான எண்ணங்கடவாமல் அநுக்ரஹிக்கை யிருந்து அவர்களுக்கு நிதிசயம்போக்யமாகிற்கும் பெருமையை யுடையவனே யென்ன வுமாம். எங்களழுதே. எங்களுக்கு நிதிசயம்போக்யனுமாய் வந்தாதா(ப)கனுமாயிருக்கிறவனே. உனக்கபிமதைகளான வவர்களுக்கும் பரிவான வெங்களுக்கு முகப்பாம்படி. உன் காது பொருக்குலைக்கு வாவென்ன; நான் வருகிறன், நீ எனக்கு என்னப்புகுருவாயென்ன; உண்ணைக்கனிகள் தருவன். நீ விரும்பி யழுதுசெய்யுமபடி யுனக்குப் பழங்கள் தருவே னென்ன; ஆரை யிட்டு கடிப்பிடப்புகுந்தால் காதுநோமே யென்ன; கடிப்பொன்றும் கோவாமே காதுக்கிடுவன். சற்றும் கோவுவாராதபடி உன்காதுகளுக்குக் கடிப்பிடுவேனென்றவாறு உடன்பட்டமை தோற்றநிற்க; பண்ணையித்யாதி. கண்வளர்ந்தருளுகிற தனியிடத்திலே காலில்லைக்கு தடம் முளாதாவிக்கு மாய் உன்னை தனிபவர். அத்தைத்தோப்புக்குலபவனைத்

வாவாயென்று புகழ்ந்துகொண்டழைக்கின்றன. ... ... கக.

மூ.—வாவென்றுசொல்லி யென்கையைப்பிடித்து வலியவேகாதிற்கடிப்பை
நோவத்திரிக்கிலுனக் கிங்கிழுக்குற்றென் காதுகணைந்திங் கில்லேன்
நாவற்பழங்கொண்டே வைத்தேனினைவையாணைய் நம்பீ மூன்வஞ்சமகளைச்
சாவப்பாலுண்டு சகடிறப்பாய்ந்திட்ட தாமோதரா விங்கேவாராய். கஉ.

பதவுரை.

வா என்று சொல்லி— 'வா' என்று
சொல்லியழைத்து
என் கையை— என்னுடைய கையை
பிடித்து— சிக்கெனப் பிடித்துக் கொண்டு
வலிய— பலாத்காரமாக
காதில்— என் காதில்
கடிப்பை— கடுக்கனை
நோவ— நோம்படி
திரிக்கில்— திரிகை இட்டாயாகில்
உனக்கு— உனக்கு
இங்கு— இப்போது
இழுக்குற்று என்— தீசதமாவ துண்டோ?
காதுகள் நொந்திடும்— என்காதுகள் நோகும்,
(ஆதலால்)
கில்லேன்— (வ)மாட்டேன்;
(என்று அவன் சொல்ல;)

நம்பீ!— பூர்ணனைவினை
நாவல் பழம்— (நீயுகக்கும்) நாவற்பழங்களை
கொண்டு வைத்தேன் — ஸம்பாதித்துக்
கொண்டுவந்து வைத்தேனன்;
இவை ஆணைப்— இவற்றைப்பார்;
முன்— முன்பு
‡ வஞ்சமகள்— வஞ்சகையான பேய்ச்சி
சாவ— மாளும்படி
பால் உண்டு— அவள் முலையில் பாலையுண்டு
சகடு— சகடமான து
இற— இற்று முறிந்துவிழும்படி
பாய்ந்திட்ட— அவன்மேல் பாய்ந்த,
தாமோதரா!— தாமோதரனே!
இங்கேவாராய்.

---

‡ "வஞ்சமகளை" என்கிறவிடத்தில் ஐகாரம் சாரியை.

வ்யா. பன்னிரண்டாம்பாட்டு. வாவித்யாதி. "பற்பநாபாவிங்கேவாராய்" என்றவாறே வாவென்றுசொல்லி யென்கையைப் பிடித்து. என்னை வாவென்றுசொல்லியழைத்து, நான் வரக்கொள்ள, என்கையை யுறைக்கப்பிடித்துக்கொண்டு. வலியவே காதில் கடிப்பை நோவத்திரிக்கிலுனக் கிங்கிழுக்குற்றென். பலாத்காரேண என்காதில் கடிப்பை நோம்படி திரிகை யிடுவதியாகில் உனக்கு இங்குச் சேதமாவதுண்டோ, என்காதுகள் நோங்காண், வரமாட்டேனென்ன; நாவற்பழம் கொண்டுவைத்தேனினையாணைய் நம்பீ. இவன் வருகைக்காக, "நீயுகக்கும் நாவற்பழம் கொண்டுவைத்தேன்; இவற்றைப் பாராய் நம்பீ" என்று காட்ட, அத்தைக்கண்டவாறே வருவானைப்போலே நிற்க, முன்னித்யாதி. முன்பு தன்வடிவை மறைத்துத் தாய்வடிவுகொண்டு வஞ்சகையாய்வந்த பேய்ச்சியைச் சாம்படியாக முலைப்பாலையுண்டு, கலிவதாக மேலிட்டுவந்த சகடத்தை முறியவுதைத்துப்போகட்டு, அவ்விரோதிகள் கையில் அகப்படாமல் உன்னைநோக்கித் தந்தானைய், அந்தசக்திமாளு யிருக்கச்செய்தே அவக்தரைப்போலே யென்கையிலே பிடியுண்டு நான் கட்டின கயிற்றின் தழும்பு உன்வயிற்றிலே கிடக்கையாலே தாமோதரனென்று போராம்படி யென்கையாலே கட்டுண்டிருந்த நீர்மையை

மூ:—வொருகாதுதாழப் பேருகையம்மைத்து மகரக்குழையிட வேணிமிசை
சீரானசோணை திருமாலைச் சொன்னசொற் சிந்தையுணின்றுதிகழப்
பாரார்தொல்புகழான் புதுவைமன்னன் பன்னிரு நாமத்தாற் சொன்ன
ஆராதவந்தாதி பன்னிரண்டும் வல்லாரச்சுதனுக் கடியாரே. கக.

பதவுரை.

வார்— இப்பல் பாகுமேவ நீண்டிரா நின்ற
காது— காதான்து
தாழ— தாழும்படியாக
பெருக்கி— பெருக்கச் செய்து
அணைத்து— அளவிலில அணைத்து
மகரக்குழை— மகரகுண்டலங்களை
இடவெண்டு— சாத்த ஆசைப்பட்டு
சீரால்— சீர்மையோடே
யசோதை— யசோதைப்பிராட்டி
திருமாலை— ஸ்ரீயபதியான வம்மைக் குறித்து
சொன்ன— சொன்ன
சொல்— சொலவுகளானவை
சிந்தையுள்— தம் திருவுள்ளத்தில்
நின்று— ஸர்வகாலமும் நின்று
திகழ— விளங்குப்படி
பார் ஆர்—பூமிப்பரப்படங்கலும்நிறைந்ததாய்
தொல்— ஸ்வாபாவிகமான
புகழான்— கீர்த்தியை யுடையராய்
புதுவை— ஸ்ரீவில்லிபுத்தூருக்கு
மன்னன்— நிர்வாஹகரான பெரியாழ்வார்
பத்து இரண்டு நாமத்தால் — கேசவாதி
த்வாதச நாமத்தோடு
சொன்ன— அநுபவித்து
ஆராத— அநுபவித்து முடியாததாய்
அந்தாதி— அந்தாதியான
பத்து இரண்டும்— இப்பன்னிரண்டு பாசுரங்
களையும்
வல்லார்— நன்றவல்லவர்கள்
அச்சுதனுக்கு— ஆச்ரிதரை ஒருகாலும்
நழுவவிடாதவனுக்கு
அடியார்— அந்தரங்க கிங்கராவர்.

வ்யா. வாரித்யாதி. ஸ்வபாவமே. யொழுகுதண்டகாதவென்றிமளவும்தாழப்பெருக்கி, மட்டிலேயணைத்து, மகரக்குழை சாத்தவேணுமென்றுசைப்பட்டு. சீராலித்யாதி. சீர்மைகுன்றுபடி. யசோதைப்பிராட்டி. ஸ்ரீயபதியானவம்மைக் குறித்துச்சொன்ன சொலவுகளானவை, சிந்தையுள் நின்று திகழ. தம்முடைய திருவுள்ளத்திலுள்ளே ஸர்வகாலமும் நின்றுவிளங்க. பாரார்தித்யாதி. பூமியிலுள்ளாருடைய ஹ்ருதயங்கள் நிறையும்படி பழையதான புகழையுடை யராய்த் திருப்புதுவைக்கு நிர்வாஹகரான பெரியாழ்வார். பன்னிருநாமமித்யாதி. வைஷ்ணவசிஹ்நமான திருத்வாதசநாமங்களோடே யருளிச்செய்ததாய், அதனை அநுபவிதாக்கருக்கு ஒருகாலும் த்ருப்திபிறவாதே மேன்மேலும் மநோரதிக்குப்படி நிரதிசயபோக்யமாயிருக்கிற அந்தாதியான விவை பன்னிரண்டு பாட்டையும் ஸாபிப்ராயமாக வல்லவர்கள். அச்சுதனுக்கடியாரே. ஆச்ரிதரை யொருகாலும் நழுவவிடாத ஸ்வபாவனானவனுக்கு அநவரத கிங்கராபராகப்பெறுவர். ... ... கக.

பெரியஜீயர் திருவடி களே சரணம்.

(*)

அடிவரவு.—போய் வண்ணை வையம் வணம் சோத்தம்
விண் முலை என் மெய் காரிகை கண்ணை வா வார்காது வெண்ணெய்.

ஆண்டாள் திருமொழி - கஉ - க்கு, பாட்டி - கஉக.

இரண்டாம்பத்து- ஈராஞ்திருமொழி- வெண்ணெயளைந்த- ப்ரவேசம்.

ஸ்ரீகிருஷ்ணன் யசோதைப்பிராட்டி அவனுடைய விஷயத்தின் மேல்படாட்டாலே வந்து போல்யதாக்ஷணமாக அவனை யதூகரித்துக்கொண்டு, காதுபடுக்கி, திரியுடன் கூடப்படும் முதலணைவிட்டுக் காதுஞ்சுத்திப் பெருக்கித் தலைக்கட்டுணவந்தார், பின்னைக்கொக் காதுபெருக்கினால் அந்தச்சொடி நீங்கக் குளிப்பாட்டும் க்ரமத்திலே இவனபஞ்சனமாட்டினை மென்று உதிரப்பண்ணி, அதுக்கு மேலும் முடகாணங்களையும் ஸ்ப்பாதித்து வைத்து நீராட்டி வாலென்றலைந்து, அவன் இஷ்டாநுஸாரியாய் விடாதிருப்பத்திருந்து, அவசியம் இன்று திருமஞ்சனம் செய்யவேண்டுமென்கிற தாக்ஷண்யம் மாதாவுக்குண்டாயிருந்தது, திருமஞ்சனம் செய்தால் பின்பு திருப்பணிக்கலங்காரமாகச் சாத்துவதாக ஆபரணங்களையும் கொடுத்தான் என்கிறவிடத்தை வைத்து அந்காரணத்தையும் காட்ட இவைந்துவருகைக்குடலாக அவனுக்கு அபிமதமான அடுப்பங்கரையும் முன்னிட்டு அவன்படுக்கல் தனக்குமுண்டான ஸ்நேஹாதிசயமும் சொல்லி, * புழுதி யளைந்த பொன்மேனிகாண என்கிறபாசுரம் விருப்பியிருப்பன், ஆழ்வார்கள் "ஒரு குத்தி பிள்ளைவளர்த்தாயடியென்" என்று பழிப்பதாக்கள்; அவ்வளவேயுமன்று. நீபுழுதியும் உடம்புமாயிருக்கிறபடியைக் காணில் உனக்கிடமதுவான தற்பின்னைப்பிராட்டி சிரிக்குமென்றாற்போலே சிலவற்றைச் சொல்லியும் அவனைவருத்தி யுடன்படுத்தி மஞ்சனமாட்டினபிரகாரத்தையும் ஸ்ரமஹரமாயிக்க வாசைப்பட்டு, பாலகாட்பாகர்ஷத்தாலே தகுவல்லத்தாடம்மாயிக்கொண்டு அவன் அப்போது போலே காட்டாதே பாசுரக்கரும்பெல்லாம் தத்தாலட்சேபாலே அவனுக்குறித்துப்பேசி, அவ்வா மஞ்சனமாட்டினகாலாகிற அனந்தரத்தைத் தாழுமநுபவித்து ஹர்ஷடராகிறபடி இத்திருமொழியில். ... ... *

மூ.—வெண்ணெயளைந்த குணுங்குதம் விளாயாடு புழுதியுங்கொண்டு
தின்னெனவிவ்விரா வுன்னைத் தெய்த்துக்கிடக்க நாணுட்டேன்
எண்ணெய்புளிப் பழங்கொண்டிங் கெத்தனைபோது மிருந்தேன்
நண்ணலரிய பிரானே! நாரணா! நீராட வாராய். க.

பதவுரை.

வெண்ணெய் [வெள் நெய்]— (உன் உடம்பில் நுரைகளுக்கு உரிய) வெண்ணெய்க்காப்புப்

புழுதி பழம்— அந்த வெண்ணெயைக் கழற்று வதற்குப் புழுக்காப்பையும்

கொண்டு— கையில் கொண்டு

இங்கு— இவ்விடத்தில்

எத்தனை போதும்— நெடும் போதாக

இருந்தேன்— இராநின்றேன்;

நண்ணல் அரிய— ஸ்வபுருஷத்தால் ஒருவர்க்கும் கிட்டவொண்ணாத

பிரானே!— உபகாரகனே!

வெண்ணெய் அளைந்த— வெண்ணெயோடு கூடின

அழகிய பொன்— அழகிய பொன்போன்ற

குணுங்குதம்— முதுகிலே வாரிக்கொள்ளுதலும்

விளையாடு— விளையாடுதலையுடைய

புழுதியும்— புழுதியையும்

கொண்டு— கொண்டு

இவ்விரா— இன்னிரவில்

உன்னை— உன்னை

தெய்த்து— தினவால் உடம்பைப் படுக்கையி லிலே தெய்த்துக் கொண்டு

ிறையுந்தினையும் வயிறுநிறையுமென்னும் (க)மெளக்திபத்தாலே வெண்ணெய்த்தாழிக்கு
ர திருக்கைகளுள்ளவும் நீட்டி யள்ளியும் " முழுதும்வெண்ணெயளைந்து " என்கிறப
வெண்ணையை முழுக்க விருந்தளைந்து அமுது செய்கையாலே திருமேனி யெங்கும்
ன்னெய் முடையாயிறே யிருப்பது. விளையாடுபுழுதியும். அதுக்குமேலே விளையாடப்
ல் புழுதியிலேபோயிருந்து அளைந்துவிளையாடுகையாலே அந்த வெண்ணெய்ப்பசையோ
திருமேனியெங்கும் புழுதியும்பற்றியிறே கிடப்பது. கொண்டு. இப்படி வெண்ணெ
கையால்வந்த குணுங்குநாற்றத்தையும் விளையாடினபோதைப் புழுதியையும் கொண்டு.
ணென. திண்ணிபதாக- நிச்சயமாக வென்றபடி. இவ்விராவித்யாதி. இந்தராத்ரியில்
ன கண்டநிபாலே உடம்பைப் படுக்கையிலே தெய்த்துக்கொண்டுகிடக்க நான் ஸம்வதி
ன். திண்ணென- ஒட்டேன். நிச்சயமாக வுன்னை யிப்படி கிடக்கவொட்டேன், நான்
ட்டியவிடுவேனன்ன; எனக்கு குளிக்கைக்கு வேண்டுமவை கொண்டுவந்தாயோ வெ
; எண்ணெயித்யாதி. உன் திருமேனிக்கு முந்துறச்சாத்துகைக்கு எண்ணெய்க்காப்பும்,
பு அது கழற்றுகைக்குப் புனிக்காப்பும் கொண்டு அநேகம்போதில்லையோ இங்கே நானி
கிறது. நண்ணலரியபிரானே. ஸ்வயத்நத்தால் ஒருவர்க்கும் கிட்டவொண்ணாத வுபகார
னவனே. நாரணனே. நேமன்மைக்கும் நீர்மைக்கும் ப்ரகாசகமான திருநாமமிறே யிது.
மைபிலையிறே யிவனருக்கிப்போதறிகாக்கு. நீராடவாராய். ஒட்டேனென்று ப்ரேமத்தா
சொன்னாலும் உபகரணங்களை முன்னிட்டாலும் ப்ரயோஜநமில்லையே, நீவந்தாலிறே ப்ர
ஜநமுள்ளது; ஆனபின்பு, நீராடவாவேணுமென்றபேக்ஷிக்கிறள். ... ... க.

மூ.—கன்றுகளோடச் செவியிற் கட்டெறும்பு பிடித்திட்டால்
தென்றிக்கெடுமோகில் வெண்ணெய்திரட்டி விழுங்குமா காண்டன்
நின்றமராமரம் சாய்த்தாய்! நீ பிறந்த திருவோணம்
இன்றுநீ நீராடவேண்டு மெம்பிரா வேடாதேவாராய். உ.

பதவுரை.

கன்றுகள்— கன்றுகளானவை
வெருண்டோடும்படி— வெருண்டோடிப்படி
செவியில்— அவற்றின் காதுகளில்
கட்டெறும்பு— கட்டெறும்பை
பிடித்து இட்டால்— பிடித்து விட்டாயாகில்
ஒன்றி— ஒன்று போனவழி ஒன்று போகா
மல் சிதறி
ஓடிம் ஆகில்— ஓடிப்போய் விடுமாறுல்
(பிறகு நீ,)
வெண்ணெய் திரட்டி— வெண்ணெயைத்
திரட்டி
விழுங்கும் ஆ— விழுங்கும்படியை
காண்பன்— காண்போன்; [காணமாட்டேன்
என்றபடி.]

[கன்றுகள் சிதறி ஓடிப்போனால், பசுக்
கறவாதாகையால் பால் கிடைக்காமற் போக
வே உனக்கு ஜீவநமான வெண்ணெய் குறை
ந்து விடும் என்று கருத்து.]

நின்ற— நெருங்கி நின்ற
மராமரம்— ஸப்தஸால வ்ருக்ஷங்களை
சாய்த்தாய்!— முறித்துச் சாய்த்தவனே!
இன்று— இந்நாள்

(க) ஏழு.

நீ பிறந்த— நீ அவதரித்த
திருவோணம்— சிரவண நக்ஷத்திரங்காண்;
(ஆதலால்,)
நீ நீர் ஆடவேண்டும்— நீ திருமஞ்சனம்
கொண்டருள வேணும்;
ஓடாதே— (என்னை வஞ்சித்து) ஓடிப்
போகாமல்
வாராய்— வந்தருளவேணும்.

வயா. இரண்டாம்பாட்டு. கன்றித்யாதி. இவளைழக்கச்செய்தேயும் வாராமே, லோபரைப்போன்று கன்றுகள் வெருண்டோடுகிறது காண்கைக்காக அவற்றின் செவியிலே கட்டெறும்புகளைப் பிடித்திட அத்தைக்கண்டு சொல்லுகிறாள்;— கன்றுகள் வெருண்டோடும்படியாக அவற்றின் செவியிலே முறியக்கடிக்கும் கட்டெறும்புகளைப் பிடித்திட்டால். தென்றியித்யாதி. வெருண்டு ஒன்றுபோனவழி ஒன்றுபோகாத சிதறி, காணவொண்ணாதபடி ஓடிப்போய்விடுமாகில். வெண்ணெய்திரட்டி விழுங்குமாகாண்பன். வெண்ணெயிலுண்டான விருப்பத்தாலே அத்தைதிரட்டியிருந்து நீவிழுங்கும்படியைக்காணக்கடவேன். கன்றுண்டானலன்றே பசு கறக்கலாவது, பசு கறந்தாலன்றே பாலுண்டாவது; பாலுண்டாய்வெண்ணெயுண்டாகவேணும், ஆகையால் உன்னுடைய ஜீவநந்திடாய் குறையப்புகுகிறதென்கை. நின்ற மராமரம் சாய்த்தாய். ‡ ஒராச்சிதனுடைய அதிசங்கையைப் போக்குகைக்காக நினைத்தபடி இலக்குக் குறிக்கவொண்ணாதபடி. நெருங்கிநின்ற பராமரங்களை மறுபாடுருவ எய்து சாய்த்தவனே. நீ பிறந்த திருவோணமின்று. நீ யவதரித்த திருவோணநக்ஷத்திரங்காணின்று. இதுதான் வைஷ்ணவ நக்ஷத்ர மாகையாலும் அவதாரநக்ஷத்திரங்களிலே இந்த நக்ஷத்ராந்வய முண்டாகக்கூடுகையாலும் தர்ம்மயக்யத்தைப் பற்றச்சொல்லுகிறது. நீ நீராடவேண்டும். பிறந்தகாலைக்கும் குளியாதிருப்பாருண்டோ;(க)ஸ்வதா நீயின்று திருமஞ்சனஞ்செய்யவேணுமென்ன; “மாட்டேன்” என்று ஓடப்புக்கவாறே எம்பிராலோடாதேவாராய். என்னுடைய நாயனே! ஓடலாகாது காண், வாராயென்கிறாள். ... ... உ—

மூ.—பேய்ச்சிமுலையுண்ணைக்கண்டு பின்னையு நில்லாதென்னெஞ்சம்
ஆய்ச்சியரெல்லாருங் கூடியழைக்கவு நான்முலைதந்தேன்
காய்ச்சின நீரோடு நெல்லிக் கடாரத்திற் பூரித்துவைத்தேன்
வாய்த்த புகழ்மணிவண்ணனே! மஞ்சனமாட நீவாராய். ரு.

பதவுரை.

பேய்ச்சி— பூதனையின்
முலை— முலைப்பாலை
உண்ண— அவள் மாளும்படி நீ அமுது
செய்யாநிற்க
கண்டு பின்னையும்— கண்டபின்பும்
என் நெஞ்சம்— என் நெஞ்சானது
நில்லாது— (உன்னிடத்தில் ப்ரீதியாலே)
தரிக்கமாட்டாமல்
ஆய்ச்சியர் எல்லாரும்— இடைச்சிகளெல்லாரும்
கூடி— ஒன்றுசேர்ந்து
அழைக்கவும்— (“அவன் பூதனையின் முலையுண்ட போதைச் செய்தி கண்டோமியாயோ? நீயுமவனுக்கு முலைகொடுக்கப் புகுகிறாயே” என்று பயப்படுத்த)
என்னை வணமடியாநிற்கச்செய்தேயும்

முலைதந்தேன் நான்— உனக்கு அஞ்சாமல் முலை கொடுத்த நான்;
நெல்லியொடு— நெல்லியோடே
காய்ச்சின— காய்ச்சின
நீர்— தீர்த்தத்தை
கடாரத்தில்— திருமஞ்சனத் தாழியிலே
பூரித்து வைத்தேன்— நிறைத்துவைத்தேன்;
வாய்த்தபுகழ்— நல்லயசஸ்ஸை யுடையனும்
மணி வண்ணனே!— நீலமணி போன்ற வர்
ணத்தை யுடையனை கண்ணனே!
மஞ்சனம் ஆட— (புழுதிமுதலியவை போம்
படி) நீராட
நீ வாராய்.

வ்யா. மூன்றும்பாட்டு. பேய்ச்சியித்யாதி. "வஞ்சனையால்வந்த பேய்ச்சி" என்கிறபடியே- தன்வடிவை மறைத்து என்வடிவைக்கொண்டுவந்த பேய்ச்சியுடைய முலையை அவள் முடியும்படி யுண்டமைகண்டிருக்கச்செய்தே. பின்னையும் நில்லாதென் னெஞ்சம். இத்தைக்கண்டால் அஞ்சியோடவேண்டியிருக்க, பின்னையும் என்னுடைய நெஞ்சானது உன்பக்கல் ஸ்நேஹமடியாக (க) தரிக்கமாட்டாதே. ஆய்ச்சியரெல்லாருங் கூடியழைக்கவும். பேய்ச்சி பட்டுக்கிடக்கிறபடியையும் நீ அவள்மேலேயிருந்து முலையுண்கிறபடியையும் கண்டு, இடைச்சிகளெல்லாரும் (உ) பீதைகளாய்க் கூப்பிடச்செய்தேயும் நானஞ்சாமல்வந்து உன்னை யெடுத்து முலையைத்தந்தேன். இப்படியன்றோ எனக்கு உன்பக்கலுண்டான ஸ்நேஹம்; ஆன பின்பு நான்சொன்னது செய்யவேணுங் காணெண்கை. காய்ச்சினநீரித்யாதி. உன்னுடைய திருமேனிக்கநுகூணமாக நெல்லியோடே காய்ச்சின திருமஞ்சநத்தைக் கடாரத்திலேபூரித்து வைத்தேன். வாய்த்தபுகழித்யாதி. பேய்ச்சியுடைய வஞ்சனையிலே அகப்படாதே அவளை நிரஸித்து உன்னைநோக்கித் தருணகையாலே நன்றான புகழையுடையனும், அநுபவிப்பார்க்கு ஆகர்ஷகமாம்படி நீலரத்நம்போன்ற வடிவையுமுடையவனே. மஞ்சனமாட நீவாராய். மாணிக்கத்துக்கு மாசுசறிஞற்போலே உன் திருமேனியில் வந்தேதறியான புழுதி முதலானவை போம்படி திருமஞ்சநம் செய்யவரவேணும். ... ... கூ.

மூ.—கஞ்சன் புணர்ப்பினில்வந்த கடியசகடமுதைத்து
வஞ்சகப்பேய் மகடுஞ்ச வாய்முலைவைத்த பிரானே!
மஞ்சளும் செங்கழுநீரின் வாசிகையு நாறுசாந்தும்
அஞ்சனமுங் கொண்டுவைத்தே னழகனே! நீராடவாராய் சு.

பதவுரை.

கஞ்சன்— கம்ஸனுடைய
புணர்ப்பினில் வந்த— ப்ரேரணையிலுல் வந்த
கடிய— க்ரூரமான
சகடம்— சகடாஸுரனை
உதைத்து— திருவடிகளால் முறித்து
வஞ்சகம்— வஞ்சனையையுடைய
பேய் மகள்— பூதனையானவள்
துஞ்ச— மாண்டுபோம்படி
முலை— அவள் முலையில்
வாய் வைத்த— வாய் வைத்தமுது செய்த
செம் கழுநீரின் வாசிகையும் — செங்கழு
நீர்மாலையும்
நாறு— கஸ்தூரி, பனி நீர் முதலியவற்றுல்
பரிமளியாநின்ற
சாந்தும்— (கலவைச்) சந்தநமும்
அஞ்சனமும்— (திருக்கண்களுக்குச் சாத்த)
அஞ்சநமும்
கொண்டு வைத்தேன்— ஸம்பாதித்துவைத்
திருக்கிறேன்;
(ஆதலால்,)

சகடாஸுரனே, முலைவரவு தாழுத்துச்சற்றி நிமிர்த்த திருவடிகளாலே கலக்குழியுட்படி யுதைத்து. வஞ்சகமித்யாதி. தாய்வடிவுகொண்டுவந்த வஞ்சகியான பேய்ச்சி முடியுட்படியாக அவள் முலையிலே உன் திருப்பவளத்தைவைத்து உண்ட வுபகாரகனனவனே. சகடாஸுரன் கையிலும் பூதனைகையிலும் அகப்படாமல் உன்னை நோக்கித்தந்த வுபகாரகனனவனன்றேவென்கை. மஞ்சளுமித்யாதி. உன் திருமேனிக்கு நிறம்பெறச் சாத்துகைக் கீடான மஞ்சளும், உன் திருமுடிக்கலங்காரமாகச் சாத்தத்தக்க செங்கழுநீர் வாசிகையும், உன் திருமேனிக்கநுகுணமாம்படி ஆறிக்குளிர்ந்து மணத்திருக்கிற சாந்தும், உன்னுடைய திருக்கண்களுக்குச் சாத்துகைக்கீடான அஞ்சனமும் கொண்டுவந்து வைத்தேன். அழகனே நீராட வாராய். இவையெல்லாம் மிகையாம்படியான வழகையுடையவனே! உன்னழகு தோன்றும்படி திருமஞ்சனம் செய்ய வரவேணும். ... ... சு.

மூ.—அப்பங்கலந்த சிற்றுண்டி யக்காரம் பாலிற்கலந்து
சோப்படநான் சுட்டுவைத்தேன் தின்னலுறுதியேனம்பி!
செப்பிளமென்முலையார்கள் சிறுபுறம்பேசிச் சிரிப்பர்
சோப்பட நீராடவேண்டுஞ் சோத்தம்பிரானிங்கேவாராய். ரு.

பதவுரை.

நம்பீ!— பூர்ணனனவனே!
நான்— தாயான நான்
அப்பம் கலந்து— அப்பத்தோடே சேர்ந்த
சிறு உண்டி— சிற்றுண்டியை
பாலில்— பாலிலே
அக்காரம் கலந்து— $ கருப்புக்கட்டியை இட்டுப் பிசைந்து
சோப்பட— நன்றாக
சுட்டு வைத்தேன்— பக்குவமாக்கி வைத்தேன்;
தின்னல் உறுதியேல் — அவற்றை அமுது செய்ய விருப்புற்றிருந்தாயாகில்
சோப்பட— நன்றாக
நீர் ஆடவேண்டும்— திருமஞ்சனம் கொண்டருள வேணும்;

(நீராடா திருந்தால்,)
செப்பு— செப்புப்போன்ற ஸ்தி ரவசனத்தை யுடைத்தாய்
இள— இனியதாய்
மெல்— மிருதுவான
முலையார்கள்— முலையை யுடையபெண்கள்
சிறு— தோற்றின நிசபாவிதங்களை
புறம்பேசி— காணாதவிடங்களிலே சொல்லி
சிரிப்பர்— பரிஹஸியா நிற்பர்கள்;
பிரான்!— நாயனே!
சோத்தம்— உன்னைத் தொழுகிறேன்;
இங்கேவாராய்— (அவர்கள் பரிஹாஸத்துக் கிடமாம்படி.) இங்கே வரவேணும்.

வ்யா. ஐந்தாம்பாட்டு. அப்பாதித்யாதி. அப்பத்தையும் அத்தோடே சேர்ந்த சிற்றுண்டியாகிற அபூப விசேஷத்தையும். அக்காரம் பாலில்கலந்து. பாலிலே $கருப்புக்கட்டியையிட்டுப் பிசைந்து. சோப்படவித்யாதி. நன்றாக நான் சுட்டுவைத்தேன். சோப்பட - நன்றாக. தின்னலுறுதியேல் நம்பி. பிள்ளைத்தனத்தில் பூர்த்தியை யுடையவனே! அமுது செய்யவேணுமென்று அதிலே உற்றிருந்தாயாகில், நீராடவேண்டுமென்று மேலே அன்வயம். செப்புப்போலே யிருக்கிற ஸ்திரவசனத்தையுடைத்தாய் இனியதாய் மிருதுவாயிருக்கிற முலை

யையுடையவர்கள். சிறுபுறம் பேசிச்சிரிப்பர். நீ நீராடாமலிருக்கிற வடிவைக்கண்டால் தோற்றின புன்மைகளைக் காணுதவிடங்களிலே சொல்லிச் சிரியாநிற்பர்கள். சிறுமை - புன்மை. புறம்பேசுகையாவது - காணுதவிடத்தே சொல்லுகை. சொப்பட நீராடவேண்டும். அதுக்கிடமறும்படியாகவும் நன்றாக நீராடலாமென்ன; துவளவிழுமும் அவன்வாராமையாலே சோத்தம்பிரா னிங்கேவாராய். பிராணே! உன்னைத்தானழைக்கிறன், இங்கே வாராயென்று அழைக்கிறாள். ... ... ரு.

மு.—எண்ணெய்க்குடத்தையுருட்டி யிளம்பிள்ளை கிள்ளியெழுப்பிக்
கண்ணைப்புரட்டி விழித்துக் கழகண்டு செய்யும்பிரானே!
உண்ணைக்கனிகடருவ னெனிகடலோத நீர்போலே
வண்ணமழகியாரம்பி! மஞ்சனமாட நீ வாராய். சு.

பதவுரை.

பிரானே!— ஸ்வதந்த்ரனே!
உன்ன— நீ புஜிக்கும்படி
கனிகள் தருவன்— பழங்கள் கொடுப்பேன்;
(ஆனைபின்பு,)
ஒலி— கோஷியா நின்ற
கடல்— ஸமுத்ரத்தின்
ஓதம்— திரைக் கிளப்பத்தையுடைய
நீர் போலே— ஜலம்போலே
அழகிய வண்ணம்— அழகிய நிறத்தை யுடைய
ஆரம்பி!— பூர்ணனே!
மஞ்சனம் ஆட நீ வாராய்.

என்னெய்குடத்தை—எண்ணெய்க்குடத்தை
உருட்டி— உருட்டியும்
இள பிள்ளை— (தூங்குகிற) சிறுப் பிள்ளையை
கிள்ளி எழுப்பி— விரிட்டுக் கூப்பிடும்படியாகக் கிள்ளி எழுந்திருக்கச் செய்தும்
கண்ணினை— கண் இணையை
புரட்டி விழித்து— அகவாய் புறவாயாகப் புரட்டி விழித்து [அப்பூச்சி காட்டி என்றபடி..]
கழகண்டு— இப்படி பொறுக்க முடியாத தீம்புகளை
செய்யும்— செய்யா நின்ற

வ்யா. ஆழும்பாட்டு. எண்ணெயித்யாதி. அசத்நிலுள்ளா ரெல்லாரும் அய்யபா ரம்படியாக எண்ணெய்க்குடத்தை யுருட்டி. அத்தை யிறைப்பார் வழிப்பாராய்க்கொண்டு வ்யாகுலப்படாநிற்கச்செய்தே; இளம்பிள்ளை கிள்ளியெழுப்பி. அத்தைவிட்டிங்கே யோடிவர வேண்டும்படி-கிடந்துறங்குகிற சிறுப்பிள்ளையைத் தேவளறிந்தாற்போலே விரிட்டுக்கூப்பிடும் படியாகக் கிள்ளியெழுப்பி. கண்ணைப்புரட்டிவிழித்து. அருகுநின்றவர்கள் முகத்திலே "அப் பூச்சி" என்று கண்ணினிமையை அகவாய் புறவாயாகப்புரட்டி விழித்து. கழகண்டு செய்யும் பிரானே. இப்படி துஸ்ஸஹமான தீம்புகளைச் செய்யும் ஸ்வதந்த்ரனனவனே. ஒருத்தர் கையிலும் அடங்காதானு யிராநின்றுயே யானாலும், நான் இப்போது சொல்லிற்றுச் செய்ய வேணுங்காணென்று கருத்து. உண்ணைக்கனிகள்தருவன். நீ விரும்பி யமுது செய்யும்படி

மூ.—கறந்தநற்பாலுறுதயிருங் கடைந்துறிமேல் வைத்தவெண்ணெய்
பிறந்ததுவேமுதலாகப் பெற்றறியே னெம்பிரானே!
சிறந்தநற்ற யலர்தூற்று மென்பதனுற் பிறர்முன்னே
மறந்து முரையாடமாட்டேன் மஞ்சனமாட நீ வாராய். எ.

பதவுரை.

எந்தாய்!— என் தாயினே!
பிறந்தது முதலாக — நீ பிறந்தவன்று தொடங்கி
கறந்த— ப்ராப்தகாலங்களில் கறக்கப்பட்ட
நற் பாலும்— நல்ல பாலையும்
தயிரும்— தயிரையும்
கடைந்து— கடைந்து
உறி மேல் வைத்த — உறி மேல் வைக்கப் பட்ட
வெண்ணெய்— வெண்ணெயையும்
பெற்று அறியேன்— நான் பெற்றதேயில்லை;
சிறந்த நல்தாய்— "பிள்ளைமேல் குற்ற முண் டாலும் மறைக்கக் கடவ மிக்க ப்ரீதியை யுடைய தாயானவள்
அலர் தூற்றும்— பழி தூற்று நின்றுள்"
என்பதனால்— என்று உலகத்தார் சொல்லும் மத்தைப்பற்ற
பிறர் முன்னே— அயலார் முன்பு
மறந்தும்— ஞாபகம் தப்பியும் கூட
உரையாட மாட்டேன்— வாய்விடமாட்டேன்;
மஞ்சனம் ஆட நீ வாராய்.

வ்யா. எழாம்பாட்டு. கறந்தவித்யாதி.. ப்ராப்தகாலங்களிலே கறந்த நல்லபாலும்.. நன்மையாவது - நாழியும் உழக்குமெய்போருகை. தயிரும்.. அந்தப்பாலிலேயுறைந்ததயிரும்.. கடைந்துறிமேல் வைத்தவெண்ணெய். அப்படி யிருந்துள்ள தயிரைக் கடைந்து நாழியிலே சேர்த்து உறிமேலேவைத்த வெண்ணெயும். பிறந்ததித்யாதி. நீபிறந்தவன்றுதொடங்கி, என் தாயினே! இவை நான் பெற்றறியேன். சிறந்தவித்யாதி. குற்ற முண்டாலும் மறைக்கக் கடவ மிகவும் ஸ்நேஹநிதியான தாயானவள்தான் பழிதூற்றுகின்றாளென்று லோகம்சொல்லும் மத்தைப்பற்ற அந்யருடையமுன்பு அபுத்திபூர்வகமாகவும் வாய்விடமாட்டேன். மஞ்சன மாடநீவாராய். இப்படி உனக்கு ஸ்நேஹநிதியான வெனக்கு ப்ரியமாக நீ மஞ்சநமாட வர வேணும். ... ... எ.

மூ.—கன்றினை வாலோலைகட்டிக் கனிகளுதிரவெறிந்து
பின்றொடர்ந்தோடியோர் பாம்பைப் பிடித்துக்கொண் டாட்டினைப்போலும்
நின்றிறத்தேனல்லே னம்பி! நீபிறந்த திருநன்னாள்
நன்று நீ நீராடவேண்டும் நாரணனோடாதேவாராய். வ.

பதவுரை.

கன்றினை— ஒரு கன்றை
வால் ஓலை கட்டி— வாலில் ஓலையைக்கட்டி
கனிகள் உதிர எறிந்து— பழங்கள் உதி
ஓடி— ஓடிச்சென்று
ஓர் பாம்பை— ஒரு பாம்பை

நகத்தர்ங்காண்— நகத்தர்ங்காண்டு இன்று;
நீ பிறந்த— நீ அவதரித்த
நல்— விலக்ஷணமான
திரு நாள்— திரு நக்ஷத்ரங்காண் இன்று;
நன்று நீ நீராடவேண்டும். நன்றாக நீ திருமஞ்சநம் செய்யவேணும்.
ஒருகாலும் நீராடாதாரும் பிறந்தகாலில் நீராடாதாரில்லையிறே. நாரணா வோடாதேவாசாய்.
ஸர்வாத்மாக்களோடும் ஒழிக்கவொழியாத ஸம்பந்தத்தை யுடையவனே! என்னுடைய சொல்லை மறுத்து ஓடலாகாதுகாண், வாசாய். ... ... அ'

நாரணா!— நாராயணனே!
ஓடாது வாராய்— ஓடாமல் வந்தருளாய்.

வ்யா. எட்டாம்பாட்டு. கன்றினையித்யாதி. கன்றுகள் மேய்க்கப்போனவிடத்தே வெருண்டு துள்ளியோடுமது காண்கைக்காக ஒருகன்றை வாலிலே ஓலையைக்கட்டி, உன்னை நலிகைக்காகக் கன்றுகளின் நடுவே கலசிவந்து நின்றமேதார் ஆஸுரமானகன்றைக்குணிலாகக்கொண்டு ஆஸுரமான விளாவினுடைய பழங்கள் உதிரவெறிந்து. பின்னித்யாதி. அதுக்குப் பின்பாக வோடிச்சென்று ஒருபாம்பைப் பிடித்துக்கொண்டு ஆட்டினையோதான். நீயிப்போது செய்கிற தீம்பால் அவையும் செய்தாயாக நான் கேட்டதுங்கூடமிறே. துடர்ந்தென்றது - (க) கறிவாசியாய், சென்றென்றபடி. நின்னித்யாதி. உன்படிகளைனக்கொன்றும் தெரிகிறதில்லை. அதுகிடக்கிடீ. நீபிறந்த திருநாள். நீ யவதரித்த விலக்ஷணமான திருநக்ஷத்ரங்காணின்று. நன்று நீ நீராடவேண்டும். நன்றாக நீ திருமஞ்சநம் செய்யவேணும். ஒருகாலும் நீராடாதாரும் பிறந்தகாலில் நீராடாதாரில்லையிறே. நாரணா வோடாதேவாசாய். ஸர்வாத்மாக்களோடும் ஒழிக்கவொழியாத ஸம்பந்தத்தை யுடையவனே! என்னுடைய சொல்லை மறுத்து ஓடலாகாதுகாண், வாசாய். ... ... அ'

மூ.—பூணித்தொழுவினிற்புக்குப் புழுதியளைந்த பொன்மேனி
காணட்பேரிது முகப்ப ருகிலுங்கண்டார் பழிப்பர்
நாணைத்தனையுமிலாதாய்! நற்பின்னை காணிற்சிரிக்கும்
மாணிக்கமே! என்மணியே! மஞ்சனமாட நீவாராய். கூ.

பதவுரை.

பூணித் தொழுவினில்— பசுக்களை யடைத்துத் திறந்து விடும் தொழுவிலே
புக்கு— ப்ரவேசித்து
புழுதி அளைந்த— புழுதியை அளைந்த
பொன் மேனி— பொன் போன்ற திரு மேனியை
காண— காண்கைக்கு
பெரிதும்— மிகவும்
உகப்பன்— விரும்பியிருப்பேன்;
ஆகிலும்— நாணுகந் திருந்தாலும்
கண்டார்— உன்னைப் பார்த்தவர்கள்
பழிப்பர்— (“ஒருத்திபிள்ளை பெற்று வளர்த்தபடியென்!” என்று) பேசுவர்கள்;
எத்தனையும்— சற்றேனும் [துளிகூட]
நாண் இலாதாய்!— வெட்கமில்லாதவனே!
நற் பின்னை— நப்பின்னையாண்டாள்
காணில்— உன் உடம்பைக் கண்டாளாகில்
சிரிக்கும்— சிரியாநிற்கும்;
(ஆதலால்,)
என்— எனக்கு
மாணிக்கமே!— மாணிக்கம்போன்றவனே!
மணியே!— மணிபோன்றவனே!
மஞ்சனம் ஆட நீ வாராய்.

வ்யா. ஒன்பதாம்பாட்டு. பூணியித்யாதி. பசுக்களையடைத்துத் திறந்துவிடும் தொழுவிலேபுக்கு. ஜாத்யுசிதமாகத் தொழுக்களிலே புகுந்து விளையாடாநிற்குமிறே. புழுதி

(க) கறிவாசியாய்,

பற்றச்சொல்லுகிறது. காணப்பெரிதுமுகப்பன். நீராட்டிக்காண்பதிலும் (க) முத்தபாவம் தோற்றுனகபாலை, இப்படி யிருக்கிற வுன்திருமேனியைக் காண்கைக்கு மிகவும் விரும்பி யிருப்பன். ஆகிலும் கண்டார் பழிப்பர். காலுகத்திருந்தாலும் உன்னைக்கண்டவர்கள் "ஒருத் தி பிள்ளை பெற்றுவளர்த்தபடியென்!" என்று ஏசுவர்கள். நாணைத்தனையுமிலாதாய். எகமே சமும் லஜ்ஜையில்லாதவளை. நற்பின்னைகாணிற் சிரிக்கும். நீ புழுதியும் உடம்புமாயிருக்கிற படியை நற்பின்னை காணுமாகில் மைத்துனனையாலே சிரிக்கும். நாட்டார் பழிக்கு அஞ்சு கிறாளத்தனை, நற்பின்னை சிரிப்புக்கு லஜ்ஜிக்கவேண்டாவோ. நீ அதுசெய்யாதொழிகிறது நிர்லஜ்ஜனகையாலேயென்று கருத்து. மாணிக்கமேயென்மணியே. வடிவழகுக்கு ஒன்றே உபமானமாவதொன்றில்லாமையாலே அங்குமிங்கும் கதிர் பொறுக்குகிறுள். மாணிக்கம் போலேயும் மரகதம்போலேயு மிருக்கிற வடிவழகை யுடையவனை யென்கை. மஞ்சனமாட நீ வாராய். இப்படி யிருக்கிற வுன்திருமேனியில் வந்தேறியான அழுக்குக் கழிந்து விளங்கும் படி திருவந்தகமாட வாவென்றுமாம். ... ...

அ. நிகமத்தில்- இத்திருமொழி கற்றார்க்கு பலம் சொல்லித்தலைக்கட்டுகிறார்.

மூ.—கார்மலிமேனிநிறத்துக் ¶கண்ணபிரானையுகந்து
வார்மலிகோங்கையதோதை மஞ்சனமாட்டியவாற்றைப்
பார்மலிதொல்புதுவைக்கோன் பட்டர்பிரான் சொன்னபாடல்
சீர்மலிசெந்தமிழ்வல்லார் தீவினையாதுமிலரே. ௧.

பதவுரை.

கார்— நீர் கொண்டெழுந்த காளமேகத்திற் காட்டில்
மலி— மிகுத்திருந்துள்ள
மேனி நிறம்— திருமேனி நிறத்தை யுடை பனை
கண்ண பிரானை— கண்ணபிரானை
உகந்து— ஆதரித்து
வார் மலி கொங்கை— கச்சி லடங்காமல் விம்முமிப்படியான முலையைபுடைய
அசோதை— யசோதையானவள்
மஞ்சனம் ஆட்டிய— நீராட்டின
ஆற்றை— ப்ரகாரத்தை
பார் மலி — பூமியில் லடங்காத எற்றத்தை யுடையதாய்
தொல்— ப்ராசீநமான
புதுவை— பூரீ வில்லிபுத்தூருக்கு
கோன்— நிர்வாஹகரான
பட்டர் பிரான்— பெரியாழ்வார்
சொன்ன— அருளிச்செய்ததாய்
சீர் மலி— லக்ஷணங்களமைந்ததாய்
செம் தமிழ்— செந்தமிழா யிருந்துள்ள
பாடல்— (இப்)பாடலை
வல்லார்— ஓதவல்லவர்கள்
தீவினை யாதும் இலர்— தீவினை யொன்று மில்லாதவர்கள்.

வ்யா. கார்மலிமேனிநிறத்து. நீர்கொண்டெழுந்த காளமேகத்திற்காட்டில் மிகுத்தி ருந்துள்ள திருமேனி நிறத்தையுடைய. கண்ணபிரானையுகந்து. ஆச்ரிதர்க்கு ஸுலபனு மாய் உபகாரகனுமான்வனை ஆதரித்துக்கொண்டு. வார்மலியித்யாதி. கச்சி லடங்காமல்

கைக்கு நிர்வாஹகரான பெரியாழ்வாரருளிச்செய்த. சீர்மலிசெந்தமிழ்வல்லார். சீர்மலிகை யாவது- சப்தலக்ஷணங்களில் குறைவற்றிருக்கையாலே அழகுமிக்கிருக்கை. அன்றிக்கே, பகவத்குணங்களால் நிறைந்திருக்கிற வென்றுதல். செந்தமிழ். ஆர்ஜவயுக்தமான தமிழ். அதாவது- சப்தத்திலுடைய ப்ரஸந்நதையாலே உள்ளில் கிடக்கிற அர்த்தம் தானே ப்ரகாசிக் கும்படி யிருக்கை. பாடல். பாட்டுக்கள். வல்லார். இவற்றை ஸாபிப்ராயமாகவல்லவர்கள். தீவினையாதுமிலரே. தீவினையொன்று மில்லாதவராவர். அவர்களுக்கு ஒரு துஷ்கர்மங்களுமில்லை யென்கை. ... ...

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

அடையவ.—வெண்ணெய் கன்று பேய்ச்சி கஞ்ச னப்ப மெண்ணெய்
கறந்த கன்றினை பூணி கார் பின்னை.

—(*)—

ஆ - திருமொழி, கக - க்கு, பாட்டு- கசக.

அ. "எல்லாம் தெய்வங்கை பிசாதை பெற்றுளே" என்கிறபடியே அவதார ஸமயமே தொடங்கி இவ்வவதாரசேஷ்டித ரஸமெல்லாம் தானே முற்றூட்டாக வநுபவித்த பிசாசைநப்பிராட்டி, அவனுடைய அவதாரத்தின் மேல்பாட்டால் வந்த பால்யாநுகுண மாக அவள் அவனை "மஞ்சனமாடவாராய்" என்று அர்த்திக்க, அவன் அதுக்கிசையா மையாலே அதிக ப்ரகாரண அநுஸரித்து உடன்படுத்தி மஞ்சனமாட்டித் தலைக்கட்டின வகுந்தரம், அவனுக்குத் திருக்குழல்வாருவதாக உத்தியோகித்து அவன் பிணங்கியோடாமல் இசைந்து நிற்கைக்காக, லோகத்தில் சிறுப்பிள்ளைகளைக் குழல்வாருவார், அவர்களை வசப் படுத்துகைக்காக மருட்டிச் சொல்லுமாபோலே, இவனுடைய பால்யாநுகுணமாக "அக் காக்காய் குழல்வாரவா" என்று பலகாலு மிவன் செவிகேட்கச் சொல்லிச் சீராட்டிக்கொ ண்டிருந்து திருக்குழல்வாரின ப்ரகாரத்தையும் தாமநுபவிக்க வாசைப்பட்டு, பாவநாப்ரகர் ஷத்தாலே ததவஸ்தாபந்நராய்க்கொண்டு, தத்காலம்போலே தாம் அவனைக்குறித்து அப்பா சுரங்களைச் சொல்லி, திருக்குழல் வாருகையாகிற ரஸத்தை யநுபவிக்கிறார். ... ... *

மூ.—பின்னைமணாளனைப் பேரிற்கிடந்தானை
முன்னையமரர் முதற்றனி வித்தினை
என்னையுமெங்கள் குடிமுழுதாட்கொண்ட
மன்னனைவந்து குழல்வாராயக் காக்காய்
மாதவன்றன்குழல் வாராயக்காக்காய். க.

பதவுரை.

பின்னை— நப்பின்னைப் பிராட்டிக்கு	பேரில்— "திருப்பேர்" என்னும் திவ்ய தேசத்தில்

முன்னே அடியார்— நக்கபிரானருளாலே

முதல்— தலைவனுக்கு

தனி விந்தினை— அத்விதீயமான பூதலப்

என்னையும்— என்னையும்

எங்கள் குடிமுழுது— * எழாட்காலும் பழிப்

பில்லாத எங்கள்குடியிலுள்ளாரெல்லாரை

யும்

ஆள் கொண்ட— அடிமை கொண்ட

மன்னனை— ராஜாவானவனை

வந்து— அருகே வந்து

‡ குழல்வாராய் அக்காக்காய்;

‡ குழல்வாராய் அக்காக்காய்.

---

‡ இது சிறுப் பிள்ளைகளைக் குழல் வாருவார் சொல்லுகிற பாசுரம். மேலில் "உற்றனை பேசி நீ யோடித் திரியாதே" என்றும், "பிண்டத் திரளையும் பேய்க்கிட்ட நீச்சோறு முண்டற்கு வேண்டி நீ யோடித் திரியாதே" என்று மருவிச் செய்தையால் காகத்தைநோக்கிச் சொல்லும் பாசுரமென்று கொள்ளலாகும். "அக்காக்காய்" என்பது வ்யாவஹாரிகச் சொல்லு.

வ்யா. முதற்பாட்டு. பின்னைமணாளனை. நற்பின்னைப் பிராட்டிக்கு வல்லபனான வனை. இவ்வதாரத்துக்கு ப்ரதாநமஹிஷி பிவளிறே. மேன்மைக்கு ஸ்ரீயபதியென்னுமா போலேயிறே நீர்மைக்கு இவளுக்கு வல்லபனென்கிறதும். பேரில் கிடந்தானை. அதுக்கு மேலை ஒரு நீர்மையிறேயிது. அவதார ஸௌலப்யம் போலன்றிறே அர்ச்சாவதார ஸௌலப்யம். "கொடம்பிளர் பின்னை கோலங்கூடுதற்கேறுகொன்றான் - நெடுந்திருப்பேரருள் மேவு மெம்பிரான்" என்னுமாபோலே - பின்னைக்கு மணாளனைதுக்கும் பேரில்கிடந்ததுக்கு மொரு சேர்த்தியுண்டிறே. நற்பின்னைப்பிராட்டியைத் திருமணம் புணர்ந்து, பின்பு அவளோடே கூடவந்து கண்வளர்ந்தருளிற்றுத் திருப்பேரிலேபோலே காணும். முன்னேயமரித்தபடி. கீழ்ச்சொன்ன நீர்மைக்கெதிர்த்தட்டான மேன்மையைச்சொல்லுகிறது. (க) "ப்ரகு ஸ விவை-ஷாயஸ்ஸ ஹி வேத" என்கிறபடியே பகவதநுபவத்துக்கு முற்பாடரான நித்யஸூரிகளுக்கு சேஷித்வேநப்ரதாநரும் அவர்களுடைய ஸத்தாதிகளுக்கும்(உ) காரகாதிகளுக்கும் தாமே தோறதுவானவனை. என்னையுமித்பாதி. தன்னைப் பரிந்தன்றி உகவாதவனையும் *எழாட்காலும் பழிப்பில்லாத எங்கள்குடியிலுள்ளாரெல்லாரையும் ஸ்வரூபாநுரூபமான வடிமையைக்கொண்ட. மன்னனை. ராஜாவானவனை. வந்துதழல்வாராயக்காக்காய். இது சிறுப் பிள்ளைகளைக் குழல்வாருவார் சொல்லும் பாசுரம். மாதவனித்பாதி. நீர்மைக்குப் பின்னைமணாளனைஒற்போலே, மேன்மைக்கு ஸ்ரீயபதியானவனுடைய குழல்வாராய் வந்துக் காக்காய். ... ... ங.

ரு.—பேயின்முலையுண்ட பிள்ளையிவன் முன்னம்
மாயச்சகடு மருது மிறத்தவன்
காயாமலர் வண்ணன் கண்ணன் கருங்குழல்
தூய்தாகவந்து குழல்வாராயக் காக்காய்
தூமணிவண்ணன் குழல்வாரா யக்காக்காய். உ.

பதவுரை.

இவன்— இச்சிறுப் பிள்ளையானவன்
முன்னம்— முன்பு
பேயின்— பூதனையின்
முலை— முலைப்பாலை

வண்ணன்— திருநிறத்தையுடையவன்காண்;
கண்ணன் — (இப்படியிரா நின்ற) கண்ணை
யுண்டைய
கரு குழல்— கறுத்திரா நின்ற திருக்குழலை
தூய்தாக— நன்றாக

வந்துகுழல் வாராய் அக்காக்காய்;

தூமணி— பழிப்பற்ற நீலமணி போன்ற
வண்ணன்— திருநிறத்தையுடைய வனுடைய
குழல்வாராய் அக்காக்காய்.

வ்யா. இரண்டாம்பாட்டு. பேயின்முலையுண்ட பிள்ளாயிவன்முன்னம். முன்னம் தாய் வடிவுகொண்டுவந்த பூதனையுடைய முலையை, தாய்முலையுண்ணுமாபோலே யிருந்துண்ட (த) முக்தனிவன். இவனுக்குப் பிள்ளைத்தனத்தில் புரையில்லையாகில் அவள் முடிந்தபடியென் னென்னில்; ப்ரதிகூலித்துக் கிட்டினார் முடியக்கடவ வஸ்து ஸ்வபாவத்தாலே முடிந்த வித் தனை. மாயச்சகடமருது மிறுத்துவன். அதுக்குப் பின்பு, கண்வளர்ந்தருளா நிற்கச்செய்தே அஸுரா விஷ்டமாய் நலியவந்த க்ருத்ரிமமான சகடத்தையும், தவழ்ந்து போகா நிற்கச் செய்தே நடுவே நலிவதாகின்ற யமளார்ஜுநங்களையும் காலாலும் துடையாலும் தள்ளி முறித்துப் போகட்டவன். காயாமலர்வண்ணன். ஆத்மகுணங்கள் மிகையாம்படி அப்போ தலர்ந்த செவ்விக்காயாம் பூப்போலேயாய், அநுகூலரை எழுத்திடி வித்துக் கொள்ளும் வடி வழகு படைத்தவன். கண்ணன். விரூபஞ்ஞனும் விடவொண்ணுத ஸௌலப்யத்தை யுடையவன். கருங்குழல். குழலுக்கு ஒரு போலி காணுமையாலே வெறும் கருங்குழ லென்கிறது. தூய்தாகவந்து குழல்வாராய். நன்றாகவந்து குழல்வாராய். தூய்தாக வாரு கையாவது - அலகலகாய்ச் செப்பம் கிடக்கும்படி வாருகை. தூம்மணிவண்ணன். பழிப் பற்ற நீலரத்நம் போலேயிருக்கிற வடிவையுடையவன். காயாம் பூப்போலே போது செய் யாதே ஒரு படிப்பட்டிருக்கும் நீலரத்நம் போன்ற வடிவழகையுடையவனென்கை. ... உ.

மூ.—திண்ணைக் கலத்துத் திரையுறி மேல் வைத்த
வெண்ணெய் விழுங்கி விரையனுறங்கிடும்
அண்ணலடியார் பெருமானே யாயர்தம்
கண்ணனேவந்து குழல்வாரா யக்காக்காய்
கார்முகில்வண்ணன் குழல்வாரா யக்காக்காய். ரு.

பதவுரை.

திண்ணம்— திண்ணிதான்
கலத்து—கலத்திலே
திரை— கயிறுகளால் பின்னப்பட்டுப் பெரி
தாயிருந்துள்ள

வெண்ணெய்— வெண்ணெயை
விழுங்கி— விழுங்கி
விரையன்— சுடுக ஓடிவந்து
உறங்கிடும்— உறங்குவான் போல் கிடக்கு

அமரர் பெருமானே— நித்யஸூரி நாதனுய்
ஆயர்தம்— இடையர்களுக்கு
கண்ணனே— கண்ணன என்னுடைய
குழல் வத்து வாராய் அக்காக்காய்;

கார்முகில்— நீலமேகம் போன்ற
வண்ணன்— வடிவையுடைய வனுடைய
குழல் வாராய் அக்காக்காய்.

வ்யா. மூன்றும்பாட்டு. திண்ணைக்கலத்து. சிக்கென்ற கலத்திலே. கோல்களாலே மாறியடித்தாலும் ஈடுபடாத கலமென்னை. திரையுறிமேல்வைத்து. பெரிய உறிமேலே வைத்த. திரையுறியாவது - கயிற்றுப் பின்னலாகக் கொண்டு சமைத்த பெரியவுறி. வெண்ணெய் விழுங்கி. இப்படி சேமித்துவைத்த வெண்ணையை வைத்தகுறிபழியாமல் " தைவம் கொண்டதோ " என்னும்படி விழுங்கி. விரையவுறங்கிடும். உடையவர்கள் காணுமதற்கு முன்னே கடிகப் போந்து, அறியாதாரைப் போலே கிடந்துறங்கா நிற்கும். வெண்ணெய் விழுங்குகிற போதைப் பதற்றத்திலுங் காட்டிலும் பதறி உறங்கப்புக்கால் கண் ணுறங்குமோ. குறுவிழிக்கொண்டு, வந்தார், போனார் நிழலாட்டம் பார்த்துக் கொண்டி கிடக்கையாலே, " இதென்ன பொய்யுறக்கம் " என்று பிடித்துக் கொள்ளுமவர்களிறே. அண்ணல். ஸ்வாமி. இந்த ஸவநீதசௌர்ய வ்ருத்தாந்தத்தாலே அநுகூலரானவர்களை பெழு தித் கொள்ளுமவன். அமரர்பெருமானே. * அயர்வறு மமரர்களதிபதியை. மேன்மைக்கு இதுக்கவ்வருகு சொல்லலாவதில்லையிறே. ஆயர்தம்கண்ணனே. அம்மேன்மைக்கெதிர்த்தட் டான நீர்மை சொல்லுகிறது. இடக்கை வலக்கை யறியாத இடையர்க்கு நிர்வாஹகனை வனே. கண்ணன். அவர்களுக்குக் கண்ணனவனென்னவுமாம். கார்முகில்வண்ணன். ஸ்ரீ கவலாஹகம்போலேயிருக்கிற வடிவையுடையவன். இத்தால்- அநுபவிப்பார்க்கு ச்ரமஹர மான வடிவையுடையவனென்கை. குழல்வாராய். ... ... கூ.

மூ.—பள்ளத்தில்மேயும் பறவையுருக்கொண்டு
கள்ளவசுரன் வருவானைத் தான்கண்டு
புள்ளிதுவென்று பொதுக்கோவாய் கீண்டிட்ட
பிள்ளையைவந்து குழல்வாராயக் காக்காய்
பேய்முலையுண்டான் குழல்வாராயக் காக்காய். சி.

பதவுரை.

பள்ளத்தில்— நீர்த்தாழ்வு களிலே
மேயும்— இரை தேடித்திரியா நிற்கிற
பறவை— கொக்காகிற பக்ஷியின்
உரு கொண்டு— ரூபத்தைக் கொண்டு
வருவான்— வரா நின்ற
கள்ள அசுரனை— க்ருத்ரிமனான அஸுரனை
[பகாஸுரன்.]
தான்— பராக்காய் கண்ணுமேடப்த்து விரை
யாடுகிற தான்
கண்டு— பார்த்து

இது புள் என்று— அஸுரனென்று இந்
தைப் பெருக்க நிச்சயாதிக்ருத ரூபத்
தென்று அபாஸமாக நிச்சயித்து
வாய்— அதின் வாயை
பொதுக்கோ— சடக்கென
கீண்டிட்ட— கிழித்துப் போகட்ட
பிள்ளையைவந்து குழல்வாராய் அக்காக்காய்;
பேய்— பூதனையின்
முலை உண்டான்— முலையை உண்டவனுடைய
குழல்வாராய் அக்காக்காய்.

தன்னுடைய நடத்தை மறைத்து பசுநடங்கொண்டிவந்தது. கற்றினமேய்க்கையாலிதே. வரு வானேத்தான்கண்டு. இப்படிப் பசுக்கூட்டங்கொண்டி தன்னை கலிய வருகிறவனை, அப்படி யுப் கன்றுமேய்த்துநின்று விளையாடுகிற தான்தன்றி. புள்ளிதுவென்று. அஸுரனென்று இந்தைப்பெருக்க நினையாதே, ஒருபசுவென்று ஆயனாடாகநினைத்து. பொதுக்கோ வாய்கீ ண்டிட்ட. தன்னை கலிவதாக அங்காத்துவருகிறவாயை, அகலமாக நினைவுக்கிடமாம்படி சடக்கெனக்கிழித்துப்பொகட்ட. பொதுக்கோவெனல்கிறது- பொதுக்கெனவென்றபடி. அதா வது- சடக்கெனவென்னை. பிள்ளாயை. பின்னைத்தனத்தில் புலையில்லாதவனை. இத்தனையும் செய்பாகிற்கச்செய்தே இதுதானறியாதாபோலு விளையாட்டாயிருந்தபடி. பேய்முலையுண்டான். அவன் முலையுண்கிறவிடத்தில் பின்னைத்தனத்தில் புலையில்லாதாற்போலே- இதுவும்.

மூ.—கற்றினமேய்த்துக் கனிக்கோருகன்றினைப்
பற்றியெறிந்த பரமன்றிருமை-
உற்றனபேசி நீயோடித்திரியாதே
அற்றைக்கும்வந்து குழல்வாராயக் காக்காய்
ஆழியான்றன் குழல்வாராயக் காக்காய். (ரு.

பதவுரை.

கன்று இனம்— கன்றுகளின் திரளை
மேய்த்து— மேய்த்து
ஒரு கன்றினை — அஸுரமயமாய் வந்த ஒரு கன்றை
பற்றி— காலைப்பிடித்துத் தூக்கியெறித்து
கனிக்கு— அஸுரமயமாய் நின்ற விளாவின்
கனி உதிருகைக்காக
எறிந்த— அதன்மேல் வீசியெறிந்த
பரமன்— உபகாரகனுடைய
திரு முடி— அழகிய திருக்குழலை
உற்றன— உன் ஜாதிக்கேற்றவற்றை
பேசி— சொல்லிக்கொண்டி
நீ ஓடி திரியாதே— நீ ஓடிப் போகாமல்
அற்றைக்கும்— காலம்தோறும்
வந்து குழல் வாராய் அக்காக்காய்;
ஆழியான் தன் — திருவாழியைக் கையிலேந்தின வனுடைய:
குழல் வாராய அக்காக்காய.

வ்யா. ஐந்தாம்பாட்டு. கற்றினம்மேய்த்து. கன்றுகளினுடைய திரளைமேய்த்து. பால்பத்தில் கன்றுகள் மேய்த்து, பின்பிறை பசுக்கள்மேய்ப்பது; ஆகையாலே இவனும் கன்றுகள்மேய்க்கத் தொடங்கினனுப்பத்து. கனிக்கோருகன்றினைப் பற்றியெறிந்த. இப்படி கன்றுமேய்த்துத் திரியாநிற்கிறவிடத்திலே தன்னை கலிகைக்காகக் கன்றுன வடிவைக்கொ ண்டும் விளாவானவடிவைக்கொண்டும் வந்துநின்ற சிலவஸுரர்களைக்கண்டு, " விளங்கனிக் கிளங்கன்று விசிறி " என்கிறபடியே முள்ளாலே முள்ளைக்களையுமாபோலே அஸுரமயமா ய்வந்து நின்றதொருகன்றை, காலைப்பிடித்துத்தூக்கியெறித்து அந்த விளங்கனி யுதிருகைக் காக எறிந்து இரண்டையும் சேரமுடித்துப் பொகட்ட. பரமன்திருமுடி. தன்னை கலியவந்த இவற்றின் கையில் தான்படாதே, அவற்றை நிரஸித்து ஜகத்துக்கு பரமசெஷியான தன்னை நோக்கித்தந்த உபகாரகனுடைய திருமுடியை. உற்றனபேசி நீயோடித்திரியாதே. உன்னு

விழிக்குமளவிலே வேறுத்தாணைக்
குழற்கணியாகக் குழல்வோராயக் காக்காய்
கோவிந்தன்றண் குழல்வாராயக் காக்காய். கூ.

பதவுரை.

கேசி இலாதானை— க்ஷீணமுச்சயத்தால் நரை
குறையுடில்லாது இந்தாதிகளை
அழிப்பான்— அழிப்படுதாக
நினைந்திட்ட— நினைந்த
கிழக்கில் குடி— ப்ராக்ஜ்ஜோதிஷ புரவாஸி
களான
மன்னர்— நரகாஸுரன் முதலான வர்களின்
விழிக்குள் அளவிலே— ஒரு நிமிஷத்தைப் பொழு
திலே [கண் மூடித் திறப்பதற்குள்ளே]

சேனை அழித்தானை— வேறுப்பட்ட பல
பாணங்களை வலுவுடைய
குழற்கு— திருக்குழலுக்கு
அணி ஆக— அலங்காரமாக
குழல் வாராய் அக்காக்காய்;
கோவிந்தன்— பசு மேய்ப்பவ வலுவுடைய
தண் குழல்— சீறந்த குழலை
வாராய் அக்காக்காய்.

வ்யா. ஆழிப்பாட்டி. கிழக்கில் குடிமன்னர். ப்ராக்ஜ்ஜோதிஷ புரவாஸிகளாய் நர காஸுரப்ரப்திகளான ராஜாக்களை. கேடிலாதானை. வரபல புஜபலங்களுண்டாகையாலே நடக்கிகாருமிகடில்லையென்று நினைத்திருந்தவர்களை. அழிப்பான் நினைந்திட்டு. ஆச்சிதரான இந்தாதிகளை கணிகையாலே அழிக்கத் திருவுள்ளம் பற்றி. அவ்வாழியதனால். * கருதுமிடம் பொருடதாய், "அறமுயலாழி" என்கிறபடியே தன்னிலுங்காட்டில் ஆச்சிதவிரோதி நிரஸநத்தில் மிகவும் முயலாநிற்கும் ஏற்றத்தையுடைய திருவாழியாலே. விழிக்குமளவிலே வேறுத்தானை. இமைத்து விழிக்கும் முன்னே கிழங்கெடுத்துப் பொகட்டவனை. அதவா, கேடிலாதானை பழிப்பான் நினைந்திட்டு- கிழக்கில் குடிமன்னர்- விழிக்குமளவிலே- ஆழிபதனால்- வேறுத்தானை என்று அந்வயமாக்கி— "நமக்கு ரக்ஷகனாக ஈச்வரன் உண்டு" என் றிருக்கையாலே- தங்களுக்கிகாரு கேடின்றிக்கே பிருக்குமிந்தாதிகளை அடர்த்தழிப்பதாகக் கோலின ப்ராக்ஜ்ஜோதிஷபுரவாஸிகளான நரகப்ரப்த்யஸுராஜாக்களானவர்களை பழிக்கப் பார்க்கிற வளவிலே அச்செய்தி இந்த்ரன் வந்து விண்ணப்பம்செய்தவந்நாளம், பெரிய திரு வடியை மேற்கொண்டு நரகபுரத்திலே பெழுந்தருளி *கருதுமிடம் பொரவல்ல திருவாழி யாலே அந்த நரகாதிகளை மறுகிளாயுண்டாகாதபடி அறுத்துப்பொகட்டவனை யென்னை மாம். குழற்கணியாகக் குழல்வாராய். திருக்குழல்களுக்கு அழகு பிறக்கும்படி குழல்வாராய். கோவிந்தன். பரகூனைத்திலே தீர்ந்த வ்யாபாரங்களையுடையவன். தண்குழல். ச்லாக்ய மானகுழல். ... ... கூ.

மூ.—பிண்டத்திரளும் பேய்க்கிட்ட நீர்ச்சோறும்
உண்டற்குவேண்டி நீ யோடித்திரியாதே
அண்டத்தமரர் பெருமானழகமர்
வண்டோத்திருண்ட குழல்வாராயக் காக்காய்

மாயவன்றண் குழல்வாராயக் காக்காய். எ.

அண்டம் — நித்ய விபூதியிலிரா நின்ற

அமரர் — நித்ய ஸூரிகளுக்கு

பெருமான்— அகிலாண்டாதிபத்யமுடைய

அழகு அமர் — அழகு மிகவும் நிலா நின்றுகொண்

வண்டு தூக்கு— வண்டு மேலே

இருண்ட— கருத்திரா நின்ற

குழல் வாராய் அக்காக்காய்;

மாயவன் தன்— ஆச்சர்ய சக்தியுக்தனான

வனுடைய

குழல் வாராய் அக்காக்காய்.

பிண்டம் — பிதாதிகளைக் குறித்திடுகிற பிண்டங்களாகிற

திரளையும்— திரளையும்

பேய்க்கு— பிசாசங்களைக் குறித்திட்ட

நீர் சோறும்— நிரோடு சேர்ந்த சோறுகளையும்

உண்டற்கு வேண்டி— உண்ணைக்கு ஆசைப்பட்டு

நீ— பலிபுக்கான நீ [ஸ்வீகரி.]

ஓடி திரியாதே — அதுக்கிடம் தேடித் தட்டுத் திரியாமல்

வ்யா. ஏறாப்பாட்டி. பிண்டத்திரளையும். பிதிர்க்கள் முதலாயுளை யுத்தேசித்து இடும் பிண்டங்களாகிற திரளையும். பேய்க்கிட்டநீர்ச்சோறும். பிசாசங்களை யுத்தேசித்து இட்ட ஜலமேறினதான சோறுகளையும். உண்டற்குவேண்டி. உண்ணைக் காமிக்கப்பட்டு.. நீயோடித்திரியாதே. அது கிட்டினவிடத்தைத் தேடி நீ தட்டித்திரியாதே. அண்டத்தமரர்பெருமான். நித்யவிபூதியிலே ஸூரிகளுக்கு தாபகாதிகளில்லாமல் காமனையாயிருக்கும் பெரியவனுடைய அழகமர்வண்டோத் திருண்டகுழல்வாராய். அழகுமிகவும் நிலாநின்ற வண்டுமேலே சுருண்டிருண்டிருக்கிற குழல்களை வாராய். மாயவனித்யாதி. ஆச்சர்யசக்தியுக்தனவனுடைய குழலே வந்தவாராய். ... ...ள

மூ.—உந்தியெழுந்த வுருவமலர் தன்னில்
சந்தச்சதுமுகன் றன்னைப் படைத்தவன்
கொந்தக்குழலைக் குறுந்துவளியட்டித்
தந்தத்தின் சீப்பாற் குழல்வாராயக் காக்காய்
தாமோதரன்றன் குழல்வாராயக் காக்காய். ஆ.

பதவுரை.

உந்தி யெழுந்த— திருநாபியிலுண்டான

உருவம்— அழகிய

மலர் தன்னில்— தாமரை மலரின்மேல

சந்தம்— சந்தஸ்ஸை நிரூபகமாக வுடைய

சதுர முகன் தன்னை — நான் முகனைப் ப்ரஜா

பதியை

படைத்தவன்— ஸ்ருஷ்டித்த வனுடைய

அட்டி — உரலுக்குத்தடவி

தந்தத்தின் சீப்பால்— தந்தத்தால் செய்யப்பட்ட சீப்பாலே

குழல்வாராய் அக்காக்காய்;

தாமோதரன் தன் — தாமோதர னுடைய

விகல்பிக்கலாம்படி ஜ்ஞாநசக்திகளால்வந்த வைலக்ஷண்யத்தையுடைய சதுர்முகனை ஸ்ருஷ்டித்தவன். சந்தம் - அழகு. அன்றிக்கே, சந்தமென்று (க) சந்தஸ்ஸாய், வேதத்தைத் தனக்கு நிரூபகமாகவுடைய னென்னவுமாம். கொந்தக்குழலைக் குறந்துபுளியட்டி. திருமஞ்சனஞ் செய்கிறபோது புளிகுறந்து அட்டித் திருமஞ்சனஞ்செய்கையாலே நெறித்திருக்கிறகுழலை. கொந்தம் - நெறிப்பு. புளியட்டிக்கொன்னக் குழலென்றது - புளியட்டினை கொந்தக்குழலென்றபடி. திருக்குழல் வாருகிறகாலத்தில் இது கூடாமையாலே திருமஞ்சனகாலத்திற் செய்த தென்னுமிடம் நிச்சிதமிறே. * எண்ணெய் புளிப்பழங்கொண்டிறே திருமஞ்சனஞ்செய்தது. அதவா, கொந்தக்குழலை - நெறித்திருக்கிற திருக்குழலை, குறந்து புளியட்டி. அகங்களில் வளர்ந்ததனால் ஸ்வல்பமாகக் குறந்தது. புளியுண்டி - ‡ புழுகு, அந்தை வார்த்தன்னமாம். குறந்தது புளியென்கிறவிடத்தில், துகரம் கடைக்குறைத்தலாய்க் கிடக்கிறது. $* ஒண் சங்கதை வாள்போலே. “புழுகட்டி” என்று பாடமாகில் - புழுகைக்குறுக்கட்டி என்று பொருளாகக்கடவது. தந்தத்தின்சீப்பால்குழல்வாராய். திருக்குழலிலுடைய சலாக்யதாது குணமாகத் தந்தத்தால்பண்ணின சீப்பைக்கொண்டு குழல்வாராய். தாமோதரனித்யாதி. அபலையான வெனக்குப் பிடித்துத் கட்டலாம்படி. ஸ்ரீலபரு பிருக்கிறவனுடைய குழல் வாராய். ... ... அ.

மூ.—மன்னன்றன் தேவிமார்கண்டு மகிழ்வெய்த
முன்னிவ்வுலகினை முற்றுமளந்தவன்
பொன்னின்முடியினைப் பூவணைமேல்வைத்துப்
பின்னேயிருந்து குழல்வாராயக் காக்காய்
பேராயிரத்தான் குழல்வாராயக் காக்காய். கூ.

பதவுரை.

மன்னன் தன்— அஸ்ரராஜனை மஹாபலியின்
தேவிமார்— மஹிஷியாட்டிகளானவர்கள்
கண்டு— இவன் வேஷத்தையும் பாஷணத்தையும் பார்த்து
மகிழ்வு எய்த— களிக்கும்படி
முன்— முன்னே
இவ்வுலகினை முற்றும்— இந்தலோகம் முழுதையும்
அளந்தவன்— அளந்து கொண்ட வனுடைய
¶ பொன் முடியினை— அழகிய திருமுடியை
பூ அணைமேல் வைத்து— பூப்போலே மெத்தென்ற படுக்கையின்மேலே வைத்து
பின்னை இருந்து— பின்புறத்திலே நின்று
குழல் வாராய் அக்காக்காய்;
ஆயிரம் பேரான்— ஆயிரம் திருநாமத்தையுடையனை வனுடைய
குழல் வாராய் அக்காக்காய்.

¶ “பொன்னின்” என்கிறவிடத்தில் ‘இன்’ என்னுமது சாரியை.

(க) ஹந்தஸ்ஸாய். ‡ “புழுகு” என்பதைத்தான் “புணுகு” என்பர்கள்.
$ “ஒண்சங்கதை வாளாழியான்” என்கிறவிடத்தில், சங்கு கதை-சங்கதை, என்று கடைக்குறைத்தலாய்ப் புணர்த்தாற்போலேயென்றை.

இக்பாதிப்படியே - அவ்வழகுக்குமேலே கிளர்ந்து விளங்காநின்றுள்ள யஜ்ஞோபவீத முமும், க்ஷ்ணஜினமும், முஞ்சியுமான விசித்திவேஷமுமாய்க்கொண்டு மஹாபலியஜ்ஞ வாடத்திலே வல்லாராடிணற்போலே பதறி நடந்துசென்று நின்ற நிலையையும், "கொள்வன்கான்" இத்யாதிப்படியே சொன்ன (க) முக்தஜல்பத்தையும்கண்டு, அஸுராராஜனை மஹாபலியுடைய ஸ்த்ரீகளானவர்கள் ப்ரீதைகளாடம்படி முந்துறநின்று அர்த்தித்து, கையிலே நீர் விழுந்த ஸமநந்தரம், முன்பே தன்னதாயிருக்கிற விந்தலோகத்தைபெல்லாம் இப்போது அபூர்வமாகப்பெற்றாற்போலே பளந்து கொண்டவனுடைய. பொன்னின் முடியினை. அழகிய திருமுடியை. பொன் - அழகு. இன் - சாரியை. பூவணைமேல் வைத்து. திருமுடியை மார்த்தவத்துக்கிடாக, பூப்போலே ம்ர்துவான அணைமேலவைத்து. பின்னேயிருந்து குழல் வாராய். வாருகைக்கு அநுகுணமாகப் பின்னேயிருந்து திருக்குழல்வாராய். பேராயிரத்தான். தன் லாலஸ்ய்யத்தைக்கண்டு ஸ்துதிக்குமவர்களுக்கு இழிந்த விடமெல்லாம் தஞ்சமாம்படி (உ) "ஸ்ரீ ஸ்வா நாத்ஸ்ஸஹ ஸ்ரயாது" என்கிறபடியே அநேகம் திரு நாமங்களை யுடையவனுடைய குழல்வாராய். ... ...க.

அ. நிகமத்தில், இத்திருமொழி கற்றார்க்கு பலம்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மூ.—கண்டார்பழியாமே யக்காக்காய் கார்வண்ணன்
வண்டார்குழல்வார வாவென்றவாய்ச்சிசொல்
விண்டோய்மதிள் வில்லிபுத்தூர்க்கோன் பட்டன்சொல்
கொண்டாடிப் பாடக்குறுகா வினைதானே. ய.

பதவுரை.

அக்காக்காய்— "அக்காக்காய்!
கண்டார் பழியாமே— 'கண்டவர்கள் பழி
யாத படி.
கார் வண்ணன் — நீல மேகவர்ணனை
னுடைய
வண்டு ஆர்— மதுபாநார்த்தமாக வண்டுகள்
படிந்திருக்கிற
குழல்— திருக்குழலை
வார— வாருவதற்கு
வா என்ற— வா" என்று சொல்லியழைத்த
ஆய்ச்சி— யசோதைப் பிராட்டியின்
சொல்— சொலவை
விண் தோய்— ஆகாசத்தை அளாவிய
மதிள்— மதிளையுடைய
வில்லி புத்தூர்— ஸ்ரீ வில்லிபுத் தூருக்கு
கோன்— நிர்வாஹகரான
பட்டன்— பெரியாழ்வார்
சொல்— அருளிச்செய்த இத்தை
கொண்டாடி— சப்தார்த்தவைலக்ஷண்யத்
தைப் புகழ்ந்து கொண்டு
பாட— பாடுமளவில்
வினைதான் — "வினை" என்று பேர்
பெற்றவை யெல்லாம்
குறுகா— அவர்களருகில் கிட்டமாட்டாது.

வ்யா. கண்டாரித்யாதி. திருமஞ்சநஞ்செய்து குழல்வாராதிருந்தால் கண்டவர்கள் பழிக்கக்கூடும், அவர்கள் பழியாதபடியாக. அக்காக்காய். கார்வண்ணனித்யாதி. மேகம்

(க) முன்னுரை. (உ) விஷ்வக்ஸேநஸஹஸ்ரநாமம்.

போலே சியாமளமான வடிவை யுடையவளுடைய, இருட்சியாலும் சுருட்சியாலும் வண்டு போலேயிருக்கிற திருக்குழலே வாருமென்று சொன்ன பரிசாகைப்பிராட்டியி னுடைய சொலவை. விண்டோயித்யாதி. ஆகாசத்திலே மிகவுமுயர்ந்த பதினேயுடைய ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு நிர்வாஹகரான பெரியாழ்வா ருருளிச்செய்த வித்தை. கொண்டாடியித் யாதி. சப்தார்த்த வைலக்ஷண்யத்தைக் கொண்டாடி, ப்ரீதிப்ரகாசத்தைக்கொண்டு பாட, வினை யென்று பேர்பெற்றவை படங்களும் தானே யருகுவந்துகிட்டா. ... ... ம.

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

———(*)———

அடிவரவு.—பின்னைப் பேய் தின்னைப் பள்ளம் கற்றுக்
கிழக்கில் பிண்ட முந்தி மன்னன் கண்டார் மேலி.

ஆசிரியமொழி - ச - க்கு, பாட்டு - நடிக.

அ. பரிசாகைதப்பிராட்டி அவர்களைத் திருக்குழல் வாருவதாக உத்தேசித்து, அவள் "ஒட்டேன்" என்று அழுதும் இறங்கிப்போடாமைக்காக அவளுடைய பால்யத்துக் கது குணமாப்படி, அக்காக்காய் குழல் வாரவாவென்று பலகாலும் அவள்செவிகேட்கச்சொல்லி யிருந்து அவளை புகப்பித்துத் திருக்குழல் வாரின படியை, காமநுபவிக்கையில் ஆசையுடை யராய், பாவநாப்ரகர்ஷத்தாலே அவளான நிலையையடைந்து, தத்காலம்போலே அவளைக் குறித்துப் பாசுரங்களைப்பேசி யநுபவித்தாராய்பின்னும் - கீழ்; திருக்குழல் வாரினவநந்தரம் தூச்சூட்டுவதாகத் தேடுகிறவளவிலே, ஜாத்யுசிதமாகக் கன்றுமேய்க்கப்போகிற பிள்ளை களோடே தானும் போவானாக வத்யோகித்து, கன்றுகள்மேய்த்து மடிக்கிற கோலத்தா வென்ன; அவள் இணைசந்து கோலக்கொடாமல், "இவளை ஒப்பித்துக்காணவேணுமே" என் னும் கருத்தாலே கோலவாங்கித் தருகிறேனென்று இவளை யழுகைமருட்டி "அக்காக்காய் கோல்கொண்டுவா" என்று பலகாலும் சொன்ன ப்ரகாரத்தை, தந்பாவபுக்நாய்க்கொண்டி அவளைப்போலே தாமும் அவளைக்குறித்துப்பேசி அந்த ரஸத்தை யநுபவிக்கிறார் - இத்திரு மொழியில். ... ... *

மூ.—வேலிக்கோல்வெட்டி விளையாடுவில்லேற்றித்
தாலிக்கொழுந்தைத் தடங்கழுத்திற்பூண்டு
பீலித்தழையைப் பிணைத்துப் பிறகிட்டுக்
சாலிப்பின் போவாற்கோர் கோல்கொண்டுவா
கடனிறவண்ணற்கோர் கோல்கொண்டுவா க.

தாலி— பனையிலையுடைய
கொழுந்தை— வெண் குருத்தை
தட கழுத்தில்— பெரிய கழுத்தில்
பூண்டி— ஆபரணமாகப் பூண்டி
பீலி— மயிலிறகுடைய
தழையை— தோகைகளை
பிணைத்து— சேர்த்து
பிறகு— திருமுதுகிலே
இட்டு— தொங்க விட்டு
காலி பின்— கன்றுகளின் பின்னே
போவாற்கு— மேய்க்கப் போமவனுக்கு

¶ ஓர் கோல் கொண்டுவா;
கடல் நிறம்— கடலோடொத்த நிறத்தை
யுடைய
¶ வண்ணற்கு— வடிவையுடைய வனுக்கு
¶ ஓர் கோல் கொண்டுவா.

¶ "ஓர் கோல் கொண்டுவா" என்கிறவிதுவும், அக்காக்காய் விளித்துச் சொல்லும் பாசுரமெண்ணுமது ஏழாம்பாட்டாலும், கடைப்பாட்டாலும் விளங்கும். இவ்விடத்தில் கோலாவது - கன்றுகள் மேய்த்து மறிக்கிறகோல்; அதைக்கொண்டுவாவென்றபடி.
¶ "அண்ணற்கு" என்று பிரித்தால், ஸ்வாமிக்கென்று பொருள்

வ்வா. முதற்பாட்டி. வேலிக்கோல்வெட்டி. வேலிக்கால்களிலே வளர்ந்து நிற்கும் கோல்களைவெட்டி. அன்றிக்கே, வேலியென்று- வளைவாய், வளைந்தகோலைவெட்டி யென்னவுமாம். விளையாடு வில்லேற்றி. லீலார்த்தமாக வில்லாகப்பண்ணி நாணியேறிட்டு. தாலிக் கொழுந்தைத் தடங்கழுத்திற்பூண்டு. ஜாத்யுசிதமாகையாலே ச்ரேஷ்டமாயிருந்துள்ள ஆனைத் தாலியைத் தடவிதான கழுத்திலேபூண்டு. அன்றிக்கே, தாலியென்றது- தாளியென்றபடியாய், கொழுந்தென்றது- அதின் வெண்குருத்தாய், அது வெள்ளிபோலே யிருக்கையாலே அத்தை ஆபரணமாகத் தெற்றிப் பூம்பர்களிறே யிடையர்; அத்தைச் சொல்லிற்றாகவுமாம். பீலியித்யாதி. பீலிப்பிச்சங்களைச் சேர்த்துத் திருமுதுகிலே நாற்றி. காலியித்யாதி. கன்று காலியின் பின்னே அவற்றை மேய்க்கைக்காகப் போமவனுக்கு ஓர் கோல்கொண்டுவா. கடலித்யாதி. கடலோடொத்த நிறத்தையுடைத்தான வடிவை யுடையவனுக்கு. ... ... க.

மூ.—கொங்குந்குடந்தையுங் கோட்டியூரும் பேரும்
எங்குந்திரிந்து விளையாடு மென்மகன்
சங்கம் பிடிக்குந் தடக்கைக்குத் தக்கநல்
அங்கமுடையதோர் கோல்கொண்டுவா
அரக்குவழித்ததோர் கோல்கொண்டுவா. உ.

பதவுரை.

கொங்கு— (புஷ்பாதிகளால்) பரிமளத்தை
யுடைய
குடந்தையும்— திருக்குடந்தையிலும்
கோட்டி ஊரும்— திருக்கோட்டியூரிலும்
பேரும்— திருப்பேர் நகரிலும்
எங்கும்— மற்றுமுள்ள திருப்பதிகளிலும்
திரிந்து— வ்யாபரித்து
விளையாடும்— விளையாடா நிற்கிற
பிடிக்கும்— பிடித்துக்கொண்டிராநின்ற
தட— விசாலமான
கைக்கு— திருக்கைக்கு
தக்க— தகுந்திராநின்றதாய்
நல் அங்கம் உடையது— நல்லவடிவையுடைத்
தான
ஓர் கோல் கொண்டுவா;

[illegible]. கொன்றுதடந்தை பெண்கிறவல்லிலொற்று மிடல்லொற்றுயிர்க் கிடன்றுது.
[illegible] மாலைகளினு முன்டான பரிமளமும், உன்னுக்கண்வளர்ந்தருளுகிறவனு
[illegible] பரிமளமுமாய்க்கொண்டு ஊரடங்கலும் பரிமளமாய்க் கிடக்குமிருப்பை.
[illegible] திருக்கோட்டியூரிலும், பேரும், திருப்பேரிலும், எங்கும், அதற்குமாலை
[illegible]. திருக்குலவிளாயாடு மென்மகன், வ்யாபரித்து விளையாட நிற்கு மென்னிலை
[illegible] சங்கம்பிடிக்கும் தடக்கைக்குத் தக்க. பூரீபாஞ்சஜந்யத்தைப் பிடிக்கும் பெரிய திருக்
[illegible]. கல்லங்கமுடையதோர் கோல்கொண்டுவா. கல்லவடிவையுடைத்தான
[illegible] கொண்டுவா. அரக்குத்பாதி. நிறமுடைத்தாப்பாடி அரக்குவடிவுள்ளதாயிருக்கும்
[illegible]. ... ...

௮.—கறுத்திட்டெதிர்நின்ற கஞ்சனைக்கொன்றுன்
பொறுத்திட்டெதிர்வந்த புள்ளின்வாய்கீண்டான்
நெறித்த குழல்களை நீங்கமுன்னேழைச்
சிறுக்கன்று மேய்ப்பபாற்கோர் கோல்கொண்டுவா
தேவபிரானுக்கோர் கோல்கொண்டுவா. ஈ.

பதவுரை.

எறுத்திட்டு— கோபத்தை யுடையனுய்க் கொண்டு
எதிர்நின்ற— எதிர்த்து நின்ற
கஞ்சனை— கம்ஸனை
கொன்றுன்— முடித்தவனுய்
பொறுத்திட்டு— வருகிற போதை சகித்
தைப் பொறுத்து நின்று
வந்த— தன்னை நலிவதாக எதிரேவந்த
புள்ளின்— பகாஸுரனுடைய
வாய்கீண்டான்— வாயைக் கிழித்தவனுய்
நெறித்த— நெரித்து முன்னே தொங்கா
நின்ற

‡ குழல்களை— நெருங்குழல் களாகையால்
நீங்க— முடிந்து சொருகிக்கொள்ள இயலாமல்
முன் ஓடி— கன்றுகளுக்கு முன்னே ஓடி
சிறுகன்று— இளங்கன்றுகளை
மேய்ப்பபாற்கு— மேய்த்து ரக்ஷிக்கிற வனுக்கு
ஓர் கோல் கொண்டுவா;
தேவபிரானுக்கு— தேவபிரானுக்கு ஓர்
கோல் கொண்டுவா.

‡ "குழல்களை" என்கிற விடத்தில் இளங்
கன்றுகளை.

டிபா. முன்முப்பாட்டி. கறுத்திடாதி. கறுப்பு- சிற்றம். தன்மேலே சீறிவருகிறவனை
எதிர்த்துநின்று, தன்னை நலிவதாக எதிரேவந்த பகாஸுரனுடைய வா
யைக்கிழித்தவன். நெறித்தகுழல். நெறித்து முன்னே தொங்கா நின்ற பிரகாரமான கம்ஸனுடைய படியைச் செய்ததிலே தேவபிரா

மூ.—ஒன்றேயுரைப்பா ரொருசொல்லே சொல்லுவான்
துன்று முடியான் துரியோதனன் பக்கல்
சென்றங்குப் பாரதங் கையெறிந்தானுக்குக்
கன்றுகள்மேய்ப்பதோர் கோல்கொண்டுவா
கடல்சூழ்நிலவண்ணற்கோர் கோல்கொண்டுவா சு.

பதவுரை.

ஒன்றேறு— அறிந்தாரைக் கைவிடாமையா
கிற ஓரர்த்தத்தைதீ
உரைப்பான்— சொல்லுமவனுக்கு
ஒரு சொல்லே — எல்லார்க்கும் அபயப்ரதா
னம்பண்ணுகையாகிறசொல்லொன்றைமீ
சொல்லுவான்— சொல்லா நிற்பானுக்கு
துன்று— நவரத்நங்களழுத்தின
முடியான்— கிரீடத்தையுடைய
துரியோதனன் பக்கல் — துர்யோதநனிடத்
திலே
சென்று — பாண்டவர்கள்தூதனாகச் சென்று
பாரதம்— பாரதயுத்தத்துக்கு
அங்கு— அங்கே
கை கரந்தானுக்கு— கைதட்டிப் போக்கி
யருளின வனுக்கு
கன்றுகள்— கன்றுகளை
மேய்ப்பது— மேய்க்கத்தக்க
ஓர் கோல் கொண்டுவா;
கடல் நிலவண்ணற்கு ஓர் கோல் கொண்டுவா.

வ்யா. நான்காம்பாட்டு. ஒன்றித்யாதி. "பாண்டவர்களும் நாங்களுங்கூடி ஜீவிப்பதில்லை" என்று மீமாரர்த்தமீம சொல்லுவானுப், "கூடிஜீவிப்பதில்லையேயாகிலும், அவர்களுக்கும் ஏதேனும் சில கொடுக்கவேண்டாமோவா" என்று மத்யஸ்தர் சொன்னால் "அவர்களுக்கு ஒருமீகாற்குந்து நிலமும் கொடுப்பதில்லை" என்றுமொரு வசனமீம சொல்லுவானுமாயிருக்குமவனென்னை. அன்றிக்கே, ஆச்ரிதவிஷயத்தில் (க)"தி ஹாவெ நஸ்வெ ஹாதெ" இத்யாதிப்படியே-ஒருபடியாலும்அவர்களைக்கைவிடாமையாகிற ஓரர்த்தமீமசொல்லுமவனுப் (உ) "கூயம் ஸவ்ஹூமிதலோ ஹரா" இத்யாதிப்படியே - அவர்களுடைய ரக்ஷணத்துக்குடலான வசனமொன்றுமீம சொல்லாநிற்பானு மிருக்குமவனென்று பகவத்விஷயணமாகவுமாம். துன்றுமுடியான். நவரத்நங்களிழுலே நெருங்கின அபிமேஷகத்தை புடையவன். அபிஷிக்தக்ஷத்ரியராலே நெருங்கி சேவிக்கப் படுமவனென்னுதல். துரியோதநன் பக்கல். ஏவம்பூதனான துர்யோதநன்பக்கலிலே. சென்றங்குப்பாரதம் கையெறிந்தானுக்கு. இரண்டு தலையும் பொருந்தவிடலாமோவென்று தூதனுப்சென்று பொருந்தப்பார்த்தவிடத்தில் பொருந்தாமையாலும் யுத்தத்திலே, பொருந்துகையாலும்; ஆனால், அதுதன்னைச் செய்கவென்று பாரதயுத்தத்துக்கு அங்கே கைதட்டிப் போந்தவனுக்கென்னுதல். அன்றிக்கே, ஆனால் அதுதன்னைச் செய்வதென்று இசைந்துபோந்து, பாண்டவர்களுக்காய்நின்று பாரதயுத்தத்திலே கையுமணியும் வருத்தவனுக் கென்னுதல். எறிதல்- இடுதலாகையாலே, வேண்டுனபொருள் கொள்ளலாமிறை. கன்றுகள்மேய்ப்பதோர் கோல்கொண்டுவா. பசுமேய்க்கையிலும் அவன் விரும்பியிருப்பது கன்றுகள் மேய்க்கையாய்த்து. அதுக்குத் தகுதியாயிருப்ப

ஆ.—சீரோன்றுதூதாய் துரியோதனன்பக்கல்
ஆரோன்று வேண்டிப் பெறுத வுரோடத்தால்
பாரோன்றிப் பாரதங் கைசெய்து பார்த்தற்குத்
தேரோன்றை யூர்ந்தார்க்கோர் கோல்கொண்டுவா
தேவபிரானுக்கோர் கோல்கொண்டுவா ரு.

பதவுரை.

ஆ— அரிய பாரதந்தியமாகிற குணம்	பெறுத— வேண்டினபடி லபியாத
ஒ— சேருமைக்கு உறுப்பான [ஒன்று	உரோடத்தால்— ரோஷத்தாலே
மை— கூடுகை]	பார் ஒன்றி— பூமியிலே கால் பாவி நின்று
தூ— தூதகார்த்தியம் அதிகரித்த	பாரதம்— பாரதயுத்தத்திலே
வுரை	பார்த்தற்கு— அர்ஜுநனுக்கு
துரியோதனன் பக்கல் —	கை செய்து— துணையாயிருந்து
துரியோதனனிடத்தில்	ஒன்று தேரை— ஒப்பற்ற தேரை
உரோடத்தால்—	ஊர்ந்தார்க்கு— நடத்தியருளின வனுக்கு,
ரோஷத்தாலே	ஓர் கோல் கொண்டுவா;
	தேவபிரானுக்கு ஓர் கோல் கொண்டுவா.

ஆ. ஆச்சார்யாட்டம். சீரோன்றுதூதாய். "இன்னுர் தூதனென நின்றான்" என்
ஆசார்ய பூர்த்தியபாரதந்தியமாகிற குணம் தனக்குச் சேருமைக்குறுப்பான தூதகார்த்தியத்
திலே அதிகரித்து. துரியோதனன்பக்கல் வுரோன்றுவேண்டி. அதார்மிகனைப் பற்றுக்கோடா
ஆண்டு, பலத்தாலே ஜீவிக்கவிருக்கிற துர்யோதனன்பக்கலிலே சென்று "உங்களுக்குள்ள
அர்ச்சுநனை விரோதித்து இரண்டுதலையும் பொருந்தி ஜீவித்திருங்கோள்" என்று முகத்துதி
சொன்னவளவில், அவன் "அதுசெய்யேன்" என்றவாறே, "ஆனால் பத்தூர்தன்னைக்
கொடுக்கப்பார்ப்பது" என்ன; "அதுவும்செய்யேன்" என்றவாறே "ஓரூர்தன்னையா
யினும் கொடு" என்றவளவில், அவன் அதுக்குமிசையாமல், "அவர்களுக்கு தர்மமுண்டு,
(க)த்தலமான ஸ்வர்க்காதி லோகங்களுமுண்டு, அதை தபஸ்பண்ணக்கடவர்கள், எங்களுக்கு
இத்தனையுமன்றே யுள்ளது, அதில் ஒன்றும் கொடுப்பதில்லை" என்று வெட்டிநாகவார்
த்தைசொல்ல; பெருத வுரோடத்தால். ஓரூர்தானும் பெறுத ரோஷத்தாலே. ஆனால் *வீர
சொக்கயபன்றே யவர்தந்தை, யுத்தத்தைப்பண்ணி ஜயித்தவர்களொருவர் பூமியை யாளு
ங்கோவென்ன; அவன் அதுக்குப் பொருந்தினவாறே; பாரோன்றி. திருவுள்ளமுகந்து,
பூமியிலே பாதங்களால்பாவிநின்று. பாரதம் கைசெய்து. பாரத யுத்தத்திலே பாண்டவர்க
ளுக்காக நின்று கையுமனியும் வகுத்து. பார்த்தற்குத்தேரோன்றை யூர்ந்தாற்கு. ஆயுதமெடு
க்க மொன்னையாலே ஸாரத்யத்திலே அதிகரித்தனுய், அர்ஜுநனை (க)ரணியாக்கி, ப்ரதி
பக்ஷத்தை உருவாக்காலாலே நெருக்குகைக் குறுப்பாகையாலே அத்விதீயமான தேரை நட
த்தினவனுக்கு ஓர் கோல்கொண்டுவா. தேவபிரானுக்கு. இந்தநீர்மைக் கெதிர்த்தட்டாம்படி

டாலப்பிராயத் தே பார்த்தற்கருள்செய்த
கோலப்பிரானுக்கோர் கோல்கொண்டுவா
குடந்தைக்கிடந்தார்க்கோர் கோல்கொண்டுவா. சு.

பதவுரை.

அருள் செய்த— கிருபை செய்தருளின வனுக்கு
கோலம்— அழகியவனுக்கு
பிரானுக்கு— மேலான கோபகாரகனாவனுக்கு.
ஓர் கோல் கொண்டுவா;
குடந்தை— திருக்குடந்தையிலே
கிடந்தார்க்கு— கண்வளர்ந்தருளுமவனுக்கு.
ஓர் கோல் கொண்டுவா.

† ஆல் இலையான்— ஆலிலையில் கண் வளர்ந்தருளுபவனுக்கு
¶ அரவு அணைமேலான்— திருவனந்தாழ்வானாகிற படுக்கையின்மேல் கண்வளர்ந்தருளுமவனுக்கு
நீலம்— (திருமேனியின் நிழலிட்டாலே)
கடலுள்— ஜலத்திலே
நெடு காலம்— பிரளயம் வருமளவும்
கண் வளர்ந்தான்— திருக்கண் வளர்ந்தருளுமவனுக்கு
பாலப் பிராயத்து— இளம்பருவத்திலே
பார்த்தற்கு— அர்ஜுனனுக்கு

† "ஆல் இலையான்" என்கிற விடத்தில் 'அந்து' என்னுருபுமாம்.
¶ "அரவினணைமேலான்" என்கிற விடத்தில் 'இன்' என்னுருபும் சாரியை.

வ்யா. இரண்டாம்பாட்டு. ஒன்றுமறிவொன்றில்லாத. பொருந்தின வறிவு ஒன்று மில்லாத. லௌகிகனவதிகங்களாகி சேர்ந்த வறிவு அற்பமுமில்லாத; * அறிவொன்று மில்லாத வாய்க்குலமிதே: காட்டிலே பசுமேய்க்கப்போன கிடாங்களிலே வழிதினைத்தால் வழிகாட்டிவரு பசுக்களாம்படியிதே இவர்களறிவிருப்பது. உருவறைக்கோபாலர். ரூப ஹீநரான கோபாலர். ஆத்மகுணமில்லாதாற்போலே நற்குணமுமில்லாதவர்களென்னைக. தங்கள். "தாங்கள்" என்கிறவிதற்குக் குறைத்துக்கிடக்கிறது. கோபாலர் தாங்களென்றபடி. இவர்களுடைய வறிவுசேதிம் வழிதேடிம் சொன்னது-இவைபார்த்தால் பொல்லாதாயிருக்கு மாப்போலே, இவர்களுடையபர்த்தியும் பார்த்தால் பொல்லாதாயிருக்குமென்னைக்காக. அந்த வர்த்தமானன்னைச் சொல்லுகிறதாமேல் கன்றுகால்மாறுமாப்போலேன்று. கன்றுகால் மாறுனக்கை வது- தாயிருந்துள்ள தங்களுடைய கன்றுகளை "உங்களது" என்று பிறர்க்குக் காட்டி, "நல்லதாயிருந்துள்ள அவர்களுடைய கன்றுகளைத் தங்களதாக்கிக்கொள்ளுகையும், நல்வழி பாய்க்கண்டுறுக்கு நன்முயிருக்கும் கன்றுகளை உடையவர்களறியாமல் களவிலே நீலேபோர்த்துக்கொண்டுபோகையுமிதே; இதில் பிற்பட்டதே இவ்விடத்துக்குச் சேருவது. இப்படி இவர்கள் செய்யுமாப்போலே.

கன்னியிருந்தாளை- நன்றும்கிறிசெய்து - கொண்டு- போனை. கங்நிகையாய், விஷய ரலைமென்பதான்றறியாதே படிகடந்து புறப்படாமல் என்கிறேழுயிருந்தவளை, முன்நிம்பு செய்து தன் சுவட்டையறிவித்துத் தன்வசமாக்கி, தானியாகபடி மிகவும் வீரு செய்து கொண்டுபோனை. நாராயணனன் செய்தநீமை. ஸமஸ்தகல்யாணகுணாத்மகனுகையாலே நன்மை யே செய்யக்கடவனவன் இப்படி நிமலையச்செய்வதே!. இவ்விடத்தில் நீமையாவது-தன்னு டைமையைத்தான் கொண்டுபோம்போது வரைந்து வெளிப்படக்கொண்டுபோகலாயிருக்க, இப்படி களவிலே கொண்டுபோனது. என்றுமித்யாதி. இப்படி யிவன்செய்த நீமை நிரவ தியமானவெங்கள் குடிக்கு எல்லாக்காலத்திலும் நிற்பதொரு பழிப்பாமோ; அன்றிக்கே, இக்குடியிற்பிறந்தவொரு விஷயத்தை வரைந்துகொடுக்கப் பெறுமல் அவன் முற்பாடனுய் வந்து கைக்கொண்டுபோனவிதுதன்னுலே இக்குடிக்கேற்றமாமோ. "கொல்லியென்பார் கொலோ குணம் மிக்கனளென்பார்கொலோ" என்னுமாப்போலே, இக்குடிக்கு இது பழியாமோ, புகழாமோ வென்கிறள். ... ... உ.

மூ.—குமரிமணஞ் செய்துகொண்டு கோலஞ்செய் திருத்தித்
தமரும்பிறருமறியத் தாமோதரற் கென்றுசாற்றி
அமரர்பதியுடைத்தேவி யரசாணியை வழிப்பட்டுத்
துமிலமெழப் பறைகோட்டித் தோரணநாட்டிடுங்கோலோ. ஈ.

பதவுரை.

குமரி— கன்னிப்பெண்ணுக்கு
மணம்செய்துகொண்டு— விவாஹத்துக்கு
இருத்தி— உட்காரவைத்து
தமரும்— பந்துக்களும்

சாறறி— பறையறைந்து (அதனால்,)
அமர்பதியுடை— தேவாதிராஜனுடைய
தேவி— தேவியான இவள்
அரசாணியை— அரசங்கிலையை
வழிப்பட்டு— (ஜாத்யாசாரப்படி) வலம்வர
துமிலம் எழ— பேராரவாரம் தோன்ற

தோரணம்- மகரதோரணம் முதலியவற்றை
நாட்டிடும் கால் ஓ— ஊரெங்கும் நாட்டி
அலங்கரித்துக் கொண்டாடுவர்களோ?
கொண்டாட்ட மேதுங் கென்பர்
களோ வென்று ஸந்தேஹிக்கிறாள்.

வ்யா. மூன்றும்பாட்டு. குமரிமணம்செய்துகொண்டே. குமரி- கந்நிகை. கந்நிகாவஸ்த்
தையில் செய்யும் கல்யாணத்தைச் செய்துகொண்டு. அதாவது- விவாஹத்துக்கு பூர்வாங்க
மாகச்செய்யும் உத்ஸவவிசேஷத்தைச் சொன்னபடி. கோலஞ்செய்து. ஆபரணவஸ்த்ராங்க
ராகாதிகளாலே யலங்கரித்து. இல்லத்திருத்தி. கல்யாணக்ருஹத்திலே யிருத்தி. தமரு
மித்யாதி. பந்துக்களும் மற்றுமுள்ளாருமறியும்படி, "காமோதரனுக்கு இவளைக்கொடுக்
கப்புகாநின்றோம்" என்று ப்ரஸித்தமாக்கி. தாமோதரனென்றது-மாதாவானவள் கட்டின
கட்டு அவிழ்த்துக்கொள்ள சக்தனன்றிக்கே அவள் நியமநம் தப்பாமலிருந்த நீர்மையையு
டையவனென்றபடி. அமரர்பதியுடைத்தேவி. அங்குத்தைக்கென்று ஸங்கல்பித்து *தமரும்
பிறரு மறியச்சாற்றினபோதே * அயர்வறுமமரர்களதிபதியானவனுடைய தேவியானவள்.
அரசாணியைவழிப்பட்டு. ஜாத்யுசிதமாம்படி அலங்காரபீடத்துக்குத்தூணை அரசாணியை
வலம்வந்து. அரசாணியாவது-அலங்காரபீடத்தின்மேலே நாட்டிம் அச்வத்தகண்டம். துமில
மெழப்பறைகோட்டி. பெரிய ஆரவாரந்தோன்ற வாத்யத்தை முழக்கி. "மத்தளங்கொட்ட"
என்னக்கடவதிறே. தோரணம்நாட்டிடுங்கோலோ. ஊரெங்கும் தோரணம் நாட்டுகைமுதலான
அலங்காரங்களைக் கற்பித்துக் கொண்டாடுவர்களோ; குடியிற்பிறந்தார், 'கல்யாணத்துக்குக்
கொண்டாட்டமென்செய்ய?' என்பர்களோ?. ... ... இ-ை

மூ.—ஒருமகடன்னையுடையே னுலகநிறைந்த புகழால்
திருமகள்போல வளர்த்தீதன் செங்கண்மாலுன் கொண்டுபோனான்
பெருமகளாய்க் குடிவாழ்ந்து பெரும்பிள்ளைபெற்ற வசோதை
மருமகளைக்கண்டுகந்து மணைட்டுப்புறஞ் செய்யுங்கோலோ. ச.

பதவுரை.

ஒரு மகள்தன்னை— ஒரே பெண்பிள்ளையை
உடையேன்— உடையளான நான்
உலகம் நிறைந்த— லோகமெங்கும் பரவின
புகழால்— கீர்த்தியோடே
திருமகள்போல— பெரிய பிராட்டியாரைப் போலே
வளர்த்தீதன்— சீராட்டி வளர்த்தீதன்;
இப்படிப்பட்டவனை,
செம் கண்— சிவந்த கண்களையுடையனும்
மால்— வ்யாமோஹத்தை யுடையனுமான
கண்ணன் [டான்;
கான்— தாமோதரன்
கொண்டு போனான்— கொண்டுபோய் விட்
டான்
பெரு பிள்ளை— பெருமை பொருந்திய
பிள்ளையை
பெற்ற— பெற்ற
அசோதை— யசோதைப் பிராட்டியானவள்
மருமகளை கண்டு— நாட்டுப் பெண்ணைக்
கண்டு
உகந்து— ப்ரியப்பட்டு
மணைட்டுப்புறம் செய்யும் கொல் ஓ } மணவாட்டிக்குச் செய்யக் கடவ சீர்
மைகளைச் செய்வளோ, லௌகிகத்துக்குத் தக்கவளவு அற்

வ்யா. கான்காம்பாட்டி. ஒருமகள்தான்னை யுடையேன். அழகிதையாபா யிருப்பா ளொருபெண்பிள்ளையையுடையேன். ஒருமகளென்னைபாலே - ஏகபுத்திரியன் னுமிடமும், தன்னை யென்னைபாலே - ளைனந்தர்பாதிகளாதலுண்டான இவருடைய மதிப்பும், உடையே னென்னைபாலே - இவளை புத்திரியாக வுடையளாகைபாதலுண்டான தன் னுடைய ஏற்றமுந் சொல்லுகிறது. உலகம் நிறைந்த புகழால். விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசிய றுத் தந்தாமுடைய அளவுகளுக்கிடாக இருந்த விருந்த விடங்களிலே இவருடைய குணங்க ளைச்சொல்லி ச்லாகிக்குமிடமிலாகமெல்லாம் வ்யாப்தமான புகழ்மாடே. திருமகள்போல வளர்ந்தாள். "கடியாலப்பானைவியப்பான்" என்கிறபடியே ஸர்வர்க்குமெளிதா ன்யத்துக்கு உபமாந பூமியாய் புருஷகாரத்வயுக்தையான *நாரீணாமுத்தமையோடி ஸ்த்ரீ ஸ்வபாவையாம்படி வளர்ந்தாள். செங்கண்மால் தான் கொண்டுபோனான். (*) "யஸ்ய கடாக்ஷவைபவலீலை" என்கிறபடியே ஸ்வாபாவிகமான சிவப்புக்குமேலே *பக்தரோக் கறியாமல் இவளைப்பார்த்துக்கொண்டிருக்கும் வ்யாமோஹத்தாலும் சிவந்த திருக்கண்களை யுடையனாய், இந்தவ்யாமோஹமெனக்கு நிரூபகமாம்படி யிருக்குமவன், ஆதிவாதிகளை வரக்காட்டியபாதல், பெரியதிருவடியை வரக்காட்டியாதல் கொண்டுபோகையன்றிக்கே, * கல்வ ன்கொல்லில் பிராட்டியைக்கொண்டுபோனும்போலே தானேகொண்டுபோனான். "ஆழ்வா ன்திருநாட்டிக் கெழுந்தருளினமோது, உடையவர், விச்லேஷம் பொறுக்கமாட்டாமல், 'ஒருமகள்தன்னை யுடையேன்' என்றும், 'உலகம்நிறைந்த புகழால் திருமகள்போல வள ர்த்தேன்' என்றும், 'செங்கண்மால் நான் கொண்டுபோனான்' என்று மருளிச்செய்தார்" என்று ப்ரஸித்தமிறே. உ: "உடைய நிவ்ருத்தாணாமஸ்யை நாயஸ்ஸுதாஹஸ்ய" என் கிறபடியே - ளைனந்தர்பாதிகளுக்கெல்லா முபமாந பூமியாகச் சொல்லலாம்படி யிருக்கையாலே உல கம் நிறைந்த புகழுள்ளது ஆழ்வானுக்கேயிறே. பெருமகளாய்க் குடிவாழ்ந்து. பெரிய பெண் பிள்ளையாய்க் குடிவாழ்க்கைவாழ்ந்து. திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடிக்கும் நிர்வா ஹகரான பெருமையையுடைய நந்தகோபர் மஹிஷியாகையாலே இவளை "பெருமகள்" என்கிறது. அவர் ஊர்க்காரியத்துக்கெல்லாம் அபிமானியாய் நிர்வஹிக்கையாலே "குடி வாழ்ந்து" என்கிறது. பெரும்பிள்ளை பெற்றவசோதை. பெரியபிள்ளையைப் பெற்றவசோதை. ரூபகுணத்தாலும் ஆத்மகுணத்தாலும் பரிபூர்ணையாய் "என்னசோன்பு நோற்றாள்கொலோ இவனைப்பெற்ற வயிறுடையாள்" என்னும்படி யிருக்கையாலே "பெரும்பிள்ளை" என் கிறது. தானும்பெருமகள், பெற்றதும் பெரும்பிள்ளைகாணுமிவள். மருமகளைக்கண்டுகந்து. மருமகளைக்கண்டு ப்ரியப்பட்டு. "அவன்கொல்லோடுபோனான்" என்று வெறுத்தகாலத்தி லும், போனால் பிறக்கும் முறையுறவு சொல்லவேண்டுகையாலே "மருமகள்" என்கிறாள். கண்டுகந்து. பெண்பிள்ளையுடைய ஸௌந்தர்யாதிகளையும் வ்யாமோஹத்தை யும்கண்டு மடியிலேவைத்தணைத்து, "பெறுப்பேறுபெற்றோரும்" என்று ப்ரியப்பட்டு. மணைட்டுப்புறம் செய்யுங்கோலோ. மணவாட்டுப்பிள்ளையாக நினைத்துத் தான் செய்யக்கடவ சீர்மைகள் செய்யுமோ; "கூடிய கூட்டமன்றே" என்று - லௌகிகத்துக்குத் தக்கவளவு அஹ்ர்தயமாகச் செய்துவிடுமோ. ... ... ச.

மூ—தன்மாமன் நந்தகோபாலன் தழீஇக்கொண்டேன் மகடன்னைச்

கோம்மைமுலையு மிடையுங் கொழும்பனைத் தோள்கனைங் கண்டிட்
டும்மெனவுப் பெற்றதாய ரிவளித்தரியா ரென்னுங்கொலோ. ஆ.

பதவுரை.

தன்— பெருமிதமான தனத்தை
மாமன்— மாமனுடைய
நந்தகோபாலன்— நந்தகோபாலனுடைய
கன்மகள் தன்னை— கன்னிகையை
கழல் இணைகாண்டு— அழகிய இணைகளை யுடைய மடியிலேலை
யைத் தரிக்கொண்டு
செம்மாந்து இரு } 'செவ்வே இரு' என்று
என்று சொல்லி } சொல்லி
செழு— செழுமையான
கயல்— கயல் (மத்ஸ்யம்) போன்ற
கண்ணுறும்— கண்களையும்
செவ்— சிவந்திருக்கின்ற
வாயும்— அதரத்தையும்
கோம்மை— பருத்த
முலையும்— ஸ்தனங்களையும்
இடையும்— இடையையும்
கொழு— செழித்த
பனை— முன்கையையொத்த
தோள்களையும்— தோள்களையும்
கண்டிட்டு— தனித்தனியாக உற்றுப்பார்த்து
இ மகனை— 'இப்பெண்பிள்ளையை
பெற்ற தாயர்— பெற்ற தாயானவள்
இனி— இவளைப் பிரிந்த பின்பு
தரியார்— தரித்திருக்க மாட்டாள்'
என்னும் கொல் ஓ— என்று சொல்லுவரோ,
அவிக்தராயிருப்பாரோ என்று ஸந்
தேஹிக்கிறாள்.

வ்யா. இந்தாம்பாட்டு. தன்மாமன் நந்தகோபாலன். பெண்பிள்ளை தனக்கு மாமனான பூரீநந்தகோபர். தழீஇக்கொண்டென்மகள்தன்னை. "நமக்கு மருமகள்" என்னும் ஸ்நேஹந்தோற்ற என்மகள்தன்னை யணைத்துக்கொண்டு மடியிலேலைத்து. செம்மாந்திரு வென்றுசொல்லி. இவள் வ்ரீடையாலே நிலம்பார்க்க, செவ்வேயிருவென்றுசொல்லி. செம்மாப்பு- செல்லை. முகம் முதலான அவயவங்களையும் ஸமுதாயசோபையையும் பார்க்கைக் காகவிறே- செவ்வேயிருவென்பது. கொழுங்கயற்கண்ணும். அழகிய கயல்போன்றகண்களையும். செவ்வாயும். ஸ்வபாவமே சிவந்திருக்கிற அதரத்தையும். கோம்மைமுலையும். பருவத்தினளவல்லாத பரிணாமத்தை யுடைத்தான முலைகளையும். கோம்மை- பெருமை. இடையும். முலையிணைடைய வளர்த்தியாலே நெருங்கி நேர்ந்திருக்கிற இடையையும். கொழும்பனைத் தோள்களும். சுற்றுடைமையாலும் பசுமையாலும் செவ்வையாலும் வளர்ந்தழுங்கில்போலேயிருக்கிற தோள்களையும். கொழுமை- அழகும், பெருமையும். கண்டிட்டு, தனித்தனியும் ஸமுதாயமேயுமவும் தர்சித்து. என்னுடைய இழவுநெஞ்சிலே தோன்றி. இம்மகளையித்யாதி. இப்பெண்பிள்ளையைப் பெற்ற தாயாரானவள் இவளைப்பிரிந்தபின்பு ப்ராணனோடே தரிக்கமாட்டாளென்று சொல்லுவரோ; அன்றிக்கே; அவிக்தராயிருப்பாரோ. ... ... ங.

மூ.—வேடர்மறக்குலம்போலே வேண்டிற்றுச் செய்தென்மகளைத்
கூடியகூட்டமே யாகக்கொண்டு குடிவாழுங்கோலோ
நாடுநகருமறிய நல்லதோர் கண்ணுலஞ்செய்து
சாடிறப்பாய்ந்தபெருமான் தக்கவாகைப்பற்றுங்கோலோ. சு.

பதவுரை.

கூட்டம்மாத்திரமே மன
மாகக் கொண்டு

குடிவாழும் கொல்லோ — குடிவாழ்க்கை
வாழுமோ!;

சாடு— சகடத்தை
இறை— முறியும்படி-
பாய்ந்த— உதைத்த
பெருமான்— ஸ்வாமியானவன்

அறிய— அறியும்படியாக
நல்லதோர்— விலக்ஷணமாய்
ஓர்— ஒப்பற்றிருப்பதொரு
கண்ணுலம் செய்து— கல்யாணம் செய்து
தக்க ஆ-ஸ்வஜாத்யாசாரத்துக்குத்தக்கபடி
கைப்பற்றும் கொல்லோ- கையைப்பிடித்து
மணங் கொள்ளுமோ என்று
தாயார் ஸங்கதஹிக்கிறாள்.

வ்யா, ஆறுமம்பாட்டு. வேடர்மறக்குலம்போலே. கண்ணியஜாதியான மேடரையும் மறக்குலத்திலுள்ளாரையும் போலே. "கள்ளர், பள்ளிகள்" என்னுமாபோலே, வேடர் மறவர் என்கிறதும் கண்ணியஜாதியில் அவாந்தரபேதம். வேண்டிற்றுச்செய்து. திரண்டு கலியிலுமுண்டான குடிப்பிறப்பைப்பாராதே, ஒருசாஸ்த்ரமர்யாதையின்றிக்கே, தனக்கு வேண்டினபடிசெய்து. என்மகளை. பழுதற்ற குலத்திலேயுள்ள என்வயிற்றிலேபிறந்த பெண்பிள்ளையை. கூடியகூட்டமேயாகக்கொண்டு. புணர்ந்தடன்போக்கில் இரண்டு தலையும் கொஞ்சம்பொருந்திக்கூடின கூட்டரவுமாத்ரமே மணமாகக்கொண்டு. குடிவாழுங்கொலோ. குடிவாழ்க்கைவாழுமோ. சாடிறப்பாய்ந்தபெருமான் - நாடுங்கருமறிய நல்லதோர் கண்ணுலம் செய்து - தக்கவா கைப்பற்றுங்கொலோ. அஸுராவேசத்தாலே தனியிடத்திலே கண்டவர்க்க சகடத்தை, முலைவாய்வைத்துச்சிறு நிமிர்த்த இருவடிகளாலே முறியவுதைத்துத் தன்னை கொக்கி, "தனியிடத்திலே பிள்ளையைவிட்டுவைத்துப் போனகையாலே தாழ்வுவந்தது" என்று தாயார்க்குத் தாழ்வுவாராதபடி கோக்கின்றகுணசேஷிகனானவன், இரண்டு குடிக்கும் பழிவாராதபடி, திருவாய்ப்பாடி சூழ்ந்தாரெல்லாம் திருவாய்ப்பாடியாகிற தசரதமஹிஷிபோலே "இதுக்குமுன்பு இப்படியில்லை" என்னும்படி விலக்ஷணமான கல்யாணத்தை நடத்திக்கொடுத்து, ஜாத்யுசிதமான தர்மத்துக்குத் தகுதியாக பாணிக்ரஹணஞ்செய்யுமோ. ... கூ.

மு.—அண்டத்தமரர்பெருமா ணுழியானின் றெண்மகளைப்
பண்டப்பழிப்புக்கள் சொல்லிப்பரிசற வாண்டிடுங்கொலோ
கொண்டுகுடிவாழ்க்கைவாழ்ந்து கோவலர்பட்டங் கவித்துப்
பண்டைமணாட்டிமார்முன்னே பாதுகாவல்லைக்குங்கொலோ. எ.

பதவுரை.

அண்டத்து— பரமபதவாஸிகளான
அமரர்— நித்யஸூரிகளுக்கு
பெருமான்— தலைவனும்
ஆழியான்— சக்ரபாணியாயிருக்குமவன்
என்— என்னுடைய

இன்று— இப்போது
‡ பண்டம் பழிப்புக்கள் சொல்லி } பதார்த்த தூஷணம் சொல்லி
பரிசு அற— விரைசு கெட
ஆண்டிடும் கொல் ஓ— ஆளுவதோ;

‡ ரூபத்திலேயாதல் குணத்திலேயாதல்

பண்டை மனுட்டி மார் முன்னே— } முன்னம் பட்டங்கட்டியிருந்த னைக்கு முதல் மனைவாட்டியராயிருப்பவர்கள் முன்னே

கொன்றி— இவனைக் கொண்டு

கோவலர் பட்டம் கவித்து— 'இடைக்குலத்துக்குத் தலைவி' என்று தன் மனைவியை தோற்றப் பட்டங்கட்டி

பாதுகாவல் வைக்கும் கொல் ஓ } அந்தப்புரக்காவலில் வைப்பதோ.

வ்யா. எழாம்பாட்டு. அண்டத்தமரர்பெருமா னுழியான். அப்ராக்ருதமான பரமபதத்திலே அஸ்பர்ஷடஸம்ஸார கந்தரான நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனாய், ஸர்வேச்வரத்வ சிஹ்நமான திருவாழியை தரித்துக்கொண்டிருக்கும் பெருமையையுடையவன். அத்தகைய ருணையால்வந்த செருக்காலே. இன்றென்மகளைப் பண்டப்பழிப்புக்கள் சொல்லி. ஸர்வலக்ஷணை யம்பந்நையான வென்னுடைய பெண்பிள்ளையை, இப்போது பதார்த்த தூஷணங்கள் சொல்லி. அதாவது- ரூபத்திலேயாதல், குணத்திலேயாதல் சிலகுறைகளைச்சொல்லி யென்னை. டரிசறவான்டிடுங்கோலோ. அபகர்ஷடுத்தியாலே வரிசைகெட ஆண்டிடுமோ. அதாவது- அந்தரங்க வர்த்திகளாள்ளாமல் புறத்தாழில்களைக்கொண்டுவிடுமோ என்னை.கொண்டு குடிவாழ்க்கை வாழ்ந்து. இவளைக்கொண்டு தன்னுடைய குடிவாழ்க்கை யெல்லாம் வாழ்ந்து. அதாவது- இவள் முகப்பாகத் தன்னுடைய க்ருஹக்ருத்யமெல்லாம் நடத்தியென்னை. கோவலர்பட்டங்கவித்து. "கோபகுலத்துக்கு ஸ்வாமினி" என்று தன்மஹிஷியானமை தோற்றப் பட்டங்கட்டி.. பண்டைமனுட்டிமார் முன்னே. பண்டேபட்டங்கட்டி, தனக்கு மஹிஷிகளாயிருக்கிறவர்கள்முன்னே. பாதுகாவல்வைக்குங்கோலோ. அந்தப்புரக்காவலிலே வைக்குமோ. ... ...ள.

மூ.—குடியிற்பிறந்தவர் செய்யுங் குணமொன்றுஞ் செய்திலனங்தோ
கடையொன்றுஞ் செய்திலனங்காய் நந்தகோபன்மகன் கண்ணன்
இடையிருபாலும் வணங்க விளத்தினைத் தென்மகளேங்கிக்
கடைகயிறே பற்றிவாங்கிக் கைதழும்பேறிடுங்கொலோ. வ.

பதவுரை.

நங்காய்— குணபூர்ணையானவளே!
நந்தகோபன்— பூரீநந்தகோபருடைய
மகன்— திருமகனை
கண்ணன்— கண்ணனென்பவன்
குடியில்— உயர்ந்த குடியிலே
பிறந்தவர்— பிறந்தவர்கள்
செய்யும்— தங்கள் குடிக்குத்தகுதியாகச் செய்கிற
குணம்— குணத்தில்
ஒன்றும்— ஒன்றேறனும்
செய்திலன்— செய்தானென்றில்லை;

(அதுவுமன்றி,)
நடை— லோகநடத்தையிலும்
ஒன்றும்— ஏகதேசமும்
செய்திலன்— செய்யவில்லையே;
அந்தோ— ஐயோ! [என்றுமனம் வருந்தி]
இடை— இடையானது
இருபாலும்— இருபக்கமும்
வணங்க— வளையும்படி
என் மகள்— என் மகளானவள்
ஏங்கி— (மூச்சுத்தாங்கிக் கடையமாட்டாமல் குடிகுடியென்று)

திணைத்தொடர்நிலை— திணைவழுவமைதி

கடைகயிறு— கடைகிற கயிற்றைப்போல

பற்றி— பிடித்து

வாங்கி— வலித்து (அதனால்,)

கை— மற்றவான கையானது

தழும்பு ஏறி மெய் கொல் ஓ } தழும்பேறிவிடுமோ.

ய்யா. எட்டாம்பாட்டு. குடியிற்பிறந்தவர் செய்யும் குணமொன்றும் செய்திலன். உயர்ந்தகுடியிலே பிறந்தவர்கள் அக்குடிக்குத்தகுதியாகச் செய்யும் குணத்தில் ஒன்றும் செய்திலன். அதாவது- முறைப்படி பிடிவிளைவரைந்துகொண்டு வெளியில் கொண்டு போகாமையிறே. அந்தோ. ஐயோ! என்று விஷண்ணையாகிறாள். நடையொன்றும் செய்திலன். குடியிற் பிறந்தவர்கள் செய்யுமது செய்யாவிட்டால் லோகத்தில் நடக்கும் மர்யாதைதான் செய்யுமிலே; அதில் எதிதசமும் செய்திலன். அதாவது- லோகத்திலே யிப்படிசெய்வாரில் லையிறே யென்னுக. நங்காய். குலமர்யாதையும் லோகமர்யாதையு மறியும் குணதூர்த்தியுடை யங்களையன்று. தனக்கு பத்துவாய் ஸ்கிருதிஞானவள் முகத்தைப்பார்த்துச் சொல்லு கிறாள். நந்தகோபன்மகன் கண்ணன். குடப்பிறப்பில் வந்தால் பூநீநந்தகோபர் திருமகளுபி ருக்கிற க்ஷ்ணன். நங்காய் நந்தகோபன்மகன் கண்ணன் - குடியிற்பிறந்தவர்செய்யும் குண மொன்றும் செய்திலன் - நடையொன்றும் செய்திலன் - அந்தோ என்று - அவன்முறை கெடக் கொண்டுபோன ப்ரகாரத்தைச் சொல்லி விஷண்ணையாய். மேல் தன்னுடைய பெண்பிள்ளையின் மார்த்தவத்தை நினைத்து கொண்டு சொல்லுகிறாள். இடையிருபாலும் வணங்க. இடம்வலங்கொண்டு கடைகையாலே, இடையானது இரண்டு பார்ச்வத்திலும் வணங்க. திகோத்திகோத்தெண்மகளேங்கி. லகுமாரியான வெள்பெண்பிள்ளை பலதாகியாலே மூச்சுத்தாங்கிக் கடையமாட்டாமல்வாங்கி நடுநடுவே யிளைத்திளைத்து. கடைகயிறித்யாதி. தொடங்கினகாரியம் தலைக்கட்டுமளவும் இடைவிடாமல் கடைகயிற்றையே பிடித்துவலித்து, அந்தாலே கனிந்போலே மர்துவானகையானது தழும்பேறிவிடுமோ வென்கிறாள். கோவலர் பாடிக்கட்டிலும் கடைகயிறு வலிக்கவேலுமிறே இடைச்சிகளுக்கு. தான் தன் பெண் ணின் மார்த்தவம் சொல்லுகிறாளித்தலையிறே. ... ... அ.

மூ.—வெண்ணிறத்தோய் தயிர்தன்னை வேல்வரைப்பின் முன்னெழுந்து
கண்ணுறங்காதேயிருந்து கடையவுந்தான் வல்லள்கொலோ
வெண்ணிறத்தாமரைச் செங்கணுலகளந்தா னென்மகனோப்
பண்ணுறையாப் பணிகொண்டு பரிசுரவுண்டிடுக்கொலோ. கூ.

பதவுரை.

தான்— மெண்மைத் தன்மையளான என் பெண்ணினவள்

வெள் நிறம்— வெண்மை நிறத்தையுடை த்தாய்

வேல்— தெரியத் தோய்த்த

எழுந்து— எழுந்திருந்து

கண் உறங்காதே இருந்து— கண்விழித்துக் கொண்டிருந்து

கடையவும்— வருந்திக் கடையவும்

வல்லள் கொல் ஓ— வல்லளோ!

கனா— கனைகடல்நாடு

உலகு— காவலா உலகங்காசினியும்

வளைந்தான்— நீதிநூலாக்கு கொண்டவன்

என் மகனோ— என் மகனோ

வ்யா. ஒன்பதாம்பாட்டு. வெண்ணெயிற்றோய்த் துயிர்த்தன்னை. செவ்விருன்முருகபடி காய்ச்சித்தீதாய்க்கையாலே வெளுத்தநிறத்தையுடைத்தாய்ச் செறியதீதாய்ந்த துயிர்களை. வெள்வரைப்பின் முன்னெழுந்து. ஆதித்தியோதயத்துக்கு ஸ்ரீசகயான வெள்வரைப்புந் தீரா றுவதற்குமுன்னே யெழுந்திருந்து. வெள்வரைப்பு. திருக்குவரைக்கை- ப்ராஹ்மணர் ஸந்த்யாவந்தநாதிகமாக அருமீணதயத்துக்கு முன்னே யெழுந்திருக்குமாபோலே யிவளு- இடைச்சிகளும் துயிர்கடைகைக்கு எழுந்திருக்கும்படி. கண்ணுறங்காதேயிருந்து. எழுந்திருந்தாலும் நித்தரபகையாமிறே; அதின் வசபடாகாதே விழித்திருந்து. கடையவும் தான்வல்லள் கொலோ. பர்த்துப்ரக்ருதியான தான் ஆபாஸித்துக்கடையவும் வல்லளோ. ஒண்ணெயிறு மிதுப்பாதி. அவர்தீபோலை அழகிய நிறத்தையுடைத்தான தாடைபோலே சிவந்திருக் கண்களையுடையளாய், ஸமஸ்தலோகப்ரகாசையும் தன் திருவயிறுகளின்கீழ யாக்கிக்கொண்டவன். இத்தால்- தன் கண்ணழகாலே இவளை அகப்பாய்வுஹாபாக்கித் தன்காப்பின்கீழ யிட்டுக்கொண் டவனன்றை. என்மகனோப் பண்ணறையாப் பணிகொண்டு. தான் * திருமகள்போலே வளர்த்த மகன் பொன்னின்னாளை, பண்டுபோகடந்தாழ்ந்து பணிகளிலே யேவிக்கொண்டி. பரிதாப ஆண்டிருந்கோலோ. இவளுடைய பெருமைமிகடறிந்தோமா, பெருமைமிகடாதபடி யாதோ, அறிகிறிலேன் எனகின்றாள். ... ... ஈ.

அ. நிகமத்தில் இத்திருமொழிகற்றார்க்கு பலந்தானல்லித் தலைக்கட்டுகிறார்.

மூ.—மாயவன்பின் வழிசென்று வழியிடை மாற்றங்கள்கேட்டு
ஆயர்கள் சேரியிலும்புக் கங்குத்தனைமாற்றமும் மெல்லாம்
தாயவள் சொல்லியசொல்லைத் தலைப்படுதண்டமிழ்பத்தும்வல்லார் தூமணிவண்ணனருக்காளரே. யி.

பதவுரை.

மாயவன்— ஆச்சர்ய சேஷ்டிதங்களையுடைய ஸர்வேச்வரனுடைய

பின்வழி சென்று— பின்னே போய்

வழியிடை மாற் } போம் வழியிடையில்
றங்கள் கேட்டு } கண்டறிவு வல்லதுக்
கள் விஷயமான வர்த்தாந்
தங்களைக்கேட்டி

ஆயர்கள் சேரியிலும்— திருவாய்ப்பாடியி லுள்ள

அங்குத்தனை— அங்குள்ளவர்க்குத் தக்கபடி செய்த

மாற்றமும் எல்லாம்— தன் பெண்பிள்ளை யின் செயல்களெல்லா வற்றையும்

தாயவள்— தாயானவள்

சொல்லிய— அருகுநின்றவர்களைக் குறித் துச் சொன்ன

சொல்லை— சொல்லை

தண்— குளிர்ந்த [வாசனை

துப— (பகவத்விஷயமானகையாலே) பரி
சுத்தமான
தமிழ்— தமிழ் பாஷையான

துமனி— பழிப்பற்ற லெமணிபோன்ற
வண்ணலுக்கு— வடிவழகை யுடையவனுக்கு
ஆளர்— அடிமைசெய்யப் பெறுவர்.

வ்யா. மாயவன்பின் வழிதென்று. தன்னுடைய பெண்பிள்ளையானவள், நப குணசேஷ்டிதங்களால் ஆச்சர்யபூதனுய், அவற்றைக்காட்டித் தன்னை லபிகரித்துக்கொண்டவனுடையபின்னை, * கன்னல் கொல்லில் பிராட்டியைப்போலே வழிபோய். வழியிடைமாற்றங்கள்கேட்டு. "கனிபோல் மிழற்றிடந்து" என்கிறபடியே போகிறவழியிடையிலே அதுபதார்த்தங்களைக் கண்டால் இவை யென்னென்று அவ்விஷயமாக அவன வார்த்தைகள் கேட்டி. ஆயர்கள் சேரியிலும்புக்கு. ப்ராப்தஸமான திருவாய்ப்பாடியிலும் சென்று புகுந்து. இப்படியுண்டான செயல்களையும். அங்குத்தை மாற்றமுமெல்லாம். அவ்வூரிற் புகுந்தபின்பு, அங்குண்டான யசோதைப்பிராட்டி, நந்தகோபர், ராமகிருஷ்ணன், தன் பெண்பிள்ளையான ஸுபத்ரை, குசலப்ரச்நமாகச்செய்யும் வ்ருத்தாந்தமான சொல்லுகளையும் எல்லாவற்றையும். "மாற்றமும்" என்கிற ஸுச்சகபதவாக்ய சதப்தத்தாலே - கீழுண்டான செயல்களையும் கூட்டிக்கொள்வது. தாயவள் சொல்லிய சொல்லே. திருத்தாயாரானவள் தன் க்ருத்ரிமலயிலிருந்து தன்னிலே க்ரமேணித்தும் மதோரதித்தும் பரிணதிதனைக்குறித்துச் சொன்ன சொலவுகளோ. ... ... *

அநந்தரம், மாயவனிக்யாதி. தன்னுடைமையைத் தான்கொண்டுபோகையாலும், அது தன்னை முடையிலே காட்டிக்கொடுக்கக் கொண்டுபோகாமையாலுமுண்டான குணதோஷங்களிரண்டும் உபாதேயமாய்த் தோற்றும்படியிருக்கிற ஆச்சர்யபூதனவன் போனவழியிலே தானும் வழிப்பட்டுச்சென்று, வழியெதிர்வந்தாரை முன்போனவர்களுடைய ஸ்திதி கமநப்ரகாரங்களையும் வினவிக்கேட்டு. ஆயர்கள் சேரியிலும் புக்கு. திருவாய்ப்பாடியில் நந்தகோபர் தெருவளவாகச்சென்று, அங்குநின்றவர்களை அங்குத்தை விசேஷங்களையும் வினவிக்கேட்டு. தாயவள்சொல்லியசொல்லே. வழியெதிர்வந்தாரை "மதுரைப்புறம் புக்காள்கொலோ" என்றுகேட்டும், * எமர்கள்குடிக்கு ஒசேச்சாமோ குணமாமோ என்றுற் போலே கேட்டும், திருவாய்ப்பாடியில் தோரணம்முதலான அலங்காரங்களும் வாத்யகோஷங்களும் கண்டு கேட்டுகொளாலென்று கேட்டும், ஆயர்கள்சேரியிலேசென்று யசோதை நந்தகோபருடைய ஆதராதரங்களெல்லாம் வினவிக்கேட்டு அவர்கள்சொன்ன விசேஷங்களுமெல்லாம் திருத்தாயாரானவள் சொன்னப்ரகாரங்களேயென்று இங்ஙனேயோஜிக்கவுமாம். இதிலுங்காட்டில், பூர்வமாயனைக்கு ஔசித்யமுண்டி.

தண்புதுவைப்பட்டன்சொன்ன. ஸம்ஸாரச்சமஹரமான குளிர்த்தியையுடைய திருப்புதுவைக்கு நிர்வாஹகரான பெரியாழ்வாரருளிச்செய்த. தூயதமிழ்பத்தும்வல்லார். ஸம்ஸ்க்ருத சப்தம்போலேயிருண்டு பொருள்தெரியாதபடியிருக்கையன்றிக்கே, பெண்ணுறக்கும் பேதைக்கும் அறியலாம்படி ஸ்வார்த்த ப்ரகாசகமாயிருக்கும் தூய்மையையுடைத்தான த்ர

யிருக்கிற பத்துப்பாட்டையும் மொழிபெயர்த்தவர்கள். நாமறிவதென்னை
க்காளே. பழிப்பற்ற நிலைத்தம்பொன்ற வடிவழகையுடையவனுக்கு சொற்றுதாய் அடிமை
செப்பப் பெறுவர். ... ... ரு.

பெரியதிரு வடிகளே சரணம்.

அடிவரையு.—கல்ல தொன்று குமரி யொரு தென்மாமன் வேட
சன்டைக் குடி வெண்ணிற மாயவ னென்றெதிர்.

ஆதிருமொழி-உள-க்கு, பாட்டி-உரை.

மூன்றும்பத்து - ஒன்பதாந்திருமொழி - எல்லுநன், ப்ரவேசம்.

அ. க்ஷ்ணவதாரகப்பிரணாய், நந்குணசேஷ்டிதங்களோடே பதுபவித்தகொ
ண்டு போந்தார்-கீழ்; இப்போது, அந்தக்ஷ்ணவதாரகுணசேஷ்டிதங்களோடே எதுக்கூர்வ
காலிகமான நாமாவதாரகுணசேஷ்டிதங்களையும் வகுகாலத்திலே பதுபவிக்கவேணுமென்
னும் அபிநிவேசம்பிறந்து, அதுக்குடலாக இரண்டு ஸ்ரீகோபிமாரவஸ்த்தைனயப்பிராப்தராய்,
அதிலே ஒருத்தி க்ஷ்ணவதாரகுணசேஷ்டிதமும், ஒருத்தி நாமாவதாரகுணசேஷ்டிதமுமா
கக்கொண்டு, ஒருவர்க்கொருவர் எதிரியாய்க்கொண்டு சொல்லி, உபந்நியாசத்தாலே
உபயாவதாரகுணசேஷ்டிதங்களோடுமேபரி பதுபவிக்கிறார்- இத்திருமொழியில். இரண்டு
கோபிமாரவஸ்த்தைனயை வகுகாலத்திலே யனுபவிக்கூடுமோவென்னில்; பகவத்பாஸ்ரதனி
த்தாலே ஜ்ஞாநத்தில் தனடையற்றால் எல்லாம் சொல்லலாமிறே. "'மோனமாநமென்றேத்தி'
என்கிற திருமொழியிலே, இரண்டு பிராட்டிமார்தனை வகுகாலத்திலே கூடும்படியென்?'
என்று ஸீயர் பட்டரைக்கேட்க; 'தேசவிசேஷத்தில் அதேக சரீரபரிக்ரஹம் வகுகாலத்திலே
கூடுகிறபடி எங்ஙனே; அப்படியே இவளையுமிவளாத்தை அருளிரண்டுமிம்" என்றருளிச்செய்
தார் என்று ப்ரஸித்தமிறே. ... ... *

மூ.—எல்லுநன்றேவிக் கன்றின்படப்பூ வீயாதாள்
நன்னுதன்காணேவே தண்பூமரத்தினை
வென்றுதட்டுள்ளால் வலியப்பறித்திட்ட
என்றுதன்வண்மையையப் பாடிப்பற வெம்பிரான் வண்மையையப்பாடிப்பற. கூ.

பதவுரை.

நிலம் — நிலமுருக்குப் பூவினிதழ்

பூ — தூக்குங்கிடக்கிறது

மரந்தின்னா — கட்டையிற்கட்டிய

நாகம் — வாடிவதங்குபாம்பு

வல் — விரைவுடைய

பள்ளாசல் — பெரிய நிலவுடைய சேல

வாவிய — பலவாற்றானாக

பறித்து — பிடுங்கி கொண்டுபோய்

இட்ட — வருத்தமான கூர்முனைக்கண் கட்டையறுப்

வல்லடையாடை — மீன்முள்ளை முடிக்கும் வல்ல

வடங்காய

பாடு — பிரிவினால் பாடுகிடைத்தி

பசு — உயிர்ப்பு

எய் — எய்தாது

பிரசம் — உடலாசை நினைவுமுடைய

வல்லடையாடைப்பாடு பிறவு

என்னும் இச்சூத்திரத்தில் விதிக்கப்பட்ட

வினைமுற்றை வினைமுதற்கண் கூட்டுக.

விய. முருந்தாட்டி. எருமுந்து தெவிட்டு. எல் இளமை. எருமுனை இளமை

தெவிட்டு. நாகுளைமுதல் - இளமுதல்முடை. விளையாட்டுத்தனைச்சுட்டுதல் வேண்டி

நின்றமையின் விளையாட்டியல் என்னாது "எருமுனை தெவிட்டு" என்றது.

நிலைபெறுத்தல் வேண்டி "எருமுனை" என்னாது "எருமுந்து" என்றார். (க) "விருந்து வருதல்" என்பதனுள் இவளுக்கு நிகழ்ந்தவை-அவளுடையதோழியென்றமையின்.

"தோழி" என்னையாதலின் - வருந்தப்பாலைப் பிரசுட்டியுடைய வல்லப்பம் கொல்லுகிறது.

அன்று. காளை-காளைதம்பன்னரி தங்களுக்குக் குடியிருப்புப் பண்ணிக்கொடுத்த கார்த்தா

தேருடைகூடி, தன்னுடைய கர்ணத்தினிலை ஸத்யபாமைப்பிராட்டி பெருந்தருவினனென்று.

அதிசயத்தா நிரதிசயமாக மதராதிதி கைப்பட்டனென்று. இன்புற்றுவீயாதாள். போக்கடன

கல்பகப்பூ வர, அத்தைதக்கண்டு காய்ச்சியார் அதிசயித்தலும் பெரும்தவத்து கிட்டாவஸ்தை

யாகையாலே நிரர்த்தகமாகச் சிலதேறதுக்கலொக்கொல்லிக் கொடாத இந்தராணி. தன்னாதன்.

"அவனைத்தனக்கு நாதனாகவுடையோம்" என்றுபிரிக்கையிலே இவள் தனக்குத்தகாத

பலமாக நினைத்திருப்பது. காணேலே. "நாம் முப்படித்துழக்கோடி தேவர்களுக்கும் கிட்

டாதாகுன இந்தானல்லமே" என்று தன்னைப் போரப்போலிய அபிமானித்திருக்குமவள்

கண்டிகொடி நிற்கலே. தண்பூமரத்தினை. தனைமுத்தைக்குளிர்ந்து பூத்துநிற்கிற கற்பகப்பூ

சுத்தனை. வன்முதப்புள்ளால். நாதப்பிரதாக சேவகமயற்றிருக்கிற பெரியதிருவடியாலே.

(உ) "தீவுரிதூபதிரோமாயாகூலவகந்ஃ" இத்பாதியாலே - இவளுடைய வெற்

மையத்வம் ஸாம்பக்நமாகச் சொல்லப்படா நின்றதிலே. காதத்துக்கு வம்மையாவது - பாம்பு

பகுதிஷ்டிகளால் சனிப்பிக்கவொண்ணுமை. வன்மை, பெரிய திருவடிக்கு விசேஷணமா

வுமாம். இவனுக்கு வலிமையாவது - நினைத்தகாரியம் செய்து முடிக்கவல்லசக்தி. வலியிப்

பறித்திட்ட. வலியாலே பிடுங்கிக்கொண்டுபோந்த. அவன்றன்னையபேக்ஷித்துக் கொள்ளுமை

யன்றிக்கே, அவனுடைய அனந்திதியிலே பிடுங்குகையுமன்றிக்கே, அவன் பார்த்துநின்று

விலக்கச்செய்தே, பலத்தாலேயிலே பிடுங்கிக்கொண்டு போந்தது. என்றதன்வன்மையைப்

பாடிப்பறை. அபிமதாநுபானை ஸத்யபாமைப் பிராட்டிக்கு பதாந்தரப்பாரியம்செய்த ப்ரஸா

(க) "விருந்துறுபத்தீம்." (உ) "தீவிர்த் தேதிரோ காயத்தாஞ்சகந்ஃ."

யிக்வரூனத்தாலே டென்னீ பெழுதிக்கொண்டவனுடைய, திசோத்தர முடிக்கவல்ல பல
த்தாத பிரும்மா லே படைத்தான்பிறை. எம்பிரான்வன்மையைப் பாடிட்டிற. பிரட்டிக்குச்
சொற்ற உபசாரம் தனக்குச் சொற்றதாக நினைத்து "எட்டிசான்" என்றார். "வன்மையை
டாயிப்பற" என்று சிலவட்டிசாஸ்திரம் பிரும்மாலே. பரமவைதிகர் - உத்தி
பரமென்பது. ... ... க.

மூ.—என்வில்வலிகண்டு போவென்றெதிர்வாதான்
தன்வல்லிதேரூடுத் தவத்தையெதிர்வாங்கி
முன்வில்வலித்து முடுடென்றுயிருண்டான்
துன்னில்லையின் வன்மையைப்பாடிட்டிற தாசரதிதன்மையைப்பாடிப்பிற. உ

பதவுரை.

வின்— நிருத்தசாலையில் வில்லை
வலித்து— வளைத்து [புனைடைய
முதுதோள்— தாடகி என்னும் ராக்கதியி
உயிர்— உயிரை
உண்டான் தன்— முடித்த சக்ரவர்த்தி திரு
மகனுடைய
வில்லின் வன்மையைப் பாடிப்பிற—;
தாசரதி— தசரதருடைய புத்திரனுடைய
தன்னாடலை— குணசேஷ்டை
பாடிப்பிற. [இதனால் அவதாரத்திலும்
பட்டவன்வார்த்தை.]

என்— என்னுடைய
வில்— வில்லினை
வலி— வலியை
கண்டு போ என்று— 'கண்டு போ' என்று
எதிர்வந்தான் தன்— எதிர்த்துவந்த பரசு
ராமனுடைய
வில்லிதோடுட் நலந்தை— வில்லையும் தோளை
யையும்
எதிர்— அவன் கண்முன்னே
வாங்கி— அழித்தவனுப்
முதல்— இதற்குமுன்னே

பெயர். இரண்டாம்பாட்டு. என்னிற்பயன். "என்னுடைய வில்லின்வலியைக் கண்டுபோ" என்று எதிரேவந்த பரசுராமனுடைய. அதாவது - மாதுறச்சுவர் தாழ்ப்பாள் கம்பம்முரி பூரீராகவனுன் திருமகளைத் திருமணம்புரிந்து, பெரியசெருக்கோடே திரு வயோத்தியையையடைந்து எழுந்தருளா நிற்கச்செய்தே, இந்த விசேஷத்தைக்கேட்டு, குபி தற்றதபனுப்த் தன்னுடைய வில்லையுமெடுத்துக்கொண்டு நடுவழியிலேவந்து தோன்ற, சக்ர வர்த்திபெரிதேசென்று பொற்பூக்கையும் காலிலேபொகட்டு அதுவர்த்திக்கு(க) "ஐயா நாஞ்சவை ரயா ஜூடலூய தூஷ்கை-ஹவி" என்று அர்த்திக்கவளவிலும் அதை அதிக்ரமித்துத் தள்ளிக் கொடுபோந்து, தன்சிற்றடிமல்லாற் தோற்றும்படி முகத்தைப் பார்த்து, "முன்பெழுநிப்போய் பலவிடங்களிலும் பூண்கட்டிக்கிடக்கிறதொரு சொத்தை வில்லைமுறித்தித்தன் என்று கர்வோத்தரனைப் வருகிற நீ என்னகையில் வில்லைவாங்கி வலோத் தாயாயில்சமத்தன்" என்றும் நினைவாலே, "என்வில்வலிகண்டுபோ" என்று தன்னு

தன் வில்லிலேறும் தவத்தையெதிர்வாங்கி. "ஆனால் தன்னுடைய வில்லைத் தாழ்த்தாதீர்" என்று வில்லை வாங்குகிறவனிடம், அந்த வில்லோடுகூட அவனுடைய கர்வமிறங்கவான கபஸ்தையும், அவன் பார்த்திருக்கச் செய்தி வாங்கி. எதிர்வந்தான்றன் வில்லை என்று- எதிரேவந்தவன்றன்னுடைய வில்லென்றதால்; எதிரேவந்த பரசுராமன்கையினிருப்பது தாய் னைவஞ்னவமான தருஸ்னாகைபாமேல முன்மேட தன்னுடையதாயிருக்கிற வில்லென்றதால். இப்படியிருக்கிற வில்லோடே, அவனுடைய கபஸ்னை யெதிர்வாங்குகையாவது- அந்த வில்லைவாங்கி அதிலே சரத்தைத்தரித்தாதித்து, "இந்தக்கிரௌஞ்ச உன் ப்ராணனோப் போக்கிவிட என்றால் நீ ப்ராற்மணனு யிராதின்றாய்; ஆனபின்பு, உன்னுடைய தபோபலத்தைப் பண்ணிவிடலாம, உன்னுடைய தபோபலங்களைப்பழித்துப் பொகட்டினிடலாம" என்று சொட்டவளவில்; "தபோபங்கம்பண்ணினால் எனக்கு வாஸ்தவமான மஹேந்த்ர பர்வதத்தை நம்மோபாதாது, என்னுடைய தபோபலத்தை யழித்துவிடுவிம்" என்ன; அப்படி செய்யினிட்டது. ஸ்வரூபாவிசாவதாரமாய், தசாவதாரமத்தில ஸ்ரேஷ்டமாயிருக்கிற அப்பரசுராமன்றன் நிரஸ்தனைபடி யெங்ஙனே யென்னில்; ஸ்வரூபாவேசத்திலும் ஸாகஷாத்வதாரம் ப்ரபலமானையாமேல அதிகுடத்வழண்டானதோது இதிலுமேல அதிகரிஸ்தமாகக்ரூறையில்லை; சக்த்யாவேசத்தில் ஸ்வரூபாவேசம் ப்ரபலமானதேவாபாதி, ஸ்வரூபாவேசத்தில் ஸாகஷாத்வதாரம் ப்ரபலமாகத்தட்டியில்லையிறே; சக்த்யாவேசத்தில் ஸ்வரூபாவேசம் ப்ரபலமானையாமேல யிறே ஸ்ரேஷ்டாத்வாஜ்ஞாதன் பரசுராமனுமேல நிரஸ்தனைப்த்து.

முன்வில்வலித்து முறுபெண்ணையிருண்டான். இதுக்கு பூர்வத்திலே விச்வாமித்ராமறை ஸ்னியினுடைய அத்வாத்வரணர்த்தமாக மறைவிதேபோடேகூட எழுந்தருளினவளவிலே, பாதவிட்னையிலே பழுதி, யாகங்குலையும் ப்ராற்மணரையும் தபஸ்ஸுக்குலையுமதித்துக்கொண்டி திரியும் ராக்ஷஸியான் தாடகை, அதிரக்கூப்பிட்டித் தைகளையுமெடுத்துக்கொண்டு மிருந்து பிருந்துகோபத்தோடே கலிவதாக அடர்ந்துவர, விச்வாமித்ர நியோகத்தாலே திருக்கையில் வில்லுமோத்து அவளுடைய ப்ராணனைமுடித்தவன். தன்வில்லின்வன்மையைப் பாடிக்கொண்டு பரனன்று எதிரியைப்பார்த்துச் சொல்லுகிறன். வில்லுக்கு வணைமாவது- "காயுங்கதிர்ச்சிலை" என்கிறபடியே ப்ரதிபக்ஷத்தில் பெருமாள் கண்பார்க்கிறதும் கண்பாராமல் காரியம் செய்யும் திண்மை. தாசரதிதன்மையைப்பாடிட்டது. இத்தால்- இவ்வதிமாநுஷசேஷ்டிதங்களைச் செய்யாநிற்கச்செய்தேதுடும், நீளவும் சக்வாகந்தமறை "ஐயர் மகன்" என்கிற தன்னைநினைத்துன்று காய்யஞ்செய்தருளுகிறதைத் சொல்லுகிறது. ... ...

மூ.—உருப்பிணிங்கையைத் தோற்றிக்கொண்டு
விருப்புற்றங்கேக விரைந்தெதிர்வந்து
செருக்குற்றுன்வீரஞ் சிதையத்தலையைச்
சிரைத்திட்டான் வன்மையைப்பாடிட்டது தேவகிசிங்கத்தைத்பாடிட்டது.

பதவுரை.

சிலைத்திட்டான்— அம்பாலே சினைத்து விட்டவனுடைய

வன்னமனையப் பாடிப்பற—;

தெனவி சிங்கத்தை — தேனவியையுமிற்

பிறக்கையாலே சிங்கப்போன்ற

வீரப்பாட்டை யுடையவனை

பாடிப்பற—

ஏ— போகாதிருக்

கறி— வரிசையற்ற பொருளையுடைய

சினத்து வர்து— வினைந்தோடி வந்தவனுடைய

செருக்குமுன்— கர்வத்தையடைந்த ருத்

டனுடைய

வீரம் சிதைய— வீரியமழிந்துப்படி

தலையை— தலையை

வ்யா. மூன்றும்பாட்டு. உருப்பினிங்ஙனையத் தெரிந்திக்கொண்டு. "கன்று வெண்தோடித்து" என்கிறபாட்டிற் சொல்லுகிறபடியே - தான் முன்பு தேடின கருவல்லாம் தன்மேலே செல்லுப்படி கல்பானைத்தைப் பெருக்கித்தாடித்து, புதுப்பூ மொக்கவிலுண்டு ஸுகப்பட்டிருப்பாரைப்போலே கர்பனைபானவிலுள்ளே கைப்பிடிப்பதாக விருப்பி, அதுக்கு தூல்வகினையகளெல்லாம் செய்து "இனி இவ்விதவபம் நமக்குக்கைப்புகுந்தது" என்று நிச்சயித்திருந்த சிசுபாலன் தேஜோஹரனாகிப்பட்டு, ஒருவர்முகம்பார்க்க லஜ்ஜித்து அண்டரைத்து கொண்டிருக்கும்படியாக அங்கேசென்று கைகளைப்பிடித்திதுத்து, ருக்மிணிப் பாட்டியைத் திருத்தேரிலே யேற்றிக்கொண்டு. விருப்புற்றங்கே. அவ்வளவிலே விருப்பத்தைப் பண்ணிக்கொண்டு போராதிற்கச்செய்தே. அவ்வளவிலே விளைந்தியாது. ருக்மிணிப் பிராட்டியினுடைய தமையனான ருக்மன், "இப்படி செய்கையாவதென்" என்று நிற்பொருது மீட்பானாக விளைந்துவந்து தன்னுடைய சேர்யத்தால்வந்த செருக்கையுடைய முட்டிக்கொண்டு தாகைய. "இவனைக்கிகாலில்லில் ருக்மிணிப்பிராட்டி மாஸ்லா பிசகும்" என்று அனைப்பிடித்துத் தேர்க்காலிலேகட்டி அவனுடைய வீரத்துக்கு பங்கமாக மனன்றலிலைய அப்போலே சினைத்து விட்டவனுடைய வலியை, பரிதிப்பிரானைப்போல் கொண்டு பாடிப்பற. அன்றிக்கே, "வந்தசெருக்குற்றன்" என்று பாடமானபோது - "மீட்சியிலனும்" என்னும் கறவுகளிலே விளைந்து எதிர்த்து வந்த கர்வுக்கனவடு டையதலைவைச் சினைத்திட்டான் வன்னமனையப் பாடிப்பறவென்னை. தேவகிசிங்கத்தைப் பாடிப்பற. ருக்மிணிப்பிராட்டியைத் திருமணம்புணருகைக்குடலான தேவஜிவபிற்றில் பிறப்பையும், பரதிபக்ஷதிசையத்தில் விற்மலம்போலே யிருக்கும் வீரப்பாட்டையு முடையவனைப் பாடிப்பற. ... ... கூ.

மூ.—மாற்றுத்தாய்சென்று வனம்போகேயென்றிட
ஈற்றுத்தாய்பின்னருடன் தெம்பிரானென்றழுக்
கூற்றுத்தாய்சொல்லக் கோடியவனம்போன
சீற்றமிலாதானைப்பாடிப்பற சீதைமணாளனைப்பாடிப்பற. கூ.

பதவுரை.

மாற்றுத்தாய்— நம் தாயானையைபோத்த லக்ஷ்மி

என்றிட— என்று நியமிக்கவும்

போனை— எழுந்தருளினவனுய்
சிற்றம் இலாதாளை— 'காட்டிலே போக
விட்டாள்' என்கிற கோபமில்லாதவளை
பாடிப்பற—; [வளை
சீதை மணாளனை— ஸீதைக்கு வல்லபனை
பாடிப்பற.

(உன்னைப்பிரிந்து எப்படி தரித்
திருப்பேன்;')
என்று அழ— என்று கதறி அழவும்
கூற்றுத்தாய் சொல்ல— கூற்றம் போன்ற
கைகேயியுடைய சொல்லைக் கொண்டு
போய வனம்— கோடிய காட்டிலே

வ்யா. நான்காம்பாட்டு. மாற்றுத்தாய்சென்று வனம்போகேயென்றிட. மாற்றுத்தா யென்றது- மற்றைத்தாயென்றபடி. அன்றிக்கே, 'மாறு' என்று - ஒப்பாய், மாறான தாய்- பெற்றதாய்க்குப்போலியான தாயென்னவுமாம். ஸ்ரீகௌஸல்யாதேவிபாதி, பெருமாள் பக்கல் அதிஸ்நேஹமுடையளாயிறே ஸுமித்ரையாரிருப்பது. இப்படியிருக்கிற தாயாரானவள் சென்று "நீர்வநத்திலேபோம்" என்றுசொல்ல. அதாவது- திருவபிஷேகமங்களமே ஹாத்ஸவார்த்தமாகத் திருப்படைவீடல்லா மலங்கரித்து உத்ஸவமும்தொடங்கி புரோஹிதரான வஸிஷ்டாதிகளைத் தாணுமாகக்கொண்டு, ராஜாவான சக்ரவர்த்தி, திருவபிஷேகார்த்தமாகப் பெருமாளுக்குக் காப்புக்கட்டி, புரச்சரணாங்களும் செய்வித்து, "இனி அபிஷேகம்செய்யு மித்தனை" என்று முஹூர்த்தம்பார்த்திருக்கிறவளவிலே, கைகேயியானவள் குப்ஜைவார்த் தையாலே நெஞ்சுகலங்கி, பர்த்தாவான சக்ரவர்த்தியைப்பார்த்து, எனக்கு "இரண்டுவரமு மோடமுன்னே தந்திருப்பது, அதிரண்டும் இப்போது செய்யவேணும்; அதாவது- ராமனை அபிஷேகம்செய்யாமல் காட்டிலேபோகவிடவேணும், பரதனை அபிஷேகம் செய்யவேணும்" என்ன; ஸத்யதர்மபராயணனானகையால் "என்செய்வோம்" என்று இடிவிழுந்தாற்போலே இவ்வார்த்தையைக்கேட்டு கலேசப்பட்டு, பெருமாளையழைத்துக்கொண்டுவரும்படியாக ஸுமந்த்ரனைப்போகவிட்டு, தான்கலங்கிக்கிடக்க; ஸுமந்த்ரன்சென்று "ஐயோ எழுந்தருளச் சொல்லுகிறார்" என்னையாலே, பெருமாளும், திருவபிஷேகத்துக்கென்று அலங்கார்த்த திவ் யகாத்ரராய்க்கொண்டு, பிராட்டி மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு அந்தபுரத்வாரத்தள வும் பின்னேடவர, திவ்யாந்தபுரத்தில்நின்றும் புறப்பட்டுப் பெரிய கோலாஹலத்தோ டே எழுந்தருளிவந்து தமட்பணைக்காணப் புகுந்தவளவிலே, கலங்கிக்கிடக்கிறபடியைக்க ண்டு "இதுக்கடியென்" என்று பயப்பட்டு, "ஐயர்க்கு இப்போது க்லேசமேது" என்று கைகேயிபக்கலிலேகேட்க; "முன்பே எனக்கு இரண்டுவரம் தந்திருப்பர்; அந்த இரண்டுவரமும் இப்போது பெறுகைக்காக உம்மைக் காட்டிலே போகவிடவேணுமென்றும், பரதனை அபி ஷேகம் செய்யவேணுமென்றும் நானேபணித்தேன்; ஸத்யம் தப்பாதவராகையாலே அதுக்கு அநுமதிபண்ணி உம்மைக் காட்டிலேபோகவிடுவதாக அழைத்துவிட்டார்; இப்போது உம் மைக்கண்டவாறே வாய்திறந்து சொல்லமாட்டாமல் கிடக்கிறார்" என்ன; "இப்படியோ கான் ஐயர்க்கு பரதந்த்ரனாய் வர்த்திக்தபடி, என்னை நியமிக்கும்போதைக்கும் இப்படி க்லே சிக்கவேணுமோ, கருப்பிலே விழச்சொன்னால் அதுவும் நான் செய்யேனே" என்ன; "ஆனால், அவர்க்காக நான் சொல்லுகிறேன், நீர் வரவாளர்த்தமாகப்போம்" என்ன; "அப்

[illegible] கிளிகளைப் பார்த்து ! அவைகளைப் போல் நீயும் [illegible] ! உடனே [illegible]" என்று குரல் கொடுத்தாள். அவள் தோழி, பெருமாள்பக்கமிலை சென்று, அவர் வருகையைத் தனக்கு உரிமையாக்கிக்கொண்டு, சக்கரவர்த்தியின் கைகேயியுரிமையை நினைவூட்டி, "ஒருபெண்பெண்டாட்டி 'என்பிள்ளைக்குமேவணும்' என்று பறித்துக்கொண்டாளே, உனக்குமேவண்டா, ஒருவரும் அபிமானியாதவரைமே உமக்கு அமையும், ஆனால்பெரு நிலை பெறுத்தருளும்" என்று சொன்னாள். வனம்போகையென்றது- வரமீமையோரு என்ற படி. இந்த அவதாரணமிதை கீழ்சொன்ன பொருளைக்காட்டுகிறது.

ஈற்றுத்தாய் பின்தொடர்ந்து எம்பிரானென்றழை. பெற்ற தாயாரான ஸ்ரீகௌஸல்யையார் பின்னேதொடர்ந்து சென்று தன்னுடைய பிரிவாற்றாமை பெல்லாம்சொல்லி, "எங்குற்ற சாபமான் உம்மைப்பிரிந்திருக்கமாட்டேன், என்னுடைய நாயகனே!" என்று கதறிக் கொண்டு அழை. கூற்றுத்தாய்சொல்ல. கூற்றம்போன்ற கைகேயியாகிற தாய்சொல்ல. தொடர்ந்து மாதாவுடைய சௌகுமார்யத்தையும், போகிறவிடத்திலுள்ளானை கொடுமையையும் பாராமல், பதினாலுலம்வத்ஸரம் வநவாஸம் பண்ணச்சொன்ன க்ரௌர்யத்தைப்பற்றி - இவளைக் கூற்றுத்தாயென்கிறது. "பித்ர்வசநபரதந்த்ராய்ப் போரும்" என்று நிற்கச்சொல்லி, இவள்சொன்னதற்காகப் போரும் என்கிறாளை - அவர் வாய்விட்டுச் சொல்லாமல் அநுமதி பண்ணிக்கிடக்க, அதுதானும் சொல்லுகையாகவிறே. ஈற்றுத்தாய் சென்று வநம்போகே யென்றிடவும், ஈற்றுத்தாய் பின்தொடர்ந்து காப்பாளென்றபடி, கூற்றுத்தாய் சொல்லுடையாகக் கொடியவநத்திலே போனவென்றபடி.

அதவா, மாற்றுத்தாயென்கிறது - கைகேயியாகலும், கூற்றுத்தா யென்கிறது - லக்ஷ்மிஸ்வரூபமாகவும் யோஜிக்கவுமாம். அப்போதைக்கு, மாற்றுத்தாயென்றது - வாத்ஸல்யபாகையாலே; ஸ்ரீகௌஸல்யையாருக்குத் தன் நிலைமையாலே மாற்றுத்தாயென்றபடி. ஸ்ரீராமன் கானகத்துக்கு மேல் பொருத்தானைமையாலே மாற்றுத்தாயென்கிற தாயுமாம். "ஏழை" என்றுசொல்லி, "தாய்" என்னமேலன்கிறது பெருமாள் நினைவாலேயிறே; "கலிவலைச்சி" என்றிறே அவர் எப்போதும் மருளிச்செய்வது. சென்றுவநம்போகேயென்றிட. வாரீர சென்றுமீபோகு என்றுநியமிக்க. அதாவது - ராஜ்யபோகத்தில் கொடுகையாகிற வாத்ஸல்ய வந்தசென்று அதிலேபோய்விடி என்று நியமிக்குமென்னாக; "வா" என்கிறாளல்லர்; "போ" என்றுமதுமேலேயிறே இவள்சொல்லுவது. ஈற்றுத்தாயிருப்பாதி. பெற்றதாயாரான கௌஸல்யாதார், "என்தாயனே! எங்குற்றாயாய நான் உம்முடைய விச்லேஷ வ்யஸநம் பொறுக்கமாட்டேன், நான் எப்படி உம்மைப்போகவிட்டு தரித்திருப்பது" என்று பின்தொடர்ந்து சென்றாள்.

கூற்றுத்தாய்சொல்ல. லக்ஷ்மிஸ்வரூபமிறை தாய்சொல்ல. கூறுபட்ட மனஸ்ஸை யுடைய கைகேயிலே கூற்றுத்தாயென்றதால்; சக்கரவர்த்திக்கு மூவருந்தர்மபத்நிகளாகையாலே பதாந்தரத்திலே கூற்றுத்தாயென்றதால்; ஸ்ரீகௌஸல்யாதேவியைப்போலே நிரதிசயத்தை அ[illegible]

(க) "ஸ்ரீவத்ஸலக்ஷ்மணாவரஜாயை ஸ்வதந்த்ரத்ரிஜகந்மாத்ரே-ராமே ப்ரமாதம் மாகார்ஷீ: புத்ரப்ராதிகூல்யம்" (உ) "ராமம் தசரதம் வித்தி மாம்வித்தி ஜநகாத்மஜாம்- அயோத்யாமடவீம் வித்தி கச்ச தாத யதாஸுகம்"

டிதிவெள்ளைமேல் " எறும் மாளைகளாலே ஒருத்தி 'எனக்கு' என்றது உமக்கெண்செய்ப்ப" என்று இவள் சொன்னதைத மிகவும் திருவுள்ளம்பற்றுகையாலே விச்லேஷதி ருக்கையாலே ப்ராபகத்தாலே கூற்றம்போன்ற தாயைக் ணுதல். இப்படியிருக்கிறவன் வசத்தைக்கொண்டு கொடியவனம்போன. முற்பட்டபோழுனை- காலூர்பிள்ளை யிட்டருளின வ்யாக்யாநப்ரக்ரியை; பிற்பட்டபோழுனை- ‡ பிள்ளை யிட்டருளின வ்யாக்யாநப்ரக்ரியை. முற்பட்டபோழுனையில், " சென்றுவனம்போதே " என்கிற விதுக்கு ஸ்வயமார்த்தம் விந்திக்கையும், *கூற்றுத்தாய் சொல்லக்கொடிய வனம்போனமிது " தண்டகமுற்றவன் சொற்கொண்டுபோய் " என்றும். " முலக்குமரா காணையப் போலென்று விடைகொடுப்ப விலக்குமனன்றன்மேறு மங்கே யிவறு " என்றும், " கொடியவள்வாய் கடியமொழிகேட்டு - கான்தொடுத்த நெறிபோய் " என்றும் கீழ்மேல் அருளிச்செய்தவற்றுக்குச் சேர்ந்திருக்கையுமுண்டு.

ஸம்ப்ரதாயத்திலும் வந்தால், நம்பிள்ளை பூநீபாதத்திலே கேட்ட கிரியாழ்வானைப் பிள்ளைகுமாரர் பக்கலிலேகேட்ட காலூர்பிள்ளை யருளிச்செய்த தாகையாலேவந்த ப்ராபல்ய முண்டு. அவர்தாம் ஆச்சான்பிள்ளை திருத்தமப்பனாகையாலே, பிள்ளைக்கு பாமாசார்ய ருமிறே; ஆகையாலே, அந்தபோழுனை முற்படவிவழுதி, பிள்ளையருளிச் செய்தபோழுனை பிற்பட் எழுதப்பட்டது. இரண்டுபோழுனையிலும், ஸுமித்ரையார், பெருமாள் முகம் பார்த்துச் சொன்னதாகச் சொல்லப்பட்டவசநம் பூநீராமாயணத்தில் இல்லேயாயினும் இதிஹாஸாந்தர புராணாந்தராதிகளில்பலபாதல், கல்பாந்தரத்திலேபாதல் உண்டென்று கொள்ள வேணும் * மயர்வற மதிநலமருளப் பெற்றவிவர் இப்படி யருளிச்செய்கையாலே.

கொடியவனம்போன. " கல்லினாலந்த தியற்று கணைபுடைந்து கால்சுழன்று, பின் னும் திரைவயிற்றுப்பேபேய திரிந்துலவாக், கொன்னவிலும் வெங்கானம் " என்றபடி. யிறே காட்டின்கொடுமை தானிருப்பது; இப்படியிருக்கிற காட்டிலே, * கைவாயவேல் கெடுங்கண் கேரிழையு மினங்கொளவும் பின்புபோக வெழுந்தருளின. சீற்றமிலாதாகை. " காட்டினகாப்போடே காட்டிலே நன்னிவிட்டான்" என்றும் சீற்றம் எகுதேசமும் திருவுள்ளத்தி லில்லாதவனை. (க) " சாவதுகூடாவவஸ்தாவம் கூவதீதுமுகூர்ப்பாவிபரவுர்ப்பா ரபாஜபவாவ நவா வொவாவாவ நவா வொவாச்வஹாவபி " என்று - ஸங்கோசத்தோடேயிறே யெழுந்தருளிற்று. சீதைதமணாளனைப்பாடிப்பற. வருவாளந்தான் ஸாஸமாய்த்தது அவள்கூடப் போகையாலே யிறே. பிராட்டியும் தாமும் " வகாத்தாஸமறுபவிக்கலாம்தேசம் " என்றிறே காடுதன்னை விரும்பிற்று. (உ) " உஸு நம்வி குமு-வஸ்ரு ஸ்ரு நுாஸ்ரு ஸ்ரு ஸாஹஸ்ரு । காயிகுவை-ஸ்ரு வாவாஹ ஸ்ரு நுகவஸ்ரு உஸு நாகள் " என்றிறையருளிச்செய்தது. இப்படியிருக்கிறவனைப் போடிப்பறவென்று ப்ரதிகோடியான வளைப்பார்த்து நியமிக்கிறாள். ... ...

மூ.—பஞ்சவர்தூதனுய்ப் பாரதங்கைசெய்து
நஞ்சுமிழ்நாகங்கிடந்த நற்பொய்கைபுக்கு

---

‡ பிள்ளையாகிறார்- திருவாய்மொழிப்பிள்ளை. இவர் இப்ரபந்தத்துக்கு ஸ்வாபதேசவ்யாக்

பற்சவர்— பற்சபாண்டவர்களுக்கு

தாதறுப்— தாதறுப்பிகொண்டு

பாரதம்— பாரதயுத்தத்திலே

கை செய்து— ஸாரதியாகி

நிந்த— விரோதத்தை

உமிழ்— உமிழாகின்ற

நாகம்— காளியநாகம்

கிடந்த— கிடந்த [யிலே

நல் பொய்கை— நல்ல கொடிய பொய்கைக் கரை

புக்கு— பொய்ப்புக்கு

அஞ்ச— அவன் அஞ்சும்படி

பணத்தின்மேல்— பணங்களின்மேலே

பாய்ந்திட்டு— குதித்து நிலைபெறநின்று

(அவ்வளவிலே, அவனும் அவன்
மனைவியும் சரணம்புகு:)

அருள் செய்த — அவர்களைக் கொல்லாமலே
விட்டருளுதல்

அஞ்சனம்— மைமலைபோன்ற

வண்ணனை— வர்ணத்தை யுடையவனை

பாடிப்பற—;

அதிசாதை தன் சிங்கத்தைப் பாடிப்பறை.

வ்யா. இத்தாம்பாட்டு, பஞ்சவர்தூதருய், தர்மபுத்ராதிகளைவர்க்குந் தூதரும்படி, இவர்கள் ஐவரிலும், இவரை எவ்வுரியரல்லாதார் இல்லையே போலேகாணுமே. தூதருய், ஸ்வாதி கண்ணனதான் கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோகிறவிடத்தில் புரையற்றிருக்கையிலே, நன்னாப் பெறுப்பேறுகளிலே யிவன்றான் நினைத்திருப்பது. "இன்றுர் தூதனாள் நின்றான்" என்கிறபடியே - "பாண்டவதூதன்" என்கிற ப்ரஸித்திபெற்றமையிலிறே பாரில் கால்பாவி நிற்கிறது. பாரதம்கைசெய்து. "பத்தூர், ஒருர்" என்றும்போலே சொன்னவிடத்தில் அவர்கள் ஒன்றுக்கும் இசையாமையாலே, "ஆனால், யுத்தத்தைப் பண்ணி ஜயித்தவர்கள் பூமியாளுங்கோள்" என்று அவர்களை யுத்தத்திலே மொருக்கியிட்டுப் போந்து, பாண்டவர்களுக்காய்நின்று, பாரத ஸமரத்தில் கையுமெழுதியும் வருத்தி யுத்தத்தை நடத்தி. நஞ்சுமிழ்நாகங்கிடந்த நற்பொய்கைபுக்கு. அருகணைந்த வ்ருக்ஷங்களின் பக்ஷிகளெல்லாம் பட்டுவிழும்படி விஷத்தை யுமிழாநின்ற காளியனுகிற ஸர்ப்பங்கிடந்த * நற்சுழல் பொய்கையிலேபுக்கு. "நற்பொய்கை" என்றது - "நல்லபாட்டு, நல்லதிருப்பு" என்றாப்போலே விபரீதலக்ஷணை. அதவா, காளியன் ப்ரவேசிப்பதுக்கு முன்பு தன்னை பாடியாயிற்று சொல்லிற்றாகவுமாம். அஞ்சப் பணத்தின்மேல் பாய்ந்திட்டருள்செய்து. அப்பொய்கையைக் கலக்கி, காளியன் க்ருத்தனாய்த் தலையெடுக்குட்படிபண்ணி, பின்பு அவனஞ்சுகிறபடியாக அவன் பணங்களின்மேலே சென்று குதித்து நின்றபடி. அவனாயினாப்பிரான், (க) "ஸ்ரீலக்ஷ்மீ நாதஸ்ரீவ்ருஷகிபி" என்றும், (உ) "பார்ஹஸ்பத்யாடரீபதாபி" என்றும் அவனுடைய ஸ்த்ரீகளும் சரணம்புகுந்தபின்பு அவன் ப்ராணன்பெற்றுப் போம்படி க்ருபை பண்ணினான். அஞ்சனவண்ணனைப்பாடிப்பற. இப்படி சரணாகதரானதினம் பண்ணுறையாமலே அஞ்சநகிரிபோன்ற தன்திருமேனிநிறம் ப்ரகாசிக்கும்படி நின்றவனைப் பாடிக்கொண்டுபற. அதிசாதைதன் சிங்கத்தைப்பாடிப்பற. யசோதைப்பிராட்டி சீராட்டிவளர்க்கையாலே விற்றாகத் தன்றுமேபோலே செருக்கியிருக்கிறவனைப் பாடிப்பறவென்று எனதினையைப் பார்த்து நியமிக்கிறான். ... ... இ.

(க) "ஸ்ரீபதாவாத்ரபதேராவர்த்தி : ப்ரஸீததிமே."

(உ) "பர்ஹ்ஸ்பதிஸஹோடரீபதாபி"

குணம்— குணங்களை யுடையவனை

பாதன் கடவிக்கு— பூரீ பாதகாற்வாதனுக்கு

அன்று— அவன் மனம்மகிழ்ந்திருந்த அக்காலை.

அடி நிலை— பூரீ பாதங்களில்

எய்தா— அணுகி

எனை— அளிந்த நாளினை யெல்லை

பாடிப்பற—

அடியார்கள்— பூரீ வைஷ்ணவர்கள்

கோடாமலை— மாறாவாலை வேளை

பாடிப்பற.

மூடி ஒன்றி— "திருமுடி சூடி

மூ உலகங்களும்— பூமி, சுவர்க்கம், பாதாள மென்கிற மூன்று லோகங்களையும்

ஓங்கு— பரிபாலித்துக்கொண்டி

உன்— தேவரீருடைய

அடிமைக்கு— காலலுனவெனக்கு

அருள்— கிண்டபடன்னியருளவேவேண்டும்"

என்று— என்று ப்ரார்த்தித்து

அவன்பின் } அந்தசக்ரவர்த்திதிருமகன்
தொடர்ந்த } பின்னேனென்று மேதாடர்ந்து

பயில்— ஒப்பில்லாத

வ!

வ்யா. ஆழ்வார்பாட்டில் முடியிருந்தபடி, சக்ரவர்த்திக்கு சாஸ்த்ரார்த்தங்கள் பகவானிடை யன்று காயிலுபாடு, ராஜகுலத்திலுள்ளாரும் மெளராஜாகபகுமும் பூசாதலிருசால வலிஷ்டா டாதிகளும் எல்லாரும் திரளவிருந்து "பெருமாள் காடேறப்போனார், சக்ரவர்த்தி குரஞ்சென்ற நாடு அராஜகமாய்க்கிடக்க வொட்டோணாது" என்று தன்னை முடிசூட்டுவதாக பங்களாவறை மான தூர்யகோஷத்தையும் பண்ணிக்கொண்டிருக்க, அந்தக்கொடி கேட்டபோதே கணக்க கோபபட்டு, (க) "விலலாபலபாமத்யே ஜகர்ஹே சபுரோஹிதம்" என்கிறபடியே தன்குற்றமெயல்லாம் தோற்றும்படி சிரளிலேயிருந்து, "தருதிரனாக விருந்து என்னுடைய சேஷத்வத்தை அபஹரிப்பதே!" என்று பெருமிடறுசெய்து கூப்பிட்டு, (உ) "கியசே மாமேவம் அஹிதம் வாக்யமீத்ருசம்" என்கிற க்ரமமும் பாராதே, பூரோஹிதனை வலிந்திட்ட பகவானையும் "அழகிதாக இக்குடிக்கு முன்னோடி தேடிக்கொடுத்தாய்" என்று அத்திரளிலே கர்ஹித்து, (ங) "ராஜானுராஜபலயு யதிர்மவத் ப்ரியஹிதயோகக்ஷேமசிகீர்ஷயாஜ்ஞாபயதி" மென்ன ஒருராஜாவெஹாராகும்" என்று ஒருவனுக்கு இரண்டு வஸ்து சேஷமாதல் ஒன்றை ஒன்று நிர்வஹிக்குமோ; ராஜ்யந்தான் எம்மையாண்டாலோ, நாடு அராஜகமாய்க் கிடக்க வொண்ணாது என்கிறவித்தனையே பார்க்குமித்தனையோ, இதுக்கு விஷயபூதனான என்னையும் பார்த்து வார்த்தை சொல்லவேண்டாதோவா, அவர் பொகட்டிப்போன ராஜ்யத்தை அபஹரித்தால், அவனைப்பிரிந்த வருத்தம் முடிந்தவன் வயிற்றிலே பிறந்தவனென்படி யெங்கேனு நான்" என்று சொன்னவாறே; "ஆலல் செய்யவடுப்பதென்" என்று அவர்களெல்லாரும் இவன்றன்னைக்கேட்க, "நாமெல்லாரும் கூடப்போய் பெருமாள் திருவடிகளிலே விழுந

(க) "விலலாபலபாமத்யே ஜகர்ஹே சபுரோஹிதம்."

க்து அவரை ரிட்டுக்கொண்டிவந்து திருவடிகளிடம் பண்ணுவிப்போம் வாருங்கோள்" எங்று எல்லாரையும் கூட்டிக்கொண்டி திருப்பித்தி கூட்டுக்கிலே போய், பெருமாள் திருவடி களிலே தண்டுத்திலை முன்னிட்டிச் சமஸ்கரித்து விண்ணப்பஞ்செய்து ப்ரகாரத்தைச் சொல்லுகிறது.

முடியாவண்ணம். மதுரையைத்தனித்து சமஸ்தாபிப்பதாகத்து காட்டைவிட்டுக் காட்டிலே வருகிறவர், இக்காட்டையும் காவலையுடைத்தாகையும் விட்டு காட்டிலே திருவ யோத்தியிலே யெழுந்தருளித், திருமுடிசூட்டி ஆளுகைக்குமாகவே. (க) "ச்ரிதுமிகு) உடி கை பெருவிரை ஹரபயத்து பழி" என்கிறபடியே முன்று லோகத்தையும் ஸநாத மாக்கினவன்னி. உன்னடி யேற்கருளென்றவன்பின்பற்றிடர்த்து. (உ) "ஏ-ழ்ஸ்ரீவ்ஸ்ரு ஹவஸ வ்ரு ஹவஸ வ்ரு ஹவஸ உடை தாள்சென்னிவை" என்று ப்ரார்த்தனாம்சம் கூறுகிறவள்ள திருக்கிறவனன்றிக்கே, அகிலரும்பரும் தேவரீரோடே அநுகூலிக்கைபாலே சிந்தையுய், அவ்வளவுமன்றிக்கே, க்ரமவிக்ரயார்ஹமும்படி உடைக்கு தாஸபூதரான்றிலனைக்கு ப்ரஹ்லாதத்தைப் பண்ணியருள வேணுமென் அர்த்திக்க, பின்னேசென்று அநுவர்த்திக்க. படியில்குணத்துப் பரதனம் பிக்கு. "இக்குடியில் முத்தாரிருக்க இளையார் முடிகுடியரிவாரில்லை" என்ற குலமர்யா தையை நோக்குகையாலும், ஸ்வாதந்த்ர்யபிரியாலே முடிகூட வெருவி, தன்ஸ்வரூபத்தை நோக்குகையாலும், ஆர்த்திபோடே திருவடிகளிலவந்து விழுந்து "மீண்டு எழுந்தருளி திருவபிஷேகம் பண்ணியருளவேணும்" என்று அர்த்திக்கையாலும், ஒப்பில்லாத குணத் தையுடையனை ஸ்ரீபரதாழ்வானுக்கு. அந்நாடிநிலையிருந்தாலை. அவன் ஆர்த்தனாய் நிற அக்காலத்திலே, "நீசொல்ல நாம் இப்போது மீண்டோமாகில், நம் ஐயர் சொன்னது செய்யாமல் ராஜ்யபரத்தையாலே மீண்டோமாவோம்; நீ நம்மைமீட்டுக்கொண்டு போனையா கில், 'ஸ்ரீபரதாழ்வான் இரண்டுஞ்செய்ய வல்லனாயிருந்தான், – முன்பு, கீழோலையைத் தானைக்கொண்டு ராஜ்யத்தைவாங்கித் தமையனைக் காட்டுப்போகவிட்டான்; இப்போது, லோகாபவாதம்முதிர்ந்தவாறே பின்தொடர்ந்துசென்று கண்ணீரப்பிசைந்து காலிலேவிழுந்து மீட்டுக்கொண்டுவந்தான்' என்னும் அவத்யமும் உனக்குவரும்; ஆனபின்பு, உன்னை ஸ்வ தந்த்ரனாக்கி வார்த்தை சொன்னோம் முன்னை, உன்ஸ்வரூபாநுரூபமான பாரதந்த்ர்யத்தைப் பெற்று நீபோ" என்று, அவன் நிர்ப்பந்தியாதபடி வார்த்தைசொல்லி யிசைவித்து, "மாவடியைத்தம்பிக்கு வான்பேணியம்மைத்து" என்கிறபடியே அவன் ஸ்வாதந்த்ர்யபய மெல்லாம் போம்படியாகவும், "மீண்டு எழுந்தருளுவர்" என்னுமதுக்கு விச்வாஸமாக வும் திருவடிநிலைகளைக்கொடுத்து * அடிசூடுமாசாக்கி விட்டவனைப் பாடிப்பற. அயோத்தியர் கோமானைப் பாடிப்பற. ஸ்ரீபரதாழ்வான் முடிசூடாமல் அடிசூடிப்போகையாலே திருவயோ த்தையிலுள்ளார்க்கு தானேநிர்வாஹகனவனைப் பாடிப்பற என்று எதிரியைப்பார்த்துச் சொல்லுகிறாள். ... ... ரு.

மூ.—காளியன்பொய்கை கலங்கப்பாய்ந்திட்டவன்
நீண்முடியைந்திலு நின்றுடன்செய்து
மீளவவனு க்கருள் செய்தவித்தகன்
தோள்வலிவீரமே பாடப்பற தாமணிவண்ணனைப்பாடப்பற. ரு.

காளியன்— காளியனகம் விடம்
பொய்கை— பொய்கையான
கலங்க— கலங்கும்படி
பாய்ந்திட்டு— சென்று குதித்து
அவன்— அவனுடையதாய்
நீள்— ஆகாசத்தளவும் வளர்ந்திருக்கிற
முடி ஐந்திலும்— ஐந்து படங்களிலும்
நின்று— மாறிமாறி அடியிட்டுநின்று
நடம் செய்து— கூத்தாடி [படியும்
மீள— (அவன் சரணம்புக்கவளவளவில்) மறு

அவனுக்கு— அந்த காளியனுக்கு
அருள் செய்து— திருவுள்ளம்பற்றி
விந்தகன்— விஸ்வகர்மாவுக்கு ஒப்பானவன்
தேவன் வலி— புறமலைத்தையும்
வீரம்— வீரப்பாட்டையும்
பாடிப்பறை;
தூ— பழிப்பற்ற
மணி— நீலத்தம்போன்ற
வண்ணனை— வடிவழகை யுடையவனை
பாடிப்பறை.

விளக்கம். எழாம்பாட்டு. காளியன்பொய்கை. வெறுப்புற்றில் "காளியன்டெய்வகை" என்னவணமுங்காணும் அரின் விளையாடத்துக்கு "பாடிப்பாழி" என்றமை போலே. அணுகின் வுகாவை ஐங்கமாதிகளெல்லாம் அழலாலேபட்டு விழுந்படியிலே மையல் கையில் விஷத்தினுடைய க்ரௌர்யமிருப்படி. "ஆயிரவாய்ச்சுடுஞ் சினப்பொய்கை" என்னுஞ் சுடவதிலே. கலங்கப்பாய்ந்திட்டு. "காளியன் கடுந்தைதங்கலம்" என்கிறபடியே பொய்கைகலங்கும்படி குடிக்சென்று குதித்து. அவனிருப்பது. பொய்கையைக் கலக்கினவாறே அதுக்குள்ளுருக் கிடக்கிறவவன் அதிக்ருத்தனாய், தலையிலிருந்து ஏழுசாதத்திலே கொளுத்த படங்களை விரித்துக்கொண்டு நிற்க, அப்படங்களின் மேலே வந்து ஐந்துபடங்களிலும் மாறிமாறிநின்று கூத்தாடினபடி. மீளவவனுக்கருள் செய்தருளினபடி. (க) "கொடுவிடமிரு ளொருவுமாறுபு—கதிரவனணி கழி" என்கிறபடியே தலைமையும் கரிய நிறமுமான காளனுடைய வாய்களாலே ஏத்தும்சொன்னபடி. அவன் இவனைக்க, தன்னுடைய பிள்ளைகள் பெருமைக்காகச் சரணம்புகுந்தவாறே, முன்பு அவனைக் கொல்லுகிறோமென்று கோபத்தைக்கிளறி, அவன் பிள்ளைகள் பெறாப்படி, பிறகு அவனுக்கு ப்ரஸாதத்தைக்குடுத்தனனென்ன விஷயபரீதரான மஹாபுருஷர்கள் முன்பு விஷயபரீதத்தைமாலை முன்பு, கோபத்துக்கு விஷயமாகிறி முன்பு சீறினவனுக்கே ப்ரஸாதத்துக்கு விஷயமாகின ஸகஜக்ருபை. தோள்வலிபேரமே பாடிப்பறை. இப்படியிருக்கிற நிலையையுடைய, "பாய்ப்பாலாட்படுத்து" என்கிறபடியே காளியன் கண்மலைபோலே பெருத்துக் கறுத்துக் காட்டினவிடத்திலும் அதினிடையிலே உருவிப்போகாதே வாலேபிடித்து நாலுதிக்கிலும் மேலேகின்றபடியை தோள்வலியையுடையம் வீரப்பாட்டையும் பாடிப்பறை. தூமணிவண்ணன். காளியனுக்கு ப்ராணனைக்கொடுத்துத் தூதாக்கி யோட்டிவிட்டு, விஷநிலமான பொய்கையை அம்ருதமாம்படி கடாகஷித்து, பசுக்களும் இடையருமுண்டபோலே முன்னேபோலே பண்ணுகையாலே, பழிப்பற்ற நீலத்தம்போலே திருமேனியின் அழகையுள்ளபடி நின்றபடியை வண்ணப் பாடிப்பறை. என்று ப்ரதிகோடியானவனைப்பார்த்து நியமிக்கிறாள். ... ஏ.

மூ.—தார்க்கிளர்ந்தம்பிக் கரசீர்துதண்டக
நூற்றவர்சோற்கொண்டு போகிநூட்கிடைச்
சூர்ப்பணகாவைச் செவியொடுமூக்கவள்
அர்க்கவரிந்தானைப் பாடிப்பற வயோத்திக்கரசனைப்பாடிப்பற. ஏ.

தம்பிக்கு— தம்பியான ஸ்ரீபரதாழ்வானுக்கு

அரசு ஈந்து— * அடிநூறுமாசைக்கொடுத்து

தாற்றவள் சொல் } விசாரித்த கைகேயி

கொண்டு— } யின் சொற்படி

தண்டகம்— தண்டகாரண்யத்தைத்குறித்து

போகி— எழுந்தருளி

நுடங்கு— துவளாநின்ற

இடை— இடையையுடையளான

சூர்ப்பணகாவை— சூர்ப்பணகையை

செவியொடு மூக்கு— காதுகையும்மூக்கையும்

அரசாத்தானை— * அரசுத்தவிர்ந்

பாடிப்பற—;

அமையாத்திக்கு— திருவயோத்தியைக்கு

அரசனை— ராஜாவானவனை

பாடிப்பற.

---

* அறுத்தது இளையபெருமாளா யிருக்க, பெருமாள் அறுத்ததாகச் சொன்னவிது *ராமகுணபாஹுத்வ ப்ரயுக்தமான ஐக்யத்தைப்பற்ற.

வ்யா. எட்டாம்பாட்டு. தார்க்கிளர்ந்தம்பிக்குரச்சந்து. "அடியிலே சக்ரவர்த்தி அறுமதி உண்டாகையாலும், பெருமாள் உடன்பட்டுப் போகையாலும், நாடு அராஜகமாய்க் கிடக்கலாவ்ணாது, நீமுடிசூட வேணும்" என்று வலிஷ்டாதிகளும் ராஜலோகாதிகளும் அர்த்திக்கையாலும் அபிஷேகம் செய்யலாவதொரு புடையுண்டாயிருக்க, "மூக்காரிருக்க இளையார்முடி சூடியறிவாரில்லை" என்கிற குலமர்யாதையை நினைத்து, "மாலையிட்டு ராஜ்யம்பண்ணுகைக்கு நான் இளையவன், தமையனிருக்க எனக்கு முடிசூட ப்ராப்தியில்லை" என்று மறுத்துத் திருச்சித்ரகூடத்தளவும்வந்து "மீண்டெழுந்தருளவேணும்" என்று அர்த்தித்த நம்பியான ஸ்ரீபரதாழ்வானுக்கு அதுகுணமாக அடிசூடிமாசைக் கொடுத்து.

தண்டகாரண்யத்தவள் சொல்கொண்டு போகி. "ராஜ்யத்தை விடுவித்து தண்டகாரண்யத்திலே போகவிடக் கடவோம்" என்று விசாரித்தவள் சொல்லைக் கைக்கொண்டுபோய். "கூற்றுத்தாய் சொல்லைக் கொடியவனம்போன" என்றிறே திருமழிசைபிரான் சொல்லிற்று. ஸ்ரீபரதாழ்வானேயே திருச்சித்ரகூடத்தளவும் சென்றவஸிஷ்டாதிகள் தொடக்கமானார், பிறகு கைக்குடலாகச் சொன்ன வார்த்தைகளும் கேளாமல், இவள்சொன்னவார்த்தையைத் திருவுள்ளத்திலே கொண்டிறே ஸ்ரீபரதாழ்வானுக்கு அரசிந்து அநந்தரம் தண்டகாரண்யத்திறவெழுந்தருளினது.

நுடங்கிடையித்யாதி. காமரூபிணியாளையாலே ஸ்வபாவஸித்தமறைத்து அத்யந்தாபிமதமானதொரு ஸ்த்ரீவேஷத்தைக்கொண்டு வருகையாலே, நுடங்கின இடையையுடையளான சூர்ப்பணகையை. தன்னழகைக்காட்டி "என்னை விவாஹிக்கவேணும்" என்று வந்தவளவில், பிராட்டியைக்காட்டி "நமக்கு இவளொருஸ்த்ரீயுண்டு, அங்கேபோ" என்று இளையபெருமாளைக்காட்ட, அங்கே சென்றவளவிலே, "நான் அவர்க்கு சேஷபூதனையிருப்பாரொருத்தன், இன்னம் அவர்தம்பக்கலிலேபோ" என்ன, இப்படி உபாலம்பிக்கையாலே அவள் அதிக்ருத்தையாய், பழைய வேஷத்தைக்கொண்டு, எடுத்துக்கொண்டு போகப்புக்கவளவிலே, சீவியோடேகூட அவள்மூக்கையும், அவள் கதறக்கதற அறுத்தவினை.

திருப்பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் கடைந்தபோது அதில் தோன்றிய விஷத்தை சிவபெருமான் உண்டு தம் கண்டத்தில் நிறுத்தினார் என்பது புராண வரலாறு.

மு.—மாயச்சகடு முனைதத்து மருதிறுத்
தாயர்கோளோடுபோ யாநிரைகாத்தணி
வேய்ங்குழலூதி விருந்தகலாய்நின்ற
ஆயர்கள்ளேற்றினைப்பாடிப்பற வானிரைமேய்த்தானைப்பாடிப்பற. கூ.

பதவுரை.

மாயம்— வஞ்சகத்தையுடைய
சகடம்— சகடாஸுரனை
உதைத்து— கட்டிக்குதிலபுரட்டி திருவடி-
களால் உதைத்தும்
மருது— யமளார்ஜுநங்களை
இறுத்து— முறித்தும்
ஆயர்கோளோடு— இடையர்கோனாகி
போய்— காடேறப்போய்
ஆ நிரை— பசுக்களின் திரளை

காத்து— ரக்ஷித்தும்
அணி— அழகிய
வேய்ங்குழல்— வேய்ங்குழலை
ஊதி— ஊதி
விருந்தகலாய் நின்ற— விஸ்மயமேயழகாய் நின்ற
ஆயர்கள் ஏற்றினை— இடையர்க்குத் தலை
வனானவனை
பாடிப்பற—;
நிரை மேய்த்தானைப் பாடிப்பற—.

பெரியா. ஒன்பதாம்பாட்டு. மாயச்சகடமுனைதத்து. "கள்ளச்சகடம் கலக்கழியக்கால் லாக்கி" என்றபடியே காலாலாகவைத்தவதிலே அஸுரர்கள் ஏறிவந்து கபடமாயிருந்த சகடத்தை, ஸ்வரூபநாசமாய் நிமிர்ந்த திருவடிகளாலே யுதைத்து. அன்றிக்கே, சகடமாவது ‡ உருமாயம்பண்ணி உதைத்த வஞ்சனையாம். மருதிறுத்து. தன் பார்வட்டியிலைத்த உபலேபநிமித்தங்கொண்டு தவழ்ந்துபோகாநிற்க, நடுவதாக வழியிலேநின்ற இரட்டை மருதுகளின்மேலே முனைமுகத்தை அப்படியறத்தேபோய், உதல் தடைபெறுகையாலே அத்தைதவிர்த்துக்கொண்டு அம்மருதுகள் இரண்டுருவும் சாய்ந்து விழும்படி முறித்து. ஆயர்கோனோடுபோய் ஆநிரைகாத்து. பசுமேய்க்கப்போகிற இடையோடே அவர்களில் ப்ரதானருப்பக்கொண்டுபோய், புல்லும் தண்ணீருமுள்ளவிடம் பார்த்து வயிறுநிறைய மேய்க்கையாலே பசுநிரையை ரக்ஷித்து. அணிவேயின்குழலூதி விருந்தகலாய் நின்ற. காட்டிற் பசுக்களைப்போலே கேவலம் புல்லும் தண்ணீருமே தாகமாக வளருமன்றிக்கே, குழலோசைபே தாகமாக வளருமவையாகையாலே, அவற்றை மேய்க்கைக்கும் சிதறிப்போகாமல் குவிக்கைக்கும் மீட்கைக்குமாக, அழகிய வேய்ங்குழலூதி, தன்னுடைய ஸாமர்த்தியம் தோற்றநின்ற. ஆயர்கள்ளேற்றினை. கோபர்க்குத்தலைவனை செருக்கையுடையவனை. பாடிப்பற. ஆநிரைமேய்த்தானை. "நிலத்திலும் பசுநிரைமேய்ப்பதுவே" என்றபடியே- பரமபதத்திலிருப்பிலுங்காட்டில் உகந்து பசுநிரைமேய்த்தவனை. பாடிப்பற. என்று எதிரியைப்பார்த்துச் சொல்லுகிறாள். ... ... கூ.

(க) "ராமஸ்யதக்ஷிணோபாஹு:." ‡ இவ்வர்த்தம் சொல்லும்போது "மாய" என்று விசேஷணத்தைக்குறை.

மூ.—காரார்கடலே யடைத்திட் டிலங்கைபுக்
கோராதான்பொன்முடி யொன்பதோடொன்றையும்
நேராவன்றம்பிக்கே நீளரசீந்த
ஆராவமுதனைப்பாடிப்பற வியோத்தியர்வேந்தனைப்பாடிப்பற. யி.

பதவுரை.

கார் ஆர்— ஆழத்தின் மிகுதியாலே கருமை மிக்கிருந்துள்ள

கடலே— கடலை

அடைத்திட்டு— மலைகளைக் கொண்டடைத்து

இலங்கை புக்கு— லங்கையில் புகுந்து

ஆராதான்— பெருமான் வீரப்பாட்டை மதியாத ராவணனுடைய

பொன்முடி ஒன்ப } கிரீடம்தரித்த அழகிய
தோடு ஒன்றையும் } பத்துத்தலைகளையும்

நேரா— அறுத்துப் பொகட்டு

அவன் தம்பிக்கே— அவன் தம்பியான விபீஷணனுக்கே

நீள்— நெடுங்காலம் நடக்கும்படி

அரசு— ஆதிராஜ்யத்தை

ஈந்த— கொடுத்தவனும்

ஆரா— எவ்வளவுகாலம் புகழ்ந்தாலும் த்ருப்திபிறவாத

வ்யா. நம்பிபிம்பியென்று நாட்டுமோனிடப்பேரிட்டால். பிம்பிக்கு ஒரு பொருளுண்டாகிலாய்த்து- நீங்கள் சொல்லுகிற நம்பிக்கும் ஒருபொருளுண்டாவது! என்று சோதித்து, நம்பிக்கு எதிர்த்தட்டாக ஒருபிம்பியையருளிச்செய்கிறார். இப்படி சிலநாட்டிலுண்டானதுர்மநுஷ்யருடைய பேரையிட்டால். நம்பும் பிம்புமெல்லாம் நாலுநாளிலழுங்கிப்போம். 'நம்பி, பிம்பி' என்கிற பேருக்கடியான முதன்மையெல்லாம் நாலுபோதில் நசித்துப்போம். அதாவது கர்மநிபந்தநமாக வந்ததாகையாலே, "வாழ்ந்தார்கள் வாழ்ந்தேதநிற்ப ரென்பதில்லை" னென்கிறபடியே அழிந்துபோம். பின்னை யார்பக்கலிலே நாங்கள் ஜீவநம் பெற்று ஜீவிப்பதென்ன; செம்பெருமித்யாதி. சிவந்து பெருத்த தாமரைபோலே யிருக்கிற திருக்கண்களையுடையவனுடைய திருநாமத்தை யிட்டு அழைத்தக்கால். அதாவது திருநாமம் சொன்னவர்களுக்கு ஸகலஸம்பத்துக்களு முண்டாம்படி கடாக்ஷிக்கும் திருக்கண்களையுடையவன்திருநாமத்தை உங்கள் பிள்ளைக்கிட்டு ஆதரம் தோற்ற அழைத்தக்காலென்கை. நம்பிகாள்.* அறி

பதவுரை.

ஊத்தை குழியில்— அசுத்தமான குழியில்
அமுதம்— அமிர்தமானது
பாய்வதுபோல்— பாய்ந்தாற்போலே
உங்கள்— உங்களுடைய
முத்திரம் } — சுக்லசோணித பரிணமரூப
பின்னை } — மான பிள்ளைக்கு
என்— எனக்குத்தெய்வமாயிருப்பவனுக்கு
முடிவில்— மேகமில்லாத
வண்ணன்— திருநிறத்தையுடையவனுடைய
கோத்து— ஸர்வேச்வரனுடைய கோவை
யாகக்கூடி.
குழைத்து— கலந்து [தோய்ந்
குணலம் ஆடி. திரிமின்— களித்துத் திரியுங்
பிள்ளைக்குத் திருநாமத்தை இட்டு,
அத்தைப்பலகாலும் சொல்லுகை,
நா— உங்கள் நாவுக்கு
தகும்— தகுந்திருக்கும்.
நாரணனிதியாதி.

வ்யா. ஒன்பதாம்பாட்டு. ஊத்தைக்குழியில் அமுதம் பாய்வதுபோல். அசுத்தமாய் போக்யதைக்கு ஸ்பர்சிக்கைக்கு அர்ஹமல்லாதபடி யிருக்கும் ஊத்தைக்குழியிலே, பரிசுத்தமாய் போக்யதைக்கு போக்யமாயிருக்கும் அமிர்தமானது பாய்ந்தாற்போலே. உங்கள் முத்திரப் பிள்ளையை. உங்களுடைய சுக்லசோணித பரிணமரூபனை பிள்ளையை. என்முகில்வண்ணன்பேரிட்டு. எனக்கு பல்பறப் காலமெல்ல நிபச்யாமமான வடிவையுடையவனுடைய விலக்ஷணபோக்யமான திருநாமத்தையிட்டு. இத்தால் அத்திருநாமமிருந்தபடி விஷயத்திலுள்ள வைபவமருசிக்கைப்தாராய்த்து. ஊத்தைக்குழியிலே அமிர்தம் பாய்ந்தால், தானும் அதுவும் தமாய் போக்யக்கு போக்யமாகாதபடியாய்ப்போம்; இங்கு அத்திருநாமம் ஸ்பர்சயோக்யதையிலே, தனக்கு ஒரு ஸ்பர்சதோஷமின்றிக்கே, தான் புக்கவிடத்தைப் பரிசுத்தமாக்கி, விலக்ஷணபரிக்ரஹப்படியாய்ப்போம். இதில், தர்ஷ்டாந்தமான அமிர்தம் தார்ஷ்டாந்திகமான திருநாமத்துக்குள்ள வாசி. கோத்துக் குழைத்துக்குணலமாடித்திரிமின்ற. ஸர்வேச்வரனோடே ஒரு கோவையாகக் கூடிக் குணலையிட்டுத் திரியுங்கோளென்கை. அதாவது பிள்ளைபெற்றுத் திருநாமமிட்டபோதே நீங்கள் பகவத்பரிக்ரஹராய்விடுகையாலே, அப்படிப்பட்ட மடியாக அவனோடே கூடிக்களித்துத் திரியுங்கோளென்கை. கோத்துக்கும். பிள்ளைக்குத் திருநாமத்தையிட்டு அத்தைப் பலகாலும் சொல்லுகையாகிறவிது உங்கள் நாவுக்குச்சேரும். திருநாமஞ்சொல்லுகைக்கிறே நாக்கண்டது. அன்றிக்கே, "நாத்தகுநாரணன்" என்று மேலேகூட்டி (க) "வாஜிவூடா ஹரிம் ஸ்மரதி" என்கிறபடியே யோகவிருத்தமுமாய், நாரணனென்னவுமாம். நாரணன் தம்மன்னை நரகம்புகாள். ... கூ.

அ. சிகமத்தில், இத்திருமொழி கற்றார்க்கு பலம் சொல்லிக் முடிக்கிறார்.

மு.—சீரணிமால் திருநாமமே யிடத்தேற்றிய
வீரணி தொல்புகழ் விட்டுசித்தன் விரித்த

ஸ்பர்சவேதி—சேரும்பொருள்தன்மையதாகை.

ஓரணியொண்டமிழோன்பதோ டொன்றும் வல்லவர்
பேரணி வைகுந்தத்தென்றும் பேணியிருப்பரே. ய.

பதவுரை.

சீர்— கல்யாண குணங்களை
அணி— ஆபரணமாகவுடையனாய்
மால்— ஆச்ரித வ்யாமுக்தனாவதனையுடைய
திருநாமமே— திருநாமங்களையே
இடை— தந்தாம் பிள்ளைகளுக்கு இடும்படியாக
தேர்ந்திய — தெளிவித்த
வீரம்— இந்திரியங்களை வென்றதனையாகிற
வீரப்பாட்டை
அணி— ஆபரணமாகவுடையராய்
தொல்— அநாதிஸித்தமான
புகழ்— கீர்த்தியையுடையரான
விட்டுசித்தன்— பெரியாழ்வார்
விரித்த— விஸ்தரித்துச் சொன்னதாய்

(அப்படிப்பட்டவர்களுக்கு,)

ஓர்— ஒப்பற்ற
அணி— ஆபரணமாய்
ஒண்— தன் பொருளை விளக்குவதாய்
தமிழ்— தமிழ்ப்பாஷையான
ஒன்பதோடு ஒன்றும்— பத்துப்பாட்டையும்
வல்லவர்— ஓதவல்லவர்
பேர்— பெரிய
அணி— அழகையுடைய
வைகுந்தத்து— பரமபதமாகிற
என்றும்— எப்போதும்
பேணி இருப்பர்— ஆநந்தத்தோடே வாழ்ந்திருக்கப்பெறுவர்கள்.

வ்யா. சீரணிமால். குணங்களை ஆபரணமாக வுடையனாய் ஆச்ரித வ்யாமுக்தனாவதனையுடைய. "சீரணி" என்றது - குணங்களினுடைய திரளை யுடையவனென்றாய், அக்குணங்கள் புறம்பொரு வ்யக்தியில் கிடவாமையாலே, கல்யாணகுணங்களுக்கெல்லாம் ஆச்ரயமானவனென்னவுமாம். (க) "யாகும் நாதிய மெமெனுஞ் ஞாணை நாசகொரு ஜெகாது" என்னக்கடவதிறே. மால் - பெரியவன்; ஸர்வேச்வரனென்னவுமாம். திருநாமமேயிடத்தேற்றிய இதரநாமங்களை மாற்றி * நாணன்றன் நாமங்களை நவின்றேம் பெற்ற பிள்ளைகளுக்குச் சாத்தும்படியாகப் பலரீதிகளுக்களாலும் தெளிவித்து. வீரணிதோள்புகழ் விட்டுசித்தன் விரித்த. ஜிதேந்த்ரியத்வமாகிற வீரப்பாட்டை ஆபரணமாக வுடையராய், ஸ்ரீமத் கோபாலவிம்சதியிலே ஆநாதிஸித்தமங்களாசாஸநப்ரகாரமுடையரான பெரியாழ்வார் பரப்பின. ஓரணியிருப்பாதி. அப்படிப்பட்டவர்க்கு அத்விதீயமான ஆபரணமாய், அர்த்தப்ரகாசகமாய், ஸர்வாதிகாரமான க்ராவிடரூபமாயிருந்துள்ள இப்பத்துப்பாட்டையும் ஸாபிப்ராயமாக வல்லவர்கள். பேரணி வைகுந்தத்து. பெரிய அழகையுடைய நித்யவிபூதியிலே. அநவரதபகவதநுபவ கைங்கர்யங்களுக்கு அநுரூபமானதையாலே மிகவும் விலக்ஷணமான தேசத்திலே யென்கை. என்றும் பேணியிருப்பரே. ஸர்வகாலமும் ஆநந்தத்தோடே வாழ்ந்திருக்கப்பெறுவர். அதவா, பேணுகையாவது- ஈச்வரனைப்பேணுகையாய், மங்களாசாஸநபரராய் வாழ்ந்திருக்கப் பெறுவரென்னவுமாம். ... ... ய.

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

அ. பகவத்விஷயாதி தேதாஷாடியாகத்தம்மேலே நிக்நதான ஸம்ஸாரிசேதநரை யும் விடமாட்டாத தம்முடைய பரமக்ருபையாலே, அவர்களைத் நிருத்தியாகிலும் உஜ்ஜீவிப் பிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, அவர்கள் திருந்துகைக் குறுப்பான ஹிதத்தை உபதேசித்தருளினார்- தீழிரண்டுதிருமொழியாலே; அது செய்து தலைக்கட்டின வநந்தரம், 'முன்பு திருமலை திருக்கோட்டியூரில் அநுபவித்தாற்போலே இன்னமும் அவன் உகந்தரு ளின நிலங்களிலே எழுந்தருளிநிற்கிற நிலையை அநுபவிக்கவேணுமே' என்றுமானைகளின் று "வடதிசை மதுரை சாளக்ராமம்" இத்யாதிப்படியே தனக்கு அபிமதமான தேசங் கள் பலவற்றிலுமுள்ள விருப்பத்தை எல்லாவற்றையும் ஒருமடைகொள்ளப் பண்ணி வர்த் திக்கிற ஸ்தலமாய், திருவுலகளந்தருளுகிறபோது தன் திருவடிகளில்பிறந்த ஏற்றத்தாலே (க)ஸகலலோகபாவநபூதையாய்க்கொண்டு ஸர்வகாலமும் ப்ரவஹியாநிற்கிற கங்கையினுடைய கரையிலேயுள்ளதான திருக்கண்டங்குடி நகரிலே அபிகாவதார குணசேஷ்டிதங்களெல்லாம் ப்ரகாசிக்கும்படி எழுந்தருளி நிற்கிற புருஷோத்தம சப்தவாச்யனை ஸேவிக்கவேணுமென்று அநுப வியாநின்றுகொண்டு, அவனிலுங்காட்டிலும் அவன் வர்த்திக்கிற தேசமே ப்ராப்யத்தில் சா மாவதி யாகையாலே அத்தேசத்தினுடைய வைபவத்தையும் பலநாமுகமாகப்பேசியநுபவிக் கிறார் - இத்திருமொழியில். ... ... *

மூ.—தங்கையழுக்குந் தமையனைத்தலையுந் தடிந்தவென் தாசரதிபோய்
எங்குந்தன்புகழா லிருந்தசாண்ட வெம்புருடோத்தம னிருக்கை
கங்கைகங்கையென்ற வாசகத்தாலே கடிவினைகளைந்திட நிற்கும்
கங்கையின்கரைமேற் கைதொழநின்ற கண்டமென்னுங் கடிநகரே. க.

பதவுரை.

மூக்கும்— மூக்கையும்
தமையன்- அவள் தமைபனைராவணனுடைய
தலையும்— தலையையும்
தடிந்த— அறுத்துப் பொகட்ட
எம்— நம்முடைய
தாசரதி— சக்ரவர்த்தி திருமகன்
போய்— திருவயோத்தியையிலெழுந்தருளி
எங்கும்— எல்லாவிடத்திலும்
தன் புகழா — தன்கீர்த்தியை யாம்படி
இருந்து — பதிநைராயிரம் ஸம்வத்ஸர மிருந்து
அரசு ஆண்ட— ராஜ்யம் நிர்வஹித்தருளின
எம்— நம்முடைய
புருடோத்தமன்— புருஷோத்தமனுக்கு
இருக்கை— வாஸஸ்தாநமாம்.

கங்கை கங்கை என்ற } (உலகத்தார் நீராடும்
வாசகத்தாலே — } தீர்த்தங்களை கங்கை
யாக ப்ரதிபத்திபண்ணி ஸ்நாநம் செய்வா
ர்களையாதலால்,) 'கங்கை, கங்கை' என்
கிற சப்தத்தைச் சொல்லுமத்தாலே
கடி வினை — அவர்களுடைய க்ரூரமான
பாபங்களை
கழிந்திட நிற்கும்— கழிக்கவல்ல
கங்கையின் கரைமேல்— கங்காதீரத்தில்
கை தொழ நின்ற— ஆச்ரிதர் கைகூப்பித்
தொழும்படி நின்ற
கண்டம் என்னும்— 'கண்டம்' என்கிற
கடி— சிறப்பையுடைத்தான
நகர்— நகரமானது;
தங்கை— ராவணன் தங்கையான சூர்ப்ப
ணகையின்

வ்யா. முதற்பாட்டு. தங்கையை மூக்கும் தமையனைத் தலையுந்துடர்த்த. தங்கையான சூர்ப்பணகையுடைய மூக்கையும், தமையனான ராவணனுடைய தலையையுமறுத்த. ''வாளரக்கன் மூடியும் தங்கை பொல்லாதமூக்கும் போக்குவித்தான் பொருந்தாட்டமே'' என்று திருடலையில் நிற்கிறநிலையில் கண்டநுபவித்த ஆழ்வாளதாகுணத்தை, திருக்கண்டங்கடிதாகளில் நிற்கிறநிலையிலும் கண்டநுபவிக்கிறார். (க) ''கூபசோதாஸுவபுலோகரக்ஷணாய விவிதவிவிதா'' என்று ஸர்வலோகத்துக்கும் மாதாவும் பிதாவுமாய்க்கொண்டிருக்கும் மிதுநத்தை முறையிலே விருட்டாமல் முறைகெட விருட்டுவார் பெறும்போது இது என்னுடைய தோற்றவிடற *தங்கையை மூக்கும் தமையனைத் தலையும் தடிந்தது. அதாவது- மூக்பலிசக்ரவர்த்தியான பிராட்டியை உபேக்ஷித்து, விசேஷ்யபூதரான பெருமாளை விரும்பின சூர்ப்பணகைக்கு மூக்பாங்கமறாகிறபோ பலமாய்த்து; அவளுக்கு விசேஷ்யபூதராய்க்கொண்டிஸர்வர்க்கும் ப்ரணதரையிருக்கிற பெருமாளை உபேக்ஷித்து, விசேஷணபூதையான பிராட்டியை, விபரீத (உ)புத்யாவிரும்பின ராவணனுக்குப்ராணதரராகிறபோ பலமாய்விட்டதென்கை. இவ்வர்த்தத்தை ப்ரகாசிப்பிக்கைக்காகவாய்த்து- இவர் பலவிடங்களிலுமருளிச்செய்தது. எம்தாசரதி. ''எம்'' என்று ஆச்ரிதரெல்லாரையும் கூட்டிக்கொண்டு அருளிச்செய்கிறார். இவ்வர்த்தத்தை வெளியிட்டருளினது ஆச்ரிதரெல்லார்க்கு மோக்ஷமிறே. ''தாசரதி'' என்றது ராவணவதாநந்தரம் அடம் ப்ரஹ்மாதி தேவர்கள் வந்து (ங) ''ஹவாஹராயபினாகிவஹ்ஸி'' என்றது அஸுரவிபாய், (ச) ''சூடாரநமிராநுஷ்டுபசிதி கரி ராஜ்ஞமராயாதிஜி'' என்று தின்றீர் மையை ப்ரகாசிப்பிக்கைக்காக. போயேக்கும் தண்புகழா விருந்தசாண்ட. ராவணவதாநந்தரம் லங்கையில்நின்றுமீண்டு திருவயோத்யையிலே எழுந்தருளித்திருவபிஷேகம்பண்ணியருளி (ஞ) ''ராகவோராகவோராகஜதி வுஜா நாகிலவநுகயாஂ । ராகவஸ்ய தஂஜமுகஸ்ய உராகவோ ஜ்ஞ வுபாவஜதி'' என்கிறபடியே நாடடங்குத் தன்னுடைய குணங்களிலே வாய்புலத்தி ராமாத்வைதமாம்படி. பல்லாண்டைபாலே எல்லாவிடத்திலும் தன்னுடைய சீர்த்திபோபாம்படி டதிசீரராயிரம் ஸ்வத்ஸரமிருந்து ராஜ்யபரம்பண்ணியருளின. எம்புருடோத்தமனிருக்கை. ''எம்'' என்று ஆச்ரிதரெல்லாரையும் கூட்டிக்கொண்டருளிச்செய்கிறார். ''புருடோத்தமன்'' என்றது ஸர்வஸ்மாத்பரனென்றபடி. (ஈ)'' பஸ்ய தேவஸ்ய தீ கிரமை மஹாயோகினோ விதாஸ்ய । ஸர்வே தாவஸ்திதயுகெ மெஹ பூயி சரிடாஸ்ய ரெடாஸ்ய ।'' என்றருளிச்செய்தாளிறே தாசரதி. தாசரதியான புருஷோத்தமனென்னுமிடத்திலே மநுஷ்யத்வம் சொல்லுகிறது. ''இருக்கை'' என்றது- வாஸஸ்தலமென்றபடி.

கங்கையிக்கரை. ஸ்ரீகுஹனிடத்திலே ஸ்நாநம்பண்ணுகைக்காக அவனேறிக்கிற ஓடத்தை கங்கையாகநிரூபித்து, ''கங்கை கங்கை'' என்கிற சப்தத்தைச்சொல்லி, இந்த வாக்யத்தாலே, அவர்களுடைய *அவத்யமதுபோக்குவதற்காக பாபத்தைப்போக்கவல்ல. கங்கையின்கரைமேல் கைகதோழநின்று. இப்படியிருந்துள்ள கங்காதடிநுடைய கரையிலே விசேஷஜ்ஞரெல்லாரும் கைபெயர்த்துத் தொழும்படியாய்நின்ற. கண்டமென்னும் கடிநகரே. கண்

(க) ''ந்வம்மாதா ஸர்வலோகாநாம் தேவதேவஸ்ய தாரிணீ.'' (உ) வை.ரா. (ங) ''பாதயோரவநிபாலஸ்ய'' (ஞ) ''ராகவோ ராகவஸ்யாபி'' (ச) ''ராஜ்ஞமராயாதிஜி'' என்று பாடபேதமுண்டு.

ஷோத்தமனிருங்காட்டில் அவன் வந்திக்கிற ரீதசமீம சரமாவதிபாணகையாலே, அதிமதுத வர்ணித்துக்கொண்டநுபவிக்கிறார். ... ... க.

மூ.—சலம்பொதியுடம்பிற் றழலுமிழ்பேழ்வாய்ச் சந்திரன்வெங்கதிரஞ்ச
மலர்ந்தெழுந்தணவு மணிவண்ணவுருவின் மால் புருடோத்தமன்வாழ்வு
நலந்திகழ்சடையான் முடிக்கொன்றைமலரு நாரணன்பாதத்துழாயுங்
கலந்திழிபுனலாற் புகர்படுகங்கைக் கண்டமென்னுங்கடிநகரே. உ.

பதவுரை.

சலம்திகழ் - தங்களைப் முடியில் தரிப்
பதால் வந்த நன்மை விளங்குகிற
சடையான்— ஜடையை தரிபாநின்றுள்ள
ருத்ரன்
முடி— சிரஸ்ஸில் அணிந்த
கொன்றை மலரும்— (சிவந்தநிறமுடைய)
கொன்றைப் பூவையும்
நாரணன் — அவனுக்கு சேஷியான நாரா
யணனுடைய
பாதம்— திருவடிகளில் பூஜைந்த
துழாயும்— (பசுமை நிறமுடைய) திருத்
துழாயையும்
கலந்து— கலந்து
இழி— ஆகாசத்தில் நின்றும் கீழ்இழியா
நின்றுள்ள
புனலால்— ஜலத்தாலே
புகர் படு— ஒளிவிடாநின்றுள்ள
கங்கை— கங்கைக்கரையிலுள்ள
கண்டமென்னும் கடிநகர்—;
நகரம்— ஜலத்தை

பொதி— பொதிந்து கொண்டிருக்கிற
உடம்பின்— வடிவையுடைய
சந்திரன்— சந்த்ரனும்
தழல்— நெருப்பை
உமிழ்— உமிழாநின்றுள்ள
பேழ்— பெரிய
வாய்— கிரணங்களையுடையவாய்
வெம்— வெப்பத்தை இயல்வாகவுடைய
கதிர்— ஸூர்யனும்
அஞ்ச— அஞ்சுகட்டியாக
மலர்ந்து— பரம்பிக்கொண்டு
எழுந்து— கிளர்ந்து
அணவ— அவர்களிருப்பிடத்தைச் சென்று
கிட்டின
மணி— நீலரத்நம்போன்ற
வண்ணம்— நிறத்தையுடைய
உருவின்— வடிவையுடையவனுடைய
மால்— வ்யாமுக்தனை
புருடோத்தமன்— புருஷோத்தமனுக்கு
வாழ்வு— ப்ராப்யமிதசமாம்.

வ்யா. இரண்டாம்பாட்டு. சலமிக்பாதி. அம்ருதகிரணனுகையாலே ஜலத்தைப் பாதிந்துகொண்டிருக்கிற வடிவையுடைய சந்த்ரனும், உஷ்ண கிரணனுகையாலே அக்நியை மிழாநின்ற பெரிய கிரணங்களையுடையவாய் வெம்மையே ஸ்வபாவமாகவுடைய ஆதித்ய மும், திருவுலகளந்தருளுகிறபோது அதிஷ்டபூர்வமாய் அதிகமாய் அதிசிக்ர கவளருகிறபடியைக் கண்டு "என்னுகிறதோ!" என்று அஞ்சும்படியாக. மலர்ந்தெ ந்தணவு மணிவண்ண வுருவின். "என்டிசையும் பேர்ந்தகா நான்முகடையான்" என்கிற ுபோலே - அதிவிஸ்தாரமாய்க்கொண்டு கிளர்ந்து அவர்களிருப்பிடங்களைச் சென்று கிட்டின ரத்நத்தின் நிறத்தையுடைத்தான வடிவையுடையவனுக்கு. மால். "ஒண் மிதியில் புன

வ்யாமோஹத்தை புடையனை. புருடோத்தமன்வாழ்வு. இந்த வ்ர்த்தாந்தத்தாலே- எல்லா ருடைய அந்யசேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்யங்களைப் போக்கி எல்லாஜகத்துக்கும் தானே சேஷி யென்னுமிடம் தோற்ற நின்ற ஸர்வாதிகனை புருஷோத்தமனுக்கு ப்ராப்யமானதேசம்.

நலந்திகழ்சடையான் முடிக்கொன்றைமலரும். (க) "வாவநாயும் ஜடாதியெ யெபாமெஹாஷீ தாவயாமஸ்" என்கிறபடியே திருவடி விளக்கின தீர்த்தத்தை தரித் துக்கொண்டிருக்கிற நன்மை விளங்காநின்ற ஜடையையுடைய ருத்ரனுடைய சிரஸ்ஸில் கொ ன்றைப்பூவும். நாரணன்பாதத்துழாயும். அவனுக்கு சேஷியும் சரீரியுமான நாராயண னுடைய திருவடிகளில் திருத்துழாயும். கலந்திழி புனலால். சிவந்த நிறத்தையும் பசுத்தநிற த்தையு முடைத்தான அவை பிரண்டோடும் கலந்து ஆகாசத்தில் நின்றும் பூமியிலே யிழி ந்து ப்ரவஹிக்கிற ஜலத்தாலே. புகர்படுகங்கை. ஒளியையுடைத்தா யிருந்துள்ள கங்கையி னுடைய கரையில். கண்டமென்னுங்கடிநகரே. "கண்டம்" என்று - தேசத்துக்குத் திரு நாமம். கடி - பெருமை. நகரென்கிறது - புருஷோத்தமனும் தநீயரும் வர்த்திக்கிறதேச மாகையாலே. "அரங்கமாநகர்" என்னுமாபோலே. ... ... உ.

மூ—அதிர்முகமுடைய வலம்புரிகுமிழ்த் தழலுமிழாழி கொண்டெறிந்தங்
கெதிர்முகவசுரர் தலைகளோயிடறு மெம்புருடோத்தம னிருக்கை
சதுமுகன்கையிற் சதுப்புயன்முளிற் சங்கரன்சடையினிற் றங்கிக்
கதிர்முகமணிகொண் டிழிபுனற்கங்கைக் கண்டமென்னுங் கடிநகரே. கூ.

பதவுரை.

(திருவடி விளக்குகிறபோது,)

சதுர முகன்— ப்ரஹ்மாவினுடைய
கையில்— கையிலும்
சதுப்புயன்— சதுர்ப்புஜனை த்ரிவிக்ரம னுடைய
தாளில்— திருவடிகளிலும்

(பின்பு,)

சங்கரன்— ருத்ரனுடைய
சடையினில்— ஜடையிலும்
தங்கி— தங்கி
கதிர்— ஒளியையுடைத்தாய்
முகம்— சிறந்திருந்துள்ள
மணி— ரத்நங்களை
கொண்டு— கொழித்துக்கொண்டு
இழி— இழிகிற
புனல்— ஜலத்தையுடைய
கங்கை— கங்கையின் கரையிலுள்ள
கண்டம் என்னும் கடிநகர்—;
அதிர்— த்வநியா நின்ற
முகம் உடைய— முகத்தையுடைய
வலம் புரி— ப்ரீபாஞ்சஜந்யத்தை
குமிழ்த்து — திருப்பவளத்தில் வைத்து ஊதியும்
அழல்— நெருப்பை
உமிழ்— உமிழாநின்றுள்ள
ஆழி கொண்டு— திருவாழியைக்கொண்டு
எறிந்து— எறிந்தும்
அங்கு— அவ்விடத்திலே
எதிர்— பொருவதாக எதிர்த்த
முகம்— முகத்தையுடையரான
அசுரர்— அஸுரர்களுடைய
தலைகளை— தலைகளை

எம்— நமதுடைய | இருக்கை— வாஸஸ்தானமாம்.

வ்யா. மூன்றும்பாட்டு. அதிர்முகமுடைய. திருவுலகளந் தருளுகிறபோது நமுசி ப்ரப்ருதிகளான அஸுரர்கள் ப்ரதிபந்திக்கையாலே த்வங்கியாநின்றுள்ள முகத்தை யுடைத் தான ஸ்ரீபாஞ்சஜந்யத்தைத் திருப்பவளத்திலே வைத்தூதி, மெருப்பை உமிழாநின்றுள்ள திருவாழியைக் கொண்டெறிந்து, அவ்விடத்திலே யுத்தோத்யுக்தராய்க்கொண்டு எதிர்ந்த முகத்தையுடையரான அஸுரர்களுடைய தலைகளை யுருட்டினவனுய், ஆச்ரிதரான நமக்கு ப்ராப்யபூதனான புருஷோத்தமனுடைய வாஸஸ்தானம்.

சதுர்முகனித்யாதி. (க) "ஸ்ரீஹீக்ஷா யஜுர்வாதீயம் வாஜ நாயஸ்ய தைத்தி யா க்ஷாலிதம் வாயாஹ்ருத்ய வாஜ்ராவ்ருஹி ரவி-ருதம்॥" என்கிறபடியே- திருவடிகள் விளக்குகிறபோது, அது சதுர்முகனை ப்ரஹ்மாவின் கையிலும், அநந்தாம் விளக்கப்பட் டது சதுர்ப்புஜனை ஸர்வேச்வரன் திருவடிகளிலும், அநந்தாம் (உ) "தஜ்ஜவ-வதி தம் ஜவிஷ்டா துயாஸமிரஸ்ய ஹரஸ:" என்கிறபடியே திருவடிகளினின்றும் விழுகிற வித்தை சிரஸ்ஸாலே தரித்த ருத்ரனுடைய ஜடையிலும் தங்கி. கதிரிக்யாதி. ஒளியையுடைத்தாய் ச்ரேஷ்டமாயிருக்கிற ரத்நங்களைக் கொழித்துக்கொண்டு இழிகிற புனலை யுடைத்தான கங் கையினுடைய கரையிலே. கண்டமென்னுங்கடிநகரே. ... ... உ.

மூ—இமையவரிறுமாந் திருந்தசாள வேற்றுவந்தெதிர்பொருசேனை
நமபுரநுணுக நாந்தகம் விசிறு நம்புருடோத்தம னகர்தான்
இமவந்தந்தொடங்கி யிருங்கடலளவு மிருகரை யுலகினைத்தாடக்
கமையுடைப் பெருமைக் கங்கையின் கரைமேற் கண்டமென்னுங்கடிநகரே.

பதவுரை.

இமவந்தம் தொடங்கி— ஹிமவானுடைய உச்சிமுதல்

இரு— பெரிய

கடல் அளவும்— கடல்வரைக்கு முள்ள

உலகு — உலகத்திலுள்ளவர்

இரு கரை— இரண்டு கரையிலும்

இனைத்து— ஆரவாரித்துக்கொண்டு

ஆட— நீராட

கமை உடை — அவரவர்கள் பாபங்களைப் பொறுக்கும் பொறையுடைமையால்வந்த பெருமை— பெருமையையுடைத்தான கங்கையின்கரைமேல் கண்டம் என்னும் கடிநகர்—;

இமையவர்— இந்த்ரன்முதலியதேவர்கள்

இறுமாந்து இருந்து— செருக்கி யிருந்து

அரசு ஆள— ராஜ்யம் நிர்வஹிக்கும்படியாக

எற்றுவந்து— என்றுகொண்டுவந்து

(அவர்கள்மேலும், அவர்களுக்கு ரக்ஷகனான தன்மேலும்,)

எதிர் பொரு— எதிர்ந்து பொருகிற

சேனை— ஸைந்யமான

(க) "ஸ்ரீஹீத்வாதர்மபாதீயம் பாதம் நாதஸ்யதுஷ்டோய - க்ஷாளிதம் பரயாபக்த்யா

நந்தகம்— கடும்பபடிபோக
நாந்தகம்— நந்தகவாளை

புருடோத்தமன்— புருஷோத்தமனுக்கு
நகர்— வாஸஸ்தாநமாம்.

வ்யா. நான்காம்பாட்டு. இமையவ ரிறுமாந்திருந்தராசாள. இந்த்ராதி தேவர்கள் ப்ரதிபக்ஷபயமற்று மாலையிட்டு மார்வந்தோளும் பார்த்து கர்வோத்தராயிருந்து ராஜ்யம் பண்ணுப்படியாக. ஏற்றுவந்தித்யாதி. அவர்கள் ஜீவிக்கிறதுகண்டு பொறுக்கமாட்டாமல் அழியச் செய்வதாக ஏன்றுகொண்டுவந்து, அவர்கள் மேலும் அவர்களுக்கு ரக்ஷகனான தன் மேலும் எதிர்ந்து பொருகிற அஸுராராக்ஷஸ ஸேனையானது. நமபுரம்நணுக நாந்தகம் விசிறும். யமபுரத்தை ப்ராபிக்கும்படியாக ஸ்ரீநந்தகமென்கிற திருநாமத்தை யுடைத்தான * கொற்ற வொள்வாளைவீசும். நம்புருடோத்தமன் நகர்தான். இப்படி ஆச்ரிதரக்ஷணம் பண்ணும்ஸ்வபாவனான நம்முடைய புருஷோத்தமனுடைய நகர்தான்.

இமவந்தமித்யாதி. ஹிமவானுடைய உச்சிதொடங்கி பெரிய கடலளவும், இரண்டு கரையிலுள்ள லோகத்தாரும் ஆரவாரித்துக்கொண்டு தீர்த்தமாட. கமையுடைப் பெருமைக் கங்கையின் கரைமேல். கூர்மாவதாரத்தைபால் வந்த பெருமையையுடைத்தான கங்காதீரத்தில். அதாவது- ஸர்வலோகரும் பாபக்ஷயார்த்தமாக வந்து தன்னுடைய ஜலத்திலே அவகாஹித்தால் அவையெல்லாவற்றையும் பொறுத்து அவர்களைப் பரிசுத்தராக்கிவிடும் பெருமையைச் சொல்லுகிறது. கண்டமென்னும் கடிநகரே. ... ... ச

மூ.—உழுவதோர்படையு முலக்கையும்வில்லு மொண்சுடராழியுஞ் சங்கும்
மழுவொடுவாளும் படைக்கலமுடைய மால்புருடோத்தமன் வாழ்வு
எழுமையுங்கூடி யீண்டியபாவ மிறைப்பொழு தளவினிலெல்லாங்
கழுவிடும்பெருமைக் கங்கையின் கரைமேற்கண்டமென்னும் கடிநகரே. ரு.

பதவுரை.

எழுமையும்— எழுஜந்மங்களிலும்
கூடி— கூடி
ஈண்டிய— திரண்ட
பாவம் எல்லாம்— பாவங்களை யெல்லாம்
இறைப்பொழுதளவினில்-க்ஷணகாலத்திலே
கழுவிடும்— கழுவிவிடாநிற்கிற
பெருமை—பெருமையையுடைய [நகர்—;
கங்கையின்கரைமேல் கண்டம் என்னும்கடி-
உழுவது ஓர் படையும்— கலப்பையையும்
உலக்கையும்— உலக்கையையும்
வில்லும்— ஸ்ரீசார்ங்கத்தையும்

ஒண்— அழகிய
சுடர்— தேஜஸ்ஸை உடைத்தான
ஆழியும்— திருவாழியையும்
சங்கும்— ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும்
மழுவொடு வாளும்—கோடரியையும் ஸ்ரீநந்தகவாளையும்
படைக்கலம் உடைய—ஆயுதமாகவுடையனும்
மால்— ஸர்வேச்வரனான
புருடோத்தமன்— புருஷோத்தமனுக்கு
வாழ்வு— வாஸஸ்தாநமாம்.

வ்யா. ஐந்தாம்பாட்டு. உழுவதோர்படையும். கலப்பையும். உலக்கையும். முஸலமும். வில்லும். ஸ்ரீசார்ங்கமும். ஒண்சுடராழியும். அழகிய தேஜஸ்ஸையுடைத்தான திருவாழியும்

எழுமையுங்கூடி யீண்டியபாவம்-எல்லாம். அதேகணத்தில்கூடித்திரண்ட பாபங்களெல்லாவற்றையும். இறைப்பொழுதளவினில் கழுவிடும்பெருமைக் கங்கையின் கரைமேல். தன்னுடைய ஜலத்திலே அவகாஹித்தவர்களுக்கு க்ஷணகாலமாத்ரத்திலே கழுவி விடாநிற்கும் பெருமையையுடைத்தான கங்கையினுடைய கரையின்மேல். கண்டமென்னும் கடிநகரே. ... ரு.

மூ.—தலைப்பெய்துகுமுறிச் சலம்பொதிமேகஞ் சலசலபொழிந்திடக் கண்டு
மலைப்பெருங் குடையான் மறைத்தவன் மதுரைமால்புருடோத்தமன்வாழ்வு
அலைப்புடைத்திரைவா யருந்தவமுனிவ ரவபிரதங்குடைந்தாடக்
கலப்பைகள் கொழிக்குங் கங்கையின்கரைமேற் கண்டமென்னுங் கடிநகரே. கூ

பதவுரை.

அலைப்பு உடை— கரையெறியா நின்றுள்ள
திரைவாய்— அலையினிடத்திலே
அரு— அரிய
தவம்— தபஸ்ஸுக்களை யுடையரும்
முனிவர்— மநநசீலராயிருக்குமவர்கள்
அவபிரதம்
குடைந்தாட } —அவப்ருதஸ்நாநம்பண்ண
(அத்தாலே,)
கலப்பைகள்— யாகபூமியிலுள்ள கலப்பை
முதலிய கருவிகளையெல்லாம்
கொழிக்கும்—தள்ளிக்கொண்டுபோகாநிற்கிற
கங்காநதியின் கரைமேல் கண்டம்
என்னும் கடிநகர்—;
சலம்— கடல்நீரை
பொதி— பொதிந்துகொண்டிராநின்ற
மேகம்— மேகங்களானவை [கிட்டி
தலைப்பெய்து—(திருவாய்ப்பாடியிலே)வந்து
குமுறி— இடித்து முழக்கி
சல சல— சளசளவென்று
பொழிந்திட— வர்ஷிக்க
கண்டு— கண்டு
மலை— கோவர்த்தநகிரியாகிற
பெரு— பெரிய
குடையால்— குடையாலே
மறைத்தவன்—ஒருவன்மேல் ஒருதுளிவிழாதபடி மறைத்தவனும்
மதுரை— ஸ்ரீமதுரையில்
மால்— வ்யாமுக்தனை
புருடோத்தமன்— புருஷோத்தமனுக்கு
வாழ்வு— வாலஸ்தாநமாம்.

வயா. ஆழும்பாட்டு. தலைப்பெய்திதியாதி. சலம்பொதிமேகம்-தலைப்பெய்து குமுறி. இந்த்ரன் ஏவற்படியே ஸமுத்ரம் தரையாம்படி ஜலத்தையெல்லாம் தன்பக்கலிலே பொதிந்துகொண்ட. மேகங்களானவை திருவாய்ப்பாடியிலே வந்து கிட்டி, கேட்டவர்கள் குடல் குழம்பும்படி யிடித்து முழக்கி. தலைப்பெய்கை - கிட்டுகை. சலசலபொழிந்திட. சலசலவென, குடமிட்டுச் சொரிந்தாற்போலே வர்ஷிக்க. சலசலவென்கிறது - அநுகாரத்வநி. கண்டு. மேகங்களினுடைய பகைப்பையும், திருவாய்ப்பாடியிலுள்ளார் எளிமையையுங்கண்டு. மலைப்பெருங்குடையால் மறைத்தவன். மலையாகிற பெரிய குடையாலே, ஒருதுளி ஒருகல் ஒரு இடி என்கிற விலை ஒருவர்மேலேவிழாதபடி மறைத்தவன். மதுரைமால். விரோதியான கம்ஸனை யழியச்செய்து மாதாபிதாக்கள்சிறையையும்விடுத்து உக்ரஸேநனை அபிஷேகம்பண்ணி அங்குவர்த்தமாநரானவர்களெல்லாரையும்வாழ்வித்து நோக்கிக்கொண்டு போருமிடம் திரு

அலைப்புடைத்திரைவாய். அலைகிற திரையிடத்திலே. அருந்தவமுனிவர். அரியதபஸ்ஸுக்களையுடையராய் பகவந்மநநசிலராயிருக்குமவர்கள். அவபிரதம் குளைடந்தாட. பகவத்ஸமாராதநரூபங்களான யாகங்களை அவிகலமாக அநுஷ்டித்து, அதிலுண்டைய சரமதிவஸத்திலே அவப்ர்தஸ்நாநஞ்செய்ய. கலப்பைகள் கோழிக்கும். அநந்தரம் பெருக்காறுப் யாகபூமியிலுண்டான கலப்பை முதலான உபகரணங்களெல்லாவற்றையும் எடுத்துத் தள்ளிக்கொண்டு போகாநிற்கிற. கங்கையின் கரைமேல் கண்டமென்னும் கடிநகரே. ... ...கூ.

மூ.—விற்பிடித்திறுத்து வேழத்தைமுறுக்கி மேலிருந்தவன்றலைசாடி
மற்றொருதெழுப்பாய்ந் தரையனையுணைதத்த மால்புருடோத்தமன் வாழ்வு
அற்புதமுடைய வைராவதமதமு மலரிளம்படிய சோண்சார்தும்
கற்பகமலருங் கலந்திழிகங்கைக் கண்டமென்னும் கடிநகரே. எ.

பதவுரை.

இறுத்து— முரித்தும்

வேழந்தை } குவலயாபீட களிற்றின்
முறுக்கி } கொம்பை முரித்தும்

மேல் இருந்தவன்—யானைப்பாகனுடைய

தலை— தலையை

சாடி— அந்தக்கொம்பாலே சிதற அடித்தும்

மல் பொருது — சாணூர முஷ்டிகர்களாகிற மல்லருடல்கள் நெரியும்படி போர்செய்தும்

அரையனை— (உயர்ந்தகட்டிலினிருந்த) ராஜனான கம்ஸனை

(மயிரைப்பிடித்திழுத்துக் கீழேதள்ளி,)

எழப்பாய்ந்து— அவன்மேலேறிக்குதித்து

உதைத்த— திருவடிகளாலே உதைத்தும்

(இவற்றால் வந்த)

மால்— பெருமையுடையவனை

புருடோத்தமன்— புருஷோத்தமனுக்கு

வாழ்வு— அபிமதமான போகம்.

அற்புதம் உடைய— யாவருமாச்சர்யப்படத்தக்க

ஐராவதம்—'ஐராவதம்' என்னும் யானையின்

மதமும்— மதநீரும்

அவர்—ஸ்வர்க்கவாஸிகளான தேவர்களாலே ஆசைப்படத்தக்கவர்களாய்

இள படியர்—அந்தப்பதமுள்ளவளவும் யௌவநப்பருவம் குலையாத தேவஸ்த்ரீகள் அணிந்த

ஏண்— சிறந்த

சாந்தும்— சந்தநமும்

கற்பகம் மலரும்—அவர்கள் குழலில் சொருகின கல்பகப்பூக்களும்

கலந்து— சேர்ந்து

இழி— இழியாநின்றுள்ள

கங்கை— கங்கையின்கரையில்

கண்டமென்னும் கடிநகர்—;

வில் பிடித்து — வில்லைப்பிடித்து

வ்யா. எழாம்பாட்டு. விற்பிடித்திறுத்து. கம்ஸன் "வில்விழவுக்கு" என்று உறவின்மேலே அழைத்துவிட, தானும் அதுக்கென்னப்போகிறதுப் மதுரையிலேசென்று அவனுடைய ஆயுதசாலையிலே புக்கு அவனுக்கு அபிமதமான வில்லைப்பிடித்து முரித்து. வேழத்தைமுறுக்கி. அநந்தரம் "புருவாய்நின்ற போதகம்" என்கிறபடியே- அவனுடைய கர்ஜநத்வாரத்

திலே நின்று தன்மேலே படர்ந்துவந்த மத்தகஜமான குவலயாபீடத்தை சிக்கெனப்பிடித்து மேலிருந்தவன்தலைசாடி. கொம்புமுறிந்து தளர்ந்து விழுந்ததை சிகூசாடலைத்தாலே எழுப்பி அதின்மேலேயிருந்து கடத்திக்கொடுவந்த பாகனுடைய தலையை அந்த ஆனைக் கொம்பாலே சிதறவடித்து. மற்பொருது. ஆனையின் கொம்பையும் கையிலே கொண்டு உள்ளே புகுந்தவளவிலே அந்த செருக்குப் பொறுமல் வந்தெதிர்ந்த சாணூரமுஷ்டிகரான மல்லருடல்கள் நெரிந்துவிழுட்படியாக அவர்களோடே பொருது. எழுப்பாய்ந்தரையனை யுதைத்த. அநந்தரம், கம்ஸனிருக்கிற மஞ்சத்தின் முற்றவெளியிலேசென்று (க) 'தூஜீதுவ்)வஷ்டிதம்' என்கிறபடியே உயர்ந்தமஞ்சத்திலே யிருக்கிறவவனைக்கண்டு. அவனிருக்கிறவிடத்திலே கிளர்க்குதித்து, ராஜாவாய்க்கொண்டு அபிமேஷகமும் தானுமாயிருக்கிறவனை, (உ)''கூமொஷ்வா கூஷ்)விமஹே த்ரீ-ஷவ நீ கமெ ! லகூலாவொதிபாகோவ தி லவ்)வரிவவாதவ ,' என்கிறபடியே அபிமேஷகத்தைத்தட்டிப் பொகட்டு மயிரைப்பிடித்திழுத்து மஞ்சத்துக்குக் கீழேதள்ளி அவன்மேலே குதித்துத் திருவடிகளாலேஉதைத்த. மால்புருடோத்தமன்வாழ்வு. இப்படி ஆஸுரப்ரக்ருதியான கம்ஸனை நிரஸித்த பெருமையையுடையனான புருஷோத்தமனுக்கு அபிமதமான தேசம்.

அற்புதமுடைய ஐராவதமதமும். ஆச்சர்யமான ரூபசேஷ்டிதாதிகளையுடைய ஐராவதத்தினுடைய மதஜலமும். அவிளம்படியரோண்சாந்தும். ஸ்வர்க்கவாஸிகளான தேவர்களுக்கு அபிமதைகளாய், அந்தப்பதமுள்ளவளவும் பெளவநம் குலையாத வடிவையுடையரான தேவஸ்த்ரீகள் தங்களுக்கு அலங்காரமாகவணிந்த சாந்தும். கற்பகமலரும். அவர்கள் குழலில் சொருகின கற்பகப் பூக்களும். கலந்திழிகங்கை. இவற்றை யெல்லாம் சேர்த்துக் கொண்டு இழியாநிற்கிற கங்கையினுடைய கரைமேல். கண்டமென்னும் கடிநகரே. ... எ.

மு.—திரைபொருகடல்சூழ் திண்மதிட்டுவரைவேந்து தன்மைத்துனன்மார்க்காய்
அரசனையவிய வரசினையருளு மரிபுருடோத்தமனமர்வு
நிரைநிரையாக நெடியனயூப நிரந்தரமொழுக்குவிட்டிரண்டு
கரைபுரைவெள்விப் புகைகமழ்கங்ஙைக் கண்டமென்னும் கடிநகரே. மு.

பதவுரை.

நிரை நிரை ஆக— ஓரோரொழுங்காய்
நெடியன— நெடியவையா யிருந்துள்ள (பசுக்கள் கட்டப்படுகிற)
யூபம்— யூபஸ்தம்பங்களானவை
நிரந்தரம்— இடைவிடாமல்
ஒழுக்குவிட்டு— நெடுகச்சென்றிருப்பதாய்
வேள்வி புகை— யாகதூமமான து
இரண்டுகரைபுரை— இரண்டு கரையு மொத்து
கங்கை— கங்கைக்கரையில்
கண்டமென்னுங் கடிநகர்—;
திரைபொரு— அலையெறியாநின்றுள்ள
கடல்— கடலாலே
சூழ்— சூழப்பட்ட
திண்— திண்ணிதான
மதில்— மதிளையுடைத்தாயிருக்கிற
துவரை— பூநீத்வாரகைக்கு

மைத்துனன்மாக்கு — மாற்றாந்தாய்மக்களான
பாண்டவர்களுக்கு

ஆய்— பக்ஷபாதியாய் நின்று
அரசனை— துர்யோதனன்முதலான அரசர்களை
அழிய— அழித்து

அருளும் — பாண்டவர்களுக்குக்கொடுத்தருளும்
அரி— பாபதூரணன
புருடோத்தமன் — புருஷோத்தமன்
அமர்வு— பொருந்திவர்த்திக்கும் ஸ்தலமாம்.

வ்யா. எட்டாம்பாட்டு. திரைபொருகடல்சூழ் திண்மதிள் துவரைவேந்து. கடலைச் ‡சிறுத்துப் படைவீடு செய்ததாகையாலே *திரைபொருகடலாலே சூழப்பட்டிருப்பதாய், திண்ணியதான மதிளையுடைத்தாயிருக்கிற ஸ்ரீமத்வாரகைக்கு ராஜாவானவன். * வண்டு வராபதிமன்னனிறை. தன்மைத்துனன்மார்க்காய். (க) “கூஷாஸ்ரயாஃ கூஷ வேலாஃ கூஷ்நாயாஸ்துவாஜ்ஞவாஃ” என்கிறபடியே தன்னையே தங்களுக்கு ஆச்ரயமும் பலமும் நாதனுமாகப் பற்றியிருக்கிற தன் மைத்துனன்மாரான பாண்டவர்களுக்கு பக்ஷபாதியாய் நின்று. அரசனையவிய அரசினையருளும். *பொய்ச்சூதிலே அவர்களைத்தோற்பித்து அவர்கள் ராஜ்யத்தைத் தாங்கள் பறித்துக்கொண்டு, பத்தூர் ஓரூர் கொடுக்கச் சொன்னவிடத்திலும் கொடோமென்று தாங்களே அடையபுஜிப்பதாகவிருந்த துர்யோதனாதி ராஜாக்கள்விளக்குப்பிணம்போலே விழுந்து போகப்பண்ணி ராஜ்யத்தைப் பாண்டவர்களுக்குக் கொடுத்தருளும். அரிபுருடோத்தமன் அமர்வு. (உ) “ஹதாவஜி வம்வ்ராஜ்ய ஹதபுத்ரா ஹதவாநுஹரிஃ” என்று ஆபத்தசையிலே ஸ்மரிக்கப்படுமவனாக ஸ்ரீவஸிஷ்டபகவானாலே த்ரௌபதிக்குச் சொல்லப்பட்டவனாய், (ங) “ஹரிஹரதிவாவாதி துஷ்க்ருதிவிதேதரவிஷ்யதி” என்கிறபடியே ஸ்மரித்தவர்களுடைய ஸகலபாபங்களையும் போக்குமவனான புருஷோத்தமன் பொருந்தி வர்த்திக்கிற ஸ்தலம்.

நிரைநிரையாக நெடியனூபம். ஓசோனொழுங்காய்க்கொண்டு நெடியதாயிருந்துள்ள, பசுக்கள் பற்றிக்கிற யூபங்களானவை. நிரந்தரமொழுக்குவிட்டு. இடைவிடாமல் நெடுகச்சென்றிருப்பதாய். இரண்டுகரைபுரை வெள்ளிப்புகைகமழ் கங்கை. இருகரைபு மொத்து யாகதூமம் கந்தியாநிற்கிற கங்கையினுடைய கரையில். கண்டமென்னுங்கடிநகரே. ... ...அ

மூ.—வடதிசைமதுரை சாளக்கிராமம் வைகுந்தந் துவரையயோத்தி
இடமுடைவதரி யிடவகையுடைய வெம்புருடோத்தமனிருக்கை
தடவரையதிரத் தரணிவிண்டிடியத் தலைப்பற்றிக் கரைமரஞ்சாடிக்
கடலினைக் கலங்கக்கடுத்திழி கங்கைக் கண்டமென்னும் கடிநகரே. கூ.

பதவுரை.

நட வரை—மந்தரம்முதலான பெரியமலைகளா | நாணி— பூமியான தற
அதிர— சலிக்கவும் | [ணவை | விண்டு— பிளவுபட்டு

---

‡ சிறுத்து— அணுகட்டி. (க) “க்ருஷ்ணச்ரயாஃ க்ருஷ்ணபாலாஃ க்ருஷ்ணவாஸிஃ. ” (ங) “ஹரிர்யாவதிஷ்யதிப்ராப்தே ச

தலைப்பற்றி – மரங்களினுடைய தலையளவும் செல்லக்கிளம்பி

கரை – கரையில் நிற்கிற

மரம் – மரங்களை

சாடி – மோதி முறித்தும்

சுடல்—ஒன்றாலும் கலங்காத சுடலுங்கூட

கலங்க— கலங்கும்படி

சுடுத்தி— வேகமாய்க்கொண்டு

இழி— இழியாகின்றாள்ள

கங்கை— கங்காதீரத்தில்

கண்டம் என்னும் கடிநகர்—;

வட திசை— உத்தரதிக்கிலுள்ள

சாளக்கிராமம்— ஸ்ரீஸாளக்ராமமும்

வைகுந்தம்— ஸ்ரீவைகுண்டமும்

துவரை— ஸ்ரீத்வாரகையும்

அயோத்தி— திருவயோத்தியையும்

இடம் உடை— இடமுடைத்தாயிருந்தாள்

வதரி— ஸ்ரீபதரிகாச்ரமமுமாகிற இவற்றை

இடம் வகை உடைய— வாஸஸ்தானமாக வுடையனை

எம் — எமக்கு ஸ்வாமியான

புருஷோத்தமன் — புருஷோத்தமனுடைய

இருக்கை— இருப்பிடமாம்.

வயா. ஒன்பதாம்பாட்டு. வடதிசைமதுரை. வடக்குதிக்கில் மதுரை. தென்திசை மதுரை உண்டாகையாலே விசேஷிக்கிறது. சாளக்கிராமம். புண்யக்ஷேத்ரங்களில் ப்ரதான மாகவண்ணப்படும் ஸ்ரீஸாளக்ராமம். வைகுந்தம். அப்ராக்ருதமாய் நித்யவாஸஸ்தலமான ஸ்ரீ மத்வைகுண்டம். துவரை. * பதினாறுமாயிரவர் தேவிமார்பணிசெய்ய மணவாளராய் வீற்றிருந்த ஸ்ரீமத்வாரகை. அயோத்தி. "அயோத்திநகர்க் கதிபதி" என்கிறபடியே ராமாவதாரஸ்தலமாய் அத்யந்தாபிமதமாயிருந்துள்ள திரு அயோத்யை. இடமுடைவதரி. நரநாராயண ரூபியாய்க்கொண்டு திருமந்த்ரத்தை வெளியிட்டருளி உகப்புடனே யெழுந்தருளியிருக்கும் ஸ்தலமாய், இடமுடைத்தாயிருந்துள்ள ஸ்ரீபதரி. இடவகையுடைய. இவற்றை வாஸஸ்தானமாக வுடையனை. எம்புருடோத்தமனிருக்கை. ஆச்ரிதரான நமக்கு இனியனை புருஷோத்தமனுடைய இருப்பிடம்.

தடவரையித்யாதி. பகீரதன் தபோபலத்தாலே இறக்கிக்கொடுவருகிறபோது வந்திழிகிற வேகத்தைச் சொல்லுகிறது.

தடவரையதிர. உயர்ந்த நிலத்தில் நின்றும் வந்திழிகிற வேகத்தாலே மந்தராதிகளான பெரிய மலைகள் சலிக்கும்படியாக. தரணிவிண்டிடிய. பர்வதத்தில் நின்றும் பூமியிலே குதிக்கிற வளவில் பூமி விண்டு இடிந்துவிழ. தலைப்பற்றிக்கரைமரஞ்சாடி. வர்க்ஷாகாலினுடைய தலையளவும் செல்லக் கிளம்பி, கரையில்நிற்கிற மரங்களை மோதிமுறித்து. கடலினைக் கலங்கக்கடத்திழி கங்கைக்கண்டமென்னும் கடிநகரே. ஒன்றாலும் கலங்காத கடலும் கலங்கும்படி வேகித்துக்கொண்டு இழியாகின்ற கங்கையினுடைய கரைமேலே, கண்டமென்னும் கடிநகரே. ... ... கூ.

மூ.—மூன்றெழுத்ததனை மூன்றெழுத்ததனுன் மூன்றெழுத்தாக்கி மூன்றெழுத்தை
ஏன்றுகொண்டிருப்பார்க் கிரக்கமுன்குடைய வெம்புருடோத்தமனிருக்கை
மூன்றடிநிமிர்த்து மூன்றினிற்றேன்றி மூன்றினில் மூன்றுருவானுன்
கான்றடம்பொழில்சூழ் கங்கையின் கரைமேற் கண்டமென்னும் கடிநகரே. ய.

பதவுரை.

கான்— நன்னாற்றம் கமழாநின்றுள்ள | பொழில்— பொழில்களாலே

க்கு வாசகமாயிருக்கும் மூன்றெழுத்தா
கப் பிரித்து
மூன்று எழுத்தை— அம்மூன்றெழுத்தையும்
ஏன்று கொண்டு } 'நமக்குத்தஞ்சம்' என்று
இருப்பார்க்கு— } தங்கள் நெஞ்சிலே தரி
க்கு மவர்களுக்கு
நன்கு இரக்கம் உடைய— தன்பேறுகச்
செய்யும் தயையை உடையனாய்
எம்— எமக்கு ஸ்வாமியான
புருஷோத்தமன்— புருஷோத்தமனுக்கு
இருக்கை— வாஸஸ்தானமாம்.

---

† ஆகாரத்ரயம்— அநந்யார்ஹ சேஷத்வம், அநந்யசரணத்வம், அநந்யபோக்யத்வம்.

வ்யா. பத்தாம்பாட்டில். மூன்றெழுத்ததனை. (க) "ஸகாரசதுர்த்யேகவசநாந்தம்" க்யாதிப்படியே வேதாத்யயநத்தினின்றும் வ்யாஹ்ருத்ரயத்தையும் தோன்றவித்து, பரி த்தாண வ்யாஹ்ருத்ரயத்தையும் "ஸ்வஸங்கல்பத்தாலே பொன் ஓடவைக்குமாபோலே டவைத்து, அந்த வ்யாஹ்ருத்ரயத்தினின்றும் அகார உகார மகாரங்களாகிற அக்ஷரத்ர த்தையும் ஸம்ஹிதாகாரத்தாலே "ஓம்" என்று ஏகாக்ஷரமாக்கப்பட்ட தாகையாலே க்ஷரத்ரயாத்மகமா யிருக்கிற அந்த ப்ரணவத்தை. "அதனை" என்றது அதிணைடைய ளரவத்தைப்பற்ற. (உ) "ஸுஸ்ரூஷாயாம் த்ருக்ஷாயாம்ஸ்ச ஹே தரயீபவஸ்ரிஸ்ரு ப்ரதிஷ்டிதா । ஸமஸ்தா ஸ்ரிஷ்ரு ஸ்ரிஷ்ரு ஸ்ரிஷ்ரு யஸ்மாத்தஸ்மாத்ஸ்ரிஷ்ரு ஸ்ரிஷ்ரு ஸ்ரிஷ்ரு ஸ்ரிஷ்ரு" என்னும்படியிறே இதிணைடைய பவம். மூன்றெழுத்ததனால். பதஸமுதாயமிறே துவாப் "நிருக்தம்" என்று மூன்று அக்ஷர னை பேரையுடைத்தாயிருக்கிறவதிலே. மூன்றெழுத்தாக்கி. ப்ரக்ரியைபண்ணும் க்ரம தாலே ப்ரக்ரியை பண்ணி, மூன்றுபதமாய் மூன்றர்த்தத்துக்கு வாசகமாயிருக்கும் மூன்றெ த்தாகப்பிரித்து. ப்ரணவத்தான் ஸம்ஹிதாகாரத்தாலே மூன்றக்ஷரமாய்மூன்றுபதமாய்மூன் த்த ப்ரதிபாதகமாயிறே யிருப்பது. மூன்றெழுத்தை யென்றுகொண்டிருப்பார்க்கு. அந்த ன்றெழுத்தையும், 'நமக்குத் தஞ்சமான அர்த்தத்தை ப்ரதிபாதிக்கிற தாகையாலே நமக்கு தச்யம்' என்று தங்கள் நெஞ்சிலே தரிக்குமவர்களுக்கு. அதாவது அகாரமான்று ஸ்வ பணவும் தாதுநிஷ்பந்நரூபணவும் ப்ரத்யயரூபணவும் ஈச்வரனுடைய காரணத்வ கர்த்ருத்வ சேஷித்வங்களையும், அந்த பலத்தாலே ஸ்ரியஃபதித்வத்தையும் ஸகலம்தானென ஈச் விஷயத்தில் சேதநனுடைய சேஷத்வத்தையும் ப்ரதிபாதிக்கையாலும், உகாரமானது

(க) "பூர்தி ருக்வேதாதஜாயத" (உ) "ஆத்யந்து தர்யக்ஷரம்ப்ரதம் த்ரயீ

அவதானமாகவும் பக்கொண்டு. அந்த சேவித்வத்தினுடைய அருமையாற்றலை ப்ரதிபா நக்ஷத்ரமும், மகாமானது (க) "உடு-ஜாதெ" என்கிற தாதுவின்மேல் நிஷ்பந்நமாய்க்கொண்டு ஜ்ஞாநவாசியுமாய், அந்யார்த்த சேஷத்வத்துக்கு ஆச்ரயமான ஆத்மாவினுடைய நிதாந்தநிக்தாநிகன ப்ரதிபாதிக்கையாலும், அகூஷாத்ரபூமும் நமக்குந் தஞ்சமான அர்த்தத்தை சொல்லுகிறதென்று தங்கள் நெஞ்சில் எப்போதும் அநுஸந்தித்திருக்கை. இச்சுட்டுத்தன்தனடையவெம்பருடோத்தமனிருக்கை. இவர்களளவிலே தன்பேரருளுக்ஷ்மை பண்ணுமனப்பான்மைக்கு ஸ்வாமியான புருஷோத்தமனுடைய வாஸஸ்தாநம்.

மூன்றடி நீளித்து. இந்தப்பாஸுரத்தான் (உ) "ஒதி தாமரையாள் மணவாள" என்கிற படியே பரதந்த்ரபாரமகமான திருமந்த்ரத்தில் ப்ரதமபதமாகையாலே இதற்கேயுடைய மேன்மை பதத்தையும் கூட்டி மூன்று பதமாக வளர்த்து. மூன்றினிற்றேனுண்டு. அந்த மூன்று பதத்திலுமுள்ள அந்யார்த்தசேஷத்வம் அநந்யசரணத்வம் அநந்யபோக்யத்வம் ஆகிற மூன்று ஸ்வரூபத்தையும் சேர்ந்துவித்து. "தேன்றி" என்றது - தேனைப்போலே என்றபடி. மூன்றினில் மூன்றுருவானான். பதத்ரய ப்ரதிபாத்யனான சேஷமணியுடைய ஸ்வரூபமும் பிரகாரமாக நிற்பதிஸம்பந்தியான, தாணும் சேவித்து முயல்வாய்ப்பிரமப்பதத்தையும் ஆகிற ஆகாரத்ரயத்தையும் மூடையனானவன். இம்மந்த்ரத்தினுடைய பதத்ரயார்த்தமாகவாய் சேஷமணியுடைய ஸ்வரூபத்தையும் தன்னுடைய ஆகாரத்ரயத்தையும் ப்ரதிபாதிக்குமிது. அதனால் ¶ அடியிலே உண்டாக்கி வைத்தான். ஈச்வரனுக்கையாலே இனை யெல்லாவற்றையும் அவனுக்கே வருவித்து சொல்லுகிறார். கான் தடம்பொழில்சூழ் கங்கைகரையின் கரையோல். "கான்" என்பது காட்டும். தடம்பொழில்- பெருமை. நறுநாற்றத்தை யுடைய பெரிய பெரும்சோலை சூழப்பட்டிருப்பதாய், கங்கையினுடைய கரையிலேயான. கண்டமெனுங்குறுங்கோ....ல.

அ. இதற்கு, இத்திருமொழி கற்றார்க்கு பலஞ்சொல்லிற் றாயிற்றிது. *

மூ.—போங்கோலி கங்கைக்கரைமலி கண்டத்துறை புருடோத்தமனடிமேல்
வெங்கலிகலியா வில்லிபுத்தூர்க்கோன் விட்டுசித்தன் விருட்டிற்றுத்
தங்கியவன்பாற் செய் தமிழ்மாலை தங்கிய நாவுடையார்க்குத்
கங்கை பிற்றிருமால் கழலிணைக்கீழே குளித்திருந்த கணைக்காலமே. கக.

பதவுரை.

போக்கு—ஜலத்தில் கொழிப்பால்வந்தகினை
த்தினை யுடைத்தாய்
ஒதி— கோஷத்தையுடைத்தான
கங்கை கரை – கங்கையின்கரையிலேயாய்
மலி– எல்லாப்படியாலுமுண்டான ஏற்றத்
தையுடைத்தாயிருக்கிற
கண்டத்து — திருக்கண்டங்கழுகரிலே
உறை — நித்யவாஸம்பண்ணுகிற
புருடோத்தமன் — புருஷோத்தமனுடைய
அடிமேல்— திருவடிகளிலே
வெம்— கொடிய
கலி— கலியாலுண்டாகிற
கலியா— கலிவொன்றில்லாத
வில்லிபுத்தூர் கோன் } பூதநீயில்லிபுத்தூருக்கு
நிர்வாஹகரான

விருப்பு உற்று— விரும்பி
நங்கிய— நிலைநின்ற
அன்பால்— அன்பினாலே
செய்— செய்த
தமிழ் மாலை— தமிழ்த்தொடையான இது
தங்கிய— ஒருக்காலும் நீங்காதிருக்கிற
நா உடையார்க்கு—நாவையுடையவர்களுக்கு

கங்கைகயில்— கங்காநதியிலே
குளித்து— நீராடி
திரு மால்— ஸ்ரீயப்பதியினுடைய
இணை— ஒன்றுக்கொன்றொப்பான
கழல் கீழ்— திருவடிகளின்கீழே
இருந்தகணக்கு ஆம்—நிரந்தரலைவைபண்ணி யிருந்ததொருப்ரமேயாஜநத்தோடொக்கும்.

வ்யா. பொங்கித்யாதி. ஜலத்தினுடைய கொழிப்பால் வந்த கிளர்த்தியையும் கோஷத்தையு முடைத்தான கங்கையினுடைய கரையிலேயாய், ஸர்வ ப்ரகாரத்தாலுமுண்டான வற்றத்தை யுடைத்தாயிருக்கிற திருக்கண்டங்கடிநகரிலே நித்யவாஸம்பண்ணுகிற புருஷோத்தமனுடைய திருவடிகளிலே. வெங்கலி நலியா வில்லிபுத்தூர்க்கோன் விட்டுசித்தன் விருப்பு ற்று. விபரீதஜ்ஞாநாதிகளை ஜநிப்பிக்கும் க்ரூரமான கலியுகத்தால் வந்த நலிவென்ப தொன்றில்லாத ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகரான பெரியாழ்வார் ஆசைப்பட்டு. தங்கியவன் பால்செய் தமிழ்மாலை. நிலைநின்ற ப்ரேமத்தாலே செய்த தமிழ்த்தொடையானவிது. தங்கிய நாவுடையார்க்கு. ஒருகாலும் நீங்காதே வர்த்திக்கும்படியான நாவை யுடையவர்களுக்கு. அதாவது - எப்போதும் இத்தையே சொல்லிக்கொண்டு திரியுமவர்களுக்கென்கை. கங்கையிலித்யாதி. கங்கையில் - குளித்து - திருமால் கழலிணைக்கீழே - இருந்த கணக்காமே. அதாவது- இத்திருமொழி தங்கின நாவுடையவர்களுக்கு ஏதேனுமோரிடத்திலே இருந்தாலும், ஸர்வேச்வரன் திருவடிகளில் பிறப்பால்வந்த வற்றத்தையுடைய கங்கையிலே ஸ்நாநம்பண்ணி, திருக்கண்டங்கடிநகரிலே எழுந்தருளி யிருக்கிற ஸ்ரீயப்பதியாணவன் திருவடிகளின்கீழே நிரந்தர லைவைபண்ணி யிருந்ததற்கு ப்ரயோஜநமொக்குமென்கை. பகவத்ப்ரீதியிறே அதுக்கு ப்ரயோஜநம்; அது இவர்களுக்கு மொக்குமென்றதாய்த்து. ... ... கக.

பெரியஜீயர்திருவடிகளேசரணம்.

அடிவரவு.—தங்கையை சல மதிர் இமையவ ருழு தலை வில் திரை வடதிசை மூன்றெழு போங்கொலி மாதவ.

ஆறாந்திருமொழி-நகூ-க்கு, பாட்டு-நஅகூ.

———(o)———

நான்காம்பத்து - எட்டாந்திருமொழி - மாதவத்தோன், ப்ரவேசம்.

அ. "போகத்தில்வழுவாத புநுவையர்கோன்" என்கிறபடியே திருவவதார ஸம

அநுபவித்தவநந்தரம் இவ்வவதாரகுணசேஷ்டிதங்களெல்லாம் ப்ரகாசிக்குமபடி உகந்தருளின நிலங்களிலே எழுந்தருளிநிற்கிற நிலைகளை யநுபவிக்கவேணுமென்று மாசை பிறந்து ப்ரதமம், ராமக்ருஷ்ணத்யவதாரகுண சேஷ்டிதங்களெல்லாம் ப்ரகாசிக்குமபடி திருமலையிலே யெழுந்தருளிநிற்கிற அழகரையும், அவரிலங்காட்டில் ப்ராப்பத்தில் சரமாவதியான திருமலை யாழ்வாரையு மநுபவித்து, பின்பு திருக்கோட்டியூரிலே நிற்கிற நிலையையும் அநுபவிக்கை யிலே ப்ரவர்த்தரான விவர்; அங்கேயெழுந்தருளி நிற்கிற நிலையில் தங்களுக்கு ஆச்ரயணீய மன்றிக்கே அர்ப்பபராய்த்திரிகிற ஸம்ஸாரிகளை நிர்ஹேதுவும், அந்நிலையின் வாசியறிந்து ப்ரவணராய நநுபவிக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களை ச்லாகித்தும், இப்படி யிருந்துள்ள தொருக்கோடே கூடியநுபவித்து, தாம்நிர்ஹேதுவர்களையும் விடமாட்டாத பரமக்ருபையாலே அவர்களுக்குநி த்து இரண்டு திருமொழியாலே பரோபதேசத்தைப்பண்ணி, மீளவும் உகந்தருளின நிலங்க ளிலே நிற்கிற நிலையை யநுபவிக்கையிலுள்ள வாசையாலே " வடதிசை மதுரை " இத்யா நிப்படியே அநேக தேசத்திலுண்டான விருப்பத்தையெல்லாம் பண்ணிக்கொண்டு திருக் கண்டங்கடி நகரிலே அவதாரகுண சேஷ்டிதங்கள் எல்லாம் ப்ரகாசிக்குமபடி எழுந்தருளி நிற்கிறபடியையும், அத்தேசவைபவத்தன்மையும் அநுபவித்து இனியராய் நின்றார் - கீழ்; அ வையெல்லாம்போலன்றிக்கே, " வடிவுடை வானெருத்தலைவனே " என்றும், " கடலிடம் கொண்ட கடல்வண்ணா " என்றும், " கட்கிலீ " என்றும், " காருருத்தா கண்ணினை " என் றும் சொல்லுகிறபடியே- பரத்வாதிகளிலுண்டான குணங்களெல்லாம் ப்ரகாசிக்குமபடி வர்த் திக்கிற ஸ்தலமாய், " பொங்கோதஞ் சூழ்ந்தபுவனியும் " இத்யாதிப்படியே உபயவிபூதி யையும் தனிக்கோல் செலுத்துகிறதும் இங்கேயிருந்தே என்று தோற்றும்படி யிருப்பதாய் " மாலிருஞ்சோலை மணாளரூர் பள்ளிகொள்ளுமிடம் " என்றும், " பொன்னிசூழரங்கமகருள் முகிலவன் - திருமாலிருஞ்சோலைநின்றான் " என்றும், " பாயின்றதரங்கம் திருக்கோட்டி " " தேனார் திருவரங்கம் தென்கோட்டி " என்றும் சொல்லுகிறபடியே முன்பு அநுபவித்த திருமலை திருக்கோட்டியூரில் நிலைகளுக்கு மேல்பட்டதான விடமுமாய், " ஆராவமுதாழ்ந்த வரங்கம் " என்கிறபடியே உகந்தருளின நிலங்களெல்லாம் பகலிருக்கை என்னுமபடி ஆச்ரி தரக்ஷணத்துக்கு ஏகாந்தமானவிடமென்று நிர்ப்பரனாய்ப் பண்ணுகிற ஸ்தலமான * திருவரங் கத்திருப்பதியிலே; " வன்பெருவானகம் " இத்யாதிப்படியே லௌகிக தேசத்திலுள்ளாரும் உஜ்ஜீவிக்குமபடியாகவும், " தென்னுடும் வடநாடும் தொழுதின்ற " என்றும், " பாவருந் வந்தடிவணங்க " என்றும் சொல்லுகிறபடியே லௌகிக தேசத்திலும் ருசிபிறந்தவர்களெல்லா ரும் வந்து அநுபவிக்குமபடியாகவும் ஆச்ரயிக்குமபடியாகவும், " அன்பொடு தென்திசை நோக்கி " என்கிறபடியே * மன்னுடைய விபீடணாழ்வாய் மதிளிலங்கைத் திசைமோக்கி மலர்க்கண் வைத்து, " திருவாளனினிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற " என்கிறபடியே ஸ்ரீய: பதியாகையால் வந்த பெருமை தோற்றத் திருவுள்ளத்திலுகப்புடனே கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாள்பக்கலிலே, விசேஷித்து க்ருஷ்ணவதாரகுணசேஷ்டிதங்களும் ராமாவதார குணசேஷ்டிதங்களும் அவதாராந்தரகுணசேஷ்டிதங்களுமெல்லாம் ஒருமடைகொள்ள ப்ரகா சிக்கிறபடிகளை * திருவரங்கமதனைச்சென்று அநுபவியாநின்றுகொண்டு, அவர் தம்மிலுங் காட்டில் அவர் விரும்பிக் கண்வளர்ந்தருளுகிற தேசமே பரமப்ராப்யமாகையாலே அத்தேச த்திலுடைய வைபவத்தையும் பஹுமுகமாகப்பேசி அநுபவித்து ப்ரீதராகிறார் - இத்

மேகைகருர்.

மூ.—மாதவத்தோன்புத்திரன்போய் மறிகடல்வாய் மாண்டானை
ஓதுவித்ததக்கணையா வுருவுருவே கொடுத்தானூர்
தோதவத்தித் தூய்மறையோர் துறைபடியத் துளும்பியெங்கும்
போதில்வைத்தசேதன்சொரியும் புனலரங்கமென்பதுவே. க.

பதவுரை.

தோதம்— பரிசுத்தமாய் தோய்த்து உல
ர்த்தின
வத்தி— வஸ்த்ரங்களை யுடுத்துமவராய்
தூய்— தூய்தான [குற்றமற்ற]
மறையோர்— வேதத்தைதோய தங்களுக்கு
நிரூபகமாகவுடைய ஸ்ரீவைஷ்ணவர்கள்
துறை— காவிரியில் திருமுகத்துறை முத
லிய துறைகளிலே
படிய— திரள்திரளாக நீராட
(அதனுலே)
எங்கும்— எங்கும்
துளும்பி— அலையெறிந்து
(நூக்களின் நாளங்களை யலைக்க,)
போதில் வைத்த— அந்தப்பூக்களில் வைத்த
சேதன்— சேதனனது
சொரியும்— சொரியும்படியான
புனல்— புனலையுடைத்தாய்
அரங்கம் என்பது— 'திருவரங்கம்' என்
னும் திருநாமத்தையுடைய
திவ்யதேசமான தை;
மறி— திரைமறிகிற
கடல்வாய்— கடலிடத்திலே
போய்— புகுந்து [ண்டவனை
மாண்டான்— முதலிலையாயிலகப்பட்டு மா
மாதவத்தோ } மிக்கதபஸ்ஸையுடைய ஸா
ன்புத்திரன் } திபிநியின் பிள்ளையை,
ஓதுவித்த— (ஸாந்தீபிநி) தன்னை அத்ய
யனம் பண்ணுவித்ததுக்கு
தக்கணையா— தக்ஷிணையாக
உரு உருவே— அந்த புத்ரன் இறந்தபோ
திலிருந்த வடிவின்படியே
கொடுத்தான்— கொண்டுவந்து கொடுத்த
வன் நித்யவாஸம் பண்ணுகிற
ஊர்— தேசம்.

வ்யா. மாதவத்தோன் புத்திரன்போய் மறிகடல்வாய் மாண்டானை. மஹாதபஸ்ஸையுடைய ஸாந்தீபிநிபுத்ரன், நெடுங்காலத்திலே, திரைமறிகிற கடலிடத்திலே புகுந்து மடிந்தவனை. ஓதுவித்த தக்கணையா. அத்யயனம் பண்ணின வநந்தரம் குருதக்ஷிணை கொடுக்கத் தேடுகிறவனை விலே, இவனுடைய அதிமாநுஷ சேஷ்டிதங்களை அறிந்தவளுகையாலே "காதலின்மகன் புகலிடம் காணென் கண்டு நீ தருவாயெனக்கு" என்று முன்பே ஸ்மரித்ததில் மர்தனை என்புத்ரனைக்கொண்டு வந்து தரவேணும் என்று அபேக்ஷிக்க, "அப்படியே செய்கிறேன்" என்று, அவன் அத்யயனம் பண்ணுவித்ததுக்கு தக்ஷிணையாக. உருவுருவே கொடுத்தானூர். (க) "தம்வோயம் யாதி நாஸம்ஸ்தம் யமோவைவஸ்வதஸ்ஸகீ ரிணஜிவி தரவ உதவாஸ்து ஷ்ண" என்கிறபடியே பூர்வதேஹத்தில் ஒன்றும் விநாசமறக் கொண்டுவந்து கொடுத்தவன் நித்யவாஸம் பண்ணுகிற தேசம்.

தோதவத்தித் தூய்மறையோர். ஸமாசாரபராகையாலே, பரிசுத்தமாகத்தோய்த்து உலர்த்தின வஸ்த்ரங்களை தரித்துக்கொண்டிருப்பாராய், தூய்தானமறையையே தங்களுக்கு

ந்தப நிரந்தரமாயிருக்கையாலே ஸாவபரமானவிலக்ஷணமாய, பகவதீஸ்வரூபரூபகுண விபூதிகளை உள்ளபடி ப்ரதிபாதிக்கவற்றாயிருக்கை. இத்தை இவர்கள் நிரூபகமாகவுடையரா யிருக்கையாவது (க) "ஸ்வாயம்பாயை" என்கிற விதிப்ரகாரம் தப்பாமல் அத்யயநம்பண்ணி, அதில் அர்த்தஜ்ஞாநத்தையும் அதுக்கு அநுரூபமான அநுஷ்டாநத் தையுமுடையராயிருக்கையாலேயிவை நிரூபகமாம்படியிருக்கை. துறைபடிய. "கங் கையிற் புனிதமாய காவிரி" என்கிறபடியே * கலந்திழி புனலான கங்கையிலுங்காட்டில் பரிசுத்தமான காவேரியிலே, பெரியபெருமாளுடைய திருக்கண்மோக்கான திருமுகத்துறை முதலான துறைகளிலே, திரள்திரளாக அவகாஹித்து ஸ்நாநம்பண்ணை. துளும்பியித்யாதி. அப்படி அவர்கள் திரள்திரளாகப்புகுந்து ஸ்நாநம்பண்ணுகையாலே எங்கும் அலையெறிந்து, ஆஸந்நமான புஷ்பங்களின் நாளங்களையலைக்க, அந்தப்பூக்களில் வைத்தமீதணைது சொரியும் படியான புனலையுடைத்தாய், திருவரங்கம் என்கிற திருநாமத்தை யுடைத்தாயிருக்கிற திவ்யநகரி. (உ) "கூரியவைவேலுரவோர்நாடு பொதிநான்முகன்படைத் தவிசாதிபதி" என்கிற ஏற்றத்தையுடைத்தாயிருக்கையாலே "அரங்கமென்பதுவே" என்று ப்ரஸித்திதோற்றவருளிச்செய்கிறார். ... ... க.

அ. இரண்டாம்பாட்டு. வைதிகபுத்ராத்யயநம் பண்ணினவன் வர்த்திக்கிற தேசமிது வென்கிறார்.

மூ.—பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகளை நால்வரையும்
இறைப்பொழுதிற் கொணர்ந்துகோடித் தொருப்படுத்தவுறைப்பனூர்
மறைப்பெருந்தீ வளர்த்திருப்பார் வருவிருந்தை யளித்திருப்பார்
சிறப்புடைய மறையவர்வாழ் திருவரங்கமென்பதுவே. உ.

பதவுரை.

மறை— வேதத்தில் சொல்லிப்போந்தபடியே
பெரு— சிறந்த
தீ— மூன்று அக்நிகளையும்
வளர்த்து இருப்பார்— வளர்க்குமவர்களாய்
வரு— தந்தாம் திருமாளிகைக் கெழுந்த
ருளுகிற
விருந்தை— அதிதிகளான ஸ்ரீவைஷ்ணவர்
களை
அளித்து இருப்பார்— ஆதரித்துக்கொண்டு
போருமவர்களாய்
சிறப்பு உடைய— இவ்வகையான நன்மை
களை யுடையராய்
மறையவர்— வேததாத்பர்ய மறிந்திருக்
குமவர்கள்
வாழ்— பகவதநுபவத்தாலே வாழாநின்
றுள்ள
திரு அரங்கம் என்பது—; [யே
பிறப்பு அகத்தே— ஸ்வதிகாக்ர்ஹத்திலே
மாண்டு ஒழிந்த— மாண்டுபோய் விட்ட
பிள்ளைகள் நால்வரையும் — நாலுபிள்ளை
களையும்
இறை பொழுதில்— ஒருநொடிப்பொழுதில்
கொணர்ந்து— பரமபதத்தில் நாய்ச்சிமார்
கையில் நின்றும் வாங்கிக்கொண்டு வந்து

(க) "ஸ்வாத்யாயோத்யேதவ்ய:" (உ) கூரசாப்தேர்மண்டலாத்பாநோ: யோநி

கொடுத்து தந்தைதாயார்களிலே கொடுத்து ஒருப்படுத்து— 'எங்கள் பிள்ளைதான்' என்று ஸம்மதிப்பண்ணுவித்த

உறைப்பன்— சக்தியையுடையவன் வர்த்திக்கிற

உவர்— தேசம்.

வ்யா. பிறப்பித்பாதி. "ஒருப்ராற்மணனுக்கு மூன்பே மூன்றுபிள்ளைகள். பிறந்தபோதேதானைவொண்ணுதபடி போய்விடுகையாலே, நாலாம்பிள்ளையை ஸ்த்ரீ ப்ரஸவிக்கத் தேதிகிறவளவிலே, க்ர்ஷ்ணன்பக்கலிலே வந்து, 'இந்நமவாருபிள்ளையையும் தேவரீர் ரக்ஷித்தருளவேணும்' என்று அபேக்ஷிக்க; க்ர்ஷ்ணனும், 'அப்படியே செய்கிறோம்' என்று அநுமதிசெய்து வந்தரம், எகாந்த ரக்ஷையானக்ரதுவிலே தீக்ஷிதராயிருக்கிறவிவர் எழுந்தருளவொண்ணுது என்று மத்தைப்பற்ற, 'நான்போய் ரக்ஷிக்கிறன்' என்று அர்ஜுநன் என்றுகொண்டு ப்ராற்மணனையும் கூட்டிக்கொண்டுபோய், ஸ்ரீ தெக்காக்ர்ஹத்தைச்சுற்றும் காற்றுமுட்பட ப்ரவேசிக்கவொண்ணுதபடி சரக்கூடமாகக் கட்டிக் காத்துக்கொண்டு நிற்கச்செய்தே, அந்தப் பிள்ளை பிறந்தவளவிலே பழையபடியே காணவொண்ணுதபடி போய்விட்டவளவிலே, ப்ராஹ்மணன்வந்து அர்ஜுநனை 'க்ஷத்ரியாதமா! உன்னுடைபன்றே பிள்ளை போகவொண்டிற்று, க்ர்ஷ்ணனெழுந்தருளி ரக்ஷிக்கிறவித்தை யேன்றே கெடுத்தாய்' என்று பர்த்ஸித்து, க்ர்ஷ்ணன்பக்கலிலே தள்ளிக்கொண்டுவர; க்ர்ஷ்ணன் இத்தைத்தக்கண்டு மந்தஸ்மிதம் பண்ணி, 'அவனை விடு, உன்பிள்ளை காம்கொண்டுவந்து தருகிறோம்' என்று ப்ராஹ்மணனுக்கு அருளிச்செய்து, போனபிள்ளைகளை மீளக்கொண்டுவந்து கொடுத்தான்" என்கிற கதையை ஸங்க்ரஹேணை அருளிச்செய்கிறார்.

பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகளோ ராஸ்வரையும். "என்னுடைமனஸி காதல் மக்களோப் பயத்தலுங்காணுஸ்" என்கிறபடியே பெற்றவளுருப்பட முகத்தில் விழிக்கப்பிறதபடி ஸ்ரீதெக்காக்ர்ஹத்திலே, "இன்னவிடத்திலே போய்த்து" என்று தெரியாதபடி மாண்டுபோய்விட்ட ராஜபிள்ளைகளையும். இறைப்பொழுதில் கொணர்ந்து கொடுத்து. தீக்ஷித ரைப்நிற்கிற காலமாகையாலே ப்ரதஸ்ஸைவரும் தலைக்கட்டி மாத்ருபித்ருஸஹவரத்துக்குமுன்னை அல்பகாலத்திலே, "எல்லாவுலகுங்கழியப் படர்புகழ்ப்பார்த்தனும் ஸ்வதிகளுமுடனேறத் தின்போர்கடவி" என்கிறபடியே ப்ராஹ்மணனையும் அர்ஜுநனையும்கூடத் தேரிலே கொண்போடறி, அர்ஜுநனைத் தேரைநாட்டத்தச்சொல்லி, அண்டத்துக்குள்ளுண்டான லோகங்களும் ஆவரணங்களுமாகிற எல்லாவற்றுக்கும் அவ்வருகு பரிப்படியாக, காரணரூபமான தத்வங்களுக்குள்ளே போகிறவிடத்தில் உருக்குலையாமல் தேருக்குத்தின்னமையைக்கொடுத்து நடத்திக்கொண்டுபோய், தமஸ்ஸளவில் சென்றவாறே தேரையும் இவர்களையும் நிறுத்தி, "சுடரொளியாய்நின்ற தன்னுடைச்சோதி" என்கிறபடியே ஜ்ஞாநத்திலே மத்ஸ்யமூலாவுமாபோலே தேஜஸிகளே ஸஞ்சரிக்க வேண்டும்படி நிரவதிகதேஜோரூபமான பரமபதத்திலே, தன்னிலமாகையாலே தானேபோய்ப்புக்கு, நாப்த்யமார், தங்கள் ஸ்வாதந்த்ர்யம் காட்டுகைக்காக அங்கே அழைப்பித்திட்டுவைத்த அந்தப்பிள்ளைகளை அங்குநின்றுமெடுத்துக்கொண்டுவந்து மாதாபிதாக்கள் கையிலேகொடுத்து. ஒருப்படுத்த உறைப்பனூர் "தாயொடுகூட்டிய" என்கிறபடியே பூர்வரூபத்தில் ஒன்றும் குலையாமல், "என்னுடைய பிள்ளைகள்" என்று தாயார்எடுத்தணைத்து உச்சிமோந்துதொள்ளாயிரம்பாடி தேர்த்தட்டிலே தத்தி

திருமாகளிலை எழுந்தருளின ஸ்ரீ வைஷ்ணவர்களை, ஸ்வரூபாநுரூபமாக ஆதரித்து அழுது செய்யப்பண்ணுகை. தீறப்புடையமறையவர்வாழ். இப்படி வைதிகர்மாநுஷ்டாநத்தையும் பகவத்விஷயாதாத்பர்யத்தையும் அநந்யப்ரயோஜநமாகச் செய்கையாகிற நன்மையையுடையராய்ப், இதுக்கு உடலாக வேதாதாத்பர்யத்தை யறிந்திருக்குமவர்கள், பெருமாளை யபயித்துக்கொண்டு வாழாநிற்கிற திருவரங்கமென்பதுவே. ... ... உ.

அ. மூன்றாம்பாட்டு. கரிக்கட்டையைப் பிள்ளையாக்கியும், பாண்டவர்களுடைய தேரூறும் பாரதயுத்தத்தில் அழியாதபடி நோக்கியும் செய்தவன்வர்த்திக்கிற தேசமிதுவென்கிறார்.

மூ.—மருமகன்றன் சந்ததியை யுயிர்மீட்டு மைத்துனன்மார்
உருமகத்தேவீழாமே குருமுகமாய்க் காத்தானூர்
திருமுகமாய்ச் செங்கமலந் திருமுகமாய்க் கருக்குவளைப்
பொருமுகமாய்நின்றலரும் புனலரங்க மென்பதுவே. கூ.

பதவுரை.

செங்கமலம்— செந்தாமரை பலரான து
திருமுகம் ஆய்— பெரியபெருமாள் திரு
முகத்துக்குப் போலியாய்
கரு— கறுத்த
குவளை— உத்பலமான து
திருநிறம் ஆய்— அவருடைய திருநிறத்
துக்குப் போலியாய்
பொரு— ஒன்றுக்கொன்று எதிர்பொருகிற
முகம் ஆய் நின்று— முகத்தையுடைத்தா
ய்க் கொண்டு
அலரும்— அலராநின்றுள்ள
புனல்— நீர்வளப்பத்தையுடைய
அரங்கம் என்பது—;
மருமகன் தன் — மருமகனான அபிமந்யுவி
னுடைய

சந்ததியை— புத்ரனுப், கரிக்கட்டையாய்க்
கிடந்த பரிக்ஷித்தின் சரீரத்தை
(திருவடிகளாலே ஸ்பர்சித்து,)
உயிர் மீட்டு— உயிர்பெறும்படி பண்ணி
மைத்துனன்மார்— மைத்துனன்மாரான
பாண்டவர்களுடைய
உரு— சரீரமான து
மகந்தான்— பாரதயுத்தமாகிற ரதோமதத்திலே
வீழாமே—; விழுந்து நசித்துப் போகாமல்
குருமுகம் ஆய்— குருமுகமாய் நின்று
(ஹிதோப தேசங்களைப்பண்ணி)
காத்தான்— ரக்ஷித்தவன் வர்த்திக்கிற
ஊர்— தேசம்.

வியா. மருமகனித்யாதி. மருமகனான அபிமந்யுவினுடைய புத்ரனான பரிக்ஷித்தின் ப்ராணனை மீட்டு. அதாவது- கரிக்கட்டையாய்ப்போனவனை (க) "யதிமே வ்ரஹ்மசர்யம் ஸ்யாந்மயிஸத்யஞ்ச திஷ்டதி - அவ்யாஹதம்மனோ

வித்த '' என்கிறபடியே உபயலோகத்திலும் பூபாரமானவர்களை எல்லாம் நகிப்பிப்பதாக ப்ரவர்த்திக்கப்பட்டதாய், *மண்ணின்பாரம் தீர்க்குதற்கே வடமதுரைப் பிறந்தவனுடைய திருவுள்ளத்துக்கு உகப்பாக விருக்குமதாகையாலே- பாரதயுத்தத்தை நரமேதயஜ்ஞமாக அருளிச் செய்தது. இதில் இவர்கள்விழுந்து நசியாமலிருந்தது- அடியேயிடித்து இவர்களை அபிமானித்துக்கொண்டு குருமுகமாய் நின்று, வருத்தானகாலத்தோடு பூர்வத்தான காலத்தோடு வாசியற ஹிதத்தையே உபதேசித்துக்கொண்டு தியவழிகளிலே போகாமல் விலக்கி நல்லவழிகளிலே நடத்தி இப்படி அபிமானியாய் நின்று ரக்ஷித்துக்கொண்டு போருகையாலே என்னு மிவ்வர்த்தத்தை வெளியிட்டருளிஸ்ராய்த்து. ஊர். இப்படி குருமுகமாய் நின்று பாண்டவர்களை ரக்ஷித்தவன், தன்னபிமானத்திலே ஒதுங்கினவர்களெல்லாரையும் தியவழி போய் நசியாமல் ரக்ஷிக்கைக்காக நித்யவாஸம் பண்ணுகிற தேசம்.

திருமுகமாய்ச் செங்கமலம். செங்கமலமானது, பெரிய பெருமாளுடைய திருமுகத்துக்குப் போலியாய். திருநிறமாய்க்கருங்குவளை. கருங்குவளையானது அவருடைய திருநிறத்துக்குப் போலியாய். பொருமுகமாய் நின்றலரும் புனலரங்கமென்பதுவே. பரபாகத்தாலே ஒன்றுக்கொன்று எதிர்பொருகிற முகத்தையுடைத்தாய்க்கொண்டு விகஸிக்கும்படியான ஜலஸம்ருத்திநையுடைய அரங்கமென்பதுவே. ... ... கூ.

அ. நன்காம்பாட்டு. கைதவிவசாமடியாக நாட்டைவிட்டுக் காட்டிலேபோய் கண்டகரான ராக்ஷஸனை நிரஸித்தவன் வர்த்திக்கிற தேசமிதுவென்கிறார்.

மூ.—கூன்றொழுத்தை சிதகுரைப்பக் கோடியவள்வாய் கடியசொற்கேட்
டூன்றெடுத்த தாயரையு மிராச்சியமு மாங்கோழியக்
கான்றொடுத்த நெறிடோகிக் கண்டகரைக் களைந்தானூர்
தேன்றொடுத்த மலர்ச்சோலைத் திருவரங்கமென்பதுவே. சு.

பதவுரை.

தேன் தொடுத்த— தேன்மாறாத்
மலர்— மலர்களையுடைய
சோலை — சோலைகளாலே சூழப்பட்ட
திரு அரங்கம் என்பது—;
கூன்— கூனியாகிற
தொழுத்தை— அடியாட்டியானவள்
சிதகு— திருவபிஷேக மஹோத்ஸவத்துக்கு அழிவான கடுஞ்சொற்களை
உரைப்ப— சொல்ல
(அத்தையுட்கொண்டு பெருமாளைக்
காடேற எழுந்தருளச்சொன்ன)
கோடியவள்— கோடியளான கைகேயியின்
வாய்— வாயிலுண்டான் [கேட்டு
கடிய சொல் கேட்டு— வெட்டிய சொல்லைக்
கன்று எடுத்த தாயரையும்— பெற்றதாயான
ஸ்ரீகௌஸல்யாபிராட்டியையும்
இராச்சியமும்— ராஜ்யத்தையும்
ஆங்கு ஒழிய— கைவிட்டு
கான் தொடுத்த— காடு அடர்ந்திருந்துள்ள [ந்தருளி
நெறி— வழியே
போகி— ஸ்ரீதண்டகாரண்யத்துக்கு எழுந்
கண்டகரை— கண்டகராய் ஜநஸ்தாநவாஸிகளான ராக்ஷஸனை
களைந்தான்— நிரஸித்தவன் வர்த்திக்கிற
ஊர்— தேசம்.

வ்யா. கூன்தொழுத்தை சிதகுரைப்ப. கூனியாகிற அடியாட்டியானவள் திருவபி ஷேக மறோத்ஸவத்துக்கு அழிவான துருக்திகளைச்சொல்ல. அதாவது (க) "ஜூ ாகிஉ வலீய தெராஜாதா மெகுகெபூஷ்ஷ ஸஹெஹாச்தா வ்ராவஸாஉஅவ ஏ்வஜ்ஜாஸ ஸார ஹொஹயஉ ஏஹயா" என்கிறபடியே ஜ்ஞாதிதாஸியானவிவள் யாத்ர்ச்சிகமாக மாளிகைத்தளத்தின்மேல் ஏறிப்பார்த்தவாறே, பெருமாளுடைய திருவபிஷேகத்துக்குத் திருப்படைவீடெல்லாம் கோ டித்துக்கிடக்கிற படியையும், (உ) "வ்யஉவ்யஉ மியாயஸ்ஸாபாழ்" என்கிறபடியே திசள் திரளாக வந்துகிடக்கிற ஜநஸம்மர்த்தத்தையும் மங்களவாத்ய கோஷங்களையுமெல்லாங் கண்டு ஸஹிக்கமாட்டாதே தளத்தினின்று மிறங்கிவந்து கைகேயியை பர்த்ஸித்து, "உன் மாற்றாட்டிமகன் அபிஷேகம் செய்யத்தேடுகிறான், உன்மகன் அவனுக்கு இனி இழிதொழில் செய்திருக்கு மித்தனையிறே, இத்தைப் பார்த்துக்கொண்டு நீ யிருக்கிறதே, அவனுடைய அபிஷேகத்தைக் குலைத்து உன்மகனை அபிஷேகம் பண்ணுவிக்கும்படி ராஜாவோட சொல் லு; அதுக்கு உபாயம்,-முன்பே உனக்குத் தந்திருப்பது இரண்டுவரமுண்டே, அவை இரண் டையும்- உன் மகனை அபிஷேகம்பண்ணுவிக்கையும், ராமனைக் காடேறப்போக விடுகையும், என்று வேண்டிக்கொள்; ஸத்ய தர்மபரரான ராஜாவால் செய்யாதொழியப்போகாதுகாண்" என்று திருவபிஷேகத்துக்கு விக்நமான துருக்திகளைச் சொன்னளிறே. கொடியவள் வாய்க் கடியசொல்கேட்டு. இப்படி குப்ஜை சொன்ன வார்த்தையாலே கலங்கி, பின்பு ராஜாவுடனே "முன்புசொன்ன விரண்டுவரமும் எனக்கு இப்போது தரவேணும்; அதாவது- என்மகனை அபிஷேகம் பண்ணுவிக்கையும், ராமனைப் பதினாலாம்வத்ஸரம் வநவாஸார்த்தமாகப் போ கவிடுகையும்" என்ன; இத்தைக்கேட்டு ராஜா இதுக்கு இசையாமை தோற்றவிருக்க; "அது பதிநாலிரம் ஸம்வத்ஸரம் ஸத்யதர்மத்தைத்தப்பாமல் நடத்திப் போந்தவன் இப்போது ஸத் யத்தை அதிக்ரமிக்கிறான், ஸகலதேவதைகளும் இத்தை அறியுங்கோள்" என்று இவள் கூப் பிட்டவாறே; அவன்செய்யலாவதற்று அநுமதிபண்ணா; அவ்வளவிலே, அவள்ஸமந்த்ரணப் போகவிட்டு பெருமாளை அழைத்துவிட, அவர் எழுந்தருளி வந்து, சக்ரவர்த்தி கலங்கிக்கிட க்கிற படியைக்கண்டு, "இதுக்கடியென்?" என்று இவளைக்கேட்க, இச்செய்திகளை யெல்லாம் சொல்லி, "உம்மைக்காடேறப்போகவிடுவதாக அழைத்துவிட்டார், உம்மைக்கண்டவாறே சொல்லமாட்டாமல் கிடக்கிறாரித்தனை; உங்கள் ஐயர் ஸத்யதர்மத்தை நோக்கவும் நீர் அவ ர்க்கு ப்ரியம் செய்யவும் வேண்டியிருந்தீராகில் அவர் நிலைவு நான் சொல்லுகிறேன், நீர் கடு கக் காடேறப்போம்" என்று சொன்ன கொடுமைபடியுடையளான கைகேயி வாயில் இந்த வெட்டிய சொல்லைக்கேட்டு. ஈன்றெடுத்த தாயரையும் இராச்சியமு மாங்கொழிய. "ஏகபத்னி யான நான் உம்மைப் பிரிந்திருக்கமாட்டேன், கூடப்போரு மித்தனை" என்று பின்னுடன் ந்த பெற்றதாயாரான கௌஸல்யாதேவியையும், ஸ்த்ரீவரங்களோடு ஜங்கமங்களோடு வாசியறத் தன் குணங்களிலேயீடுபட்டு, பிரியில் தரிக்கமாட்டாதபடியிருக்கிற ராஜ்யத்தையும் கைவிட்டு. கான்தொடுத்த நெறிபோகி. (ஊ) "தெவதெந வநகமிஷ்யா" என்கிறபடியே காட்டோடு காடு தொடுத்துக்கிடக்கிறவழியே, "நெய்வாய்வேல் நெடுங்கண்நீரிழைபு மினங்கோவும் பின்புபோக" என்கிறபடியே-பிராட்டியும் இளையபெருமாளும் பின்னே லைவித்துக்கொண்டு

